
# மனிதப் புனிதர் கக்கன்



சி. அம்பேத்கர்பிரியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# மனிதப் புனிதர் கக்கன்

சி. அம்பேத்கர்பிரியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

பெருந்தலைவர் காமராசர் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : நாடார் மகாசன சங்கம், மதுரை)

வரிசை எண் : 8

**BIBLIOGRAPHICAL DATA**

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Maṉitap puṉitar kakkaṉ |
| Author | : | Dr. Ambedkarpriyan<br>Sakthi Flats<br>37/3, Bazaar Street<br>Nesapakkam<br>Chennai-600 078.<br>Cell.No. 99404 82224 |
| General Editor | : | Dr. K.A. Gunasekaran<br>Director<br>International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Chennai - 600 113<br>Ph: 22542992 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Chennai - 600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 667 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | x + 230 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.110/- (Rupees One hundred and ten only) |
| Printed by | : | United Bind Graphics<br>43/95, Millers Road, Kilpauk<br>Chennai - 600 010. |
| Subject | : | Biography of P. Kakkan |

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

இந்திய வரலாற்றில் நினைவில் நிற்பவர்கள் ஏராளம். தேசத்தந்தை மகாத்மா காந்தி அடிகள் முதற் கொண்டு இன்றைய இந்தியாவின் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் தலைவர்கள் வரை பலர் வரலாறு படைத்துள்ளனர். வரலாறு படைத்தும் வருகின்றனர்.

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் தமிழகம் மாபெரும் பங்கு வகித்துள்ளது. தனி மனித வரலாறுகள் மறைக்கப்பட்ட காரணத்தால், பல தேசியத் தியாகிகளின் வரலாற்றினை நம்மால் அறிய முடியவில்லை. பல சிந்தனையாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள் இப்படிப்பட்ட மனிதர்களின் தியாக வரலாற்றை எழுத முன்வந்தால் பலரின் வரலாறுகளை இன்றைய மாணவர்கள் அறிந்துகொள்ள ஏதுவாகும்.

"மனிதப் புனிதர் கக்கன்" எனும் தலைப்பில் மிகச் சிறப்பான நூலை எழுதிய நூலின் ஆசிரியர் அம்பேத்கர்பிரியன், கக்கனின் தனிமனித சுதந்திரப் போராட்டத் தியாகக் குணத்தைப் பளிச்சிடும் விதத்திலும் நூலை ஆக்கியுள்ளமை வரவேற்கத் தக்கது. இந்த நூலில் காங்கிரஸ் இயக்கத் தலைவர்கள் தேசியப் போராட்டத்தில் பங்குப் பெற்ற விதம், கக்கன் போராட்டக் களத்தில் பங்கேற்றது, சிறைச் சாலையில் அனுபவித்த கொடுமைகள், கக்கனின் திருமண விவரம், காங்கிரஸ் பேரியக்கத்தில் முழுமையான ஈடுபாடு, கட்சியில் உழைப்பால் பல உயர் பதவிகள், பாராளுமன்ற உறுப்பினராய் ஆற்றிய சேவைகள், பத்தாண்டுக் காலம் சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராகப் பொறுப்பேற்று ஆற்றிய பணிகள், அரசியலில் நேர்மை, தூய்மை, மனித வாழ்வில் நல்லொழுக்கம், முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் அன்னை இந்திரா இவர்களோடு அரசியலில் தூய்மையான பணி, கர்மவீரர் காமராசர் அவர்களின் உண்மைச்சீடராய், காந்தியின் தீவிரக் கொள்கைப் பற்றாளராய் போன்ற பல்வேறு செய்திகளுடன் அனைவரும் புரிந்து கொள்ளும் விதத்தில் இந்நூல் வெளிவருகிறது.

இந்நூலின் ஆசிரியர் வரலாறு படித்தவராய், கல்லூரிகளில் பேராசிரியராய்ப் பணியாற்றியவராய், எழுத்துத் துறையில் பல நூல்களை எழுதியவராய்த் திகழ்கின்றார். பாபாசாகிப் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு, இரட்டைமலை சீனிவாசன் வாழ்க்கை வரலாறு, பண்டிதமணி க. அயோத்திதாஸ் வாழ்க்கை வரலாறு, தந்தை என். சிவராஜ் வாழ்க்கை வரலாறு, ஸ்ரீ நாராயணகுரு வாழ்க்கை வரலாறு ஆகிய நூல்களை மிகவும் சிறப்பாக எழுதி வெளியிட்டுள்ளார். இவ்வரிசையில் **'மனிதப் புனிதர் கக்கன்'** எனும் தலைப்பில் பல ஆதாரங்களைச் சேகரித்துக், கக்கனின் நூற்றாண்டில் இந்நூலை எழுதியுள்ள அம்பேத்கர்பிரியனை மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன். இவரது எழுத்துப்பணி மேலும் சிறப்படைய என் வாழ்த்துக்கள்.

இந்தச் சிறப்பான நூலினைப் "பெருந்தலைவர் காமராசர் அறக்கட்டளை"யின் சார்பில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடுவதைப் பெருமையாகக் கொள்கிறது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான **மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவு நூலின் மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்கள், இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், கணிப்பொறியாளர் திருமதி பா.கௌசல்யா ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

# மனம் சொல்லும் சாட்சி

மனித வாழ்வு மகத்தானது. "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. "ஆம்". மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் சாதிக்கப் பிறந்தவர்கள். சாதித்தால் மட்டுமே சரித்திரத்தில் இடம் பெறமுடியும். பல துறைகளில் சாதனை படைக்கலாம். ஆனால் அரசியல் துறையில் சாதனை படைக்க முடியுமா? இதுதான் இன்றைய கேள்வி. கேள்விகள் எதுவாக இருந்தாலும் பதில்களும் பலவாகத்தானே இருக்கும். உலக வரலாற்றைப் பார்த்தால், மனித இனத்திலே அடித்தள மக்கள் என்று சொல்பவர்களால் மட்டுமே சாதனை படைக்க முடிகின்றது. உலக வரலாற்றில் நெல்சன் மண்டேலா, அமெரிக்க அதிபர் பாரக் ஓபாமா, இந்திய நாட்டில் மாமேதை அம்பேத்கர், இவர்கள் வரிசையில் தமிழகத்தில் அரசியல் எனும் புனித நீரோட்டத்தில் மூழ்கி முத்தெடுக்கும் பெருமை, இவ்வாண்டில் நூற்றாண்டு விழாவினைக் கண்டு—கொண்டிருக்கும், மறைந்தும் மறவாமல் நம் நினைவில் நிலைத்திருக்கும் இந்த நூலின் கதாநாயகன் "மனிதப் புனிதர்" கக்கன் அவர்களையே சாரும்.

நான் ஓட்டை மொந்தையை எடுத்துக்கொண்டு, பள்ளியில் வடித்துக் கொட்டும் கஞ்சித் தண்ணீரைப் பிடித்துக் குடித்துப் பசியாற்றிடப் பள்ளிக்கூடம் ஒதுங்கியவன். அப்பொழுது கஞ்சியும் தண்ணீரும் குடிக்க வேண்டுமானால் பள்ளியில் சேர வேண்டும் என்று சொன்னார்கள். பட்டினியைப் போக்கிடக் கஞ்சியும் தண்ணியும் குடிக்கவே பள்ளியில் சேர்ந்த நான், இன்று இந்த அளவிற்குப் பல பட்டங்கள் பெற்று உயர்ந்திருக்கக் காரணம், அன்று மதிய இலவச உணவு போட்ட கர்மவீரர் காமராசரும் கக்கனும்தான் எனப் பல ஆண்டுகளுக்குப் பின் தெரிந்து கொண்டேன்.

நான் பாபாசாகிப் அம்பேத்கர் அவர்களைத் தலைவராக ஏற்றுக்கொண்டு, சமூகச் சேவையில் ஈடுபட்ட காலங்களில், அவரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல் எழுதி வெளியிட்டபோது What Gandhi and Congress have done for untouchables எனும் நூலைப் படித்தபின், காங்கிரஸ் கட்சியின் மீது சில தவறான கசப்பான எண்ணங்கள் உண்டாகின. இதையே தமிழக இளைஞர்களுக்கு எடுத்துச் சொல்லியும் வந்தேன். ஆனால் அது தவறானது என்பதனை இந்நூலை எழுதியபின் அறிந்து கொண்டேன். அதன் விளைவுதான் இந்த நூலில் காங்கிரஸ் கட்சி செய்திருக்கும் மனிதநேயச் சேவையைப் பெருமைப்பட எழுதியுள்ளேன்.

பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர், தாத்தா இரட்டைமலை சீனிவாசன் (3 நூல்கள்), பண்டிதமணி க. அயோத்திதாஸ், தந்தை என். சிவராஜ், ஸ்ரீ நாராயண குரு இவர்களின் வாழ்க்கை வரலாறுகள் எழுதிப் பெருமை சேர்த்தேன். காரணம் இவர்கள் தாழ்த்தப்பட்ட இன மக்களின் முன்னேற்றமான வாழ்விற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள், சரித்திரத்தில் இடம் பெற்றவர்கள். பல செய்திகளைச் சேகரித்து முதல் நூலாக எழுதிய காரணத்தினால், ஆதாரங்கள் கிடைக்காமல் கடினப்பட்ட காலங்கள் உண்டு.

என்னுடைய நூல்களுக்கெல்லாம் வழிகாட்டியாக, செய்திகளைக் கொடுத்து ஊக்கமளித்த மறைந்த என் இதய அண்ணன் "சமூகக் கருத்துக் களஞ்சியம்", நீதிக் கட்சியின் காவலர் திருமிகு நா. ஆ. கருணாகரன் அவர்கள், ஒரு நாள் என்னை அண்ணா நகருக்கு வரச் சொல்லி, நேராக அண்ணன் விஸ்வநாதன் கக்கன் அவர்களின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அண்ணன் விஸ்வநாதன் கக்கன் பல ஆண்டுகளாக எனக்குத் தெரிந்தவர். பண்புள்ளம் கொண்டவர். இருவரும் சேர்ந்து அன்று அன்புக்கட்டளை போட்டார்கள். அதாவது கக்கனின் நூற்றாண்டு விழா இவ்வாண்டில் வருகின்றது. அதனால் அவரது வாழ்க்கை வரலாற்றை நீதான் எழுத வேண்டும் என்று சொன்னார்கள். நான் திகைத்தேன். காரணம் கக்கன் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர். காங்கிரஸ் கட்சி மீது அவ நம்பிக்கை கொண்டவன் நான். இது சாத்தியமா? எனவும் சொன்னேன். அவர்களின் அன்புக் கட்டளை ஏற்று நானும் சரி என்று சொல்லிவிட்டேன்.

ஆதாரம் தேடி அலைந்தபோதுதான், "நடையில் நின்றுயர் நாயகன்" கக்கன் எனும் தலைப்பில் மிகவும் சிறப்பான, சிந்தனையுள்ள, ஆதாரமுள்ள நூலை முனைவர் அரங்க. சம்பத்குமார் எழுதியுள்ளமையை அறிந்தேன். அவர் எழுதிய நூலின் நிழற்படி நகலை அண்ணன் விஸ்வநாதன் கக்கன் கொடுத்து உதவினார். நூலைப் படித்தேன். மகிழ்ச்சி அடைந்தேன். அந்த நூலை ஆதாரமாகக் கொண்டு, மேலும் பல செய்திகளைச் சேகரித்து உருவான நூல்தான் "மனிதப் புனிதர் கக்கன்" எனும் இந்நூல். அன்பு அண்ணன் முனைவர் அரங்க. சம்பத்குமார் அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


இரவெல்லாம் எழுதும்போது உடனிருந்து உறங்காமல் கனணிதட்டச்சு மூலம் எனக்கு பல இரவுகள் கண்விழித்து உதவி செய்த அன்பு மகன் சி.சு. ராஜன், பி.இ., அவர்களுக்கு நன்றி.

கக்கன் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்தி வரும் பெருந்தலைவர் காமராசர் அறக்கட்டளையின் சார்பாக இந்த நூலை மிகவும் குறுகிய காலக்கட்டத்தில் வெளியிட அனைத்து முயற்சிகளும் எடுத்துக் கொண்ட இயக்குநர்; பேரா. முனைவர் கரு.அழ. குணசேகரன் அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கக்கனின் படங்கள் கொடுத்து உதவிய தேசிய முரசு (மாதம் இருமுறை) இதழாசிரியர் பெருமைமிகு ஆ. கோபண்ணா எம்.ஏ., பி.எல். அவர்களுக்கு என் நெஞ்சார நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது நூல்களுக்கு என்றும் ஆதரவு நல்கிவரும் தமிழ்ச்சான்றோருக்கு எனது மனப்பூர்வமான நன்றி.

**அன்புடன்**
**சி. அம்பேத்கர்பிரியன்**

# ஆசிரியரைப் பற்றி



திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி தாலுகா, கீழ்க் கொடுங்காலூர் கிராமம் டாக்டர் அம்பேத்கர் நகரில் பிறந்தவர். இவரது தந்தை சின்னசாமி (லேட்), தாய் அலமேலு அம்மாள் (லேட்). இவருடன் பிறந்த மூத்த அண்ணன் கணேசன் (லேட்), இரண்டு மூத்த சகோதரிகள் திருமதி சுப்பம்மாள், திருமதி செல்லியம்மாள். இவரது மனைவி பெயர் திருமதி அஞ்சலை (லேட்). மகள்கள் C.S. சுமதி, B.Sc., (Nursing), C.S. ஷோபனா, B.A., மகன் C.S. ராஜன், B.E..

கீழ்க்கொடுங்காலூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதிவகுப்புவரை படித்துவிட்டு, பி.யு.சி. மற்றும் பி.ஏ. பட்டப்படிப்பினைச் சென்னைப் புதுக்கல்லூரியில் பெற்றார். எம்.ஏ. பட்டம் சேலம் அரசுக் கலைக்கல்லூரியில் பெற்றார். TNPSC தேர்வில் வெற்றிபெற்று ஊட்டியில் வேளாண்மைத் துறையில் பணியாற்றினார். I.A.S. Pre-Examination Training Centre-இல் படிக்கும் போது திருவண்ணாமலை அரசுக் கலைக்கல்லூரியில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகவும், பின் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரியில் வரலாற்றுத்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். பிறகு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் 22 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றுள்ளார்.

அமெரிக்கா கலிபோர்னியா பல்கலைக்கழகம் தந்தை என். சிவராஜ் அவரைப் பற்றிய ஆய்வுக்கு D.Litt (Doctor of Literature) எனும் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. இதுவரை 20 நூல்கள் எழுதியுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஆய்வரங்கத்தில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார். டெல்லியிலுள்ள பாரதிய தலித் சாகித்ய அகாடெமி சார்பில் சமுதாயச் சேவைக்காகத் 'தேசிய டாக்டர்

அம்பேத்கர் விருது' பெற்றுள்ளார். தொலைக்காட்சி மற்றும் வானொலி சார்பாகப் பல நாடகங்கள் எழுதி இயக்கியும் நடித்துள்ளார். பல மேடை நாடகங்களில் சமுதாயச் சிந்தனை ஊட்டும் கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். இவர் எழுதிய 'மனமாற்றம்' எனும் கொத்தடிமை ஒழிப்பு விழிப்புணர்வு நாடகம் தமிழக அரசால் பல மாவட்டங்களில் நடத்தப்படுகிறது.

இவர் தற்சமயம் இந்தியத் தேசியக் குடியரசுக் கட்சியின் நிறுவனர் தலைவராக இருந்து கொண்டு சமூகச் சேவை செய்து வருகின்றார்.

## ஆசிரியர் எழுதியுள்ள நூல்கள்

1. அம்பேத்கர் அடிச்சுவட்டில் நாம் - கவிதை.
2. அறிவுச்சுடர் அம்பேத்கர் - கவிதை.
3. கவிஞருக்குக் கவிமலர் - கவிதை.
4. டாக்டர் அம்பேத்கர் பொன்மொழிகள் - தொகுப்பு.
5. ரெட்டைமலை சீனிவாசன் வாழ்க்கை வரலாறு - பாகம்-1 (1987).
6. பாபாசாகிப் அம்பேத்கர் - வாழ்க்கை வரலாறு.
7. ஆதிதிராவிடர் யார்? - ஆய்வு.
8. ரெட்டைமலை சீனிவாசன் - பாகம்-2.
9. மேயர் தந்தை N. சிவராஜ் - வாழ்க்கை வரலாறு.
10. பகுத்தறிவுப் பாட்டன் பண்டிதமணி க. அயோத்திதாஸ் - வாழ்க்கை வரலாறு.
11. ஸ்ரீ நாராயணகுரு - வாழ்க்கை வரலாறு.
12. சம நீதி - தீண்டாமை ஒழிப்பு-சமூக நாடகம்.
13. மன மாற்றம் - கொத்தடிமை ஒழிப்பு சமூக நாடகம்.
14. "மண்ணுரிமைப் போராளி" ரெட்டைமலை சீனிவாசன் - வாழ்க்கை வரலாறு.
15. திராவிடர் திலகங்கள் - வாழ்க்கை வரலாறு.
16. கண்கள் - கைப்பிரதி ஏடு.
17. ஜெய்பீம் - மாதமிருமுறை பத்திரிக்கை.
18. இந்தியச் சுடர் - மாதமிருமுறை பத்திரிக்கை.
19. வரலாற்று வித்தகர் 'அம்பேத்கர்பிரியன்' வாழ்க்கை வரலாறு, வெளியீட்டாளர்.
20. நெருப்பாற்றில் நீந்தினேன்-வாழ்க்கைக் குறிப்பு-தொகுப்பு.

## உள்ளே

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மனிதப் புனிதர் கக்கன் | 1 |
| 2. | பிறப்பும் சூழலும் | 7 |
| 3. | கக்கன் பிறப்பு | 12 |
| 4. | கக்கனின் கல்வி | 22 |
| 5. | இனிய இல்லற வாழ்க்கை | 36 |
| 6. | விடுதலையின் வீரத்தழும்புகள் | 61 |
| 7. | உழைப்பால் உயர் பதவிகள் | 87 |
| 8. | அமைச்சர் கக்கன் ஆற்றிய பணிகள் | 114 |
| 9. | கக்கனின் சமுதாயப் பார்வை | 127 |
| 10. | பாதை மாறாத மனிதப் புனிதர் | 153 |
| 11. | பொது வாழ்வில் ஓய்வு | 170 |
| 12. | மனிதப் புனிதரின் இறப்பு | 177 |
| 13. | கக்கனின் உயர் குணங்கள் | 184 |
| 15. | காமராசரும் கக்கனும் | 215 |
| 16. | மனித புனிதருக்குக் கிடைத்த புகழாரங்கள் | 220 |

# 1. மனிதப் புனிதர் கக்கன்

“இந்திய நாடு பழம்பெரும் நாடு” என்பது நம் நாட்டிற்குக் கிடைத்த பெருமையாகும். பாரினிலே நல்ல நாடு இந்திய நாடு. இதுவும் நாட்டின் பெருமையாகும். மனிதன், பிறந்த நாட்டின் பெருமையால் வரலாற்றில் இடம் பெற்றதுண்டு. உலக நாடுகளில் இயற்கைவளம் அதிகம் பெற்ற நாடு நம் இந்திய நாடாகும். இயற்கை அன்னையே மனமுவந்து முன்வந்து அனைத்து இயற்கை வளத்தையும் அள்ளிக்கொடுத்துவிட்டுச் சென்றுள்ளாள். இப்படிப்பட்ட இயற்கை அன்னை அதிகம் நேசித்த நாட்டில் பிறந்தவர்கள் வரலாற்றுச் சுவடுகளை முத்தமிட்டு வாழ்ந்து, வரலாற்றை உருவாக்கியுள்ளனர். ‘இந்தியன்’ என்ற தேசப்பற்று ஒவ்வொரு இந்தியனின் உடலில் ஓடும் இரத்தத்தில் கலந்துவிட்ட நாட்டுப்பற்று உணர்வாகும்.

உலக நாடுகளில் அனைத்து நாடுகளாலும் மதிக்கக்கூடிய ஜனநாயக நாடுகள் இரண்டாகும், அதில் ஒன்று அமெரிக்கா; இரண்டாவது இந்தியா. ‘ஜனநாயகம்’ எனும் காற்றினை அனைத்து மக்களாலும் சுதந்திரமாகச் சுவாசிக்கின்ற நாடுகள் தான் ஜனநாயக நாடுகளாகும். ஏனைய நாடுகள் இன்றளவும் வன்முறையைக் கையில் எடுத்துக்கொண்டு மனித இனத்தையே அழிக்கும் முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றன. இந்தியா என்பது மனிதநேய நாடு, மக்களை மதிக்கும் நாடு, மக்களுக்காக ஆட்சி நடத்திடும் நாடு எனும் பெருமைகளுக்குச் சொந்தமான நாடாகும். பாதுகாப்புப் பெட்டகமாக இமயமலையும், வளம் அளிக்கும் கங்கை, காவேரி நதிகளும், இயற்கைத் தாதுக்கள் அதிகம் விளையும் மண்ணாகவும், வேற்றுமையில் ஒற்றுமை எனும் ஒருங்கிணைப்பு நாடாகவும் திகழும் இந்தியநாடு ஒரு புண்ணியபூமியாகும்.

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் ‘சூரியன் மறையாத நாடு’ எனும் பெருமைக்கு மார்தட்டிக்கொண்டு, உலக நாடுகளைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவந்த ‘ஆங்கிலேயன்’ என்ற

சொல்லுக்குச் சொந்தமான ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவை அவர்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

இந்தியர்கள் ஆங்கிலேயர்களின் அடிமை விலங்கினை முத்தமிட்டனர். வாய் திறந்தால் தாக்குதல் என்ற கொடுமையான ஆட்சியின்கீழ் இந்தியர்கள் உரிமைகளை இழந்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டது.

'இம்' என்றால் சிறைவாசம். ஏன்? என்றால் வனவாசம் எனும் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர். ஆங்கிலேயர்களின் பொருட்களை விற்கும் அங்காடியாக இந்திய மண்ணைப் பயன்படுத்தினர். இதனால் இந்தியா அடிமை நாடாக, வரி செலுத்தும் நாடாக மாறியது. பொருளாதார வளர்ச்சியில் சொர்க்க பூமியாக விளங்கிய இந்தியா, சுதந்திரக் காற்றினைச் சுதந்திரமாகச் சுவாசிக்க முடியாத வண்ணம் இந்தியர்கள் ஆங்கிலேயர்களின் கொடுங்கோலாட்சிக்கு அடிமைப் படுத்தப்பட்டனர்.

இப்படிப்பட்ட அடிமை விலங்கினை முறித்தெடுக்கப் போராட்டம் தேவைப்பட்டது. போராட்டம் நடத்த இந்தியத் தேசியக் காங்கிரஸ் இயக்கம் உருவாக்கப்பட்டு இந்தியாவில் அனைத்துப் பகுதிகளிலும் போராட்டம் வெடிக்கத் தொடங்கியது. அப்படி இந்திய மண்ணில் முதன் முதலில் போராட்டம் உருவாக்கப்பட்ட மண்தான் தமிழகம். இந்தியச் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் தமிழகத்தின் பங்கு அளவிடமுடியாது. உயிர்த் தியாகம் மட்டுமின்றி ஆட்சி அதிகாரத்தை இழந்த மாமன்னர்களின் இழப்பு அதிகம்.

அன்றைய காலக்கட்டத்தில் ''மதராஸ் மாகாணம்'' என்றே அழைக்கப்பட்டது. ஆம்! தமிழகத்தில் வேலூர் மண்ணில்தான் முதன்முதலில் 'சிப்பாய்க் கலகம்' சீறி வெடித்தது. ஆங்கிலேயர்களை சிந்திக்கவைத்த கலகம் இதுதான். அதன்பிறகுதான் உறங்கிக் கொண்டிருந்த இந்தியன் சீறி எழுந்தான். ஆங்கிலேயர்களை ஏன்? எதற்கு? என்ற கேள்வி கேட்கும் உரிமைக்கு இந்தியர் தள்ளப்பட்டனர்.

காங்கிரஸ் பேரியக்கத்தில் தமிழக வரலாற்றில் இடம்பெற்ற தேசியப் போராளிகள் ஏராளம் என்றே சொல்லலாம். ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், உறங்கிக் கிடந்த இந்தியர்களைத் தமது எழுச்சிக் கவிதை வரிகளால் உணர்ச்சி

பெற்றிட வேண்டும் என்ற வீர எழுச்சியின் உத்வேகத்தால் உணர்ச்சிக் கவிதைகளை வழங்கிய மகாகவி பாரதியார். இப்படி பலர் வரலாற்றுப் படிகளைக் கடந்து வந்தனர்.

காங்கிரஸ் பேரியக்கம் என்று சொன்னாலே அதில் இரண்டு மாமனிதர்களை மறக்க முடியாது. அவர்கள்தான் கர்மவீரர் காமராசர். அடுத்து அவரது வழியில் விசுவாசத்தோடு பாடுபட்ட, காந்தி அடிகளார் உண்மைத் தொண்டர், காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தது முதல் 'கட்சி மாறாத தொண்டர்', கதர் ஆடை அணிந்து காலமெல்லாம் வாழ்ந்த தியாகச்சுடர், மனிதப் புனிதர் கக்கன் அவர்கள். பதவிக்குக் கொள்கைகளை விட்டுக்கொடுத்துப் பதவி சுகம் காண ஆசைப்படும் அரசியல் தலைவர்கள் வாழ்கின்ற காலக்கட்டத்தில், பதவிக்குப் பெருமை சேர்த்து, இலஞ்சம் இலாவண்யம் இல்லாமல், நேர்மையான மனித சேவை செய்து, மக்களால் போற்றப்பட வாழ்ந்த உத்தமர்தான் மனிதப் புனிதர் கக்கன் அவர்கள்.

'தோன்றின் புகழோடு தோன்றுக' எனும் வள்ளுவர் வரிக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் தோன்றிய சான்றோர்கள் ஏராளம். தாம் பிறந்த நாட்டிற்கும், இனத்திற்கும், மொழிக்கும் பெருமை சேர்த்து, வரலாறு உருவாக்கி, வரலாறாகவே வாழ்ந்து மறைந்த சன்றோர்கள் தமிழகத்தில் ஏராளம் என்றே சொல்லலாம். நாட்டின் விடுதலை, தனிமனித சுதந்திரம், சமுதாய மேம்பாடு போன்ற துறைகளில் தனி முத்திரை பதித்த சான்றோர்களும் ஏராளம். இவர்களில் 20ஆம் நூற்றாண்டின் கடைசிக்காலங்களில் வரலாற்றில் இடம்பெற்றவர்தான் "நூற்றாண்டு விழாவின் கதாநாயகன்" மனிதப் புனிதர் கக்கன் அவர்கள்.

"மனிதப் புனிதர்" என்ற சொல்லானது மனித இனத்திற்கே கிடைக்கும் உச்சகட்ட புகழாகும். எக்காலத்திலும், எப்படிப்பட்ட வாழ்க்கை முறையிலும், மனித நேயப் பண்புகளோடு 'குறையற்ற' வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர்கள் 'புனிதர்' என்றே அழைக்கப்படுவர். பகவான் புத்தர், இயேசு கிறிஸ்து, முகம்மது நபி இவர்கள் மனிதர்களாகப் பிறந்து, மனிதர்களாக வாழ்ந்து, வாழ்க்கையின் அவலங்களை அறிந்து, மனித இனத்திற்கு நல்ல பாதைகளை, நெறிகளை எடுத்துச் சொல்லி மனிதர்களாகவே மறைந்தவர்கள். இவர்கள் சமய ரீதியில் மனிதர்களை

நல்வழிப்படுத்தினார்கள். ஆனால் கக்கன் சமூக நிலையில் மக்களுக்கு நல்வழிப்படுத்தினார். இவர்களைத் தான் இக்காலக்கட்டத்தில் மகான்கள் என்றே அழைக்கின்றோம். பலர் இவர்களைக் கடவுள்களாகவும் நினைக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட மகான்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை மண்ணில் தோன்றுவார்கள். இப்படிப்பட்ட மகான்கள் கூறிய கருத்துக்கள்படி, நெறிமுறைகள்படி மனிதர்கள் வாழ்ந்தார்களா? என்பதுதான் இன்றைய கேள்வி.

இந்திய வரலாற்றில் பல மனிதர்கள் மனிதநேயச் சிந்தனையாளராகவும், மனித நெறிமுறைகளைப் பின்பற்றியும் வாழ்ந்துள்ளார்கள். எளிமையான வாழ்வு ஒருமனிதனை உயர்நிலைக்கு அழைத்துச் செல்லும் எனும் வார்த்தைக்கு ஒப்ப வாழ்ந்தவர்கள் உண்டு. மனித வாழ்வில் 'தியாகம்' என்ற சொல் இடம் பெறுமேயானால் அவர்களது வாழ்க்கையில் வரலாறுகள் ஏற்படுவதுண்டு. எந்த மனிதனும் தியாகம் செய்யாமல் வளர்ச்சியைக் காணமுடியாது?

ஒரு விதைகூடத் தன்னை அழித்துக்கொண்டு தியாகம் செய்வதால் மட்டுமே ஒரு மரத்தைக் கொடுக்க முடிகின்றது. விதைக்கே இந்த நிலை என்றால் மனித வாழ்வில் முன்னேற்றம் என்பது தியாகச்சுவடுகளைக் கணக்கிட்டால் மட்டுமே பெறமுடியும். அப்படி தமிழக வரலாற்றில் தன்னையே தியாகம் செய்துகொண்ட தியாகச்சுடராக வாழ்ந்து காட்டியவர்தான் இன்றைய நூற்றாண்டின் நாயகர் 'மனிதப் புனிதர் கக்கன்' அவர்கள்.

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தால் அரிது'. மனித இனத்தின் பெருமைக்குக் கிடைத்திட்ட பாராட்டாகும். ஆம்! உலக அளவில் பிறந்த மனிதர்கள் பிறந்த மண்ணிற்குப் பெருமை சேர்த்து நாட்டின் வரலாற்றில் தம்மையும் இணைத்துக் கொண்டார்கள். அப்படி இணைத்துக் கொண்டவர்களை வரலாறு இன்றும் பாராட்டுகின்றது: அதுமட்டுமல்லாமல் அந்தந்த நாட்டு மக்களால் இன்றும் போற்றிப் புகழப்படுகின்றார்கள். வரலாறு என்பது தானாகக் கிடைப்பதல்ல. அது மாபெரும் தியாகச் செயல்களால் கிடைப்பது. அமெரிக்கா நாட்டின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட ஜார்ஜ் வாஷிங்டன், ஆப்ரகாம் லிங்கன், தியோடர் ரூஸ்வெல்ட், ஜான் எப்.கென்னடி போன்றவர்களின் தியாகச் செயல்களால் அமெரிக்க வரலாற்றில் அவர்கள் இடம்பெற்றனர்.

மேற்கண்ட தலைவர்களை அமெரிக்கர்கள் நன்றியோடு நினைக்கிறார்கள்.

உருசிய நாட்டின் வளர்ச்சிக்கு, உலக வரலாற்றில் இடம்பெறும் அளவிற்குப் பாடுப்பட்ட ஸ்டாலின், இலெனின் போன்ற முன்னோடிகளை, மாவீரர்களை இன்றும் உருசிய மக்கள் நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றனர்.

ஜெர்மானிய நாட்டின் ஐக்கியத்திற்காகப் பாடுபட்ட மாபெரும் மாவீரன் பிஸ்மார்க் இன்றும் ஜெர்மானிய மக்கள் நினைவில் நிற்கும் வரலாற்று நாயகராவார்.

இத்தாலிய ஐக்கியத்திற்காகப் பாடுபட்ட, மக்களின் அமைதி வாழ்விற்குத் தங்களையே அற்பணித்துக் கொண்டு, இன்று வரலாறு போற்றும் மாவீரர்கள் கேவர், கரிபால்டி ஆகியோர் இத்தாலிய மக்களால் இன்றளவும் போற்றப்பட்டு வரும் வரலாற்று நாயகர்களாவார்கள்.

சீன நாட்டின் மேம்பாட்டிற்காக, செஞ்சீனப் புரட்சி வாயிலாக மாபெரும் புரட்சியை உருவாக்கிய மாவீரர் மா– சே–துங் இன்றும் மக்கள் மனதில் வரலாறாகத் திகழ்ந்துவரும் வரலாற்று நாயகராவார்.

பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் பிரான்சு நாடே அழிந்து விடுமோ? என்ற கேள்வி எழுந்த நேரத்தில் மாவீரன் நெப்போலியன் போனாபார்ட் என்பவர் பிறந்து, "என் தாய் நாடு இறக்கும்போது நான் பிறந்தேன், என் தாய் நாட்டை மீட்டெடுப்பேன்" என்று சொன்னான். அவர் இன்று பிரான்சு நாட்டின் வரலாற்றில் இடம்பெற்ற வரலாற்று நாயகராவர்.

இந்திய நாட்டில் தொட்டாலே தீட்டு என்ற கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, உரிமைகளைப் பாதுகாத்திட, சுதந்திரமாக வாழ வழிவகை செய்திட, உரிமைகள் இழந்த மக்களுக்கு விடியலாக வந்த தேசத்தந்தை மகாத்மா காந்தி, பாரதரத்னா பாபாசாகிப் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் ஆகியோர் வரலாற்று நாயகராவர். இந்திய வரலாற்றில் இன்றும் மக்களால் போற்றப்படும், வணக்கத்திற்குரிய வரலாற்று நாயகராக விளங்கி வருகின்றனர்.

இப்படி வரலாற்றில் இடம்பெற்ற வரலாற்று நாயகர்கள் வரிசையில், புண்ணிய பூமியாம், வந்தோரை வரவேற்று வாழவைத்துக்

கொண்டிருக்கும் தமிழகத்தில், உரிமைகள் மறுக்கப்பட்டு, வாய் இருந்தும் பேச முடியாது ஊமை மக்களாக வாழ்ந்த சமுதாயத்தில் பிறந்து, குன்றின் மீது ஏற்றப்பட்ட விளக்கினைப்போன்று, தமிழகத்தில் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களுக்கு உரிமைகளின் மூச்சுக்காற்றாகப் பிறந்தார். வாழ்ந்தார். வரலாறு படைத்தார். பதவிகளைப் பெற்றார். பல பதவிகளுக்குப் பெருமை சேர்த்தார். பதவிகளால் பணமோ, புகழோ அடையாமல் பதவியின் இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாய் வாழ்ந்தார்.

உலக வரலாற்று நாயகர்களின் வரிசையில் இந்தியாவில், தமிழகத்தில் பிறந்த "மனிதப் புனிதர் கக்கன்" வரலாற்று நாயகர்கள் வரிசையில் இடம் பெற்றுள்ளார் என்பது மனித இனத்திற்குப் பெருமை, தமிழகத்திற்கு பெருமை, இந்திய நாட்டிற்குப் பெருமை, உலக அளவில் மனித இனத்திற்குப் பெருமை, எல்லாவற்றையும் விடத் தாழ்த்தப்பட்ட இனத்திற்குப் பெருமை. நல்ல மனிதராக வாழ்ந்து, இனத்திற்குப் பெருமை சேர்த்து இன்றைய நூற்றாண்டு விழாவின் கதாநாயகனைப் "மனிதப் புனிதர் கக்கன்" அவர்களும் உலக வரலாற்றில் இடம்பெற்றுள்ள வரலாற்று நாயகராவார்.

இவரது நூற்றாண்டு இனிவரும் சமுதாயத் தலைவர்களின் நூற்றாண்டுகளின் 'நுழைவாயில்' என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏற்கெனவே இந்திய அளவில் மாமேதை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களுக்கு நூற்றாண்டு விழாவினைக் கண்டோம். தமிழகத்தில் தந்தை என். சிவராஜ் அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கண்டோம். 2009ஆம் ஆண்டில் இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் 150வது பிறந்த நாள் விழாவினையும் கண்டுவிட்டோம். அடுத்து நாம் காணவிருக்கும் நூற்றாண்டு விழாவின் கதாநாயகன் 'மனிதப் புனிதர் கக்கன்' அவர்களாவார்.

நூறு ஆண்டுகளைக் கடந்து இவ்வாண்டில் நூற்றாண்டு விழாவினைக் காணும் "மனிதப் புனிதர் கக்கன்" அவர்களின் வாழ்க்கை வரலாறு வெளியிடுவது என்பது நன்றியுள்ள மக்கள், 'தலைவருக்கு' அளிக்கும் சிறந்த அன்பளிப்பாகும். அவரது வரலாறு மனித இனத்திற்க சிறந்த பாடமாகும். வாருங்கள் அறிந்துக் கொள்வோம்.

# 2. பிறப்பும் சூழலும்

உலக வரலாற்றில் இயற்கை வளம் அதிகம் கொண்ட இந்திய நாட்டின் வரலாற்றினைச் சிந்துசமவெளி அரப்பா நாகரிகங்கள் வாயிலாக அதிகமாகவே அறிந்து கொள்ளலாம். கடலும், நிலமும் சூழப்பட்ட இந்திய நாட்டின் வளம் உலக மக்களின் கண்களைக் கவர்ந்தது. கடல் வாணிபம் செய்யத்தூண்டின. கடல் கடந்து வந்த உறவினை உருவாக்கிட முனைந்தனர் பலர்.

இந்திய நாட்டை ஆண்ட அரசர்கள், பிறநாட்டினரின் வருகைக்கு முட்டுக்கட்டையாக இல்லாமல், மக்களின் நலனிலும், நாட்டின் வளர்ச்சியிலும் அதிகமாகவே நாட்டம் கொண்டனர், வளர்ச்சியைக் கண்டிடத் திட்டம் தீட்டினர். தீட்டிய திட்டங்களால் பல அந்நியர் வருகைக்குக் கதவுகள் திறந்து கொடுத்தனர். வந்தவர்களில் பலர் வியாபாரம் செய்ய முடியாமல் திரும்பினர். அதில் நிலைத்து நின்றவர்கள் போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரான்சுக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் ஆவார்கள்.

வருகை தந்த அந்நியர்களுக்கிடையேயும் இந்திய நாட்டினை ஆண்டு வந்த அரசர்களுக்கு இடையேயும் ஏற்பட்ட பல்வேறு காலக்கட்ட போர்களிலும் பல அரசர்கள் மாண்டார்கள். வியாபாரம் செய்ய வந்த அந்நியர்கள் நாட்டைப் பிடிக்கும் போட்டிகளில் ஈடுபட்டார்கள். பிரித்தாளும் சூட்சியில் கைதேர்ந்த ஆங்கிலேயர்கள் அரசர்களுக்கிடையே மாறுபட்ட எண்ணங்களை உருவாக்கி, சிற்றரசர்களைப் போரில் வென்று பிறகு பேரரசுகளைத் தம் கைவசம் ஏற்றார்கள். சுதந்திரமாக வாழ்ந்த இந்தியர்கள் ஆங்கில ஏகாதிபத்திய அரசின் ஆட்சிக்குள் அடிமைகளாகி அடிமை விலங்கினை முத்தமிட்டார்கள். ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடிய வீரர்கள் ஏராளம். இந்தியத்தாயின் குழந்தைகள் ஆங்கிலேயர்களை எதிர்த்துச் சுதந்திரம் பெற வேண்டிய போராட்டத்தில் ஈடுபடவேண்டியதாயிற்று.

1600ஆம் ஆண்டில் காலடிவைத்த ஆங்கிலேயர்கள் 1947 வரையில் ஏறத்தாழ 347 ஆண்டுகள் இந்திய மண்ணில் தம் ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தார்கள். இவர்களை எதிர்த்துப் போரிட 1885ஆம் ஆண்டில் இந்தியத் தேசியக் காங்கிரஸ் இயக்கம்

இந்தியாவில் துவக்கப்பட்டது. சிலர் போராட்டத் திட்டங்களைத் தீட்டினர். தொடர் போராட்டங்களின் வாயிலாக நாடு முழுவதும் சுதந்திர வேட்கை எனும் தீ காட்டுத்தீப் போலப் பரவியது. பிரிந்து கிடந்த இந்தியர்கள் சுதந்திர உணர்வால் ஒன்றிணைக்கப்பட்டனர். இந்தியா என்பது 'வேற்றுமையில் ஒற்றுமை' எனும் தேசியப்பற்றோடு இணைந்தே காணப்பட்டது.

இந்தியாவின் எல்லைப் பகுதிகள் எங்கெல்லாம் பரந்து விரிந்து காணப்பட்டனவோ அங்கெல்லாம் சுதந்திர வேட்கை மக்களிடையே உருவானது. 1857ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகம் வேலூரில் துவங்கப்பட்ட பின்தான் 'சுதந்திர உணர்வு' இந்தியா முழுவதும் பரவத் தொடங்கியது. இந்தியர்களின் ஒற்றுமையைத் தவறாக எடைபோட்ட ஆங்கிலேயர்களின் தப்புக் கணக்கினை, இங்கிலாந்தில் ஆட்சி செய்த ஆங்கிலேயர்கள் உணர்ந்த பின், இந்திய நாட்டின் மீது கவனம் செலுத்தினர்.

அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளைப் பல்வேறு சட்டங்களைப் பின்பற்றிச் சமாதானம் செய்தது ஒரு பக்கமும், அதோடு இல்லாமல் சுதந்திரப் போராட்டத் தியாகிகளை அடக்கிடக் கொடிய செயல்களைப் பின்பற்றியது ஒரு பக்கமும் நடந்தன.

1857 முதல் 1909 வரையில் பல சட்டங்கள் இந்தியர்களின் மீது சுமத்தப்பட்டாலும், இந்தியர்களின் சுதந்திரப் போராட்ட உணர்வு குறையவில்லை. பல்வேறு ஆங்கிலேயக் குழுக்கள் அவ்வப்பொழுது வருகை தந்தாலும், தேசியக் காங்கிரஸ் இயக்கத்தின் செயல்பாடுகள் மகாத்மா காந்தி அவர்களின் தலைமையில் இந்தியா முழுவதும் காட்டுத் தீயெனப் பரவியன. மாநிலம் வாரியாகத் தலைவர்களின் தலைமையின்கீழ்ச் சுதந்திரப் போராட்ட யுக்திகளைக் கையாண்டு, நடைமுறைப் படுத்தப்பட்டு, தமிழகத்தில் தனிமுத்திரை பதிக்கும் வண்ணம், தேசிய நீரோட்டத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்கள் ஏராளம். வரலாறு அனைவரையும் போற்றிப் புகழ்ந்து வருகிறது.

தனது எழுச்சி மிக்க கவிதை வரிகளால், சுதந்திர எண்ணமே இல்லாமல் துவண்டு காணப்பட்ட தமிழர்களைக் கவிதை நடையால் தட்டி எழுப்பியவர், "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என முழுச் சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே 'சுதந்திரம் பெற்றுவிட்டோம்' என உணர்ந்து பாடியவர், காளி போன்ற தெய்வங்களின் வீரச் செயல்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லிச் சுதந்திர வேகத்தை, வேட்கையை, வீரத்தை இந்தியா முழுவதும் வீரமுழக்கமிட்ட மகாகவி பாரதியார் சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரிசையில் இடம் பெறுகின்றவர்.

மிட்டா மிராசுதாரர் வாழ்க்கையை வாழ்ந்து, கடல் கடந்து வாணிபம் நடத்தி, தான் சம்பாதித்த அனைத்துப் பொருளாதாரத்தையும் சுதந்திரப் போராட்டத்திற்காகவே செலவிட்டு, ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, சிறையிலே செக்கு இழுத்து, மிகப் பெரிய செல்வந்தராய்ப் பிறந்து நாட்டிற்காக, நாட்டின் விடுதலைக்காக அனைத்துத் துன்பங்களையும் தானே தாங்கிக் கொண்டு, வரலாறாக வாழ்ந்து வரலாறாகவே மறைந்த தேசத் தியாகி செக்கு இழுத்த வ.உ.சிதம்பரனார் அவர்கள் நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரிசையில் இடம்பெறுகின்றவர்.

மாமேதை பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றை அறியும்போது, “அம்பேத்கர்” எனும் பிராமண ஆசிரியர், செட்யூல்டு இனத்தைச் சார்ந்த “பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர்” எனும் மாணவனின் கல்வித் தன்மையை அறிந்து, உணவு கொடுத்து, உடை கொடுத்து, சிந்தனை ஆற்றலைக் கொடுத்து, சிறந்த கல்விமானாக உருவாக்கியதால்தான் நாளடைவில் தன் பெயரையே “அம்பேத்கர்” எனப் பெயர்மாற்றம் பெற்றார் என அறிய முடிகின்றது. அதே இளமைக் கால நிகழ்வுதான் கக்கன் அவர்களின் வாழ்விலும் ஏற்பட்டுள்ளது.

மதம், இனம், மூடநம்பிக்கை இவைகளைச் சாதியப் பாகுபாட்டிற்கு அப்பாற்பட்டு, சம்மட்டியால் அடித்து, கக்கன் வாழ்ந்த காலங்களில் சான்றாகச் சொல்லப்படும் பெருமைக்கு வித்திட்டவர்தான் வைத்தியநாத ஐயர். மாமேதை அம்பேத்கர் அவர்களுக்கு ‘அம்பேத்கர்’ என்ற ஆசிரியர் என்றால், கக்கன் அவர்களுக்கு வைத்தியநாத ஐயர் என்றே சொல்லலாம்.

பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் எனும் நான்கு வருணங்களுக்கு அப்பாற்பட்ட “பஞ்சமர்” எனும் அடித்தளத்து இனத்தையும் பிராமணர் எனும் உயர் இனத்தையும் இணைக்கும் பாலமாக “இன ஒற்றுமைப் பாலமாக” வைத்தியநாத ஐயர் வாழ்ந்தார். அவரும் இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரிசையில் இடம் பெறுகின்றவர்.

கடவுள் எனும் பெயரால் மனித இனத்தின் பெருமைகளை மூடநம்பிக்கை எனும் மூட்டை கட்டிக்கொண்டு புண்ணிய காவேரி எனும் நதியைத் தேடி அலையும் பகுத்தறிவு சிந்தனையற்ற மக்களுக்கு, பகவான் புத்தன் வழியில் பகுத்தறிவுப் பெட்டகமாக வாழ்ந்தவர்தான் ஈரோட்டுத் தந்தை பெரியார் ஈ.வே.ரா அவர்கள். சுதந்திரப் போராட்டங்களில் காங்கிரஸ் பேரியக்கத்தில் தன்னை

ஈடுபடுத்திக் கொண்டு தமிழக மண்ணிற்குப் பெருமை சேர்த்ததோடு, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர்களோடு தன்னையையும் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு "பகுத்தறிவுத் தந்தையாக" வாழ்ந்த தந்தை பெரியார் சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரிசையில் இடம் பெறுகின்றவர்.

"படிக்காத மேதை, படித்த மேதைகளை உருவாக்கியவர், கஞ்சியின்றிக் கண்ணீரோடு கல்விப் பாடசாலைக்குச் செல்லும் குழந்தைக்குக் "கஞ்சித் தொட்டி திறந்து கல்விக்கண்" கொடுத்தவர் என மனித இனத்தின் மாண்பினைப் போதித்து எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர், "தலைவன்–தொண்டன்" என்ற சொல்லுக்கு புகழினை தேடித்தந்தவர், திறமைசாலிகளுக்கிடையே சாதி செத்துப்போன, பட்டுப் போன மரம் என்பதனை உலகுக்கு உணர்த்தியவர். நாட்டுப் பற்று, இனப் பற்று, தலைமை மீது விசுவாசம் எனும் ஒட்டுமொத்த மனிதப் பண்புகளை இம் மண்ணில் விதைத்த வீரர்தான் 'கர்மவீரர் காமராஜர்' அவர்கள். மகாத்மா காந்தியோடு இணைந்து வடபுலத்து இந்தியர்களையும் தென் புலத்து இந்தியர்களையும் காந்திஜி எனும் பாலம் கொண்டு சுதந்திரப் போராட்டத் தியாக அனலை ஒவ்வொருவர் உள்ளத்திலும் எறியும் அனலாக உருவாக்கிய கர்மவீரர் காமராசர் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரிசையில் இடம் பெறுகின்றவர்.

பூரண சுதந்திரம் பெற்றிட ஆங்கிலேயர்களை எதிர்த்த மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன், தமிழக மக்களின் வீரத்திற்கு எடுத்துக் காட்டாய் வாழ்ந்து வீரமரணம் பெற்றான். அவனும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரிசையில் இடம் பெறுகின்றவன்தான்.

தமிழக மண்ணில் செட்யூல்டு இன மக்களின் முன்னேற்றப் பாதைக்குப் பாடுப்பட்ட பண்டிதமணி க. அயோத்திதாஸ், தாத்தா இரட்டைமலை சீனிவாசன், எம்.சி,ராஜா, தந்தை சிவராஜ், போன்றவர்கள் நீதிக்கட்சிக் காலத்தில் உலகிற்கு அடையாளம் காட்டப்பட்டாலும், தேசியக் காங்கிரஸ் இயக்கம் வாயிலாகத் தமிழகத் தலைவர்கள் வரிசையில் முதன் முதலாகச் செட்யூல்டு இனத்தைச் சார்ந்த கக்கன் முன்னிலையாக அடையாளம் காணப்பட்டார் எனில் கக்கன் அவர்களும் தேசியத் தலைவர்கள் வரிசையில் இடம்பெறுகின்றவர்தான்.

அரசியல் வாழ்வில் தனிமனிதனின் ஈடுபாடு எப்படி இருக்க வேண்டும்? எப்படி இருப்பது நல்லது? என்ற நெறிமுறை அறிந்திட, தனிமனித ஒழுக்கம் எப்படி அரசியல், பொதுவாழ்வில் ஒரு மனிதனை உயர்நிலைக்கு எடுத்துச் செல்கிறது? எனும் உண்மையை

அறிந்திட, மனித வாழ்வு என்பது கிடைக்காத பெட்டகம்; அப்படிப்பட்ட மனித வாழ்வினைக் கசக்கிப் பிழியப்படும் பழங்களைப் போல் இல்லாமல் இறைவனுக்குப் படைக்கும் படையல் பழங்களாகப் பெருமை சேர்க்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டுதான் கக்கன் வாழ்க்கை என நாம் அறிந்திட, ஓர் அரசியல் கட்சித் தொண்டன் தன் தலைமைக்கு விசுவாசமாக எப்படி இருக்க வேண்டும்? அப்படி இருப்பதால் என்ன பலன் பெறமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, சிறைச்சாலைக் கம்பிகளை முத்தமிட்ட தொண்டன் அமைச்சர் அரியணையில் ஏறலாம் எனும் பலனைப் பெற்றிட முடியும் எனும் உண்மை வாழ்வினை நாம் அறிந்திட, தூய்மை, நேர்மை, சொல்லில் அடக்கம், கனிவு, பொருமை, சிந்தனை, செயல்பாடு, அரவணைப்பு, இப்படி தமிழில் புகழுக்கு எடுத்துக்காட்டான அனைத்துச் சொல்லிற்கும் சான்று 'ஒரு மனிதனின் வாழ்வில் உண்டு' என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியவர் என்பதை நாம் அறிந்திட,

**சிக்கனத்தைக் கைப்பிடி, சினம்**
**கொண்டு வாழாதே, அச்சம் கொள்**
**அறத்தைக் கடைப்பிடி**

எனும் சிந்தனை வரிகளுக்குத் தனது வாழ்வினை அமைத்துக் கொண்டவர் எனும் உண்மையை அறிந்திட, பதவி சுகம் காணாமல் பதவிகளுக்கே சுகத்தைக் கொடுத்தவர், பதவியால் பெருமை அடையாமல் பதவிகளுக்குப் பெருமை சேர்த்தவர், இச்சொல்லுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டிய உத்தமரைப் பற்றி அறிந்திட, வறுமையை நேசித்தவர் வறுமை எனும் வாழ்க்கை மைதானத்தில் நேர்மை எனும் பந்தினை முன் வைத்து வெற்றிக் கோல்களைப் போட்டவர், பிறந்தபோதும் வறுமை, மறைந்தபோதும் வறுமை என்ற வாழ்க்கையை ஏற்றுத் தூய்மை எனும் அணையா வெளிச்சத்தை இருள் கொண்ட தமிழகத்தில் வெளிச்சமாகத் தூய்மையாக வாழ்ந்தவர், அவர்தான் "மனிதப் புனிதர் கக்கன்". தமிழகத்திற்கே பெருமை, இந்திய நாட்டிற்கே பெருமை—இப்படிப்பட்ட வரலாற்று நாயகருக்கு இந்தத் தலைமுறையினர் நூற்றாண்டு விழாவினைக் காண்கின்றனர். கக்கன் வாழ்ந்த நூற்றாண்டில் நாம் வாழ்கிறோம் என்ற பெருமையைத் தவிர இப்பிறவியில் வேறு பெருமையும் நமக்குத் தேவையா?

வரலாறாய் வாழ்ந்த வரலாற்று நாயகருக்கு வாழ்க்கை வரலாறு படைப்பது நம் 'அனைவருக்கும் பெருமைதானே'. வாருங்கள் கடலில் மூழ்குவோம். கக்கன் எனும் முத்தினை அறிந்திடுவோம்.

# 3. கக்கன் பிறப்பு

## மதுரை மாவட்டப் பெருமை

தமிழக வரலாற்றில் மதுரை மாநகருக்கு நிரந்தரமான வரலாறு உண்டு. சங்ககால இலக்கியங்கள் முதல் இந்நாள் வரையில் பல துறைகளில் மிளிர்ந்து வரும் மாநகரமாகும். முத்தமிழ் வளர்ந்த, முச்சங்கம் நடந்த வரலாற்றுக் கூடல் நகரம்தான் மதுரை மாநகரம். சிலப்பதிகாரத்தில் தன் குற்றத்தை ஒத்துக்கொண்டு நீதியை நிலைநாட்டப் பாண்டிய மன்னன் தன் உயிரைத் தந்து மண்ணின் புனிதம் காத்த மண்தான் மதுரை மாநகரம்.

பாண்டியர் ஆண்ட காலத்தில் பொலிவு பெற்று மதுரை மீனாட்சியின் அருளால் கடவுள் பக்தி அனைத்து இல்லங்களிலும் தழைத்து மொழிப்பற்று, வீரத்தின் விளைநிலமாய், கலை, பண்பாடு காத்திட்ட நகரமே மதுரை மாநகரம். இதுதான் மனிதப் புனிதர் கக்கன் பிறந்த மாவட்டம் ஆகும். இம்மாவட்டம் கக்கன் பிறந்ததால் பெருமைகண்டது. இந்தியச் சுதந்திரப் போராட்டத் தியாக வரலாற்றில் மதுரை மாவட்டத்திற்குத் தனிச்சிறப்பு உண்டு.

மகாத்மா காந்தி அவர்கள் இம் மண்ணிற்கு வந்தபோது இம் மாவட்டத்திலிருந்து அடையாளம் காணப்பட்ட கக்கன் அவர்களால் மதுரையைக் காந்தியடிகள் அதிகம் நேசித்ததாக வரலாறு நமக்குச் சொல்லும் பாடமாகும்.

மதுரை மாநகரைச் சுற்றிலும் வளம் பெற்ற, விவசாயம் கண்ட ஏராளமான கிராமங்கள் உண்டு. மதுரை மாவட்டத்திற்குட்பட்ட மேலூர் வட்டம் கக்கன் பிறந்த புகழ்பெற்ற வட்டமாகும்.

கக்கனின் தேசியப் போராட்டக்களத்தை மேலூர் வட்டம்தான் உருவாக்கிக் கொடுத்தது. ஒருகாலக் கட்டத்தில் மேலூர் வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் கக்கனின் கால்படாத கிராமங்களே இருக்க முடியாத அளவிற்கு அவரது சமூக சேவை பரந்து விரிந்து காணப்பட்டது. மேலூர் வட்டத்திற்குட்பட்ட சிற்றூர்தான் தும்பைப்பட்டி எனும் கிராமமாகும். கக்கன் இக்கிராமத்தில் பிறந்த காரணத்தால் தும்பைப்பட்டி எனும் கிராமம் வரலாற்றில் இடம்பெற்ற கிராமமாக

திகழ்கின்றது. தமிழகத்தில் ஆயிரக்கணக்கான கிராமங்கள் வரலாற்றில் மறைந்து காணப்படுகின்றன. சிறந்த மனிதர்கள் பிறந்ததாலே ஒருசில கிராமங்கள் மக்கள் மனதில் இடம் பெறுகின்றன. தும்பைப்பட்டி எனும் கிராமத்தில் கக்கன் பிறக்காவிட்டால் அந்தக் கிராமத்தை நினைத்துப் பார்க்க ஆள் இல்லை. தான் பிறந்த மண்ணுக்கும், இனத்துக்கும், சமுதாயத்திற்கும் தமிழகத்துக்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த கக்கன் பிறந்த தும்பைப்பட்டி கிராமம்தான் கக்கனைத் தாளாட்டி வளர்த்த புண்ணிய பூமி.

மதுரையிலிருந்து 30.கி.மீ. தொலைவிலுள்ள வரலாற்றுச் சிறப்புப் பெற்ற, கடவுள் பக்தியில் புகழ்பெற்ற அழகர் கோயிலில் குடிக்கொண்டுள்ள கள்ளழகர் தெய்வதிற்கு, தும்பைப் பூவால் மாலைகள் தொடுத்துச் சூட்டி மகிழும் மக்களைக் கொண்ட ஊரானதால் இவ்வூருக்குத் “தும்பைப்பட்டி” எனப் பெயர் வந்ததாக இன்றளவும் மக்கள் புகழ்ந்து பேசி வருகின்றார்கள். தும்பைப் பூவால் பெருமை பெற்ற தும்பைப்பட்டி கிராமத்திற்கு மேலும் ஒரு பெருமை கூடியது. அதுதான் ‘மனிதப் புனிதர் கக்கன்’ இக்கிராமத்தில் பிறந்தது.

தும்பைப்பட்டி கிராமம் நாற்புறமும் குளங்கள்(கண்மாய்) சூழ்ந்துள்ளதால் குளிர்ச்சியான கிராமமாகும். வயல்வெளிகள் நிறைந்த கிராமமாகவும், பசுமையும் விசுவாசமுள்ள மக்களைப் பெற்ற கிராமமாகவும் திகழ்ந்தது. இக்கிராமத்திற்குப் போக்கு வரத்து வசதிகள் சிறப்பாக அமைந்துள்ளன. மதுரை—திருச்சி நெடுஞ்சாலையில் மதுரை மேலூரிலிருந்து வடக்கே ஏழு கி.மீ. தொலைவிலும் கொட்டாம் பட்டியிலிருந்து தெற்கே 23.கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. பல கிராமங்களை இணைக்கும் முக்கியச் சிற்றூராகத் தும்பைப்பட்டி கிராமம் அமைந்துள்ளது. கக்கன் குடும்பத்தினரால் இன்று தும்பைப்பட்டி புகழ் பெற்ற கிராமமாக விளங்குகிறது.

தும்பைப்பட்டியைச் சுற்றிப் பதினெட்டுப்பட்டி சிற்றூர்கள் அமைந்துள்ளன. இந்தப் பதினெட்டுப்பட்டி சிற்றூர்களுக்கும் தாய்க் கிராமமாகத் தும்பைப்பட்டி கிராமம் இன்றளவும் விளங்கி வருகின்றது. இக்கிராமத்தில் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் வீரகாளியம்மன் திருக்கோயில் எழுந்தருளி, அனைத்துக் கிராம மக்களுக்கும் பாதுகாப்பாக அமைந்திருக்கின்றது. இந்தத் தெய்வத்தைத்தான் பதினெட்டுப்பட்டி கிராம மக்களும் பொதுவான தெய்வமாக இன்றும் வணங்கி வருகின்றார்கள்.

தும்பைப்பட்டி கிராமமாக இருந்தாலும் இக்கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் பல வகுப்பைச் சார்ந்தவர்களாகவே இருக்கின்றார்கள். மூப்பனார், பரதவர், முகமதியர், அம்பலக்காரர் (கள்ளர்) தாழ்த்தப்பட்டவர் எனப் பல வகுப்பைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். தீண்டாமைக் கொடுமைகள் இப்படிப்பட்ட சிற்றூர்களில் காலம் காலமாக இருந்து வந்தாலும் தும்பைப்பட்டி கிராமம் சிறிது மாற்றமாகவே காணப்பட்டது.

காரணம் தாழ்த்தப்பட்ட மக்களால் மட்டுமே பூசை செய்து வணங்கப்படும் கோயில் இவர்கள் பகுதியில் இருப்பதால், இனப்பாகுபாடு இல்லாமல் அனைத்து வகுப்பைச் சார்ந்த மக்களும் தங்களது இனப்பெருமை, தகுதி இவைகளை மறந்து கோயிலுக்குள் வநது, ஆராதனை செய்து, திருநீறு பெற்றுக் கொள்ளும் வழக்கம் தொன்று தொட்டு இன்றளவும் நடந்து வருவது பெருமைக் குரியதாகும்.

கடவுள் பெயரால் சாதிக் கலவரங்கள் நடந்து வரும் தமிழகத்தில், தும்பைப்பட்டி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதியில் உள்ள கோயிலில் அனைத்து மக்களையும் சரிசமமாய் வழிநடத்தும் பாங்கு இருப்பதால் தமிழகத்தில் இக்கிராமத்தைச் "சமத்துவபுரம்" என்று சொன்னால் பெருமைதானே. மக்களே மனதால் இணைந்து வாழ வேண்டும் என்ற நிலை உண்டானால் மட்டுமே மக்களிடையே சமத்துவம் உருவாகும். தும்பைப்பட்டி கிராமம் அக்காலத்திலிருந்தே இக்காலம் வரை கடவுள் பக்தியில் சமத்துவம் கண்டிருப்பது போற்றப்படக் கூடியதுதான்.

## குளங்களின் பெருமை

இக்கிராமத்தைச் சுற்றிச் செங்கை ஊரணி, செட்டியார் ஊரணி, பீக்கன்குளம் ஆகிய மூன்றும் குடிநீர் எடுக்கும் குளங்கள் இருந்திருக்கின்றன. இக்குளங்களே அனைத்து மக்களுக்கும் குடிநீர் வழங்கும் குளங்களாக இருந்தன. கால மாறுபாட்டால் இன்று இக்கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டி மேல் நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு அவற்றின் மூலமாகக் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்கண்ட மூன்று குளங்கள் குடிநீர் கொடுத்து வந்தாலும் மேலும்பல குளங்கள் இக்கிராம வளமையைக் காத்து வந்தன. பெரியகுளம், பண்ணிக்கர்குளம், பொட்டல்குளம், துரியன்குளம், திருமுடிகண்டான்குளம், வல்லக்குடி கண்டான் பீக்கன்குளம் ஆகிய குளங்கள் இக்கிராமத்தின் வளத்தைக் காத்துவந்தன. ஒரு

கிராமத்தில் ஒரு குளம் இருந்தாலே அதிசயம். ஆனால் இக்கிராம மக்கள் வளத்தோடு வாழவேண்டும் என்பதற்காகவே ஏழு குளங்கள் அமைந்திருப்பது சிறப்பு.

இக்கிராமத்தைச் சுற்றிலும் உள்ள அனைத்து விவசாய நிலங்களும் புன்செய் நிலங்களாக இருந்த காரணத்தால் கண்மாய்களில் தேங்கிக் கிடக்கும் மழை நீரை நம்பியே மக்கள் விவசாயம் செய்து வந்தனர். இதுதான் இக்கிராமத்தின் அன்றைய விவசாய நிலை. ஆனால் காலப்போக்கில் வைகை ஆற்றில் கட்டுப்பட்டுள்ள அணைத்திட்டத்தின் பலனாக இக்கிராமம் நெல், பருத்தி, கம்பு ஆகியன விளைந்து வளம் கொழிக்கும் சிற்றூராக இன்றும் விளங்கி வருகின்றது.

தும்பைப்பட்டி கிராமத்திற்குக் கோயிலால் மட்டும் பெருமை இல்லை; பசுமைப் புரட்சியாம் விவசாயத்தாலும் பெருமை கிடைத்திருப்பது போற்றப் படத்தக்கதாகும்.

**கக்கன் – பெயர் விளக்கம்**

தும்பைப்பட்டி கிராமம் இயற்கைச் சூழலால் அமைந்ததைப் பார்த்தோம். சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும், இனத்தால் ஒன்றிணைந்து விடுவது இயற்கை படைத்த நிகழ்ச்சியாகும். பலவகை இனமக்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வந்தாலும், அனைத்து சமுதாய மக்களுக்கும் "ஒன்று சேர்ந்து வணங்கும் ஒரே தெய்வம் வீரகாளி அம்மன் கோயில்'' என நாம் ஏற்கெனவே பார்த்தோம். இக்கோயிலுக்கு இறைவழிபாடு செய்து வரும் குடும்பத்தினருக்குப் 'பூசகர் குடும்பம்' எனவும் இறைவழிபாடு செய்பவருக்குப் 'பூசாரி' என்றும் பெயர். இக்குடும்பத்தில் பிறந்தவர்தான் "பூசாரிக் கக்கன்". இவர்தான் "மனிதப் புனிதர் கக்கன்" அவர்களின் தந்தை ஆவார். கக்கன் பெயரில் இக்கிராமத்தில் பலர் வாழ்ந்து வந்ததாக வாய்வழிச் செய்திகள் நமக்குக் கிடைத்துள்ளன.

கக்கன் என்பது தெய்வத்தின் பெயர் என்பதும் இக்கிராமத்தில் பிறக்கும் குழந்தைகளுக்குத் தெய்வத்தின் பெயரான 'கக்கன்' என்று சூட்டினால் அவர்களது வாழ்க்கைத் தரம் மேன்மையுள்ளதாக அமையும் என்பதும் இக்கிராம மக்களின் நம்பிக்கை என அறிய முடிகிறது.

ஆண் குழந்தையாகப் பிறந்தால் 'கக்கன்' என்றும் பெண் குழந்தையாகப் பிறந்தால் 'கக்கி' என்றும் பெயர் சூட்டுவது வழக்கமாகக் காணப்பட்டது. ஆனால் நாகரிகம் வளர வளரப்

பெயரிலும் நாகரிகப் பெயர்கள் வளரத் தொடங்கின. என்னதான் நாகரிகம் வளர்ந்து விட்டாலும் பழைய காலங்களை நினைவூட்டும் வகையிலே இன்றளவும் இக்கிராம மக்கள் குழந்தைகளுக்குக் 'கக்கன்' எனப் பெயரிட்டு மூதாதையர் வழிக்கு வரலாறு படைத்து வருகின்றார்கள். பிறந்தவுடன் குழந்தைகளுக்குக் கக்கன் எனப் பெயர் சூட்டிவிட்டுப் பிறகு பள்ளிகளில் சேர்க்கும் பொழுது வேறு பெயர்களில் பெயர் சூட்டுவதும் நடைமுறையில் இருப்பதாகவும் அறிய முடிகின்றது.

ஆக, 'கக்கன்' எனும் இறைவழியால் சூட்டப்படும் பெயருக்குப் 'பூசாரிக்கக்கன்' குடும்பமும் எடுத்துக்காட்டாக வாழ்ந்து வந்துள்ளது. 'பூசாரி' வழிவந்த குடும்பத்தில் பிறந்த குழந்தைக்குப் 'பூசாரிக்கக்கன்' எனப் பெயரிட்டனர்.

மனிதப் புனிதர் கக்கன் அவர்களின் தந்தை 'பூசாரிக் கக்கன்' என்ற பெயரால் அழைக்கப்பட்டாலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து இறக்கின்ற காலம் தொட்டு, 'தோட்டி' என்றும் தலையாரி என்றும் அரசாங்க ஊழியராகவே அழைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

'பூசாரிக் கக்கன்' அவர்களுக்கு மட்டும் பெயரில் 'கக்கன்' சேர்க்கப்படவில்லை. அவருக்குப் பிறந்த குழந்தைகள் அனைவருக்கும் 'கக்கன்' என்ற பெயர் சூட்டப்பட்டது வரலாற்று நிகழ்ச்சியாகும். ஆக, தும்பைப்பட்டி கிராமத்தில் 'கக்கன்' என்ற பெயர் வரலாற்றுச் சிறப்பு மிக்க பெயராக அனைவராலும் போற்றப்பட்டது என்றால் அதற்குக் காரணம் 'கக்கன்' அவர்களுக்குப் பெயர் சூட்டப்பட்டதனால் தான். அதுவரையில் ஒரு கிராமத்திற்குள்ளே அழைக்கப்பட்ட பெயர் அகில இந்திய அளவில் புகழ் பெறக் காரணம் 'கக்கன்' எனும் மனிதப் புனிதருக்குப் பெயர் சூட்டியதால் மட்டுமே என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும்.

## பூசாரிக் கக்கன் குடும்பம்

'பூசகர்' குடும்பத்தில் 'கக்கன்' எனும் இனப் பெயரைத் தாங்கிய 'பூசாரிக் கக்கன்' ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வருவாய்த்துறை (சிற்றூர் அதிகாரி) அதிகாரிகளுக்குத் துணையாக ஊர்க்காவலராகப் (village police) பணியாற்றி வந்தார். கிராமங்களில் இவரைச் சுருக்கமாகத் 'தோட்டி' என்று அழைப்பர். 'தலையாரி' என்றும் அழைப்பர்.

பூசாரிக் கக்கன், தக்கப் பருவம் அடைந்ததும் 'குப்பி' என்ற அம்மையாரைத் திருமணம் செய்து வைத்தார்கள். கிராம மக்களால் மிகவும் பெருமையாகப் போற்றப்படும் குடும்பத்தில் பூசாரிக் கக்கன் – குப்பி என்ற தம்பதியினர் கவலை இல்லாமல் வாழ்ந்து வந்தனர்.

பூசாரிக் கக்கன், குடும்பத்தைக் கண்காணிப்போடு வழிநடத்தியதோடு ஆங்கில அரசு வேலையையும் கவனமாகச் செய்து வந்தார். அதோடு இறைவனையும் தொய்வில்லாமல் வணங்கி வந்தார்.

**"மனிதப் புனிதர் கக்கன்" பிறப்பு**

மனிதப் புனிதர் கக்கன் பிறப்பு என்பது மனிதப் பிறப்பில் மனித வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டான பிறப்பாகும். தொட்டாலே தீட்டு என்ற இனத்தில் பிறந்து எல்லோராலும் தொடுவதற்கு ஏங்கக்கூடிய மனிதராக வாழ்ந்த பிறப்பாகும். தான் பிறந்த இனத்திற்கு, கிராமத்திற்கு, மாவட்டத்திற்கு, மாநிலத்திற்கு, நாட்டிற்குத் தனிமனித உணர்வும், போராட்டக் குணமும் தேவை என வாழ்ந்து காட்டிய பிறப்பாகும்.

உயர் சாதி இனமான பிராமணர்களும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களின் வாழ்வு முறையை நேசித்து இரு இன மக்களும் சரிநிகர் சமமானவர் என்பதை எடுத்துரைத்த பிறப்பாகும். ஆங்கிலேயர்களின் அடக்கு முறை ஒருபக்கம், சாதியக் கொடுமைகள் மறுபக்கம், ஆங்கிலேயர்கள் இந்தியர்களுக்குப் பூட்டிய அடிமை விலங்கு ஒரு பக்கம், இந்து இன மக்களிடையே தாழ்த்தப் பட்ட மக்களுக்குத் 'தீண்டாமை' எனும் அடிமை விலங்கு இன்னொரு பக்கம். ஆக இந்தியனுக்கு ஒரு அடிமை விலங்கு என்றால் தாழ்த்தப் பட்டவருக்கு இரண்டு அடிமை விலங்குகள். இந்த அடிமை விலங்கினை உடைத்தெறியப் பிறந்த பிறப்பாகும்.

கசையடி கொடுத்தாலும், கல்லும் மண்ணும் கலந்து உணவாகக் கொடுத்தாலும், எப்படிப்பட்ட துன்பத்திற்கு ஆளானாலும், மனைவி கண் முன்னே கணவரைக் கொடுமைப்படுத்திய கொடுமை ஏற்பட்ட போதிலும், வாழ்நாள் முழுவதும் தலைவர்களைக் காட்டிக் கொடுக்காமல் தேசியத்தின் மீது பற்று வைத்த "விடுதலைப் போராட்ட மாவீரர்" பிறந்த பிறப்பாகும்.

தூய்மையான வாழ்வு மட்டுமே மனித இனத்தைக் காக்கும் உன்னத நிலை என்பதனை உலகிற்கு எடுத்துக்காட்டிய மாமனிதர் பிறந்த பிறப்பாகும்.

மிண்டோமார்லி சீர்திருத்தம் எனும் பெயரில் 1909 ஆம் ஆண்டு ஒரு சட்டம் கொண்டுவந்து இந்தியர்களின் சுவாசக் காற்றில் நச்சுக் கலந்த ஆண்டில்தான் "மனிதப் புனிதர் கக்கன்" பிறந்தார்.

இவர் பிறப்பால் நாடு பெருமை கண்டது. பதவி நாற்காலிகள் புனிதம் பெற்றன. நேர்மை நிலைத்து நின்றது. உழைப்பு வரலாறாக மின்னியது. நம்பிக்கை நல்லவர்களால் போற்றப்பட்டது. நாணயம் காக்கப்பட்டது. திட்டங்கள் எட்டுத் திக்கும் பரவின. மனித நேயம் காயம் படாமல் காத்துநின்றது. காவல்துறை கண்ணியமாய்ப் போற்றப்பட்டது.

கல்வி அனைத்து இனமக்களின் இருள் வாழ்க்கையை வெளிச்சமாக்கியது. அணைகள் திறக்கப்பட்டன. விடுதிகள் களைகட்டின. உறவினர்கள் கட்டுக்கோப்பில் நடத்தப்பட்டனர். பதவி சுகம் தவறாகப் பயன்படுத்தாமல் பாதுகாக்கப்பட்டது. காமராசருக்கு உண்மைச் சீடர் கிடைத்தார். வடஇந்தியாவில் பிறந்த மகாத்மா காந்திக்குத் தென்னகக் காந்தியாகக் கக்கன் கிடைக்கப்பட்டதால் ஒரே இந்தியாவைக் காண முடிந்தது. காங்கிரஸ் தலைமை ஏற்றதால் குக்கிராமங்களில் மூவர்ணக்கொடி வஞ்சனையில்லாமல் பறந்தது. நேருவால் 'கக்கன்ஜி' எனப் பெருமையாக அழைக்கப்பட்டார். அன்னை இந்திராவால் இன்முகத்தோடு தலைமை ஏற்கும் வரலாறு நிகழ்ந்தது. கருப்பு நிறத்தில் வெள்ளைப் பற்கள் பளிச்சிடச் சிரிப்பு இறைவனின் பரிசாகக் கிடைத்தது. இவரது ஓங்கி உயர்ந்த உருவத்தால் இவரது பிறப்பு மனித இனத்திற்கு "விடியல்" என்றே சொல்லலாம்.

பூசாரிக்கக்கன்–குப்பி அம்மையார் எனும் தம்பதியினருக்குப் பிறந்த முதல் மகன் தான் "மனிதப் புனிதர் கக்கன்". 1909 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் நாள் (18–06–1909) கக்கன் பிறந்தார். இவர் பிறக்கும் போது குடும்பம் ஓரளவு பொருளாதாரத்தில் நிறைவு பெற்றிருந்தது. தந்தையின் வருமானம் சிறிதளவாகவே இருந்தாலும் தாய் குப்பி அம்மாள் சிக்கனத்தோடு வாழ்க்கை நடத்தியதால், குடும்பத்தில் வறுமை ஏற்பட வாய்ப்பில்லை. கக்கன், குடும்பத்தின் மூத்த மகன் எனும் பொறுப்பில் பிறந்திருந்தாலும், குழந்தைப் பருவத்தில் அவருக்கு எவ்விதமான துன்பமும் ஏற்படாமல் தந்தை பூசாரிக் கக்கன் பாதுகாத்துக் கொண்டார். பூசாரிக்கக்கன் குப்பி

அம்மாள் தம்பதியருக்கு இரண்டாவது ஆண் குழந்தை பிறந்தது. இக் குழந்தைக்குப் "பெரிய கருப்பன்" எனப் பெயரிட்டனர்.

**பூசாரிக்கக்கன் + குப்பி**

**கக்கன் — பெரிய கருப்பன்**

இரண்டாவது குழந்தை பிறந்ததும் குப்பி காலமானார். இதனால் கக்கன் இளமையிலேயே தாய்ப் பாசம் இல்லாமல் வளர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

## பூசாரிக் கக்கன் மறுமணம்

முதல் மனைவி 'குப்பி' இறந்தபின் இரண்டு பச்சிளங் குழந்தைகளை வைத்துக் கொண்டு பூசாரிக்கக்கன் வேதனை வாழ்க்கையை நடத்தினார். ஒரு பக்கம் ஆங்கில அதிகாரிகளின் கெடுபிடி வேலைத் திணிப்பு. அடுத்த பக்கம் குழந்தைகளைப் பாதுகாத்துக் கொள்ள ஆட்கள் இல்லாத நிலை. உறவினர்களின் ஒத்துழைப்பு இருந்த போதிலும் குழந்தைகளைப் பாதுகாக்க வாய்ப்பில்லை. மறுமணம் செய்யும் எண்ணம் பூசாரிக்கக்கனுக்கு ஏற்படாத போதிலும், குழந்தைகளின் நலனைக் கருதி மறுமணம் செய்து கொள்ளும் எண்ணம் மேலோங்கியது. வரும் மனைவி குழந்தைகளிடம் பாசமாய் இருக்க வேண்டும்; அதோடு குடும்பத்தை நல்ல முறையில் நடத்தப் பொறுப்புள்ள பெண்ணை நோக்கித் தேடப் புறப்பட்டனர்.

இறுதியாக, "பிரம்மியம்மாள்" என்ற பெண்ணைப் பூசாரிக்கக்கன் மறுமணம் செய்து கொண்டார். குடும்பத்தின் சூழ்நிலை அறிந்து பிரம்மியம்மாள் பொறுப்புடன் குடும்பத்தை நடத்தி வந்தார். பெற்ற தாய்ப் பாசத்தைப் பெற முடியாமல் தவிக்கும் கக்கன் மீது தனிப்பட்ட பாசத்தைக் காட்டினார். தான் வளர்ப்புத் தாய் என்ற எண்ணம் ஏற்படாவண்ணம் குழந்தைகள் மேல் முழுப்பாசம் செலுத்தினார்.

பூசாரிக் கக்கன் தனது இரண்டாவது மனைவி "பிரம்மியம்மாள்" இவர்களின் இனிமையான வாழ்வின் விளைவாக மொத்தம் நான்கு குழந்தைகள் பிறந்தனர்.

## பூசாரிக்கக்கன் இரண்டாவது மனைவிவழி

பூசாரிக் கக்கன் + பிரம்மியம்மாள்

| வெள்ளைக் கக்கன் + பார்வதி அம்மாள் | முன்னோடி + கமலம் | வடிவேலு + சரஸ்வதி | விஸ்வநாதன் + அசோகா |
|---|---|---|---|
| இரவீந்திரன் | மனோகரன் | அய்யனார் சதீஷ் | கைலாஷ் குமார் |
| பாஸ்கர பூபதி | ஸ்ரீதர மூர்த்தி | இளையராஜா | இராஜேந்திரன் |
| மல்லிகேஸ்வரி | மகேஸ்வரி | கீதா | இமையான் |
| பரமேஸ்வரி | பத்மாவதி | கிருஷ்ணா | பொம்மி |

பூசாரிக்கக்கனுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தனர். இதில் கக்கன் மூத்த மகனாகவும் இளையவர் விஸ்வநாதகக்கன் என்பது குறிப்பிடத்தக்கது. குல மரபுப்படி பார்த்தால் ஆறு ஆண் குழந்தைகளில், மூன்று குழந்தைகளுக்கு, பூசாரிகக்கன் "கக்கன்", எனும் பெயரைச் சூட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதில் மூத்த மகனுக்குக் 'கக்கன்' எனும் குலதெய்வத்தின் பெயரையும், வெள்ளைக்கக்கன், விஸ்வநாத கக்கன் ஆகிய இரண்டு குழந்தைகளுக்குக் 'கக்கன்' எனும் பெயரை முதல் பெயராகச் சூட்டாமல் இணைக்கப்பட்ட பெயராகச் சூட்டிருக்கின்றார். தன் வாழ்நாள் முழுவதும் பூசாரிக் கக்கன் தன் மூதாதையர் வழியில் பெயர் சூட்டி வாழ்ந்தார் என்பதற்கு இதுவே எடுத்துக் காட்டாகும்.

இக்கிராமத்தில் பூசாரிக் கக்கன் வாழ்ந்த வாழ்க்கையும், தான் படிக்கவில்லை என்றாலும், படித்த அதிகாரிகளுடன் அதிகமாகப் பழகிய காரணத்தால், குழந்தைகளுக்குக் கல்வி மிகவும் முக்கியம் என்பதை உணர்ந்து, கல்வியில் அதிக நாட்டம் காட்டினார். அக்காலக் கட்டங்களில் கல்வி என்பது வசதிபடைத்தவர்களுக்கு மட்டுமே கிடைத்தது. 1909ஆம் ஆண்டு என்பது இந்தியர்களுக்கு உரிமைகள் அதுவும் மனித உரிமைகள் மறுக்கப்பட்ட காலம். பணம்

படைத்தவர்களுக்கு மட்டுமே பள்ளிகளின் வாசல்கள் திறக்கப்பட்டன, ஆனால் வசதியற்ற, குறைந்த சம்பளத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்த பூசாரிக் கக்கனுக்குத் தன் குழந்தைகளுக்குக் கல்விச் செல்வத்தை அளிப்பதில் அதிகம் சிக்கலாகவும் சிரமமாகவும் இருந்தது.

பூசாரிக் கக்கன் தன் வாழ்நாள் முழுவதும் உழைப்பையே நம்பினார். தன் கடைசிக் கால வாழ்வின் போதும், தன் மூத்த மகன் அமைச்சராக இருந்த காலங்களில்கூடத் தன்னால் மகனுக்குக் களங்கம் ஏற்படக் கூடாது என்பதிலும், மகனின் அதிகாரத்தை அனுபவிக்கக் கூடாது என்பதிலும் மிகவும் கவனமாகவே வாழ்ந்ததோடு, ஊர்க்காவலராகவே பணியாற்றினார்.

அகில இந்தியக் காங்கிரஸ் இயக்கத்தில் தன் மகனுக்கு உயர் பதவிகள் கிடைத்தபோதும், தமிழகக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த காலங்களிலும், காவல்துறை, பொதுப் பணித்துறைகளுக்கு அமைச்சராக இருந்த காலங்களிலும் பூசாரிக்கக்கனும் சரி, அவரது குழந்தைகளும் சரி கக்கன் அவர்களின் பொதுவாழ்விற்குக் களங்கம் ஏற்படாமல் வாழ்ந்து காட்டினார்கள் என்பது வரலாற்று உண்மை. அதோடு மனிதப் புனிதர் கக்கன் அவர்களும் தான் வகித்த பதவிகளைக் கொண்டு குடும்பத்தைச் சார்ந்த எவரையும் பதவிச் சுகத்தை அனுபவிக்காமல் மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டார். இந்தக் குடும்பத்தைப் போன்று உலகில் எந்தக் குடும்பத்தையும் அரசியல் தூய்மைப் குடும்பமாகப் பார்க்க முடியாது.

பூசாரிக்கக்கன் குடும்பத்தினர் மகன் கக்கனின் அரசியல் பாதையில் தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளவில்லை. தேசப்பற்று ஒன்று மட்டுமே உயிர்மூச்சாக வாழ்ந்த குடும்பம் என்பதனை வரலாறு என்றும் மறக்காது என்பது உண்மை.

# 4. கக்கனின் கல்வி

சுதந்திரம் பெறாத இந்திய நாட்டில் கல்வி என்பது ஏழைகளுக்கு எட்டாத கனியாகவே காணப்பட்டது. கல்வி கற்க மாணவர்கள் முன்வந்தாலும், தொட்டால் தீட்டு என ஒதுக்கி வைக்கப்பட்ட மாணவர்களுக்குக் கல்வி கானல் நீராகவே காட்சியளித்தது. இதே நிலைதான் கக்கன் என்ற குழந்தைக்கும். 1909ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகள் வரை பார்த்தால் ஆங்கிலேயர்களின் அடக்குமுறை தலைவிரித்தாடிய வண்ணமாய் இருந்தது. பள்ளிக்கூடம் என்பது வசதி படைத்தோர் குழந்தைகளுக்கு மட்டுமே புகலிடமாக அமைந்தது. சாதியால் தாழ்த்தப்பட்டும், பார்த்தாலே தீட்டு என்றும் ஒதுக்கப்பட்ட இந்திய நாட்டின் பூர்வீகக் குடிமக்களாம் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த குழந்தைகளுக்குத் திண்ணைப் பள்ளிகளே திறந்து விடப்பட்டன.

நாம் வரலாற்றுப் பின்னணி கொண்டு பார்த்தால் தமிழக வரலாற்றில் முதன் முதலாகத் தோன்றிய பள்ளிகள் “பஞ்சமர் பள்ளி” என்பது வரலாற்று உண்மை. பண்டிதமணி க.அயோத்திதாஸ் அவர்களின் வேண்டுகோளை ஏற்று ஆல்காட் பிரபு அவர்களும் பிளவட்ஸ்கி அம்மையாரும் சேர்ந்து சென்னை அடையாறு பகுதியில் தியோசாபிகல் சொசைட்டி மூலமாகப் ‘பஞ்சமர் பள்ளி’ துவக்கினர் என்பதும், முதன் முதலில் தாழ்த்தப்பட்ட குழந்தைகள் இப்பள்ளியில் சேர்ந்து படிக்கலாயினர் என்பதும் நாம் அறியும் செய்திகள்.[1] தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்கு தரமான கல்வி கொடுக்க வேண்டுமானால் அமெரிக்க நாட்டிலிருந்து ஆசிரியரை வரவழைத்து நடத்துங்கள் என்ற அன்பு வேண்டுகோளை பண்டிதமணி க. அயோத்திதாஸ் அவர்கள் ஆல்காட் அவர்களிடம் முன்வைத்தார். இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு அமெரிக்க நாட்டிலிருந்து மிஸ். மோரிசாரா இ. பால்மெர் எனும் அம்மையாரை வரவழைத்துப் பள்ளியின் நிர்வாகத்தையும் மாணவர்களுக்குத் தரமான கல்வியையும் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.[2] சென்னை மாநகரில்

வாழ்ந்த மாணவர்களுக்கு இந்த நிலை என்றால் தும்பைப்பட்டி போன்ற சிற்றூர்களில் வாழ்ந்த மாணவர்களுக்குக் கல்வி என்பது கனவாகவே காட்சி அளித்தது. கக்கனின் திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வியை நாம் சிறிது கற்பனை செய்து பார்த்தால், சுதந்திரம் கிடைத்த பின்னும் பல கிராமங்களில் தீண்டாமைக் கொடுமையில் தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் எனில் 100 ஆண்டுகளுக்கு முன் கக்கன் பிறந்த காலத்தில் விடுதலை பெறாத இந்திய நாட்டில் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வி என்பது காதால் கேட்கும் கல்வியாகவே இருந்தது.

பூசாரிக் கக்கன் படிக்கவில்லை என்றாலும் படித்த அதிகாரிகளுடன் பழகும் வாய்ப்பைப் பெற்றார். கல்வியின் முக்கியத்துவம் என்ன என்பதனை நன்கு அறிந்திருந்தார். அதிகாரிகள் ஆங்கிலம் பேசும்போது அதனைக் கேட்டு இரசிக்கும் பூசாரிக் கக்கன் என் குழந்தைகளும் இப்படி ஒருநாள் பேசமாட்டார்களா? என்ற எண்ணப் பெருமூச்சுவிட்டார். திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தனது மூத்த மகன் கக்கனைச் சேர்த்தார்.

தொடக்கக்கல்வி எங்குப் படித்தார், எப்படி படித்தார், அவர் பெற்ற கல்விப் பற்றி நாம் விவரமாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கவில்லை. பல நிகழ்வுகள் கக்கனின் வாழ்வில் மறைக்கப் பட்டதால் அவரது ஆரம்பக்கல்வியைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கவில்லை. தொடக்கக் கல்வி என்பது 5ஆம் வகுப்பு வரையில் தான் தொடங்கியது. அவரது உடன் பிறந்த சகோதரர்கள், உறவினர்கள் கொடுத்த தகவலின்படி 12வது வயதில் கல்வியைத் தொடர முடியாத காரணத்தால் தும்பைப்பட்டியில் குயவர் வீட்டில் பண்ணை வேலை செய்தார் என்ற செய்தி நமக்குக் கிடைத்துள்ளது. 12வது வயது என்றால் 6ஆம் வகுப்புப் படிக்கும் வயது. ஓராண்டுக் காலம் குயவர் வீட்டில் பண்ணை வேலை செய்த கக்கன், மீண்டும் படிக்கும் ஆர்வம் வந்ததால், மீண்டும் படிக்கப் பள்ளிக்குச் சென்றார். தொடக்கக் கல்வியின் ஒரு பகுதியை 5.கி.மீ தொலைவில் இருக்கும் மேலூர் தொடக்கப் பள்ளியில் சேர்ந்து படித்தார். தொடக்கக் கல்வி 5ஆம் வகுப்பு வரையில் பல்வேறு சிரமங்களுக்கிடையே பூசாரிக்கக்கன் மகன் கக்கனைப் படிக்க வைத்தார்.

## பள்ளிப் படிப்பு

ஆங்கிலேயர்கள் ஆட்சி முறையில் அறிமுகப் படுத்திய மேற்கத்திய கல்வி முறைப்படி இன்று நாம் அழைக்கப்படும் 6ஆம் வகுப்பு மற்றும் 7ஆம் வகுப்பு என்பன first form, second form அதாவது முதன் படிவம், இரண்டாவது படிவம் என்றே அழைக்கப்பட்டு வந்தன. இப்படிப்பட்ட கல்வியைப் பெற்றிடக் கக்கன் பள்ளியில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். மதுரை திருமங்கலத்திலுள்ள பி.கே.என். நாடார் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். அக்காலக் கல்வி முறைப்படி தொடக்கக் கல்வி இறுதித் தேர்வு இ.எஸ்.எல்.சி. (ESLC) என்று அழைக்கப்பட்டது. அதாவது இவ்வாறு எட்டாம் வகுப்பினைத்தான் (ESLC) என்று அழைத்தனர்.

திண்ணைப் பள்ளிக்கூடம் முதல் தொடக்கப் பள்ளி இறுதித் தேர்வு வரையில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தன் கல்விப் புலமையை வளர்த்துக் கொண்ட கக்கன், எட்டாம் வகுப்பு அரசுத் தேர்வில் பெற்ற வெற்றி என்பது ஓர் இனத்திற்குக் கிடைத்த வெற்றியாகவே எண்ணத் தோன்றியது. தன் குழந்தைகளை நல்ல உடை அணிந்து பள்ளிக்கு அனுப்பி விட்டு, அந்தக் குழந்தைகள் நடந்து செல்லும் நடையைக் கண்டு பெருமைகண்ட பெற்றோர், ஆங்கிலத்தில் தாட்பூட்னு இரண்டு வார்த்தை பேசினாலே தூக்கி முத்தம் கொடுக்கும் பெற்றோர், 5ஆம் வகுப்பில் குழந்தை தேர்ச்சி பெற்றாலே கடவுளுக்குத் தேங்காய் உடைத்துப் பெருமை காணும் பெற்றோர் பிறந்த இதே இனத்தில் தன் மகன் எட்டாம் வகுப்பு அரசுத் தேர்வில் வெற்றி பெற்றதை நினைத்துப் பூசாரிக் கக்கன் பெற்ற பெருமைக்கு அளவே இல்லை. கக்கனின் திறமையை மேலும் வளர்த்திட அவரது தந்தை மேல்படிப்புப் படிக்க வைக்க ஆசைப்பட்டார். படிப்பே வராது என்று நினைத்த தந்தைக்குக் கல்வி அறிவு தனக்கும் உண்டு என்பதனைக் கக்கன் நிரூபித்துக் காட்டியது பெருமைதான்.

கக்கன் தினமும் 10 கி.மீ. நடந்து படிக்கும் சூழ்நிலை உள்ளதால் படிப்பில் தொய்வு ஏற்படும் என நினைத்த பூசாரிக் கக்கன் தன் மகன் மேலும் படிக்க வெளியூர் அனுப்பிவைத்துப் படிக்க ஆசைப்பட்டார். அக்காலங்களில் மேல்படிப்பு என்பது ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய வகுப்புகளாகும். இந்த வகுப்புகளை 4,5,6,ஆம் படிவங்கள் ஆகும். மேற்கண்ட வகுப்புகளில் படிக்க மதுரை

மாவட்டம் பசுமலையில் உள்ள தனியார் கிருத்துவப் பள்ளியில் சேர்ந்து படிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. குடும்பத்தின் சூழ்நிலையைப் பார்க்கும்போது கக்கனுக்குச் செலவு செய்து படிக்க வைக்கும் அளவிற்குப் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டது.

கக்கனின் படிப்பு பாதியில் நின்றுவிடக் கூடாது என்ற எண்ணத்தில் தந்தை மிகவும் தீவரமாக இருந்தார். பல நண்பர்களிடம் பொருளுதவி கேட்டுப் பார்த்தார். எவரும் உதவி செய்திட முன் வரவில்லை. உறவினர் மற்றும் நண்பர்கள் உதவி செய்வதில் தயக்கம் காட்டியபின் மதுரையில் வாழ்ந்து வரும் 'தனவந்தர்' என்று எல்லோராலும் போற்றப்பட்டுவரும் என். எம்.ஆர். சுப்பராமன் அவர்களை நேரில் சந்தித்து, மகனின் கல்வி வளர்ச்சிக்காக உதவி செய்யும்படி கோரிக்கை விடுத்தார்.

பூசாரிக் கக்கனின் கோரிக்கை என்பது ஒரு மகனின் எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கக்கூடிய கல்வியைப் பெற்றிடத் தேவையான கோரிக்கை என்பதை உணர்ந்து, உதவி செய்திட முன்வந்தார். இவரது உதவியோடு மேலும் உதவிகள் தேவைப்பட்டன. பூசாரிக் கக்கனுக்குப் பரம்பரைச் சொத்தாக 2 ஏக்கர் நிலம் இருந்தது. குழந்தையின் கல்வியின் மதிப்பைவிட இந்தச் சொத்தின் மதிப்பு பெரியதா? எனநினைத்து அந்த 2 எக்கர் நிலத்தையும் ஒற்றிவைத்து அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு குழந்தைக் கக்கனைப் பசுமலை உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படிக்க வைத்தார். "கடவுளுக்குச் செலுத்தும் காணிக்கையைக் குழந்தையின் கல்விக்குச் செலுத்து" எனும் மாமேதை அம்பேத்கர் அவர்களின் எண்ணத்தை நினைத்துப் பார்க்கின்றோம். பூசாரிக் கக்கன் தன் மகன் கக்கனின் கல்விக்காகப் பாடுபட்ட விதம் எதிர்காலத்தில் கக்கன் அவர்களை அமைச்சராக மாற்றி அமைத்தது எனில் பெருமைதானே.

கக்கனின் கல்வி வளர்ச்சிக்காக அவரது நண்பர்கள் பலர் பிற்காலத்தில் உதவி செய்ய முன் வந்ததாகக் கக்கன் பெருமையாகப் பேசப்பட்டதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய மூன்று ஆண்டுக்காலக் கல்வி என்பது ஒரு மாணவனின் எதிர்காலப் பொற்காலத்தை நிர்ணயிக்கும் காலமாகும். இக்காலங்களில் மாணவர்கள் படித்து அறிந்து கொள்ளும் கல்வி முறைதான் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் கல்வியாகும். கக்கனின் வாழ்க்கையில் இந்த மூன்று ஆண்டுகளும் சோதனை

ஆண்டுகளாகவே மாறின. காரணம் இந்த ஆண்டுகளில் தான் இந்தியச் சுதந்திரப் போராட்டம் துவக்கப்பட்ட காலம்.

**தாழ்வாரத்தில் உறக்கம்**

நாட்டின் விடுதலைக்காக இந்தியா முழுவதும் நடைபெற்று வரும் போராட்டங்களில் தேசியத் தலைவர்கள் சொற்படி, போராட்டம் நடத்திட, இந்தியா முழுவதும் இளைஞர்களின் பங்களிப்பு அதிகமாகவே இருந்தது. கக்கன் பகலில் பள்ளிப் படிப்பு முடிந்ததும் இரவில் தங்குவதற்கு இடம் இல்லாத நிலையில், பள்ளித் தாழ்வாரத்தில் படுத்து உறங்குவது வழக்கம். தேசிய விடுதலைப் போராட்டங்களில் அதிகமான ஈடுபாடு கொண்ட டைகர் மீனாட்சி சுந்தரம், வைத்தியநாத ஐயர், சீனிவாச வரத ஐய்யங்கர் ஆகியோர் பகலெல்லாம் போராட்டங்களில் ஈடுபட்டு இரவு நேரங்களில் பள்ளிக் கூடத்தில் அமர்ந்து அடுத்த நாள் போராட்டத்தைத் திட்டமிடுவது வழக்கம்.

அப்படி அவர்கள் பள்ளிக்கு வரும் பொழுது கக்கன் பள்ளித் தாழ்வாரத்தில் குளிரின் கொடுமையைத் தாங்கிக் கொண்டு உறங்குவதைப் பார்த்து, மனமிறங்கி, தட்டி எழுப்பி ஏன்? இங்கு உறங்குகிறாய் என்று கேட்டறிந்தனர். அப்பொழுது கக்கன், "விடுதிக்குப் பணம் கட்ட வசதி இல்லாத காரணத்தால் இரவு நேரங்களில் தாழ்வாரத்தில் தங்கி உறங்குவேன்" என்று தனது வாழ்க்கை அவலத்தை அவர்கள் புரிந்து கொள்ளும்படி எடுத்துரைத்தார். கக்கனின் ஏழ்மை தேசப் போராட்ட வீரர்களின் மனங்களில் இரக்கம் ஏற்படுத்தியது. மனமிரக்கம் கொண்ட இவர்கள் கக்கனுக்கு எப்படியும் உதவி செய்ய வேண்டும் என்று எண்ணம் கொண்டனர். ஏழ்மை மாணவர்களின் கண்ணீருக்குப் பல காலக்கட்டத்தில் பதில் கிடைத்துள்ளது. அந்த வகையில் அரிசன சேவா சங்கத்தின் வாயிலாகக் கக்கன் விடுதியில் தங்கிப் படிக்க வேண்டிய மாபெரும் வாய்ப்பினைப் பெற்றார். மூன்றாண்டுக் காலம் கல்வி தடையின்றிப் படித்திட அரிசன சேவா சங்கத்தின் மூலமாகக் கக்கனின் கல்விக் கண் திறக்கப்பட்டது.

**பள்ளி இறுதித் (S.S.L.C.) தேர்வில் தோல்வி**

ஒன்பதாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்புவரையில் தோல்வி இல்லாமல் தன் பள்ளி வாழ்க்கையை வெற்றியாக முடித்தார். ஒரு

மாணவரின் எதிர்காலத்தை நிர்ணயிப்பது பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுதான் S.S.L.C. இத்தேர்வு அரசாங்கத்தினரால் நடத்தப்படும் பொதுத் தேர்வு முறையாகும். இந்தத் தேர்வில் கக்கன் தோல்வி அடைந்துவிட்டார். எல்லாப் பாடங்களிலும் அதிகமான மதிப்பெண் எடுத்தவர் ஆங்கிலத்தில் மட்டும் 39 மதிப்பெண் எடுத்துத் தோல்வி கண்டார். எப்படிப் பட்ட கொடுமை. ஒரு மதிப்பெண்ணில் தோல்வி. ஒரு மதிப்பெண் மட்டும் பெற்று 40 மதிப்பெண் வாங்கித் தேர்ச்சி பெற்றிருந்தால் கக்கன் எனும் மாணவர் எதிர்காலத்தில் உயர்ந்த கல்வியைப் பெற்றிட வாய்ப்பு இருந்திருக்கும்.

ஆங்கிலேயர்கள்தான் வாழ்வில் கொடுமை செய்கிறார்கள் என்று பார்த்தால் ஆங்கிலமும் கொடுமை செய்துவிட்டது. பல போராட்டங்களுக்கு மத்தியிலே பள்ளி இறுதி வரையிலாவது படித்துவிடலாம் என்ற இலட்சிய எண்ணம் மணல் கோட்டையாக மாறியது. இந்த நிலை கக்கனுக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட பெரிய ஏமாற்றமாகும். தோல்வியைக் கண்டு மனம் வருத்தப்பட்டாலும் கக்கன் ‘விடா முயற்சியை’ விட்டுக் கொடுக்கவில்லை. கல்வி எனும் செல்வமே நிலையானது என்பதைக் கக்கன் உணர்ந்திருந்தார்.

## தந்தையின் தீவிர முயற்சி

‘தோல்வியே வெற்றிக்கு அறிகுறி’ என்பது பலருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சியாகும். விளையாட்டுத் துறையாக இருந்தாலும் சரி, கல்வித்துறையாக இருந்தாலும் சரி இது பலருடைய வாழ்வில் ஏற்பட்டதைப் போல் கக்கனின் வாழ்விலும் ஏற்பட்டது. கடினமான வாழ்க்கைச் சூழலுக்கும் மத்தியிலே பூசாரிக் கக்கன் தன் மகனை ஆங்கிலேய அதிகாரிகளைப் போலக் கொண்டுவர வேண்டும் என மனக் கோட்டை கட்டினார். கக்கனின் தோல்வி அவரது தந்தையை அதிகமாகவே சிந்திக்க வைத்தது. தனது இலட்சியக் கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்பட்டு விடாதபடிக்கு எப்படியாவது மகனை மேற்கொண்டு வேறு பள்ளியிலாவது சேர்த்துப் பள்ளி இறுதிப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றாக வேண்டும் என்ற திடமான எண்ணத்திலிருந்தார். இதற்காகப் பள்ளியை மாற்றவும் முயற்சித்தார்.

தந்தையின் சீரிய சிந்தனைக்குக் கக்கன் பெரிதும் உதவிகரமாகவே திகழ்ந்தார். தந்தையின் சொல்படி கேட்டு எப்படியாவது பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றிட வேண்டும்

என்ற துணிவான எண்ணத்தோடும் காணப்பட்டார். பசுமலைப் பள்ளியிலிருந்து மதுரை திருமங்கலம் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். தும்பைப் பட்டி கிராமத்திலிருந்து திருமங்கலம் பள்ளிக் கூடம் 45 கி.மீ. தூரத்தில் உள்ளது.

45 கி.மீ. செல்ல வேண்டுமானால் பேருந்துக் கட்டணம் எட்டணாவாகும். பூசாரிக் கக்கன் தான் வாங்கும் சம்பளத்தில் எட்டணாவைக் கொடுக்க வேண்டுமானால் இவர் நடந்தே சென்று கொடுக்கலானார். காரணம் இவர் பேருந்தில் செல்லப் பணம் இல்லாத சூழ் நிலையே காரணமாகும். அப்பப்பா எப்படிப்பட்ட கொடுமை. ஒரு மகனைப் படிக்க வைக்க இப்படிப்பட்ட கொடுமையா.! ... பாருங்கள்! சுதந்திரம் பெறுவதற்கு முன்பே கல்வியைப் பெற்றிட எப்படிப்பட்ட துன்பமான வாழ்க்கை ஒரு மனிதனின் வாழ்வில் ஏற்பட்டிருக்கிறது.

மகனுக்கு எட்டணா கொடுப்பதற்குத் தன் அலுவலகத்திற்குத் தினமும் நடந்தே சென்றவர்தான் பூசாரிக் கக்கன். கல்வி மனிதனை மேம்பாடான வாழ்விற்கு அழைத்துச் செல்லும் என்ற எண்ணத்தைப் பூசாரிக் கக்கன் கொண்டிருந்தார். தோட்டி வேலை செய்து கொண்டு பலருடன் பழகும் போது படிப்பால் எப்படிப்பட்ட தகுதி கிடைக்கிறது என்பதனை நேரில் அறிந்தவர். இதே வாழ்க்கை தன் மகனுக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் துடிப்பாக இருந்தார். கக்கனும் முயற்சி எடுத்துப் படித்தார். என்ன செய்வது. இவரது வாழ்வில் பள்ளி இறுதித் தேர்வு எட்டாத கனியாகவே போய்விட்டது. காரணம் இவரது எண்ணமெல்லாம் தேசிய நீரோட்டப் பக்கம் சென்றது.

### தேசியப் போராட்டத்தில் நுழைவு

கக்கன் திருமங்கலத்தில் பள்ளியில் தங்கிப் படிக்கும் போது காந்தியடிகளின் தலைமையில் தேசிய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுப் போராடும் போராளிகளின் நட்பு கிடைத்தது. இரவு நேரங்களில் போராளிகள் விடுதியில் தங்கி விடுவார்கள். அப்பொழுது கக்கனின் எண்ணம் சிதறடிக்கப்பட்டது. கல்வியின் மீது செல்லவேண்டிய நாட்டமெல்லாம் காந்தியடிகள் மீது சென்றது. "தேசியப் போராட்டக் களத்தில் நாமும் ஈடுபட வேண்டும்" என்ற உந்துதல் ஏற்பட்டது. பல மணி நேரம் இவர்களுடன் பேசும்பொழுது 'சுதந்திர வேட்கையும்' இவரது மனதில் தீபமிட்டு எறியத் தொடங்கியது. "வந்தே மாதரம்" எனும் கோஷம் கக்கனின் காதுகளில்

எப்பொழுதும் ரீங்காரமாக ஒலிக்கத் தொடங்கியது. கல்வியா? அல்லது நாட்டின் சுதந்திரமா? என்ற கேள்வி அவர்முன் எழுந்தது. ‘கற்ற கல்வி போதும். இனிக் கடமை செய்வோம். நாட்டிற்காகத் தியாகம் செய்வோம்’ என்ற துணிவான எண்ணத்திற்குத் தயாரானார். பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுதினார். தோல்வி அடைந்தார். பூசாரிக் கக்கனின் கனவு தோற்றுப்போனது. “எல்லாம் நன்மைக்கே” என்றே எண்ணினார். மகன் நாட்டின் மீது கொண்ட பற்றினை நினைத்துப் பார்த்தார். படித்திருந்தால் வாழ்வில் முன்னேற்றம் கண்டிருப்பானே என்ற ஏக்கம் பூசாரிக் கக்கன் வாழ்வில் பல்லாண்டு நிலைத்திருந்தது.

கக்கன் பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி அடைந்து பணியாற்றிய காலங்களிலும் சரி, சட்டமன்ற உறுப்பினராகத் தமிழக அமைச்சரவையில் இடம்பெற்ற காலங்களிலும் சரி, ‘‘என் மகன் அதிகப் படிப்புப் படிக்க முடியவில்லையே” என்ற ஏக்கப் பெருமூச்சு தன் வாழ்நாள் முழுவதும் இருந்ததைப் பூசாரிக் கக்கன் பிறரிடம் சொல்லிக் குறைபட்டதைப் பலர் சொல்லக் கேட்க முடிந்தது.

“படிக்காத மேதை” கர்ம வீரர் காமராசர் அவர்களின் உண்மைச் சீடர் “கக்கன்” அதிகமாகப் படித்திருந்தால்கூட, ‘தலைவன் வழியில் தொண்டன்’ என்ற புகழ்மிக்க சொல்லுக்குக் கக்கன் களங்கத்தை ஏற்படுத்தி விடுவாரோ என்ற எண்ணம்தான் கக்கன் அதிகமாகப் படிக்காததற்குக் காரணமோ என்று கூட நினைக்கத் தோன்றுகிறது. இரண்டு மாமேதைகள் அதிகம் படிக்காததால் “எல்லோரும் படிக்க வேண்டும்” என்ற திட்டம் தமிழகத்தில் ஏற்பட்டது. கல்விக்கண் கொடுத்த கர்மவீரர் காமராசர் வழியில் கிராமந்தோறும் பள்ளிகள் துவக்கி, விடுதிகள் கட்டிப் பல மாணவர்களைப் பட்டதாரியாக்கிடக் கக்கன் பாடுபட அவரது இளமைக் காலக் கல்வியின் தோல்வியே காரணமாக அமைந்தது என்றே சொல்லலாம்.

## பொது வாழ்வில் நுழைவு

பள்ளிகளின் கதவுகள் கக்கனுக்குத் திறக்கப்பட்டாலும் தொடர்ந்து எழுதின அனைத்துத் தேர்வுகளிலும் தோல்வி அடைந்துவிட்டார். பள்ளிக்கதவுகள் திறப்பதற்கு வாய்ப்பில்லாத வகையில் மூடப்பட்டன. அதே நேரத்தில் “பொதுவாழ்வுக் கதவுகள்” திறக்கப் பட்டன. ஆம்! கக்கனின் வாழ்வில் மாபெரும் மாற்றங்கள்

ஏற்பட்டன. கக்கன் வாழ்ந்த காலங்களில் திறமைகள் மனித வாழ்க்கையை மேம்பாடடையச் செய்தன. ஒவ்வொரு மாணவனின் பொறுப்புணர்ச்சி, நேர்மையான எண்ணம், நாணயமிக்க செயல், கடின உழைப்பு பலரைக் கவரச் செய்தன. பொதுவாழ்வு என்பது எல்லோருக்கும் அமைந்துவிடாது. அப்படி அமைந்தாலும் அனைவரும் வெற்றி பெற்றதில்லை. ஒருசிலரே பொதுவாழ்வில் வெற்றி பெற்றதுண்டு. அதில் முதலிடத்தில் வெற்றி பெற்றவர்தான் "மனிதப் புனிதர் கக்கன்". பாருங்கள் பள்ளி இறுதி வகுப்பில் முதல் மதிப்பெண் எடுத்து வெற்றி பெறவில்லை. பொதுவாழ்வில் எல்லோரையும் விடப் புகழ்பெற்று முதலிடம் பெற்றார். ஒரு கதவு மூடினால் மறு கதவு திறக்கப்படும் எனும் வார்த்தை உண்மைதானே.

''அரிசன சேவா சங்கம்'' என்பது காங்கிரஸ் மகா சபையில் முக்கியச் சங்கமாக விளங்கியது. தேசியக் காங்கிரஸ் இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்திட முன்வந்த மகாத்மா காந்தியடிகள், ஆங்கிலேயர்களிடமிருந்து மட்டும் இந்தியர்களைக் காக்கவில்லை; இந்தியர்களிடமிருந்து பாதிக்கப்பட்ட இந்தியர்களைக் காக்கவும் திட்டங்கள் தீட்டினார். 'தீண்டாமை' எனும் அடிமை விலங்கினை முறித்திடவும், தீண்டாமையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தரமான கல்வி கொடுத்து அவர்களது விடுதலையைக் காத்திடவும் பாடுபட்டு வந்த "மனித நேய இயக்கம்தான் அரிசன சேவா சங்கம்". தமிழக வரலாற்றில் உயர் இனத்தைச் சார்ந்தவர்கள்தான் இப்படிப்பட்ட மனித சேவையில் ஈடுபட்டார்கள் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உண்டு. அந்த வகையிலே வைத்தியநாத ஐயர் அவர்கள் இந்தச் சங்கத்தைப் பொறுப்பேற்று நடத்தி வந்தார்.

அரிசன சேவா சங்கம் தென்மாவட்டங்களில் மாபெரும் மனிதப் புரட்சியைச் செய்துள்ளது. பல்வேறு கிராமங்களில் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுப் பள்ளிகள், விடுதிகள் கட்டப்பட்டு, கிராம மாணவர்களுக்குக் கல்விக் கண் கொடுக்கும் மாபெரும் பணி வைத்தியநாத ஐயர் மற்றும் என். எம். ஆர். சுப்பராமன் ஆகியோர் தலைமையில் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது.

## வைத்தியநாத ஐயர் அறிமுகம்

தமிழக வரலாற்றில் தனி மனிதர்களும், இயக்கங்களும் தாழ்த்தப்பட்ட முன்னோடித் தலைவர்களை அறிமுகம் செய்து கைதூக்கி விட்டிருக்கின்றார்கள் என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. நீதிக் கட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட தலைவர் தாத்தா

இரட்டைமலை சீனிவாசன் அவர்களை இலண்டன் வட்டமேசை மாநாட்டிற்கு அனுப்பப்பட்டு வரலாற்றில் இடம்பெற வைத்தது. “அம்பேத்கர்” எனும் பிராமண ஆசிரியர் ‘பீம்ராவ் ராம்ஜி அம்பாவதேகர் எனும் குழந்தையைக் கல்வியில் முன்னேறச் செய்ததால் எதிர்காலத்தில் “B.R.அம்பேத்கர்” எனும் வரலாற்றுப் புகழ்மிக்க சொல்லுக்குப் பெருமைகிடைத்தது எனப் பார்த்தோம். தந்தை ஈ.வே.ரா. பெரியார், மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களைத் தமிழகத்திற்கு அறிமுகம் செய்த காரணத்தால்தான் பாபாசாகிப் அம்பேத்கர் சிந்தனைகள் தமிழக மண்ணில் விதைக்கப்பட்டன. “குட்டுப்பட்டாலும் மோதிரக் கையில் குட்டுப்பட வேண்டும் என்பார்கள்”. அந்த வகையிலே கக்கன் அவர்கள் வைத்தியநாத ஐயருக்கு எம். என். ஆர். சுப்பராமன் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டார். இந்த அறிமுகம்தான் கக்கனுக்கு “மனிதப் புனிதர் கக்கன்” எனும் தலைப்பில் இந்த வரலாற்று நூல் உருவாகிடக் காரணமாக அமைந்தது என்றே சொல்லலாம்.

பூசாரிக் கக்கன் தன் மகனைப் படிக்க வைப்பதற்காக ஏற்கெனவே என். எம். ஆர். சுப்பராமன் அவர்களிடம் பண உதவி பெற்றிருந்ததால் சுப்பராமன் அவர்களுக்குக் கக்கனைப் பற்றி அதிகமாகவே தெரியும். அதுமட்டுமின்றி அரிசன சேவா சங்கத்தின் உதவி கக்கனுக்குக் கிடைத்திடச் சுப்பராமன்தான் முன்வந்து உதவி செய்தார். எனவே கக்கனைப் பற்றியும் கக்கனின் குடும்பத்தைப் பற்றியும் சுப்பராமன் அவர்களுக்கு அதிகம் தெரிந்த காரணத்தால் கக்கனின் வாழ்வில் மாபெரும் மாற்றம் ஏற்பட வாய்ப்பாக அமைந்தது.

சுப்பராமன் வைத்தியநாத ஐயருக்குக் கக்கனை அறிமுகம் செய்தார். அரிசன சேவா சங்கத்தில் வைத்தியநாத ஐயரும், சுப்பராமன் அவர்களும் முன்னின்று செயல்பட்டதால் கக்கனுக்கு விடுதியில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. சுப்பராமன் கக்கனின் குணநலன், கடின உழைப்பு, நேர்மை, துடிப்பு ஆகியவற்றைப் பற்றி வைத்தியநாத ஐயருக்கு வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் எடுத்துச் சொல்லி வந்தார். இதன் வழியாகக் கக்கனைப் பற்றி நல்ல எண்ணம் வைத்தியநாத ஐயருக்கு உருவானது.

## அரிசன சேவா சங்கத்தில் வேலை

இக்காலக்கட்டத்தில்தான் அரிசன சேவா சங்கத்தின் செயல்பாடுகள் மிகவும் தீவிரம் அடைந்தன. அரிசன சேவா சங்கத்தில்

இணைந்து பொது வாழ்வில் ஈடுபட மாணவர்கள் அதிகமாகத் தேவைப்பட்டனர். கக்கன் கல்வியில் தோல்வி கண்டு துவண்டுபோன காலக்கட்டத்தில் வைத்தியநாத ஐயர் கக்கனை அழைத்து, அரிசன சேவா சங்கத்தின் முக்கியப் பணிகள் குறித்தும், மனித சேவை பற்றியும் விளக்கமாக எடுத்துச் சொல்லி, அரிசன சேவா சங்கத்தில் தொண்டராகச் சேர்த்தார். அதோடு பொறுப்பும் வழங்கப்பட்டது. மாணவர் பருவத்திலே மாணவர்களை வழிநடத்தும் விடுதியின் பொறுப்பு கக்கனுக்கு வழங்கப்பட்டது. மதுரை மேலூரில் உள்ள மாணவர் விடுதிக்குக் காப்பாளராகப் பணியில் அமர்த்தப் போவதாகக் கக்கனுக்கு வைத்தியநாத ஐயர் எடுத்துரைத்தார்.

கக்கனுக்கு ஒருபக்கம் மகிழ்ச்சி; மறுபக்கம் பல உணர்ச்சி. காரணம் வைத்தியநாத ஐயர் பெரிய மனிதர். அவர் பேச்சை எவரும் தட்டமாட்டார்கள். அதுவும் என். எம். ஆர். சுப்பராமன் அவர்கள் இணைந்து செயல்படும் அரிசன சேவா சங்கம் மக்களுக்குப் பொறுப்போடு சேவை செய்யும் நிறுவனம். இப்படிப்பட்ட சூழலில் நாம் எப்படி பணியை வெற்றிகரமாகச் செய்து முடித்து நல்ல பெயர் எடுக்க முடியும் என்ற எண்ணம் மேலோங்கியது.

கக்கன், வைத்தியநாதர் ஐயரிடம் தன் குடும்பச் சூழலைப்பற்றியும், தன் கல்விக்காகத் தந்தை பூசாரிக் கக்கன் வாங்கியிருக்கும் கடனைப் பற்றியும் பயமின்றி எடுத்துரைத்து, என் தந்தையின் கடனை எப்படியாவது அடைத்து விட எனக்கு உதவி செய்யுங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

வைத்தியநாத ஐயர் முழுக் கடனை அடைத்திடப் பண உதவி செய்திட முன் வந்தார். அப்பொழுது கக்கன், நான் வேலை செய்யப்போகும் விடுதிக் காப்பாளர் பணிக்குத் தரப்போகும் சம்பளத்தைப் பிடித்தம் செய்துகொண்டு, தாங்கள் எனக்கு உதவும் பணத்தைச் சரி செய்வதாக இருந்தால் மட்டுமே, நான் பண உதவி பெறுவேன் என்ற நிபந்தனையை முன்வைத்தார். மாணவப் பருவத்தில் கக்கன் ஏற்றுக் கொண்ட குடும்பப் பொறுப்பு, தந்தையின் மனக்கவலை, யாரையும் ஏமாற்றிவிடக் கூடாது என்ற எண்ணம் வைத்தியநாத ஐயருக்கு அதிகம் பிடித்திருந்தது. கக்கன் மீது நம்பிக்கை ஏற்பட்டது. மாணவனாக இருந்த காலக்கட்டத்தில் அவர் அனுபவித்த வறுமை பிற்காலத்தில் அவரை அதிகம் சிந்திக்கத் தூண்டியது. கிடைத்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடிவெடுத்தார்.

விடுதியில் சேர ஆவலாய் இருந்த நேரத்தில், என்ன கொடுமை! அந்த வேலையும் பறிபோனது. ஆம்! கே. அருணாசலம் என்பவரை விடுதிக் காப்பாளராக நியமனம் செய்து அரசு ஆணை வெளிவந்தது. திகைப்புதான் ஏற்பட்டது. இருந்தாலும் வைத்தியநாத ஐயர் சேவாலய விடுதிக் காப்பாளருக்குத் துணையாக இருந்து பணியாற்றிடும் வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்தார்.

கக்கனின் உருவ அமைப்பும், பணிவான நடத்தை, பண்பான பேச்சு, பாசமாகப் பழகும் விதம், தூய்மையான செயல்பாடு, பொறுப்புணர்ச்சி, எடுத்த காரியத்தை முடிக்கும் விதம் போன்ற குணங்கள் வைத்தியநாத ஐயர் அவர்களுக்கு அதிகமாகவே பிடித்திருந்தன. சுத்தத்தைக் கக்கன் நேசித்தார். சுகாதாரத்தைப் பேணிக்காத்தார். மனிதனின் குணநலன்களே அம்மனிதரை உயர்த்தும் என்பது உண்மை. இது உயர் குடியில் பிறந்த வைத்தியநாத ஐயருக்குத் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த கக்கனை உயர்சாதி இளைஞனாகவே கருதவைத்தது.

**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே**

எனும் வரிகளுக்குக் கக்கன் உயர்ந்து காணப்பட்டார். இப்படிப்பட்ட நற்குணங்கள் வைத்தியநாத ஐயரை அதிகம் கவர்ந்ததோடு சேவா சங்கப் பணிகள் முடிந்தபின் தனது வீட்டிலேயே தங்குவதற்கு அனுமதித்தார். அக்காலங்களில் சாதியின் வெறியாட்டம் இருந்தாலும் தேசியத்தை விரும்பியவர்கள் மத்தியிலே சாதித் தீ என்பது இல்லாமல் இருந்தது. அனைவரின் உள்ளத்தில் தேசியச் சுதந்திரம் எனும் எண்ணம்தான் மேலோங்கிக் காணப்பட்டது. கக்கன் மீது கொண்ட நம்பிக்கை ஐயர் வீட்டில் தங்கும் மாபெரும் உரிமையைத் தந்தது என்பது போற்றப்பட வேண்டியதுதான். இங்கே சாதிகளுக்கு இடமில்லை; மனித நேயத்திற்கு, உண்மையான உழைப்புக்கு, நம்பிக்கைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. எனவே ஐயரும் கக்கனும் ஒருங்கிணைந்து பொதுத் தொண்டில் தங்கள் கவனத்தைச் செலுத்தினர்.

## பொதுச் சேவை

வைத்தியநாத ஐயர் கக்கனின் பொறுப்புணர்ச்சியை அதிகமாகக் கண்காணித்தபின் பொதுச்சேவையில் ஈடுபடுத்த முயன்றார். பொதுச்சேவை என்பது 'பொது மக்களுக்கு'ச் சேவை

என்பது அல்ல. இந்திய நாட்டின் விடுதலை என்பது வளர்ந்துவரும் இளைஞர்கள் கையில் உள்ளது. அதுவும் பள்ளி மாணவர்களிடத்தில் உண்டு என்பதனை நன்குணர்ந்த வைத்தியநாத ஐயர் ஒவ்வொரு கிராமத்திலும் வாழ்கின்ற இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்றும், தரமான கல்வி அளிக்க வேண்டும் என்றும், தங்கிப் படிக்கும் விடுதி வசதிகள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் நினைத்தார்.

இதுதான் அரிசன சேவா சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதற்குத் தகுதியானவர் கக்கன் என்பது வைத்தியநாத ஐயரின் முடிவாகும். காரணம், கக்கன் தான்படிக்கும் காலங்களில் கல்விக்காக அவர் அடைந்த துன்பங்கள் ஏராளம். அவரது அனுபவம் ஏனைய மாணவர்களுக்கு நல்வழி காட்டும் என்பதில் திடமான எண்ணம் வைத்தியநாத ஐயர் கொண்டிருந்தார். ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று கக்கன் இரவுப் பள்ளிகளைத் துவக்கினார். துவக்கப்பட்ட பள்ளிகளுக்குத் தேவையான பொருள்கள் வாங்கிக் கொடுப்பது, பள்ளிகள் சரிவர நடக்கின்றனவா? எனக் கண்காணிப்பது கக்கனுக்கு ஏற்பட்ட இத்தொடர்புதான் ‘பொதுத் தொடர்பாக மாறியது.

இரவுப் பாடசாலைகள் நடத்துவதால், பெற்றோர்கள் பகலில் தங்கள் குழந்தைகளைக் கண்காணிக்க முடியவில்லையென்றாலும் இரவு நேரங்களில் குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்து வருவதும், கண்காணிக்கவும் ஏதுவாக அமைந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களையே இரவுப் பள்ளி ஆசிரியர்களாக நியமித்துப் பொதுச் சேவையில் ஈடுபட வைத்தார். இதனால் மக்கள் மத்தியில் கக்கனுக்குச் செல்வாக்கு கூடியது. நம்பிக்கை வளர்ந்தது.

இப்படிப்பட்ட பணிகளைக் கக்கன் மதுரை மேலூர் வட்டத்தில் துவக்கி, சிவகங்கை வரையில் அனைத்துத் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் கிராமங்களுக்குக் கால் நடையாகவே சென்று இரவுப் பாடசாலைகளைத் துவக்கினார். இவர் செய்து வந்த பொதுச் சேவைகளுக்குச் சேவா சங்கத்திலிருந்தோ அல்லது தனிநபர் மூலமாகவோ எவ்விதமான சம்பளமும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவரது பொதுச் சேவைக்குப் பல

கிராமங்களில் வரவேற்பு கிடைத்தது. அதோடு பல கிராமங்களில் எதிர்ப்பும் கிடைத்தது. எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளும் மனவளமை கக்கனுக்கு இருந்தது. இந்த அனுபவம்தான் எதிர்காலத்தில் பல ஏமாற்றங்கள், பதவிப் பறிப்புகள், தோல்விகள் கிடைத்த போதெல்லாம் மனம் தளராமல் எதிர்த்துப் போராட வேண்டிய மனநிலையைக் கொடுத்தது.

இரவுப் பள்ளிகளுக்குத் தேவையான பொருட்களை வாங்கக் கக்கனிடம் வைத்தியநாத ஐயரும், பிறரும் கொடுத்த பணத்திற்கு முறையாகக் கணக்குக் கொடுத்துவிடுவார். மீதித் தொகை எவ்வளவாக இருந்தாலும் திருப்பிக் கொடுப்பார். இவரது 'நேர்மைதான் எதிர்காலத்தில் அமைச்சராகப் பொறுப்பேற்றதும் மக்களுக்குத் தேவையான வரவு–செலவுத் திட்டம் அமைக்க ஏதுவாக இருந்தது. 'தனி மனித ஒழுக்கம்' அம்மனிதரை வாழ்விக்கும் என்பதற்குக் கக்கனின் வாழ்க்கையே ஓர் எடுத்துக்காட்டாகும். கக்கன் மீது வைத்தியநாத ஐயருக்கு ஏற்பட்ட நம்பிக்கைதான் எதிர்காலத்தில் மகாத்மா காந்தியடிகளைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது எனலாம்.

அதனால் காங்கிரஸ் கட்சியில் சேர வாய்ப்பு கிடைத்தது. அதனால் எம்.பி., எம்.எல்.ஏ. பதவிகள் கிடைத்தன. அதனால் அமைச்சர் பதவி கிடைத்தது. அதனால் மக்களுக்கு நன்மை கிடைத்தது. எல்லாவற்றிக்கும் மேலாக வரலாற்றில் இடம் கிடைத்தது. ஆக ஒரு மனிதரின் அறிமுகத்தால் மனிதரின் வாழ்வில் ஒரு மாற்றம் உண்டு. இதே அறிமுகம் ஒவ்வொரு மனித வாழ்விலும் ஏற்படும். ஆனால் கக்கனைப் போல் எத்தனை பேர் 'வரலாற்றில் இடம்' பிடித்தனர். கக்கனின் கல்வி வாழ்வில் ஏற்றம் இறக்கம், உயர்வு தாழ்வு, இன்பம் துன்பம் வந்தாலும் கடைசிக்கால வாழ்வு வரலாற்றில் முடிந்தது எனில் பெருமைதானே.

## அடிக்குறிப்புகள்

1. தமிழ்மணி–பண்டிதர். க.அயோத்திதாஸ், பெ.சு.மணி ப.20, 19.6.92.
2. மேலது, ப.20, 20.6.92.

# 5. இனிய இல்லற வாழ்க்கை

கக்கனுக்கு உயர்கல்வி கிடைக்காத நிலையில் அவரது தந்தையின் கனவு பலிக்காமல் போனதற்கான விளக்கங்களை இதற்கு முன் 'கக்கனின் கல்வி' என்ற தலைப்பில் பார்த்தோம். தன் மகன் நன்றாகப் படித்து அதிகாரிகளைப் போல் அரசாங்கப் பணிக்குச் செல்வான் என்று ஏங்கிய தந்தை பூசாரிக் கக்கனுக்கு, அரிசன சேவா சங்கத்தில் சேர்ந்து கக்கன் வேலை செய்வது மனவேதனையைத் தந்தது.

வேலைச் சுமையோ அதிகம். வருவாய் இல்லாத பொதுச்சேவை. இந்த நிலையில் தன் மகனின் எதிர்கால வாழ்க்கையை நினைத்துப் பார்த்தால் இந்த நிலை இப்படியே போனால் திருமண வயது 23 வயதுள்ளவனுக்குத் திருமணம் செய்வது எப்படி? யார் பெண் கொடுப்பார்கள்? வருமானம் இல்லாதவனை எந்தப் பெண்தான் திருமணம் செய்து கொள்ள முன் வருவாள்? அப்படியே திருமணம் செய்து வைத்தாலும் வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான வருமானம் எப்படி சேர்ப்பது? போன்ற பல்வேறு கேள்விகள் பூசாரிக் கக்கன் முன் வந்தன.

மகனின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி மனைவியிடம் பேசிக் கண்ணீர் வடித்த காலங்கள் உண்டு. கல்விதான் இவனுக்குக் கொடுத்து வைக்கவில்லை, மனைவியாவது கொடுத்து வைத்துள்ளாரா? என்ற ஏக்கப் பெருமூச்சு ஏற்பட்டது.

வைத்தியநாத ஐயரின் முழுமையான அன்பாலும், ஆதரவாலும் தன் வாழ்க்கையை நடத்திச் செல்லும் கக்கனுக்கு, ஐயரின் சொல்லே வேதவாக்காக இருந்தது. தன் எதிர்கால வாழ்க்கையை அவர் கையில் ஒப்படைத்துவிட்டு "என் கடன் பணி செய்துகிடப்பதே" என்ற எண்ணத்தால் கக்கன் செயல்பட்டார்.

தன் எண்ணப்படி மகன் இல்லையே என்ற கவலையும், மகனின் எதிர்காலத் திருமண வாழ்க்கை பற்றிப் பூசாரிக் கக்கன்

கவலையோடு காணப்பட்டார். மகனுக்குத் திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் கணவன், மனைவி இருவரும் கக்கனின் திருமண வாழ்க்கையைப் பற்றி அவ்வப்பொழுது கலந்து பேசியும் வந்தனர்.

## பெண் பார்த்தல்

"காலத்தே பயிர்செய்" என்பது விவசாயிகளுக்கான அறிவுரையாக இருந்தாலும் ஒவ்வொரு பெற்றோருக்கும் "காலத்தே கல்யாணம் செய்" என்ற வாக்காகவே பின்பற்றப் படுகிறது. கக்கனின் தந்தைக்குத் திருமணம் செய்யும் கவலை இருந்தும், வழிவகை இல்லாமல் இருந்தார். ஆனால் கக்கனின் ஒருசில நண்பர்களுக்குக் கக்கனுக்குத் திருமணம் பற்றி அவரது தந்தையிடம் பேசவேண்டும் என்ற ஆவல் இருந்தது. இதனால் கக்கனின் நலனில் அக்கறை கொண்ட ஒருசில நண்பர்கள் திடீரென்று ஒருநாள் தும்பைப்பட்டி கிராமத்திற்கு வந்தார்கள். வந்தவர்கள் பூசாரிக் கக்கனைப் பார்த்து நலன் விசாரித்தார்கள். வந்த நண்பர்கள் கக்கனின் திருமணத்தைப் பற்றி நேரடியாகப் பேச்சினைத் துவக்க மனமில்லை. அதோடு தந்தையின் சோகத்தை அறிந்து பேசவும் சூழ்நிலை சரியில்லை. நண்பர்கள் எதை எதையோ பேசிவிட்டுக் கடைசியாகக் "கக்கனின் திருமணம்" பற்றிப் பேசத் தொடங்கினார்கள். கோபம் கொண்ட பூசாரிக் கக்கன்,

> **ஊர் ஊராகச் சுற்றும் இவனுக்கு யார்தான்**
> **பெண் கொடுப்பார்கள்**

என்ற அனல் பறக்கும் சொற்களைக் கக்கினார். மெல்ல சுதாரித்துக் கொண்ட நண்பர்கள், பூசாரிக் கக்கனின் உள்ளக்கிடக்கையைப் புரிந்து கொண்டு, "பெண்ணெல்லாம் பார்த்துவிட்டோம்" என்று சொன்னதும், வியர்த்துப் போன பூசாரிக் கக்கன், "பெண் எந்த ஊர், பெண்ணின் குடும்பத்தினர் யார்? என்ற விளக்கங்களைக் கேட்டார். அதற்கு நண்பர்கள், "பெண்ணின் பெயர் சொர்ணம்" என்றும், அவர் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்" என்று சொன்னதுமே, துள்ளி எழுந்தார் பூசாரிக் கக்கன். வந்தவர்களை விரட்டி அடிக்காத குறை ஒன்று தான். அப்பப்பா அவரது கோபத்திற்கு எல்லை இல்லை.

## பூசாரிக்கக்கன் கோபம்

'பரம்பரை பரம்பரையாக' வீரகாளி அம்மனை வணங்கிவரும் எங்கள் குடும்பத்திற்கு வேதக்காரியா மருமகள்? எனப் பொங்கி

எழுந்தார். வந்தவர்களுக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. தன் மகனுக்கு எப்படிப்பட்ட பெண் தேடவேண்டும் என்பது ஒவ்வொரு பெற்றோரின் கடமை என்பதனைக் கக்கனின் நண்பர்கள் புரிந்து கொண்டனர். பூசாரிக் கக்கன் அந்தப் பெண் வேண்டும் என்று சொல்லவுமில்லை, வேண்டாமென்று சொல்லவும் இல்லை. எனவே விளையாட்டு ‘டிராவில்’ முடிந்ததைப் போல் கக்கனின் திருமணப் பேச்சும் முதலில் டிராவில் முடிந்தது.

பூசாரிக் கக்கனின் குடும்பம் இந்து மத வழிபாட்டில் அதிகமான நம்பிக்கை கொண்ட குடும்பம். அதோடு பரம்பரை பரம்பரையாகப் பத்ரகாளி அம்மனுக்குக் குடும்பமே வழிபாடு நடத்தி வருகின்றனர். அனைத்து இன மக்களும் ஒன்று கூடி வழிபாடு நடத்தக் கூடிய பொதுவான செயலைத் தலைமை தாங்கி நடத்திவரும் குடும்பத்தில் கிறிஸ்துவ மதத்தில் பெண் எடுத்தால் பரம்பரைச் செயலுக்குப் பங்கம் ஏற்பட்டு விடுமோ? என அஞ்சினர்.

சிவகங்கையைச் சேர்ந்த “கணபதி வாத்தியார்” என எல்லோராலும் பாசத்தோடு அழைக்கப்பட்டவர் ‘கணபதி ஆசிரியர்” தான், கக்கனின் வாழ்க்கை நலனில் அக்கறை கொண்டு நண்பர்களைப் பூசாரிக் கக்கன் வீட்டிற்கு அனுப்பி, செய்தியை அறிந்துவர ஏற்பாடு செய்தவர். நண்பர்கள் பூசாரிக் கக்கனைச் சந்தித்துவிட்டு மீண்டும் கணபதி ஆசிரியரை நேரில் சந்தித்து நடந்த நிகழ்ச்சிகளை அப்படியே படம் பிடித்துக் காட்டினர். பூசாரிக் கக்கனின் கோபத்தின் நிலையை அவர்கள் விளக்கினார்கள். தந்தையின் கோபத்தைக் கணபதி ஆசிரியர் புரிந்து கொண்டார். ஏதோ ஒருவருத்தம் பூசாரிக் கக்கனிடம் உண்டு. அந்த வருத்தத்தைப் போக்கினால் அவர் சம்மதிப்பார் என்ற உண்மையைப் புரிந்து கொண்ட கணபதி ஆசிரியர், கக்கனை அழைத்து, பூசாரிக் கக்கனுக்கு மிகவும் நெருக்கமானவர்கள், யார்? என்பதனையும், யார் பேசினால் அவர் கேட்பார் என்பதனையும் தெரிந்து கொண்டார்.

கீழவளவு மாயழகன் ஆசிரியர் மற்றொருவர் பனங்குடி கருப்பையா ஆசிரியர் ஆகிய இருவர் சொன்னால் மட்டுமே பூசாரிக் கக்கன் கேட்பார் என அறிந்து கொண்டார். இவர்களின் ஒப்புதலைப் பெற்றுக் கொண்ட கணபதி ஆசிரியர் இரண்டு ஆசிரியர்களையும் பூசாரிக்கக்கனையும் நேரில் சந்தித்து, பெண்ணைப் பற்றி விளக்கமாக

எடுத்துச் சொல்லிப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க ஏற்பாடுசெய்தார்.

**பூசாரிக் கக்கன் ஒப்புதல்**

கணபதி ஆசிரியரின் நல்ல மனதைப் புரிந்து கொண்ட மாயழகன் மற்றும் கருப்பையா ஆசிரியர்கள் பூசாரிக்கக்கனை நேரில் சந்தித்தார்கள். கக்கனின் திருமணம் சம்மந்தமாக முதலில் பேசி ஒப்புதல் பெற்றனர். பிறகு பெண்ணைப் பற்றிப் பேசினார்கள். கிறிஸ்துவப் பெண் எங்கள் குடும்பத்திற்கு மருமகளாக வருவது எங்களுக்குப் பிடிக்கவில்லை என்ற பூசாரிக்கக்கனின் வாதத்தைப் புரிந்து கொண்டார்கள். இதுதான் பிரச்சினையா? என்று கேட்டனர். பூசாரிக்கக்கனும் ஆம்? என்றார். இந்தப் பிரச்சினைக்கு நல்ல முடிவு இருக்கிறது என்று ஆசிரியர்கள் விளக்கமளித்தார்கள்.

கக்கனின் நண்பர்கள் சொன்ன "சொர்ணம்" என்ற பெண்ணின் சொந்த ஊர் சிவகங்கை தெற்குத் தெரு. இப்பகுதி இன்றைய தினம் 'அகிலாண்டபுரம்' என அழைக்கப்படுகிறது. சிவகங்கை மன்னர் மாளிகையில் குதிரைகளைப் பராமரித்து வரும் ஒருவரால் வளர்க்கப்பட்டவர்தான் சொர்ணம். பண்புள்ளம் கொண்டவர். இவர் மதுரை மங்களபுரத்தில் உள்ள கிறிஸ்துவப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரையில் படித்து, நல்ல மாணவி எனப் பெயர் பெற்றதால் இப் பள்ளி நிர்வாகம் இவரை அதே பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றச் செய்தது. இவர் படித்து கிறிஸ்துவப் பள்ளிதானே தவிர இவர் கிறிஸ்துவர் இல்லை என்பதைத் தெளிவுபட எடுத்துக் கூறினார்கள்.

ஓரளவுக்கு மன அமைதிபெற்ற பூசாரிக் கக்கன் மேலும் முழு திருப்தி அடையும் வகையிலே, அப் பெண்ணின் முழுப்பெயர் 'சொர்ணம் பார்வதி' என்றும் எல்லோரும் அவரைச் 'சொர்ணம்' என்றே அழைப்பர் எனவும் விளக்கமளித்தனர். சொர்ணம் பார்வதி எனும் பெயரில் 'பார்வதி' எனும் பெயர் இடம்பெற்ற காரணத்தால் இவர் இந்துப் பெண்தான் என்ற முழு நம்பிக்கை பூசாரிக் கக்கனுக்கு ஏற்பட்டது. மாபெரும் குறையானது போக்கப்பட்டது. முழு மனதுடன் பூசாரிக் கக்கன் சம்மதம் தெரிவித்தார். இதனை அறிந்து கொண்ட இரண்டு ஆசிரியர்களும் முழு நிம்மதியான மனதுடன் திரும்பினர். அதன் பிறகு கக்கனின் வாழ்வில் ஒளியேற்றிடச் "சொர்ணம்

பார்வதி'' யின் திருமண ஏற்பாடுகள் தீவிரம் பெற்றன. திருமணத்தை எப்படி நடத்துவது என்ற ஏற்பாட்டில் அனைவரும் ஈடுபட்டனர்.

## சீர்திருத்த முறைப்படி திருமணம்

1909 ஆம் ஆண்டு பிறந்த கக்கனுக்கு 1932ஆம் ஆண்டு திருமணம் நடைப்பெற்றது. தனது 23 வது வயதில் கக்கன் திருமணத்திற்குத் தயாரானார். இந்த 23 வயதில் அவர் கடந்து வந்த பாதைகளைப் பார்த்தால் நெருப்பாற்றில் நீந்தி வந்ததைப் போன்ற வாழ்க்கைப் பயணம். கல்வி பெறுவதில் பல்வேறு தடைகள். இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு வாழ்க்கைப் பயணத்தில் காலடி எடுத்து வைக்கும் கக்கன் தன் திருமணத்தை எப்படி நடத்துவது எனத் திட்டமிட்டார்.

ஒரு பக்கம் பூசாரிக் கக்கனுக்கு மகனாகப் பிறந்து, கோயில்களுக்குப் பூசை செய்து வரும் குடும்பத்தில் பிறந்து, வீரகாளி அம்மன் பரம்பரையில் பிறந்து, இந்து மத முறைப்படி, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து அரசாணிக்கால் சுற்றி வந்து திருமணம் நடத்துவதா? அல்லது வைத்தியநாத ஐயரின் ஆலோசனைப்படி தன் வாழ்க்கையை நடத்திக் கொண்டு, காங்கிரஸ் கொள்கையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, காந்திய நெறிமுறைப்படி சிக்கனமான திருமணத்தைச் சீர்திருத்த முறைப்படி நடத்துவதா? மேற்கண்ட இரண்டு முறைப்படியான திருமணத்தில் எந்த முறைப்படி நடத்துவது என்று திட்டமிட்டார்.

தன் குடும்பம் பின்பற்றி வந்த பரம்பரை முறைப்படி திருமணமா? அல்லது எதிர்காலத்தை நோக்கித் தன் வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளும் சீர்திருத்த முறைப்படி திருமணமா? தன் நண்பர்களை அழைத்து மனம் விட்டுப் பேசி எவருடைய மனமும் புண்படா வண்ணம் திருமணம் நடத்திட ஆலோசனை கேட்டறிந்தார். தன் வாழ்வில் ஒளியேற்றி வைக்க வருகை தரும் பெண்மணி கிறிஸ்துவப் பள்ளியில் படித்து, அதே பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியதை அறிந்து அவர் பின்பற்றுவது இந்து மத முறையா? அல்லது கிறிஸ்துவ மத முறையா? என்பதைக் கூட அலசி ஆராய்ந்து பார்க்காமல் இறுதியில் அதே பெண்ணைத் திருமணம் செய்திட எடுக்கப்பட்ட முடிவில் கக்கனின் பரந்த எண்ணம் பளிச்சிட்டது.

இறுதியாகச் சீர்திருத்த முறைப்படி திருமணம் நடத்திட முடிவு செய்தனர். இதில் பூசாரிக் கக்கனுக்கு மாறுபட்ட எண்ணம் இருந்தாலும் மகனின் வாழ்க்கை நலமாக அமைய வேண்டும் என்ற மனித நேயமிக்க மனநிலையை அறிய முடிகின்றது. காங்கிரஸ் எனும் தேசிய நீரோட்டத்தில் தன்னை முழுவதும் ஈடுபடுத்திக் கொள்ள

முடிவெடுத்த கக்கன் பல தலைவர்களை அழைத்துச் சீர்திருத்த முறைப்படி திருமணம் நடத்திட முடிவெடுத்தார். நண்பர்கள் மட்டுமே கூடி முடிவு எடுத்து நடத்தும் திருமணமாக இத்திருமணம் இல்லாமல் பொது அமைப்பினைச் சார்ந்தவர்களும் இணைந்து நடத்தும் திருமணமாக இருக்கத் திட்டமிட்டார்கள். அதன் அடிப்படையில் 'சிறாவயல்' என்ற ஊரில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் காந்தி மன்றத்தைக் கக்கனின் நண்பர் தேர்ந்தெடுத்து, அந்த மன்ற உறுப்பினர்களுடன் கலந்து பேசித் திருமணத்தை மிகவும் சிறப்பாக நடத்திட முடிவு எடுத்தனர். மன்ற உறுப்பினர்களும் அதிகமான ஈடுபாட்டுடன் நடத்த முன்வருதாக ஒப்புதல் தந்தனர்.

கக்கன்—சொர்ணம் பார்வதி இவர்களின் திருமணம் காந்தி மன்றத்தினரின் முழு ஒப்புதலோடு "சிறாவயல்" என்ற கிராமத்தில் பத்மாவதி அம்மையாரைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவரும், தமிழகத்தில் விரல்விட்டு எண்ணக் கூடிய சிறந்த பேச்சாளர்களில் ஒருவரான தி.பா.ஜீவானந்தம் அவர்களின் தலைமையிலும், சிவகங்கை அரசின் உறவினரான ஸி. சசிவர்ண தேவர், மத்திய அமைச்சர் ஆர்.வி. சாமிநாதன் ஆகியோரின் முன்னிலையில் எளிமையான முறையில் சடங்கு சம்பிரதாயங்கள் இல்லாமல், சீர்திருத்த முறையில் நடைபெற்றது. இத்திருமணம் பற்றிய விவரமான செய்திகளைச் சேகரிக்க முயற்சித்தும் கிடைக்காத நிலை உள்ளது.



கக்கன் - சொர்ணம் பார்வதி

வீரகாளி அம்மன் திருக்கோயிலின் பூசாரியான பூசாரிக் கக்கனுக்கு இப்படிப்பட்ட சீர்திருத்தத் திருமணம் மனநிறைவு கொடுக்கவில்லையென்றாலும் திருமணத்தில் கலந்து கொண்டு முழு ஈடுபாட்டுடன் மணமக்களை வாழ்த்தினார். மணமக்களை அவரே முன்வந்து தும்பைப்பட்டிக்கு அழைத்துச் சென்றார் என்பது நமக்குக் கிடைத்த செய்தியாகும். மகனின் நல்வாழ்விற்காகத் தந்தை எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்தாக வேண்டும் என்பதனைப் பூசாரிக் கக்கன் செயல்பாட்டிலிருந்து அறிய முடிகின்றது. இங்கேதான் பூசாரிக் கக்கனின் பரந்த மனமும், தியாக எண்ணமும் பளிச்சிடுகின்றன.

## பூசாரி கக்கனின் குடும்ப வாரிசுகள்

பூசாரிக் கக்கன் 'பூசாரி' இனவழி வந்தாலும் ஆங்கில அரசின்கீழ்ப் பணியாற்றிவரும் 'அரசாங்க ஊழியர்' என்ற நிலையில் மிகவும் சிறப்பாகப் பணி ஆற்றிவந்தார். இரவும் பகலும் தன்னுடைய வேலையின் மீது கவனத்தைச் செலுத்திய பூசாரிக் கக்கன், தன் முதல் மனைவி குப்பி அம்மாளையும் இல்லற வாழ்வில் இணைத்தே வாழ்ந்தார். அதன் பயனாக முதல் மகன் கக்கன் பிறந்தார். பூசாரிக் கக்கனின் ஏனைய குடும்ப வாரிசுகளைப் பற்றி அறிந்து கொள்வது என்பது கக்கன் அவர்களின் நூற்றாண்டு விழா நாளில் வாசகர்களுக்குப் பெருமையாக இருக்கும் எனும் பொது எண்ணத்தோடு இப்பகுதியில் பூசாரிக் கக்கன் அவருடைய குடும்ப வாரிசுகளைப் பற்றியும் 'மனிதப் புனிதர் கக்கன்' அவர்களின் வாரிசுகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் செய்திகளைச் சேகரித்துத் தந்துள்ளேன்.

## பெரிய கருப்பன்

பூசாரிக் கக்கனுக்கும் குப்பி அம்மையாருக்கும் 1909ஆம் ஆண்டு முதல் மகனாகப் பிறந்தவர் கக்கன். பத்து ஆண்டுகள் கடந்து 1919 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் தேதி இரண்டாவது மகன் பெரிய கருப்பன் பிறந்தார். பூசாரிக் கக்கனுக்குப் பிறந்த இரண்டு குழந்தைகளின் பிறந்த மாதம் மற்றும் ஆண்டும் சற்று வித்தியாசமானதே. கக்கன் 1909 ஆம் ஆண்டு பிறந்தார். அதாவது மண்டேகு சேம்ஸ்போர்டு சீர்திருத்தம் இந்தியாவில் நடைபெற்ற ஆண்டு.

இரண்டாவது மகன் பெரிய கருப்பன் பிறந்த ஆண்டு 1919. அதாவது மின்டோ மார்லி சீர்திருத்தம் இந்தியாவில் நடைப்பெற்ற ஆண்டு. நாட்டில் நடைப்பெற்ற இந்த இரண்டு சீர்திருத்தச் சட்டங்களும் இந்திய விடுதலைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தன. அதே போலக் கக்கனும் அவருடைய தம்பியும் ஜூன் மாதத்தில் பிறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பெரிய கருப்பன் வளர்ந்த காலங்களில் தன் அண்ணன் கக்கன் மீது அதிகமான அக்கறை கொண்டவர். கக்கன் அரசியல் வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் பிரச்சினை ஏற்பட்ட காலங்களில் அண்ணனுக்குப் பக்கபலமாக இருந்து காத்தவர் என்பது பொதுச் செய்திகள் வாயிலாக நாம் அறியும் உண்மையாகும். அதிகமான படிப்பு இல்லையென்றாலும் தான் படித்த கிராமத்திலே தனது வாழ்க்கையைத் தொடங்கினார். இவருக்குத் திருமணமாகி வெள்ளைச்சாமி என்ற மகனும் தவமணி என்ற பெண்ணும் உள்ளனர். பேரன், பேத்திகளோடு தனது கிராமத்திலே வாழ்ந்து வந்தார்.

அண்ணன் கக்கன் அமைச்சராக இருந்த காலத்திலும் தன் தந்தை பூசாரிக் கக்கன் தலையாரி வேலையை விட்டதும் இல்லை. அதைப் போலவே தம்பி பெரிய கருப்பன் கிராமங்களில் வேலை செய்து தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். பெரிய கருப்பன் கிராமத்தில் இருந்து கொண்டு மூதாதையர் கட்டிக் காப்பாற்றி வந்த கோயிலை பராமரித்துவந்தார். கிராமங்களில் பெரிய கருப்பன் என்றால் தனிப்பட்ட மரியாதை இருந்தது. தன் விருப்பப்படி கிராமத்தில் வாழ்ந்து வந்த பெரிய கருப்பன் 1992ஆம் ஆண்டு அக்டோபர் 18ஆம் தேதி இயற்கை எய்தினார்.

பூசாரிக் கக்கனுக்கும் முதல் மனைவி குப்பி அம்மையாருக்கும் இரண்டாவது மகனாகப் பெரிய கருப்பன் பிறந்ததும் குப்பி அம்மையார் காலமாகிவிட்டார். இளமையிலே தாயை இழந்த கக்கன் அவர்களும் அவரது தம்பி பெரிய கருப்பனும் தாய்ப் பாசமில்லாக் குழந்தைகளாகவே வாழ்ந்து வந்ததார்கள். தாய்ப் பாசத்தோடு வாழவேண்டிய இரு குழந்தைகளின் வாழ்க்கை செம்மையாக அமைய வேண்டும் என்பதில் உறவினர்கள் கவனத்தைச் செலுத்தினார்கள். பாலூட்டி வளர்க்கப்பட வேண்டிய குழந்தை தாய்ப் பாசம் இல்லாமல் ஏங்கிவிடக் கூடாது என்பதில் மிகவும் அக்கறை செலுத்தினார் பூசாரிக் கக்கன்.


## பூசாரிக் கக்கனின் இரண்டாவது திருமணம்

குழந்தைகளின் நலனை மனதில் கொண்டும் பூசாரிக் கக்கன் அரசாங்க வேலையில் தன் கவனத்தைச் செலுத்தியதாலும், இவர்களை நல்வழிப் படுத்திடப் பூசாரிக் கக்கனுக்கு இரண்டாவது திருமணம் செய்திட முடிவு எடுத்தார்கள். அதன் அடிப்படையில் "பிரம்மியம்மாள்" எனும் அம்மையாரை மறுமணம் செய்து கொண்டார். அக்காலங்களில் மறுமணம் என்பது பழக்கத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த செயல்பாடாகும். எனவே பூசாரிக் கக்கனின் மறுமண வாழ்வு நல்லதாகவே அமைந்தது. குடும்ப விளக்கு அணையா வண்ணம் பிரம்மியம்மாள் வழிநடத்தி வந்தார். முதல் தாரத்திற்குப் பிறந்த கக்கன், பெரிய கருப்பன் இவர்களின் நலனில் அதிகமான அக்கறை காட்டினார். பூசாரிக் கக்கன் பிரம்மியம்மாளுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. இல்லற வாழ்வில் இன்பத்தை அனுபவித்த இந்தத் தம்பதியினர் நான்கு குழந்தைகளை நாட்டுக்குக் கொடுத்தார்கள் என்பதைவிடக் கக்கனுக்குப் பக்கபலமாக அமைந்திடவே இந்நான்கு குழந்தைகளை ஈன்றெடுத்தார்கள்.

"தம்பி உடையான் படைக்கு அஞ்சான்" என்பதற்கிணங்க மொத்தத்தில் 5 தம்பிகளுக்கு மூத்த அண்ணனாகப் பிறந்து வாழ்ந்த கக்கனின் வாழ்வில் முக்கிய இடத்தைப் பிடித்தனர். இவர்களின் வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாக அறிந்து கொள்வோமாக.

## வெள்ளைக் கக்கன்–பார்வதியம்மாள்

பூசாரிக் கக்கனுக்கும் பிரம்மியம்மாளுக்கும் பிறந்த முதல் குழந்தை வெள்ளைக் கக்கன். 1927ஆம் ஆண்டு மேத் திங்கள் இரண்டாம் நாள் பிறந்தார். இவரது குடும்பத்தின் பெருமை வாய்ந்த பெயராகிய "கக்கன்" என்பதனை இணைத்து 'வெள்ளைக்கக்கன்' எனும் பெயர் பெற்று விளங்கினார். இக்குடும்பத்தில் பெயரிலேயே மாபெரும் மாற்றத்தைக் காண முடிந்தது. இரண்டாவது மகனுக்குப் 'பெரிய கருப்பன்' எனப் பெயரிட்ட பூசாரிக் கக்கன் தனது மூன்றாவது மகனுக்கு "வெள்ளை" என்ற பெயரைச் சூட்டியுள்ளார். கருப்பு– வெள்ளை இப்படிப்பட்ட பெயர் பெருமையினை இக்குடும்பத்தில் காண முடிகின்றது.



கக்கனின் தம்பி வெள்ளைக் கக்கன் - பார்வதியம்மாள்

வெள்ளைக் கக்கன் தனது மூத்த அண்ணன் 'கக்கன்' வழியில் தன்னைத் தயார்படுத்திக் கொண்டவர். அண்ணன் கக்கன் மீது அளவிட முடியாத அளவிற்கு அன்பும் பாசமும் அதிகம் கொண்டவர். அண்ணனுக்குப் பல துன்பங்கள் ஏற்பட்ட காலங்களில் துணை நின்றவர். துணிந்து வாழ்ந்து அண்ணன் கக்கனைப் போலவே தானும் உயர்ந்த நிலையினை அடைய வேண்டும் எனும் எண்ணத்தைக் கொண்டவர். பல்வேறு குடும்பச் சூழ்நிலைகளுக் கிடையேயும், துன்பங்களுக்கிடையேயும் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பொருளியல் இளங்கலைப் பட்டமும், சென்னை சட்டக் கல்லூரியில் இளங்கலைச் சட்டமும் பயின்றவர்.

அண்ணன் கக்கன் சமூக மற்றும் நாட்டு நலனில் அதிக அக்கறை கொண்டவராக இருந்ததினால் இவர் முழுக்க முழுக்கக் கல்வி வளர்ச்சியில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார். இவர் சட்டக்கல்வி பெற்றிருந்தாலும் வழக்கறிஞராகப் பணியாற்றாமல் அறநிலையத்துறை அதிகாரியாக அரசுப் பணியில் சேர்ந்தார். பிறகு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் இயக்குநராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

**சிறை வாழ்வு**

வெள்ளைக் கக்கன் மதுரை மேலூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் பயின்ற காலங்களில் தனது அண்ணன் கக்கன் தலைமை ஏற்று நடத்திய பல்வேறு போராட்டங்களில் தன்னையும் ஈடுபடுத்திக்

கொண்டார். அக்காலங்களில் குடும்பம் குடும்பமாகச் சுதந்திரப் போராட்டக் களத்தில் குதித்தனர். கக்கன் காந்தியின் தலைமையின்கீழ் நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்களைத் தலைமை ஏற்று நடத்திய காலக் கட்டங்களில் வெள்ளைக் கக்கன் ஈடுபட்டார் என்பது அவரது நாட்டுப் பற்றினை அறிய முடிகின்றது. 17.8.1942 முதல் 31.8.1942 வரையில் சிறையில் அடைக்கப்பட்டார். மாணவராக இருந்த காலத்தில் அவர் சிறை சென்றதால் அவரை மன்னித்து விடுதலை செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தீண்டாமை ஒழிப்பு, இழிதொழில் மறுப்பு போன்ற மனிதனை மதிக்காத இழிவான தொழில்களை எதிர்த்துப் பல போராட்டங்களை நடத்தினார். சிறை சென்றார். வெற்றி கண்டார். அரிச்சந்திர மயானக் காண்டம் எனும் நாடகம் சமுதாயத்தை இழிவு படுத்துவதாகவும், இழிகுலவேலையைத் தூண்டுவதாகவும் அமைந்தது. இந்த நாடகத்தைத் தடை செய்ய வேண்டும் என்று பல்வேறு போராட்டங்களை வழிநடத்தி எதிர்த்துப் போராடினார். இறுதியில் இந்த நாடகம் தடை செய்யப்பட்டது. இவரது சமுதாயத் தாகம் என்பது அண்ணனைப் போலவே இரத்தத்தில் கலந்துவிட்டதாகவே அறிய முடிகின்றது. இவரது சமுதாயப் போராட்டங்களைக் காமராசர் அவர்கள் பாராட்டியதோடு பல நற்சான்றிதழ்கள் வழங்கியுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

**ஒரு ஆண்மகனின் வெற்றிக்குப் பின்னால்**
**ஒரு பெண்ணின் உழைப்பு உண்டு**

என்பதற்கிணங்க வெள்ளைக் கக்கனின் வெற்றிக்குப் பின்னால் அவரது மனைவி பார்வதி அம்மாளின் கடினமான உழைப்பும், ஆதரவும், அரவணைப்புமே காரணமாக அமைந்துள்ளன என்பதனை அவரது உறவினர்கள் பெருமையோடு கூறியதால் அறிய முடிகின்றது.

வெள்ளைக் கக்கன் பொதுத் தொண்டில் ஈடுபட்ட காலங்களில் ஏற்பட்ட பல்வேறு தொல்லைகளுக்கும், எதிர்ப்புகளுக்கும் ஈடுகொடுத்துக் கொண்டு, எழுந்து நின்று குடும்பத்தை நல்லவிதமாக வழிநடத்தியதோடு அல்லாமல் தனது கணவருக்குப் பாதுகாப்பாகவும் வாழ்ந்தார் என்பதிலிருந்து பெண் இனத்திற்குப் பெருமை சேர்த்து வாழ்ந்தவர் பார்வதி அம்மாள் என நம்மால் உணரமுடிகின்றது. தனது அண்ணன் கக்கன் ஆற்றிவரும் சமுதாயப் பணிக்கு எந்தவிதமான பாதகம் ஏற்படா வண்ணம் வெள்ளைக் கக்கன் வாழ்ந்தார். இந்தத்

தம்பதியருக்கு இரவீந்திரன், பாஸ்கர பூபதி ஆகிய இரண்டு மகன்களும், மல்லிகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகிய இரண்டு பெண் பிள்ளைகளும் பிறந்தனர்.

1985ஆம் ஆண்டு பணி ஒய்வு பெற்று, தனது சொந்த ஊரான தும்பைப் பட்டியில் வாழ்ந்து வந்தார். 1991ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## முன்னோடி–கமலம்

பூசாரிக் கக்கனுக்கும் பிரம்மியம்மாளுக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தவர்தான் "முன்னோடி" எனும் பெயரைத் தாங்கிய கக்கனுக்கு மூன்றாவது தம்பி ஆவார். 1928 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் நாள் பிறந்த "முன்னோடி" தனது பெயருக்கு ஏற்றபடி எதிலும் முன்னோடியாகச் செயல்பட்டார். தனது தந்தையின் நிலங்களை விவசாயத் துறையில் அதிக அளவு அக்கறை செலுத்தித் தந்தைக்குக் கிராமத்தில் அதிகமாக உதவி செய்தார். விவசாயத்தில் அதிகமான ஈடுபாடு கொண்ட இவர் இளமைக்கால கல்வியைக் கூட முறையாகப் பெற முடியாமல் தந்தைக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்டார். ஒன்பது வயதுக்கு மேல் தொடக்கக் கல்வி படிக்கத் தொடங்கி மதுரை மேலூரில் தொடக்கப் பள்ளியில் படிப்பும் மதுரை சௌராஷ்ட்டிரா பள்ளியில் உயர் நிலைக் கல்வியையும் பயின்றார்.

இவர் விளையாட்டுத் துறையில் அதிகமான அக்கறை காட்டியதால் கல்வியின் மீது அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை. இதனால் படிப்பு பாதியிலே நிறுத்தப்பட்டு தான் பெற்ற கல்விக்கு ஏற்றபடி இரயில்வே துறையில் சேர்ந்து எழுத்தராகவும் தொழிலாளர் நல முதன்மை ஆய்வாளராகவும் பதவிகளை வகித்தார். இவர் இரயில்வே துறையில் மிகவும் சிறப்பாகப் பணியாற்றி உயர் அதிகாரிகளின் நம்பிக்கைக்குரியவராகத் திகழ்ந்தார். இவரது கடினமான உழைப்புக்கும், நேர்மையான செயலுக்கும் "உதவி அதிகாரி" யாகப் பதவி உயர்வு வந்தபோது தனது மக்களின் கல்விக்குத் தடை வந்துவிடுமோ? என அஞ்சிப் பதவி உயர்வைத் தட்டிக்கழித்தார்.

குழந்தைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை எடுத்துக்கொண்ட 'முன்னோடி' குழந்தைகளுக்குத் தரமான கல்வியைக் கொடுத்தார். இவரது கடின உழைப்பாலும், குழந்தைகள் மீது காட்டிய பாசத்தாலும் மூத்த மகன் மனோகரனை மருத்துவராகவும் கடை மகன் ஸ்ரீதர மூர்த்தி துணியியல்

பொறியாளராகவும் பதவியால் பெருமைப் படும் வகையில் படிக்க வைத்துப் பெருமை பெற்றுள்ளார்.

மகேஸ்வரி, பத்மாவதி ஆகிய இரு மகள்களையும் இளங்கலைப் பட்டம் பெறச் செய்து வங்கிகளில் பணியாற்றும் வாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கிறார்.



*கக்கனின் மூன்றாவது தம்பி முன்னோடி - கமலம்*

கக்கனுக்கு அதிகமாகப் பிடித்த தம்பி 'முன்னோடி' தான் என்பதனை ஏனைய உடன் பிறப்புகள் பெருமையோடு கூறுகின்றார்கள். கக்கன் அமைச்சராக இருந்த காலக்கட்டங்களில் மதுரைக்கு வருகின்ற போதெல்லாம் தம்பி முன்னோடி வீட்டிற்கு வந்து போவதைப் பழக்கமாகக் கொண்டார் என்பதிலிருந்து இந்தத் தம்பி மீது அதிகம் பாசம் கொண்டார் என்பதனை அறிய முடிகிறது. முன்னோடியின் மனைவி கமலம்மாள் வந்தோரை வரவேற்று உபசரிக்கும் உயர் குணம் படைத்தவர் என்பதனைப் பிறர் சொல்லப் பெருமையோடு கேட்டதுண்டு. குறிப்பாகக் கக்கன் அவர்கள் இவரது வீட்டிற்கு வருகைதந்தபோதெல்லாம் அன்புடன் உபசரித்ததை இன்னும் உறவினர்கள் பெருமையோடு பேசிக் கொள்கின்றார்கள்.

தான் அமைச்சராக இருந்த போதும் தம்பியின் வீட்டிற்குப் பாசத்தோடு வந்துபோவது என்பது உறவின் பெருமையை இவ்வுலகிற்கு எடுத்துச் சொல்வது சிறப்பாகும். எந்தவிதச் சூழ்நிலை ஏற்பட்ட காலத்திலும் கூட அரசியலில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல், அதே நேரத்தில் அண்ணன் கக்கனின் அரசியல்

வாழ்விற்கு எவ்விதமான இடையூறு செய்யாத வகையிலும் தன் வாழ்க்கையை 'முன்னோடி' அமைத்துக் கொண்டார் என்பது பெருமைக்குரியதுதான்.

1986 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டு மதுரைக் கூடல் நகரில் சொந்த வீட்டில் வாழ்ந்து வருகின்றார்.

## வடிவேலு–சரஸ்வதி

பூசாரிக் கக்கனுக்கும் பிரம்மியம்மாளுக்கும் மூன்றாவது மகனாகவும் கக்கனுக்கு நான்காவது தம்பியாகவும் பிறந்தவர் தான் வடிவேலு. இவர் தும்பைப் பட்டியில் பிறந்தவர். ஏனைய மூத்த சகோதரர்களைப் போல வடிவேலும் இளமையில் விளையாட்டில் அதிகம் ஈடுபாடு செலுத்தினார். பூசாரிக் கக்கனுக்குப் பிறந்த அனைத்துக் குழந்தைகளுமே விளையாட்டுத் துறையில் அதிகமான ஈடுபாடு கொண்டிருந்ததாக நாம் அறிகின்றோம். இதற்குப் பலகாரணங்கள் இருந்தாலும் இதில் முக்கியமான ஒரு காரணம் உண்டு. பூசாரிக் கக்கனுக்குப் பிறந்த அனைத்துக் குழந்தைகளுமே உடல் ரீதியில் ஓங்கி உயர்ந்து, கம்பீரமான உடல் தோற்றம் கொண்டவர்கள். எனவே தான் விளையாட்டுத் துறையில் தனிமை பெற்றுத் திகழ்ந்தார்.

வடிவேலும் தன் அண்ணன் கக்கனைப் போலப் பொதுச் சேவையிலும் அதிகமான நாட்டம் கொண்டவராகத் திகழ்ந்தார். பள்ளிக் கல்வியைச் சோழவந்தான் உயர்நிலைப் பள்ளியிலும், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பட்ட இளநிலைக் கல்வியையும் முடித்தார். மெஜீரா மில்ஸ் என்ற தனியார் நிறுவனத்தில் பணியாற்றிவந்தார். கல்கத்தாவில் மாநிலங்களுக்கிடையே நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுச் சிறப்பாக ஆடியதைக் கண்காணித்த மெஜீரா கோட்ஸ் ஆலை நிர்வாகம் தானே முன்வந்து இவரது திறமையைப் பாராட்டி மில்லில் வேலை கொடுத்தது. விளையாடும் திறமையை வளர்த்துக் கொண்டு தன் குடும்பத்தினருக்குப் பெருமை சேர்த்த வடிவேலு, அனைவராலும் சிறந்த சமூகத் தொண்டர் எனப் பாராட்டினைப் பெற்ற மதுரை கே. புதூர் பெரிய கருப்பன் அவர்களின் மூத்த மகளான சரஸ்வதியை மணந்து கொண்டார். இவர்களது குடும்ப வாழ்வு சிறப்பாக அமைந்தது. இவர்களுக்கு அய்யனார் சதீஷ், இளையராஜா என்ற ஆண்மகன்களும், கீதா, கிருஷ்ணா என்ற இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தன.

இன்பமான குடும்ப வாழ்க்கையோடு அலுவலகத்தில் பல பதவி உயர்வினையும் வடிவேலு பெற்றார். தலைமைக் காசாளராகப் பதவி உயர்வு பெற்றார். 1977ஆம் ஆண்டு சமய நல்லூர் சட்டமன்றத் தொகுதியில் ஜனதா கட்சியின் வேட்பாளராக அன்றைய அ.இ.அ.தி.மு.க வேட்பாளர் சமய நல்லூர் செல்வராசு அவர்களை எதிர்த்துப் போட்டியிட்டார். அதனால் மக்களின் மனங்களில் இவர் இடம் பிடித்தார். வயது மூப்பின் காரணமாக மேற்கண்ட மில்லிலிருந்து ஓய்வு பெற்றார்.

காலத்தின் சூழ்நிலைகளுக்கேற்ப அண்ணன் கக்கன் வழியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு காங்கிரஸ் கட்சியின் மாவட்டப் பொறுப்புகளில் பங்கேற்றுப் பல பொறுப்புகளை வகித்துள்ளார். மேலும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் செனட் உறுப்பினராகவும் பதவி வகித்து, சிறப்பான சேவை ஆற்றினார்.

இந்திய மைய அரசின் தொலைபேசித் துறையின் மாநில ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டார். இவர் பல துறைகளில் பல பொறுப்புக்களை ஏற்றுச் சிறப்பாகப் பணியாற்றி வந்தாலும் தான் அங்கம் வகித்து வரும் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியிலும் தனிக்கவனம் செலுத்தி வந்தார். காங்கிரஸ் கட்சியின் மாவட்ட ஆட்சிக் குழுவில் தொடர்ந்து இடம்பெற்று வந்தார்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி பிளவுபட்டு மக்கள் தலைவர் மூப்பனார் தலைமையில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் தொடங்கும்போது மூப்பனார் தலைமை ஏற்றுக் கொண்டார். தற்போது காங்கிரஸ் கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினராக இருந்து சிறப்பான முறையில் சேவை செய்து கொண்டு வருகின்றார்.

## விஸ்வநாதன் கக்கன்–அசோகா

பூசாரிக் கக்கனுக்கும் பிரம்மியம்மாளுக்கும் நான்காவது மகனாகவும், கக்கனுக்கு ஐந்தாவது தம்பியாகவும் பிறந்த கடைசிக் குழந்தைதான் விஸ்வநாதன். இவருக்குப் பெற்றோர்கள் சூட்டிய பெயர் விஸ்வநாதன். நாளடைவில் தன் குடும்பத்தின் மூத்த அண்ணன் 'கக்கன்' அவர்களின் அருமை பெருமைகளை, நாட்டிற்கு அவர் அளித்து வந்த தியாகங்களை இளமையிலேயே கேட்டறிந்த காரணத்தால், அண்ணனுக்குப் பெருமை சேர்க்கவும், தான் பிறந்த குடும்பத்திற்குப் பெருமை சேர்க்கும் விதத்திலேயும் இயற்பெயர் "விஸ்வநாதன்" என்பதோடு "கக்கன்" எனும் பெயரையும் சேர்த்துக் செய்து கொண்டார்.

# விஸ்வநாதன் கக்கன் - அசோகா



கக்கனின் கடைசி ஐந்தாவது தம்பி விஸ்வநாதன் கக்கன்-அசோகா

இவரது சொந்த ஊரான தும்பைப்பட்டி கிராமத்தில் 13.7.1935ஆம் நாள் பிறந்தார். தொடக்கக் கல்வி தும்பைப்பட்டியிலும், பள்ளிக் கல்வி மதுரை சௌராஷ்டிரா உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரி இடை நிலையை மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும், இளங்கலைப் பட்டப்படிப்பைச் சென்னை மாநிலக் கல்லூரியிலும், சட்டக் கல்வியைச் சென்னை சட்டக் கல்லூரியிலும் பயின்றார்.

ஏனைய மூத்த சகோதரர்களைப் போல விஸ்வநாதன் கக்கன் அவர்களும் விளையாட்டுத் துறையில் அதிகமான ஈடுபாடு கொண்டிருந்தார்.

காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள அண்ணமங்கலம் எனும் கிராமத்தில் நாயக்கர் இனத்தைச் சார்ந்த பூங்காவனம் அன்னம்மாள் ஆகியோரின் மகளும், சென்னை சேவா சதன் பள்ளியின் விளையாட்டு ஆசிரியருமான 'அசோகா' என்பவரை மனதார விரும்பித் தனது அண்ணன் கக்கனின் ஒப்புதலோடு 29.3.1965ஆம் நாள் திருமணம் செய்து கொண்டார். விஸ்வநாதன் கக்கன் அசோகா தம்பதியினருக்கு கைலாஷ்குமார், இராசேந்திரன் என்ற இரு மகன்களும், இமையாள், பொம்மி என்ற இரு மகள்களும் பிறந்துள்ளனர். இந்த நால்வரில் மூன்று குழந்தைகளைப் பொறியியல் பட்டதாரிகளாகவும், ஒருவரை இளங்கலைப் பொருளியல் பட்டதாரியாகவும் உருவாக்கியுள்ளார். தொடக்கத்தில் தமிழக அரசின் பொதுப் பணித் துறையிலும், பிறகு நெடுஞ்சாலைத் துறையிலும்

பணியாற்றினார். அதன்பின் இந்தியன் இரயில்வே தணிக்கை யாளராகப் பணியாற்றினார்.

பொதுச் சேவையில் அதிக ஆர்வம் கொண்ட இவர் 'அரிசன நல இயக்கம்' என்ற சமூக அமைப்பை உருவாக்கி அதன் வாயிலாகச் சமுதாயத்தில் பாதிக்கப் பட்ட மக்களுக்குச் சமூகப் பணி ஆற்றிவந்தார். அண்ணன் வழியில் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் தொண்டு செய்வதையே தன் முழு நேரப் பணியாகச் செயல்பட்டுவந்தார். தமிழகமெங்கும் இந்த அமைப்பின் கிளைகளைத் துவக்கித் தீண்டாமையை எதிர்த்துக் குரல் கொடுத்ததோடு பல்வேறு இடங்களில் போராட்டங்களைத் திட்டமிட்டு நடத்தியும் காட்டினார். இவரது அயராத பணியால் குறுகிய காலத்தில் மக்கள் மத்தியிலே சமூகச் சேவகராகக் காட்சியளித்தார். இவரது வளர்ச்சியை நேரில் கண்ட பல தலைவர்கள் இவரைக் கட்சிகளில் சேர்த்துக் கொள்ள முன்வந்தனர். குறிப்பாக அன்றைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அழைத்தபோது,

**தனது அண்ணன் கக்கன் அவர்கள்**
**வழியே தன் வழி**

என்பதனை எடுத்துச் சொல்லி அண்ணன் காத்து வந்த காங்கிரஸ் இயக்கத்தில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார். விஸ்வநாதன் கக்கன் அவர்களின் காங்கிரஸ் பற்றினை அதிகமாகக் கண்காணித்த காங்கிரஸ் கட்சி, 1989ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினராகக் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் வாய்ப்பினைக் கொடுத்தது. மூப்பனார் காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவராக இருந்து அந்த வாய்ப்பினை வழங்கினார் என்பதனை நன்றி உணர்வோடு நினைவு கூர்ந்துள்ளார்.

தமிழ்மாநிலக் காங்கிரஸ் தொடங்கிய போது மூப்பனாருடன் சேர்ந்து செயல்பட்டார். ஏதோ தெரியவில்லை அதன்பின் ஐக்கிய ஜனதாதளத்தின் மாநிலத் துணைத் தலைவராக இருந்து செயல்பட்டார். 1989ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிடத் தனது தணிக்கையாளர் பதவியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்ற இவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் சிறந்த வழக்கறிஞராகவும்

பணியாற்றினார். தமிழக அரசின் ஒப்புதலோடு உயர்நீதி மன்ற முதன்மை நீதியரசர் நியமனம் செய்யும் சட்ட உதவி மைய அமைப்பின் உறுப்பினராகவும் இருந்து வந்தார். அமெரிக்காவில் இருக்கும் குழந்தைகளைப் பார்க்கச் சென்றவர் உடல் நலம் சரியில்லாத நிலையில் 2010 ஜூலை மாதம் இயற்கை எய்தினார்.

## கக்கனின் குடும்ப வாரிசுகள்

நான் யார்? நாம் யார்? என்ற கேள்விகள் ஒவ்வொரு மனித வாழ்க்கையிலும் கேட்கப்பட வேண்டிய கேள்விகளாகும். என்னைப் பற்றி நான் அறிந்து கொள்ளாத நிலையில் என் தந்தையைப் பற்றி, என் தாயைப் பற்றி, என் குடும்பத்தைப் பற்றி என் சமுதாயத்தைப் பற்றி, ஏன்? என் நாட்டைப் பற்றிக் கூட அறிந்து கொள்ள முடியாத நிலையில் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கை உள்ளது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளே பல்வேறு சிந்தனைகள் மறைந்து கிடக்கின்றன. பல உண்மைகள் பலருக்குத் தெரியாமலே போய்விடுகின்றன. பல இடங்களில் உண்மையைச் சொல்லாமல் போனால் கூட அது பொய்யாகி விடுகின்றது. எனவே மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தன்குடும்பத்தை அடையாளம் காண்பதும், எழுதிவைப்பதும் காலத்தின் கட்டாயமாகும். கக்கன் அவர்களின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் பூசாரிக் கக்கனுக்கு வரலாறு எழுதப்படவில்லை. ஆனால் கக்கன் அவர்களுக்கு வரலாறு உருவாக்கப் படுகின்றது. கக்கன் வாயிலாக அவரது குடும்பத்தை நாம் அறிந்து கொண்டோம். இப்பொழுது கக்கன் அவர்களைக் கொண்டு ஒரு வரலாறு உருவாகின்றது. எனவே பூசாரிக் கக்கன் குடும்பத்தினைப் பற்றி அறிந்து கொண்ட நாம், கக்கனுடன் பிறந்த சகோதரர்களைப் பற்றி அறிந்து கொண்ட நாம், கக்கன் குடும்பத்தினைப் பற்றியும் அறிந்து கொள்வது சாலச் சிறந்ததாகும்.

மனிதன் பிறந்தான், வாழ்ந்தான், மறைந்தான் என்பதைவிட, மனிதன் பிறந்தான், வாழ்ந்தான், சரித்திரம் படைத்தான், சாதனை படைத்தான், மறைந்தான் என்பது தான் வாழ்க்கை. அந்த வாழ்க்கை முறையை, பலருக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தவர்தான் கக்கன். அவரது குழந்தைகளைப் பற்றி, குடும்பத்தைப் பற்றி அறிந்து கொள்வது நல்லது என்பதால் கக்கன் அவரது குடும்பத்தினைப் பற்றிக் கிடைத்த செய்திகளை இங்கே அளிப்பதில் பெருமைப்படுகின்றேன்.

## கக்கனின் வாரிசுகள்

**கக்கன் + சொர்ணம் பார்வதி**

- பத்மநாபன் + டாக்டர் கிருஷ்ணகுமாரி
  - மீனாட்சி
  - சாந்தி
- பாக்கியநாதன் + சரோஜினி
  - அரங்கன்
  - கண்ணன்
- கஸ்தூரிபாய் + சிவசுவாமி
  - சுவர்ணலதா
  - மேகலாவதி
  - இராஜேஸ்வரி
  - சீனிவாசன்
- காசிவிஸ்வநாதன் + பூமாலை
  - தேவி
- சத்தியநாதன் + மகேசுவரி
  - ஆனந்து
  - ஷெல்மா

### பத்மநாதன் – டாக்டர் கிருஷ்ணகுமாரி

கக்கனுக்குக் கிடைத்த மனைவி சொர்ணம் பார்வதி மிகவும் அமைதியான குணத்தையும் வந்தோரை வரவேற்று உபசரிக்கும் குணநலன்களையும் பெற்றிருந்தார். கணவரின் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆறுதல் தந்து அவரைக் கவனமாக வழிநடத்தி வந்தார். இவர்களின் இல்லற வாழ்விற்குக் கிடைத்த முதல் பரிசுதான் பத்மநாதன் எனும் முதல் ஆண் குழந்தையாகும். மதுரை மேலூரில் பிறந்தவர். முதல் குழந்தை என்பதால் இக்குழந்தையை மிகவும் கவனத்தோடும், சீரோடும் வளர்த்து வந்தார்கள். இவர் தொடக்கக் கல்வியை மதுரை மேலூரிலும், இளங்கலை, முதுகலைப் பட்டப் படிப்பு இரண்டையும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் பயின்றார். இவரது அறிவுத் திறமைக்கேற்பவும், இவர் படித்த முதுகலைப் படிப்புக் கேற்றவாறும் தமிழ்நாடு தேர்வாணையக் குழு நடத்திய குரூப்–1 தேர்வில் தேர்ச்சி பெற்றுப் பணியில் சேர்ந்தார்.

கக்கன் மகன் என்பதாலும், குரூப்–1 படித்துப் பணியில் இருந்தாலும் இவருடைய திருமணத்தை நடத்தக் கக்கன் புகழ்பெற்ற, குடும்பத்தில் பெண் பார்த்துத் திருமணம் நடத்திட முடிவு செய்தார். அதன் அடிப்படையில் தமிழகத்தில் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியாகவும், மாவட்ட ஆட்சியாளராகவும், சமுதாயப் பற்றுக் கொண்டவரும், மாமேதை டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றவரும், மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்கள், சர்தார் வல்லபாய் படேல் அவர்களுக்குப் பெருமையுடன் கடிதம் கொடுக்கும் நிலையில்[1] அம்பேத்கர் மனதில் நீங்கா இடம்

பெற்றவருமான வி. சுப்பையா I.A.S. அவர்களின் மூத்த மகளான கிருஷ்ணகுமாரியைப் பெண்பார்த்துத் திருமணம் முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மணமகள் கிருஷ்ணகுமாரி இரண்டாம் ஆண்டு மருத்துவப் பட்டப்படிப்புப் பயிலும் போதே இந்தத் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் 16.9.1962இல் இவர்களது திருமணம் நடைபெற்றது. இந்தத் தம்பதியினருக்கு மீனாட்சி, சாந்தி என்ற இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தன.

பத்மநாதன் பிறந்த பிறகுதான் கக்கன் வாழ்வில் பல்வேறு முன்னேற்றமான வாழ்க்கையைப் பெற்றதாக நாம் அறிகின்றோம். முதல் மகனாகப் பிறந்த பத்மநாதன், தன் தந்தையின் பல்வேறு கஷ்டங்களை அறிந்ததோடு, தந்தைக்கு உறுதுணையாகவும் செயல்பட்டிருக்கிறார். அரசியல் வாழ்வில் தந்தையின் கடின உழைப்பிற்கு இவரும் மனம் கசிந்து கொள்ளாமல் உறுதுணையாகவே இருந்திருக்கிறார். அரசியலில் அகில இந்திய அளவில் குடும்ப அரசியல் தலைதூக்கி விளையாடும் காலக் கட்டங்களில்கூட, கக்கன் தன் குழந்தைகளைக் குடும்ப அரசியலுக்குக் கொண்டு செல்லாமல் கல்வித் துறையில் மேலோங்கச் செய்திருந்தார்.

பத்மநாதன் இளமையிலேயே சர்க்கரை வியாதியில் தாக்கப்பட்டார். அவரது 39வது வயதில் வேலூர் மருத்துவமனையில் காலமானார். கணவர் மறைவிற்குப்பின் குடும்பத்தைச் சுமந்து கொண்டு இரண்டு பெண் குழந்தைகளையும் நல்வழிப் படுத்திடத் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார் டாக்டர் கிருஷ்ணகுமாரி.

### பாக்கியநாதன் – சரோஜினி

கக்கன்–சொர்ணம் பார்வதி தம்பதியினருக்குப் பாக்கியநாதன் இரண்டாவது மகனாகப் பிறந்தார். 1944 ஜூன் மாதம் முதல் நாள் மதுரை மேலூரில் பிறந்தார். இவர் பள்ளிக் கல்வியை மதுரை மேலூரிலும் பள்ளி உயர் வகுப்புகளைச் சென்னையிலுள்ள இராஜா முத்தையா உயர் நிலைப் பள்ளியிலும் பயின்றார். விளையாட்டில் மிகவும் ஆர்வம் கொண்டதால் படிப்பைத் தொடர முடியவில்லை. இவர் கால் பந்து விளையாட்டில் அதிகமான ஆர்வம் கொண்டவர். விளையாட்டில் அதிகக் கவனம் செலுத்திய இவரால் கல்வியில் அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை. இருந்தாலும் இவரது விளையாட்டுத்துறை இவருக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்தது. 1964 முதல் 1999 வரையில் சென்னையில் புகழ்பெற்ற நிறுவனமான 'சிம்சன்' நிறுவனத்தில் கால் பந்து வீரர் என்ற

# பாக்கிய நாதன் - சரோஜினி



*கக்கனின் 2-வது மகன் பாக்கிய நாதன்-சரோஜினி*

அடிப்படையில் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். சிறப்பான முறையில் தன் வாழ்வினை நடத்திச் சென்ற இவர் ஒய்வு பெற்று மகாகவி பாரதியார் நகரில் வாழ்ந்து வருகின்றார்.

இவர் திருச்சிக்கு அருகில் இருக்கும் தாளக்குடியைச் சார்ந்த விடுதலை வீரர். தாளக்குடி அண்ணாமலை அவர்களின் மகள் சரோஜினி என்பவரை 6.9.1962இல் மணந்து கொண்டார். இவர்களுக்கு அரங்கன், கண்ணன் என்ற இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர்.

தந்தை வழியில் தன் வாழ்வினை அமைத்துக் கொண்ட இவர் பொதுச் சேவையில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார். காங்கிரஸ் பேரியக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தந்தை போற்றிப் பாதுகாத்து வந்த காங்கிரஸ் கட்சியில் இன்றுவரை உறுப்பினராக இருந்து பொதுத் தொண்டில் ஈடுபட்டு வருகின்றார்.

**கஸ்தூரிபாய் – சிவசுவாமி**

கக்கனுக்குப் பிறந்த ஆண் குழந்தைகளுக்கிடையே ஒரு பெண் குழந்தை பிறந்து கக்கன் குடும்பத்தினருக்கே பெருமை தேடித்தந்தது.

# கஸ்தூரிபாய் - சிவசுவாமி



*கக்கனின் மகள் திருமதி கஸ்தூரிபாய்-சிவசுவாமி*

1946ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் தேதி கக்கனுக்கும் சொர்ணம் பார்வதிக்கும் பிறந்த பெண் குழந்தைக்குப் பெயர் சூட்டிய பெருமையை நாம் அனைவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். 1946ஆம் ஆண்டுகளில் தேசியக் காங்கிரஸ் இயக்கம் தொடர் போராட்டங்களை நடத்திக் கொண்டு வந்த தருணமாகும். கக்கன் அவர்கள் கர்மவீரர் காமராசர் அவர்களின் தீவிரமான சீடராக இருந்த அதே தருணத்தில் மகாத்மா காந்தியின் மீது அதிகப்படியான விசுவாசம் கொண்டிருந்தார். காந்தியடிகள் தலைமை ஏற்று நடத்திய அனைத்துப் போராட்டங்களையும் தமிழகத்தில் மதுரை மண்ணில் தொடர்ந்து நடத்தினார். காந்தியடிகளின் மேல் கொண்ட பற்றால் காந்தியடிகளின் மனைவியின் பெயரான கஸ்தூரிபாய் என்ற பெயரைத் தன் மகளுக்குச் சூட்டிக் கக்கன் மகிழ்ந்தார்.

தொடக்கக் கல்வி மதுரை மேலூரிலுள்ள அரசினர் பள்ளியிலும், பிறகு தந்தையுடன் சென்னைக்கு வர நேர்ந்ததால் பிற்பகுதியை மாநாகராட்சி பள்ளியிலும் பயின்றார். பள்ளிக் கல்வியைச் சென்னை எல்லீஸ் சாலையிலுள்ள வெலிங்டன் பள்ளியிலும் பயின்றார்.

பெரம்பலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் தத்தனூர் என்ற கிராமத்தைச் சார்ந்த மூ. அரங்கராஜன் ஆசிரியரின் மூத்த

மகன் பொறியாளர் சிவசுவாமியை மாப்பிள்ளையாகக் கக்கன் தேர்வு செய்தார். இவர்களது குடும்பத்தில் பிறந்த முதல் மகள் என்பதால் திருமணத்தை மிகவும் சிறப்பாக அதே நேரத்தில் கட்சியின் கொள்கைக்கும் வளர்ச்சிக்கும் வித்திடும் வகையிலே திட்டமிட்டார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் உயிர் மூச்சாக செயல்பட்டுவரும் கக்கன், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் தலைமையில் 20.1.1964 அன்று திருமணத்தை நடத்தினார். இந்தத் தம்பதியினருக்குச் சுவர்ணலதா, மேகலாவதி, இராஜேஸ்வரி என்று மூன்று பெண் குழந்தைகளும் சீனிவாசன் என்ற ஓர் ஆண் மகனும் பிறந்துள்ளனர்.

தந்தை செல்லும் புனித அரசியல் பயணத்தில் தன்னையும் முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார். சமூகச் சேவையில் தனிப்பட்ட அக்கறை ஏற்றுக் கொண்டு மக்களுக்குச் சேவை செய்துவரும் குணத்தை அறிந்து கொண்ட மூப்பனார் அவர்கள், தமிழ்மாநிலக் காங்கிரஸ் கட்சியின் தாழ்த்தப்பட்டோர் பிரிவின் மாநிலத் துணைத் தலைவியாக நியமனம் செய்தார். இன்றளவும் காங்கிரஸ் கட்சியின் விசுவாசியாக, தந்தை சென்ற வெற்றிப் பயணத்தை நோக்கித் தன் வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருகின்றார்.


தந்தை கக்கன் அவர்களுக்குப் பல நேரங்களில் பாசத்தைக் காட்டி, அரவணைத்துச் சென்றுள்ளார். தான் பெற்றெடுத்த குழந்தைகளுக்கிடையில் மகள் கஸ்தூரிபாய் அவர்களை அதிகமாக நேசித்ததுண்டு. அடிக்கடி மகளை வரவழைத்து அன்பாகப் பேசும் வழக்கத்தை மேற்கொண்டார். தன் தந்தையைத் தாங்கிக் கொள்ளும் விழுதாக வாழ்ந்துள்ளார். இன்றளவும் தந்தைமீது சிறிதளவும் பாசம் குறையாத மகளாகவே வாழ்ந்து வருகின்றார். தந்தையின் புகழை வளர்க்கும் விதத்தில் கிடைக்கும் நேரங்களில் மக்களைச் சந்தித்து, தந்தையின் பெருமைகளைச் சொல்லி மனம் ஆறுதல் அடைந்து வருகின்றார். தந்தையின் பெயரில் எங்கு விழா நடந்தாலும் அவ்விழாவில் கலந்து கொண்டு பெருமை சேர்த்து வருகின்றார்.

ஏனைய உறவினர்களை, சித்தப்பா குடும்பத்தாரும், தன்னுடன் பிறந்த சகோதரர்களோடும் அன்பாகப் பேசி ஒற்றுமைக்கு இலக்கணமாகத் திகழ்ந்து வருகின்றார். தற்சமயம் சென்னைக் கலைஞர் கருணாநிதி நகரில் கணவரோடு மனநிறைவான வாழ்வினை நடத்திக் கொண்டு வருகின்றார்.

## காசி விஸ்வநாதன்– பூமாலை

கக்கன்– சொர்ணம் பார்வதி தம்பதியினருக்கு நான்காவது மகனாக 12.12.1950இல் பிறந்தவர்தான் காசிவிஸ்வநாதன். சென்னையிலுள்ள லேடி வெலிங்கடன் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் பயின்றார். இளங்கலைப் பொருளாதாரம் சென்னை விவேகானந்தா கல்லூரியிலும் முதுகலைப் பொருளாதாரம் சென்னை மாநிலக் கல்லூரியிலும் பயின்றார். கணக்குத் தணிக்கை அலுவலகத்தில் தணிக்கையாளராக தனது அரசுப் பணியைத் தொடங்கினார். பழனி வட்டம் பாலசமுத்திரம் என்ற ஊரைச் சேர்ந்த பூமாலை என்ற பட்டதாரியை மணந்து கொண்டார். இத்தம்பதியினருக்குத் தேவி என்ற ஒரு பெண் மகள் உள்ளார்.

காசிவிஸ்வநாதன் - பூமாலை



கக்கனின் நான்காவது மகன் காசிவிஸ்வநாதன்-பூமாலை

தனது கல்வித் தகுதிக்கேற்ப அரசுப் பணியைத் தேர்ந்தெடுக்க வேண்டித் தமிழ்நாடு தேர்வாணையக் குழு நடத்தும் குரூப்–1 தேர்வில் வெற்றி பெற்றுக் காவல்துறை அதிகாரியானார். முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் கனிவான பார்வை இவருக்குக் கிடைத்ததாகக் கூறுகின்றனர். தமிழ் நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றிய இவர் புதுக்கோட்டை மாவட்டம் காவல்துறை கண்காணிப்பாளராக இருக்கும்போது 7.1.1994 அன்று அவரது சொந்தக் கிராமமான தும்பைப்பட்டியில் மாரடைப்பால் காலமானார். அவரது வயது 49.

## டாக்டர் சத்தியநாதன்–மகேசுவரி

மதுரை மேலூரில் 21.7.1961இல் கக்கனின் ஐந்தாவது மகனாகப் பிறந்தார். சென்னையிலுள்ள தனியார் பள்ளியில் தொடக்கக் கல்வியும், சென்னை விவேகானந்தா கல்லூரியில் புகுமுக வகுப்பும் பயின்றார். புகுமுக வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற்றமையால் மருத்துவப் பட்டப் படிப்பிற்காகச் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்றார். கன்னியாகுமாரி மாவட்டம் விளங்கோடு தாலுக்கா, இடவார் என்ற ஊரில் பிறந்து வளர்ந்த வேனுவேல் என்கிற M.Y. வேலு அவர்களின் மகளான மகேசுவரி என்பவரை மணந்து கொண்டார். இவர்களுக்கு ஆனந்து என்ற ஆண்மகனும் ஷெல்மா என்ற பெண் மகளும் பிறந்துள்ளனர். நல்ல பண்பாளரான இவர் தற்போது தமிழக அரசின் உள்ளாட்சித் துறையின் கீழ் இயங்கும் நகராட்சி மருத்துவராகப் பணியாற்றி வருகிறார்.

## நடராச மூர்த்தி

30.1.1953இல் பிறந்த இவர்தான் கக்கனின் கடைசி மகன். மிகவும் செல்லமாக வளர்ந்த இவர் அறிவுக் கூர்மையும், பண்போடு பழகும் தன்மையும் கொண்டவர். சென்னையில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் பள்ளிக் கல்வியும், விவேகானந்தா கல்லூரியில் புகுமுக வகுப்பும் பயின்றார். புகுமுக வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்றமையால் மருத்துவக் கல்லூரியில் இடம்கிடைத்தது. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். உடல் நலம் பாதிக்கப்பட்டதால் படிப்பைப் பாதியிலே நிறுத்திவிட்டார். அவரது கல்வித் தகுதிக்கு ஏற்றவாறு சென்னை துறைமுகத்தில் திரு. அ. பால்ராசு ஐ.ஏ.எஸ். அவர்களின் உதவியால் பணியில் சேர்ந்தார். ஆனால் உடல் நலக்குறைவால் அதிலும் தொடர முடியவில்லை. தொடர்ந்து சிகிச்சை அளிக்கும் பொருட்டு அரசு மனநல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவரது நல்ல குணநலன்களுக்கு இப்படியொரு வியாதி வந்திருக்கவே கூடாது என்பது பலரின் கருத்தாகும்.

# 6. விடுதலையின் வீரத்தழும்புகள்

இந்திய வரலாற்றில் ''விடுதலைப் போராட்டம்'' என்பது ஆங்கிலேயர்களின் அடிமை விலங்கினை வெட்டி வீழ்த்த சபதம் ஏற்ற இந்தியர்களின் ஒட்டுமொத்த போராட்டக் குணத்தை வெளிப்படுத்துவதாகும். மொழி, இனம், கலாச்சாரம், மாநிலம் எனப் பார்க்காமல் 'இந்தியன்' எனும் தேசிய இரத்தம் ஒவ்வொரு மனிதனின் உடலில் ஓடியது என்றே சொல்லாம். 'விடுதலை' என்ற வெற்றிக் கொடியை ஏந்திடக் கரங்கள் ஒன்றுபட்டன. குறிப்பாகத் தென் இந்தியாவில் தமிழகம் விடுதலைப் போராட்டத்தில் தனி இடம் பெற்றது என்று சொன்னால் மிகையாகாது!

**காந்தியடிகள் வழியில் கக்கன்**

கக்கன் அவர்கள் சொர்ணம் என்பவரைத் திருமணம் செய்து கொண்டு, சமுதாயப் பணியை மறந்து, இல்லற வாழ்வில் மூழ்கிக் கிடந்தாரா? என்று பார்த்தால், அதுதான் இல்லை. திருமணமான தம்பதிகள் தங்களது இன்பமான இரவுகளைக் கழித்திடவே தேனிலவு செல்வது வழக்கம். அந்நிலை கக்கன் வாழ்வில் இல்லை. சமுதாயத் தொண்டே 'என் வாழ்நாள் மூச்சு' என்று நினைத்த கக்கன், திருமணம் செய்த பின்னரும் கூட இரவுப்பள்ளி மேற்பார்வை, சேவா சங்கம் சம்பந்தமான பணிகள் என இரவுகளைக் கழித்தார்.

சொர்ணம் கணவரின் சமுதாயப் பணிக்குத் தடையாக இல்லாமல், இல்லற வாழ்க்கை நடத்தும் பொறுப்பினைத் தான் ஏற்றுக் கொண்டு, சமுதாயப் பணிப் பொறுப்பினைக் கணவரிடம் ஒப்படைத்தார். எனவேதான் கக்கன் அவர்களின் பார்வையில் குடும்ப வாழ்வில் இரவும், பகலும் சமமாகவே காணப்பட்டன. உழைப்பு ஒன்று மட்டுமே அவரின் தாகமாகக் காணப்பட்டது. மனைவியின் முழுமையான ஒத்துழைப்பு, இவரின் சமுதாயப்பணிகளுக்கு வெற்றிப் படியாக நிலைநிறுத்தப்பட்டது.

மதுரை மாவட்டத்தில் மேலூர்ப் பகுதிகளில் கக்கனின் சமுதாயப்பற்று தேசியப்பற்றுடன் இணைக்கப்பட்டது. ஆம்! இந்தியச் சுதந்திரப் போராட்டம் என்பது, மகாத்மா காந்தி அவர்களின்

தலைமையில் வெள்ளையனை வெளியேற்றிப் பூரண சுதந்திரக் காற்றினை இந்தியர்கள் சுவாசிக்க வேண்டும் எனும் எழுச்சியோடு நாடுமுழுவதும் நடைபெற்று வந்தது. மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகக் கொள்கையும், அறவழிப் போராட்டமும் இந்திய இளைஞர்களை மிகவும் கவர்ந்தன. கக்கன் காந்தி அவர்களின் அறவழிப் போராட்டத்தில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் உடையவராக இருந்தார்.[1]

## மகாத்மா காந்தியின் வருகை

மகாத்மா காந்தி அடிகள் தலைமையில் உப்புச் சத்தியாக்கிரகம் வரலாறு போற்றும் விதத்தில் நடைபெற்ற பின்பும், லண்டன் வட்டமேசை மாநாடுகளில் கலந்து கொண்ட பின்பும் தமிழகத்தில் காந்தியடிகள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.[2] 25.1.1934ஆம் ஆண்டு மகாத்மா காந்தி மதுரைக்கு வந்தார். மகாத்மா வழியில் தன் வாழ்க்கையை மேற்கொண்ட 'மதுரைக் காந்தி' என மக்களால் அழைக்கப்பட்ட நா.மா.ரா. சுப்பராமன் அவர்கள் இல்லத்தில் மகாத்மா காந்தியடிகள் தங்கினார். பொதுச் சேவையில் அதிகம் ஈடுபட்டுவரும் கக்கனின் சமுதாயச் சேவைகளை நன்கறிந்த சுப்பராமன் கக்கனின் சிந்தனை, ஓயாத உழைப்பு, அறிவுக் கூர்மை, தேசியப் பற்று ஆகிய பண்பான குணங்களுக்குச் சிறந்த பரிசு அளிக்கும் வண்ணம் மகாத்மா காந்தியை நேரில் சந்திக்கும் வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்தார். நேரில் அறிமுகமாகும் நல்ல சந்தர்ப்பம் கக்கனுக்குக் கிடைத்தது. கக்கனின் உயரமான உருவம், சிரித்த முகம், பண்பான பேச்சு காந்தியடிகளிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பை ஏற்படுத்தின. 27.1.1934 அன்று காந்தியடிகள் மேலூரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.[3]

காந்தியடிகளுடன் கக்கன் உடன் சென்றார். இந்த நேரடி அனுபவம், காந்தியடிகளின் கோட்பாடுகளையும், சர்வோதயக் கோட்பாடுகளையும் தெரிந்து கொள்ள; புரிந்து கொள்ள நல்ல வாய்ப்பாக அமைந்ததோடு அல்லாமல் அவ்வழியில் கக்கன் சென்றிடத் தூண்டியன என்றே சொல்லலாம்.

## காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர்

காந்தியடிகளின் மேலூர் சுற்றுப்பயணம் கக்கனின் தேசியப் பற்றினை அதிகமாகத் தூண்டிற்று என்றே சொல்லலாம். சுப்பராமன் அவர்களின் காந்திய வழியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்

கொண்ட கக்கனுக்குக் காந்தியடிகள் மீது தனிப்பற்றும், அவர் வழியைப் பின்பற்றும் தீவிரமான தொண்டராக மாறவும் முடிவு எடுத்தார். தன்னை நல்வழிப் படுத்திவரும் வைத்தியநாத ஐயர் பின்பற்றி வரும் காந்திய நடைமுறையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள முடிவு செய்தார். காந்தியடிகள் மதுரையை விட்டுச் செல்லும் வரையில் கக்கன், காந்தியடிகளோடு உடன் இருந்தார்.

காந்தியடிகளின் மதுரை வருகை என்பது கக்கனின் சேவா சங்கப் பணியில் தீவிரம் காட்ட வைத்தது. மாணவர்களின் நல்வாழ்வில் சமூகப் பணி ஆற்றிவரும் கக்கனின் எண்ணம் தேசியக் கொள்கையை நோக்கி விரிவடைந்தது. சுதந்திரப் போராட்டம் என்ற தேசியப் போராட்டத்தில் தன்னையும் ஈடுபடுத்திக் கொள்ளத் திட்டமிட்டார். காந்தியடிகளின் எளிமையான வாழ்வு, தேசியப்பற்று, விடுதலைப் போராட்ட அனல் நிறைந்த சிந்தனை, கக்கனின் மனதை மாற்றியது. காந்தியடிகளின் வழியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட சுப்பராமன் மற்றும் வைத்தியநாத ஐயர் இவர்களின் வழியில் சென்றிடத் தன்னையும் தேசியக் காங்கிரஸ் கட்சியில் இணைத்துக் கொள்ள முடிவு எடுத்தார்.

1939ஆம் ஆண்டு வைத்தியநாத ஐயர் அவர்களின் முன்னிலையில் கக்கன் காங்கிரஸ் கட்சி உறுப்பினரானார்.[4]

அன்பு வாசகர்களே! இங்கே நாம் ஓர் உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். தன் வாழ்நாள் முழுவதும் காங்கிரஸ் கட்சித் தொண்டராகவே கக்கன் வாழ்ந்தார் என்றால் அதற்கு முக்கியக் காரணம் தேசியப் பற்றுதான். தேசத்தின் விடுதலைக்காகக் காங்கிரஸ் கட்சி பாடுபடுகிறது என்ற இலட்சியக் கொள்கையைத் தன் உள்ளத்தின் ஆழத்தில் ஏற்றுக் கொண்ட பிறகுதான் கக்கன் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.

இதற்குக் காரணம் காந்தியடிகளின் தேசியப் பற்று, சுப்பராமன் அவர்களின் காந்தியக் கொள்கை, வைத்தியநாத ஐயர் அவர்களின் காந்திய வழிதாம் முக்கியக் காரணங்களாக அமைந்துள்ளன. கட்சியின் கொள்கைகளை அறிந்து கொண்டு கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்தவர்கள், கக்கனைப்போல் சாகும்வரையில் ஒரே கட்சியின் உறுப்பினர்களாக இருக்கலாம் என்ற உண்மையை அறிய முடிகின்றது.

## தந்தையின் எதிர்ப்பு

கக்கனின் செயல்பாடுகள் தந்தை பூசாரிக் கக்கனுக்குப் பிடிக்கவில்லை. மன மகிழ்ச்சியுமில்லை. இவரது தந்தை வருவாய்த்துறைக்குட்பட்டுப் பணியில் வேலை செய்து வந்த காரணத்தால், சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபடுவோர்களைக் காவல்துறையினர் எவ்வாறெல்லாம் துன்பப் படுத்துகின்றார்கள் என்பதனை அறிந்தவர். ஆங்கில அரசு சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு எதிராக எடுத்துவரும் மோசமான நடவடிக்கைகளை நினைத்து வருந்தியதோடு அல்லாமல் இப்படிப்பட்ட கொடுமைகள் மகனுக்கும் ஏற்படுமோ? எனவும் அஞ்சினார்.

கக்கனுக்கு அறிவுரை வழங்கியும் பூசாரிக் கக்கன் பேச்சு எடுபடவில்லை. தந்தை பாசத்தைவிட நாட்டின் விடுதலைப் பாசமே அவருக்கு முக்கியமாகக் காணப்பட்டது. இதனால் மகன் தந்தையின் உறவிலே விரிசல் ஏற்பட்டது. சில காலங்கள் இவர்கள் இருவரும் பேசாமலே இருந்தார்கள். காந்தியடிகளின் வருகையால் கக்கன் பலரை நேரில் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. சேவா சங்கத்தின் சேவை பல கிராமங்களுக்கு விரிவடைந்தது. பல பெரிய மனிதர்களின் நெருக்கமான உறவு ஏராளமான அளவில் கிடைத்தது. சாதியின் பெயரால் தனித்து வாழ்ந்த கக்கன், தேசிய நீரோட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதால் காங்கிரஸ் கட்சியால் பல பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைத்தது.

காங்கிரஸ் கட்சியில் உறுப்பினரானதும் பொதுமக்களின் பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு போராடத் துவங்கினார். தீண்டாமை, ஆலயங்களில் நுழைய மறுப்பு, பொதுக்கிணறுகளில் நீர் எடுக்க அனுமதி மறுப்பு ஆகிய சமுதாய இழிவுகளைக் களைய முற்பட்டார். பல விவாதங்களைப் பலர் முன்னிலையில் எடுத்துச் சொல்லி வாதாட, போராட முன்வந்தார். இவரது சமுதாயப் போராட்டக் குணங்களை நன்கறிந்த வைத்தியநாத ஐயர் தானே முன்னின்று உதவி செய்வதாகக் கூறினார். சம்பந்தப்பட்ட மக்களின் வாழ்வில் முன்னேற்றமான வாழ்விற்காகப் பாடுபட்டுவரும் வைத்தியநாத ஐயர் கக்கனுக்கு ஆதரவாகச் செயல்பட்டது மாபெரும் மாற்றத்தை உருவாக்கியது.

ஒரு மனிதனின் உழைப்பு என்பது பல காலக்கட்டங்களில் அவனை உயர்த்துவதோடு உழைப்பின் பயனாகப் பல பதவிகள் வந்தடையும் என்பது கக்கன் வாழ்வில் நடைபெற்றுள்ளது.

## காங்கிரஸ் கட்சியில் பொறுப்பு

காங்கிரஸ் கட்சியில் உறுப்பினரானதும் மக்களின் சேவையில் முழுக்கவனத்தைச் செலுத்தினார். குடும்பப் பாரம் ஒரு பக்கம் இருந்தாலும், தந்தையின் கடும் கோபத்திற்கு ஆளாகிய கவலை ஒரு பக்கம் இருந்தாலும், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் எண்ணத்தோடு பொதுத் தொண்டில் தனது கவனத்தை அதிகமாகச் செலுத்தினார்.

காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்பியதோடு மக்களின் நன்மதிப்பையும் பெற்றார். அதோடு கட்சித் தலைவர்கள் கக்கனின் செயல்பாட்டினை அதிகமாகவே பாராட்டினார்கள். சேவை செய்வது மனத்துக்கு நிம்மதியைக் கொடுத்தாலும் பதவி உயர்வுக்கு வழிவகுக்கிறது என்பதையும் கக்கன் அறிந்திருந்தார். கக்கனின் பொதுத் தொண்டு கட்சியின் வளர்ச்சிக்கு அதிகமாகப் பயன்பட்ட காரணத்தால் கட்சித் தலைவர்கள் கக்கனுக்கு நல்ல உயர் பொறுப்பு அளிக்க முன் வந்தார்கள். பதவியைத் தேடிச் செல்லும் தொண்டர்கள் வாழ்ந்த காலத்தில் பதவி தேடிவந்தது கக்கன் ஒருவருக்கு மட்டுமே என்று சொன்னால்கூடப் பெருமைதான்.

## மேலூர் வட்டச் செயலர்

12.7.1940அன்று கக்கன் அவர்களை மேலூர் வட்ட காங்கிரஸ் கட்சியின் செயலாளர் பதவிக்குக் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் நியமித்தார்கள்.[5] பதவியால் பெருமைப்பட்ட மனிதர்கள் வாழ்ந்த காலங்களில் பல பதவிகள் தன்னை நோக்கி வந்தாலும் பல்லாண்டுக் காலங்களாகத் தொடர்ந்து செய்து வந்த சமூகச் சேவையைக் கக்கன் விட்டபாடில்லை. பதவி உயர உயரப் பணிவு அவரை நோக்கி வந்தது. மக்களின் பிரச்சினைகளில் அதிகமான ஈடுபாட்டினை அவரால் ஏற்க முடிந்தது. தான் பொறுப்பேற்று நடத்திவந்த இரவுப் பள்ளியை விட்டுவிடாமல் தொடர்ந்து கண்காணித்து வந்தார்.

மேலூர் காங்கிரஸ் வட்டச் செயலாளராகப் பதவி ஏற்றுக் கொண்ட கக்கன் காந்தியடிகளின் தீவிரப் பற்றாளராக மாறினார். பள்ளி மாணவர்களிடையே தேசியப் பற்றினை வளர்த்தார். பொதுமக்களிடையே ''வந்தே மாதரம்'' என முழக்கமிட்டும்,

ஆங்காங்கே காங்கிரஸ் கொடி ஏற்றியும் மக்களிடையே சுதந்திர வேட்கையை உண்டுபண்ணினார். தேசியப் போராட்டத் தலைவர்களின் சிந்தனைகளை மக்கள் மத்தியில் தொய்வில்லாமல் எடுத்துரைத்தார். ''வந்தே மாதரம்'', ''மாநிலத் தாயை வணங்கிடுவோம்'' போன்ற வாசகங்கள் ஆங்கிலேயர்களின் கொள்கைக்கு எதிராக அமைந்தன. மக்களிடையே சுதேசிய விடுதலை உணர்வினை ஊட்டினார். மாணவர்கள் மத்தியிலும் இளைஞர்களின் மத்தியிலும் இவரது தீவிரமான தேசிய விடுதலைச் செயல்பாடுகள் ஆங்கிலேயர்களை இவருக்கு எதிராகச் செயல்பட வைத்தன.

## சிறைக் கம்பிக்குள்

கக்கனின் செயல்பாடுகள் ஆங்கில அதிகாரிகளை அதிகம் சிந்திக்க வைத்தன. ''வந்தே மாதரம்'' என்றாலே வனவாசம் என்று கருதப்பட்ட ஆங்கில அரசுக் காலத்தில் கக்கனின் தீவிரமான நாட்டுப்பற்றின் பணிகள் கைதுசெய்யும் அளவில் ஆங்கிலேயர்களைத் தூண்டின. இவரது செயல்பாடுகளைத் தீவிரமாகக் கண்காணித்து வந்த ஆங்கில அரசு 1940 செப்டம்பர் 14ஆம் நாள் வாஞ்சி நகரம் எனும் கிராமத்தில் கக்கனைக் கைது செய்து 15 நாள்கள் சிறையில் அடைத்தது.

தேசிய விடுதலைக்காகப் பாடுபட்ட பல காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்படாத காலக்கட்டத்தில், தேசிய விடுதலை சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களைப் பொது மக்களிடையே கொடுத்து உணர்வினைத் தூண்டிய குற்றத்திற்காகவும், வந்தே மாதரம் என்று முழங்கியமைக்காகவும் கக்கன் கைது செய்யப்பட்டார். 15 நாள்கள் ஆங்கிலேயர்களின் கொடுமையான தண்டனைக்கு ஆளாக்கப்பட்ட கக்கன் பெருந்துன்பங்களை அனுபவித்தார்.[6] இதுவே இவர் மனமுவந்து ஏற்றுக்கெண்ட முதல் சிறைவாசமாகும்.

எதிர்காலத்தில் காங்கிரஸ் இயக்கத்தின் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் தன் வாழ்நாளில் வாழ்ந்து காட்டிய கக்கனின் இந்த முதல் சிறைவாசம் எதிர்காலப் பதவிகளுக்கு வித்திட்டது என்றே சொல்லலாம்.

சிறையிலிருந்து விடுதலையானதும் கக்கன் தேசிய உணர்வுகளுக்கு ஓய்வு கொடுக்கவில்லை. அவரது செயல்பாட்டில்,

பேச்சில், மக்களை ஒன்றிணைப்பதில் மேலும் தீவிரத்தைக் காட்டினார். காந்திடிகளின் பல்வேறு போராட்டங்களுக்கு மேலூரில் களம் அமைத்துப் போராட முன் வந்தார். கக்கனின் சிறைவாசம் என்பது உறங்கிக் கிடந்த சிங்கத்தைச் சீறியெழச் செய்வது போல் அமைந்தது. ஆங்கில அரசின் செயல்பாட்டினைக் கடுமையாக எதிர்த்ததோடு மேடைகளில் வீரமுழக்கமிட முற்பட்டார். கட்சித்தலைமை கொடுக்கும் இரகசிய ஆணைகளை நடைமுறைப் படுத்துவதும், மக்களை ஆங்காங்கே ஒன்றுதிரட்டி அவர்களைச் சிந்திக்க வைப்பதும் இவரது அயராத செயல்பாடுகளாகக் காணப்பட்டன. மேலூர் வட்டாரத்தில் இவரது தீவிரச் செயல்பாடுகள் ஏராளமான இளைஞர்களைக் காங்கிரஸ் கட்சியில் இணைத்திடத் தூண்டுகோலாக அமைந்தன. இதனால் பல இளைஞர்கள் தேசியக் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்கள்.

## தனிநபர் சத்தியாக்கிரகம்

காந்தியடிகள் 1920–1922ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரையும் இயக்கிவிட்டார். இந்த இயக்கம் இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் தீவிரமாகப் பரவியது. உறங்கிக் கொண்டிருந்த இந்தியர்களைத் தட்டி எழுப்பியது என்றே சொல்லலாம். ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒத்துழையாமைச் செயலில் ஈடுபட்டதின் விளைவு ஆங்கிலேயர்களின் ஆட்சிமுறை, செயல் திட்டங்கள் எல்லாம் நின்றன. அதனை அடுத்து அடுக்கடுக்காகப் போராட்டங்களைக் காந்தியடிகள் கொண்டு வந்தார். இவரது அனைத்துப் போராட்டத் திட்டங்களுக்கும் தலைவர்கள் மாபெரும் ஈடுபாட்டுடன் செயல் வடிவம் கொடுத்துப் போராட முன் வந்தனர்.

1930–32ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்ட மறுப்பு இயக்கம், உப்புச் சத்தியாக்கிரகத்தில் காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து 78 ஆசிரமவாதிகளை உடன் அழைத்துக் கொண்டு கால்நடையாகத் தண்டியாத்திரை மேற்கொண்டார். 1940இல் நடைபெற்ற தனிநபர் சத்தியாக்கிரகத்தில், சத்தியாக்கிரக பெற்றவர்கள் காந்தியடிகளிடம் அனுமதி பெற்றுச் சத்தியாக்கிரகத்தில ஈடுபட்டார்கள்.

1940ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ஆம் தேதியை விடுதலை நாளாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று காங்கிரஸ் செயற்குழு முடிவு செய்தது.[7] தனிநபர் சத்தியாக்கிரகத்தின் முதல் சத்தியாக்கிரகியாக, காந்தியடிகளின் ஆன்மீக வாரிசு என்று போற்றப்படுபவரும், விடுதலை பெற்ற பிறகு அரசியல் அதிகாரத்தை நாடிச் செல்லாமல் நாடெங்கிலும் பாதயாத்திரை செய்து அதிகாரமற்ற அன்பு வழியில் 43 இலட்சம் ஏக்கர் நிலத்தைப் பூமிதானமாகப் பெற்றவருமான வினோபாபாவாவே அவர்கள் கலந்துகொண்டு கைதானார்கள்.[8]

இரண்டாவது சத்தியாக்கிரகியாகக் காந்தியடிகளின் வாரிசு என்று போற்றப்படுபவரும், விடுதலை பெற்ற இந்தியாவின் தேசியக் கொடியை முதன் முதலில் ஏற்றி வைத்து முதல் பிரதம மந்திரியாகவும் பணியாற்றிய ஜவஹர்லால் நேரு அவர்கள் கலந்து கொண்டு கைதானார்கள். இவர்களைத் தொடர்ந்து மாநில வாரியாகப் பலர் தனிநபர்களாகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு கைதானார்கள்.

## தனிநபர் போராட்ட விதிமுறைகள்

தனிநபர் சத்தியாக்கிரகத்திற்கெனத் தனிப்பட்ட மிகக் கடுமையான விதிமுறைகள் விதிக்கப்பட்டிருந்தன.

1. கைது செய்யப்பட்ட சத்தியாக்கிரகி, விடுதலையாகி வெளியில் வந்தவுடன் மீண்டும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட வேண்டும்.

2. பிரதேச காங்கிரஸ் அனுமதியின் பேரில் தான் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடவேண்டும்.

3. சத்தியாக்கிரகத்தில் பங்கேற்பவர்களின் பெயர்கள் அனுமதிக்கப்பட்டு, காந்தியடிகளுக்கு அனுப்பப்பட்டவுடன் அவர்கள் தங்கள் சொந்த வேலைகளையெலலாம் நிறுத்திக் கொண்டு

அ. இந்து முஸ்லீம் ஒற்றுமை

ஆ. தீண்டாமை ஒழிப்பு

இ. மது விலக்கு

ஈ. கதர் கிராமக் கைத்தொழில் முன்னேற்றம்

உ. கிராமச் சுகாதாரப்பணி

ஊ. ஆதாரக் கல்வி, முதியோர் கல்வி, பெண்கள் நலவாழ்வு, தாய்மொழிப் பணி, நாட்டுமொழிப் பணி, பொருளாதார, சமநீதி ஆகிய பணிகளில் தங்களை ஈடுபடுத்திகொள்ள வேண்டும். அத்துடன் சத்தியாக்கிரகிகள் தங்கள் செயல்பாடுகள் குறித்துத் நாள்குறிப்பு எழுதிவர வேண்டும்.[9]

மேற்கண்ட விதிமுறைகளை மிகவும் கவனமாகவும், ஆழமாகவும் சிந்தித்துக் கக்கன் பெற்றுக் கொண்டதால் தனிநபர் சத்தியாக் கிரகத்தில் பங்கேற்கும் பெருமையான பங்கேற்பு இவருக்குக் கிடைத்தது.

தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்க இந்தியா முழுவதும் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் விண்ணப்பம் செய்தனர். விண்ணப்பித்தவர்கள் அனைவருக்கும் போராட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கொடுக்கவில்லை. காரணம் காந்தியடிகளால் மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை யாரெல்லாம் ஏற்றுக் கொண்டார்களோ அவர்கள் மட்டுமே போராட்டக் களத்திற்கு அழைக்கப்பட்டார்கள். குறிப்பாக, தேசியக் காங்கிரஸ் இயக்கத்தில் முழுமையான ஈடுபாடு கொணடவர்கள், தன்னலம் கருதாத உண்மைத் தொண்டர்களுக்கு மட்டுமே இப்படிப்பட்ட வாய்ப்பு அளிக்கப்பட்டது. அது மட்டுமன்றி, காந்தியடிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அவரால் ஆய்வு செய்யப்பட்டு, கக்கன் மட்டுமே போராளியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.[10]

அந்த வரிசையில் பார்த்தால் வடக்கே வினோபாபாவேயும் தெற்கே கக்கன் மட்டுமேயும் காந்தியடிகளால் நேரடிப் பார்வையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழகத்திலிருந்து நூற்றுக்கணக்கில் பெயர்ப் பட்டியல் காந்தியடிகளுக்கு அனுப்பப்பட்டும், கக்கனை மட்டுமே காந்தியடிகள் தேர்ந்தெடுத்தார். மதுரைக்குப் பயணம் ஏற்றுக் கொண்ட காந்தியடிகள் மேலூர்ப் பகுதிகளைப் பார்வையிட்டபோது, கக்கன் உடன் சென்ற போது, கக்கன் மீது மக்கள் செலுத்திய பாசத்தை நேரில் கண்டு வியந்து போன காந்தியடிகள், கக்கனுக்கு அளித்த பெருமையான வாய்ப்பு பிற்காலத்தில் கக்கனின் அரசியல் முன்னேற்றத்திற்கு வெற்றிப் படிகளை அமைத்துக் கொடுத்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

## இரண்டாம் உலகப்போர்

தனிநபர் சத்தியாக்கிரகம் 1940ஆம் ஆண்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலக்கட்டத்தில்தான் உலக அளவில் மாபெரும் அழிவுகளை உருவாக்கிய இரண்டாம் உலகப் போர் (1939 முதல் 1945வரை) நடைபெற்று வந்தது.[11] வியாபார ரீதியில் இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டைக் கைப்பற்றிச் சுதந்திரம் கொடுக்க மறுத்து, இந்திய நாட்டினை அடிமை நாடாக வழிநடத்திவரும் இங்கிலாந்து, இரண்டாம் உலகப் போரில் தீவிரமாகப் போரிட முன் வந்தது. ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு எதிராக இங்கிலாந்து போரிட முன் வந்தது. தங்களது பலத்தை அதிகரித்துக் கொள்ளத் திட்டமிட்ட இங்கிலாந்து இந்தியப் படைகளையும், இந்திய நாட்டுப் பொருளாதாரத்தையும், இந்தியப் பகுதிகளையும் பயன்படுத்தியது.

இங்கிலாந்தின் இப்படிப்பட்ட அடாவடித்தனமான செயல்களை இந்தியத் தேசியச் சுதந்திரப் போராட்டத்தை வழிநடத்தி வரும் தேசியத் தலைவர்கள் கடுமையாகக் கண்டித்ததோடு அவ்வப்பொழுது எதிரான கண்டனத்தையும் தெரிவித்து வந்தனர். இந்திய நாட்டின் விடுதலைப் போர் வீரர் சுபாஷ் சந்திரபோஸ், இந்தப் போர் நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு இங்கிலாந்தின் செயல்களுக்கு எதிராகச் செயல்பட்டு வரும் எதிரணியினரோடு சேர்ந்துகொண்டு ஆங்கிலேயர்களை நாட்டைவிட்டு விரட்டிடவும் திட்டமிட்டுச் செயல்பட்டு வந்தார்.[12]

ஆங்கிலேயர்களை நேருக்கு நேர் எதிர்த்து நின்று சுதந்திரம் பெற்றிட வேண்டும் என்ற மன நிலையில் காந்தியடிகளின் செயல்கள் இருந்தன. எதிரியின் சூழ்நிலையை நமக்கு ஆதாயமாகப் பயன்படுத்திக் கொண்டு பழி வாங்கிடக் காந்தியடிகளுக்கு மனமில்லை. அதே நேரத்தில் இந்தியர்களின் ஒட்டுமொத்த சக்திகளை ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒன்று திரட்டிப் 'பூரண சுதந்திரம் பெறமுடியும்' என்ற திடமான எண்ணத்தில் காந்தியடிகள் இருந்தார். இப்பேற்பட்ட சூழ்நிலையில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான தீவிரமான செயல்திட்டங்களை அவ்வப்பொழுது முன்கூட்டியே திட்டமிட்டு அவற்றைப் போராட்டத் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தினார். காந்தியடிகளின் அதிரடியான செயல்

திட்டங்களை வெறுத்ததோடு அல்லாமல் எதிர்த்துப் போராடவும் ஆங்கிலேயர்கள் முன்வந்தனர்.

'இந்தியாவின் முழு விடுதலை' மட்டுமே தங்களுக்கு வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துப் போராடி வரும் காங்கிரஸ் வேண்டுகோளை ஆங்கில அரசு ஏற்கவில்லை. ஆங்கில அரசின் முடிவினை நன்குணர்ந்த காந்தியடிகளும் ஆங்கிலேயர்களின் செயல்களை வன்மையாகக் கண்டித்து, இனி உணர்ச்சிப் பூர்வமான போராட்டத்தை ஆங்கில அரசுக்கு எதிராக நடத்த வேண்டும் என்ற தீவிரமான முடிவுக்குத் தேசியத் தலைவர்கள் முன் வந்தனர். மாநிலம், மாநிலமாகப் போராட்டகளத்தில் குதித்த இந்தியப் போராளிகள் இனிமேல் ஒவ்வொரு தனிமனிதனும் போராட்டத்தில் குதிக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கத்தோடுதான்'' தனிமனித சத்தியாக்கிரகப் போராட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

**கக்கனின் தனிமனிதப் போராட்டம்**

தேசிய நீரோட்டத்தில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட கக்கன், காந்தியடிகளின் தீவிரமான தொண்டர் என்பதோடு நாட்டின் விடுதலைக்காகப் போர்க்குணம் கொண்டவராகத் தன்னை முழுவதும் மாற்றிக் கொண்டார். இரண்டாம் உலகப்போரில் இங்கிலாந்தின் அடாவடித்தனமான போக்கினை, காங்கிரஸ் தலைவர்கள் மூலமாக அறிந்து கொண்ட கக்கன் தனிநபர் சத்தியாக்கிரக வழியில் போராடவும் துணிந்தார். தனது தலைமையில் போர் எதிர்ப்பைத் தெரிவித்தார். மேலூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் அரசின் போர்க் கொள்கைகளை மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்து வந்தார்.

துண்டுப் பிரசுரங்களை மக்கள் மத்தியிலே விநியோகித்தும், தேசியத் தலைவர்களை வரவழைத்து இரகசியமான கூட்டங்களை நடத்தி வந்ததையும், மாணவர்களுக்குத் தேசிய விடுதலைப் போராட்டச் சிந்தனைகளை எடுத்துச் சொல்லி வந்த கக்கனின் செயல்பாடுகளை ஆங்கில அரசின் காவல்துறை கண்காணிக்க முன் வந்தது. இதனை நன்குணர்ந்த கக்கனும் அவரது தலைமையில் போராட்டக் களம் கண்ட சகாக்களும், காவல்துறையினர் அறியாத வண்ணம் நகர்ப்புறத்திற்குப் வெளியே அமைந்துள்ள சுடுகாட்டிலும், அருகிலுள்ள காடுகளிலும் இரவு நேரங்களில் ஒன்றுகூடிக்

காவல்துறையினருக்கு எதிராகவும், ஆங்கில அரசுக்கு எதிராகவும் திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டதோடு பல்வேறு போராட்டங்களையும் வழிநடத்தி வந்தனர்.

1940ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் நாள் கக்கன் தன்னுடைய சகாக்களோடு போர் எதிர்ப்புத் துண்டுப் பிரசுரங்களை மேலூரிலுள்ள மாணவர் விடுதியில் கொடுத்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டு மேலூர் சிறையில் 15 நாள்கள் அடைக்கப்பட்டார்.[13] தீவிரமான விசாரணை மேற்கொண்டபின் மத்திய சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். தேசத்துரோகச் செயலில் கக்கன் ஈடுபட்டதாக ஆங்கில அரசு இவரைக் குற்றவாளியாக்கியது.

**கக்கன் விடுதலை**

சிறைச்சாலையில் கக்கனை வழிநடத்திய விதம் மிகவும் கொடுமையாகவே இருந்தது. ஆங்கிலேயர்களின் பார்வையில் கக்கன் தேசத் துரோகியாகவே காட்சி அளித்தார். இந்திய நாட்டின் விடுதலைக்குக் குரல் கொடுக்கும் போராளியாகத் 'தேசபக்தன் கக்கன்' எனப் பாராட்டப்படும் கக்கன் ஆங்கிலக் காவல் துறைக்குச் சவாலானவராகவே காட்சி அளித்தார். சிறைச்சாலையில் இருந்து கொண்டே தன்னைக் காணவருபவர்களிடம் போராட்டக் குணத்தை வளர்த்து வந்தார். கக்கன் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்திற்கு ஆங்கில காவல்துறை முன்வரவில்லை. இப்படி பல மாதங்கள் சிறைச்சாலைக் கம்பிகளை முத்தமிட்டார் கக்கன். காங்கிரஸ்கட்சி போராட்டத்தை விலக்கிக் கொள்வதற்கு முன்பே 1941ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அனைத்துக் கைதிகளும் கக்கனும் விடுதலை செய்யப்பட்டனர். இதன் விளைவாகத் 'தனிநபர் சத்தியாக்கிரகம்' செயல்பாட்டில் வேகம் குறைந்தது. தேசியத் தலைவர்களின் ஆலோசனையின்படி இந்தியத் தேசியக் காங்கிரசு இயக்கம் 1942ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனிநபர் சத்தியாக்கிரக இயக்கத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டது.[14]

தனிநபர் சத்தியாக்கிரக இயக்கம் திரும்பப் பெற்றுக் கொண்டபின்பும் போராட்டம் மங்கிவிடவில்லை. தேசியத் தலைவர்கள் அவ்வப்பொழுது ஒன்று கூடிப் பொதுக்குழுக் கூட்டங்கள் கூட்டப்பட்டுப் போராட்ட யுத்திகளைக் கையாண்டு வந்தனர். காங்கிரசு உறுப்பினர்கள் பாதுகாப்புக் குழுக்களைச் செயற்படுத்திக் கொண்டு போரின் மூலம் ஏற்படும், ஏற்படவிருக்கும் தீய விளைவுகளைப் பற்றி மக்கள் மத்தியிலே தீவிரமான பிரச்சாரங்களில் ஈடுபட்டு வந்தனர்.

## கக்கனுக்குப் பதவி உயர்வு

தனிநபர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கைதாகி விடுதலையான கக்கனின் தேசப்பற்று, காந்தியடிகள் மீது அவர் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கை தேசியக் காங்கிரஸ் கட்சித் தலைவர்களை அதிகம் கவர்ந்தன. மதுரை மாவட்ட முழுவதுமுள்ள காங்கிரஸ் போராட்டக் குணம் படைத்தவர்கள் அனைவரும் கக்கனைப் பாராட்டினர். சிறைச்சாலைக்குச் சென்று வந்தாலே பதவி உயர்வு கொடுத்துவரும் காங்கிரஸ் கட்சியானது கக்கனைப் பாராட்டியதோடு நில்லாமல் அவரது தேசப்பற்று, கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருவதற்கும் பதவி உயர்வு கொடுக்க முன்வந்தது. மேலூர் வட்டாரப் பொறுப்பிலிருந்து மதுரை மாவட்டப் பொருளாளர் என்ற பொறுப்பு வழங்கப்பட்டது.



பெருந்தலைவர் காமராஜரோடு கக்கன்

இந்திய நாட்டின் தேசப்பிதா, இந்தியச் சுதந்திரப் போராட்டத் தியாகி, காங்கிரஸ் பேரியக்கத்தின் வழிகாட்டி மகாத்மா காந்தியடிகளைத் தலைவராக ஏற்றுக் கொண்ட கக்கனுக்கு அக்காலத்தில் இந்திய அளவில் புகழ்பெற்ற தலைவர்கள் மனமுவந்து கக்கனின் போராட்டக் குணத்தை, தேசப்பற்றினை, தேசிய

விடுதலைக்கு அவர் செய்த தியாகத்தைப் பாராட்டிப் பதவி உயர்வுகள் கொடுக்க முன்வந்ததைப் பாராட்டியாக வேண்டும். எனவே காங்கிரஸ் கட்சியின் அக்காலத் தலைவர்கள் கக்கன் போன்றோரின் சுதந்திரப் போராட்டக் குணங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டனர்.

கக்கன் மாவட்டப் பொருளாளராகப் பொறுப்பேற்றவுடன் அவரது போராட்டம் மேலும் திட்டமிடப்பட்டது. அவர் மீது மேலும் பொறுப்பு எனும் பாரம் சுமத்தப்பட்டது.

## இறுதிக் கட்ட விடுதலைப் போராட்டமும் கக்கனும்

இரண்டாவது உலகப்போர் உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் அமைந்தது. தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் தொடர்ந்து வெற்றிகளைக் குவித்த ஜப்பான் இந்தியாவின் மீது தாக்குதலை நடத்தும் அபாயச் சங்கும் ஒலித்தது. இப்படிப்பட்ட அச்சம் இங்கிலாந்து நாட்டுப் போர்ப்படைகளைச் சிந்திக்க வைத்ததோடு ஆங்கில அரசுக்குச் சவாலாகவே காணப்பட்டது. 1942ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜப்பானிய விமானங்கள் கொழும்பு, விசாகப்பட்டினம் போன்ற இடங்களில் குண்டுகளை வீசி மக்களிடையே பீதியை உருவாக்கியிருந்தன. இதன் விளைவு ஆங்கில அரசை விழிப்படையச் செய்தது இதிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றும் வகையில் மாற்றுத் திட்டங்களைச் செயல்படுத்த ஆங்கில அரசு முன்வந்தது.[15]

ஆங்கில அரசுக்கு இந்தியாவின் ஆதரவு இருந்தால் மட்டுமே போர் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த முடியும் என்ற எண்ணம் தோன்றியது. எனவே ஆங்கில அரசின் உயர் அதிகாரிகள் இந்தியத் தலைவர்களோடு பேசிச் சுமுகமான சூழ்நிலைகளைத் தங்களுக்குச் சாதகமாக மாற்ற முயன்றனர். இரண்டாவது உலகப் போரின் முடிவு இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திற்குச் சாதகமாகவே அமைந்தது எனலாம். இங்கிலாந்தின் நிலை இந்தியாவின் ஆதரவு தேவை எனும் எண்ணத்தை மேலோங்கச் செய்தது. ஈவு இரக்கமற்ற குணத்தையும், நடவடிக்கையையும் மேற்கொண்ட ஆங்கில அரசின் நடவடிக்கைகள் இந்திய நாட்டுடன் நடத்தும் பேச்சுவார்த்தை சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டன.

## சர். ஸ்டாபோர்டு தூதுக்குழு வருகை

ஆங்கில அரசு இந்தியச் சுதந்திரப் போராட்டத் தேசியத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திட முடிவு செய்தது. அதன்

விளைவாகச் சர்.ஸ்டாபோர்டு அவர்கள் தலைமையில் ஒரு குழுவானது 25.3.1942இல் இந்தியாவிற்கு வருகை தந்தது. மகாத்மா காந்தியடிகள், மௌலான அபுல்கலாம் ஆசாத் போன்ற தலைவர்களை 27.3.1942இல் சந்தித்துப் பேசினர். இந்தியத் தலைவர்கள் ''பூரண சுதந்திம்'' எனும் கொள்கையை முன் வைத்துப் பேசினர். ஆங்கிலேயர்களுக்கு இந்தியர்கள் அடிமை எனும் சொல்லுக்கு முடிவு எடுக்கும் விதத்தில் தங்களது பேச்சினை முன் வைத்தனர்.

இந்தியத் தலைவர்களின் கோரிக்கைகளைச் சூழ்நிலைக்கேற்ப பிர்த்து கடைசியாக ''டொமினியன் அந்தஸ்து'' அளித்திட முன் வந்தனர்.16 இந்தியாவுக்குக் காலனி ஆதிக்கமாக அங்கீகாரம் வழங்கிட ஒப்புக் கொண்டனர். ''பூரண சுதந்திரம்'' என்பது இந்தியத் தேசியத் தலைவர்களின் எண்ணமாக இருந்தாலும், ஆங்கில அரசு ''டொமினியன் அந்தஸ்து'' வழங்கியது மாபெரும் ஏமாற்றத்தைத் தந்தது. அடிமைக்குள்ளே அடிமையா? என்ற கேள்வி எழுந்தது. ஏற்கெனவே இரும்புச் சங்கிலியால் இந்தியர்களின் கைகளில் அடிமை விலங்கினைப் பூட்டிய ஆங்கில அரசு ''டொமினியன்'' அந்தஸ்து எனும் பெயரில் தங்கச் சங்கிலியால் விலங்கிட முடிவு எடுத்துள்ளது கண்டு தேசியத் தலைவர்கள் கவலை தெரிவித்தனர். ஆங்கிலேயர்களின் கட்டுப்பாடற்ற 'முழுமையான விடுதலையை மட்டுமே' இந்தியர்கள் விரும்புகின்றனர், அடிமை விலங்கினை முறித்து விடுபடவே விரும்புகின்றனர். எந்தச் சூழ்நிலையிலும் பிரிட்டனின் ஆளுமை இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அது முழுமையான விடுதலையாக இருக்காது என்று காந்தியடிகள் கடுமையாக எச்சரித்தார். தேசியக் காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழுவும் காலனி ஆதிக்கத்தை ஏற்கவில்லை.

டொமினியன் தகுதியின்படி இந்தியாவின் மீது பிரிட்டனின் கட்டுப்பாடு முற்றிலும் நீங்கிவிடாமல் இருந்து கொண்டே இருக்கும். இரும்புச் சங்கிலியால் கட்டி வைப்பதற்குப் பதிலாகத் தங்கச் சங்கிலியால் கட்டிவைக்கச் சலுகை தருவது போன்றதுதான் இந்த டொமினியன் அந்தஸ்து. இரும்புச் சங்கிலியானது அதன் அறுவறுப்பான முரட்டுத் தனத்தால் அடிமை விலங்கினை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும். அந்த உறுத்தலும் உணர்வும் தங்கச் சங்கிலியின் பகட்டாலும், மினுமினுப்பாலும் மறந்துபோய் நிரந்தர அடிமைத்தனம் நினைவில் நிற்காமலே போய்விடும் என்று காந்தியடிகள் மக்களுக்கு விளக்கமளித்தார்.[17]

இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சி டொமினியன் அந்தஸ்து எனும் சலுகையை நிராகரித்ததும், கிரிப்ஸ் தூதுக் குழுவின் நோக்கம் தோல்வியுற்றது. சுதந்திரம் வேண்டி இறுதிக்கட்டப் போரைத் துவக்குவது எனவும் முடிவு செய்யப்பட்டது. இப்போராட்டமே இந்தியர்களின் விடுதலைப் போராட்ட வாழ்வில் வாழ்வா? சாவா? என்பதனை உறுதிசெய்தது எனலாம். இந்த இறுதிக் கட்டப் போராட்டத்தில் கக்கன் அவர்களின் பங்கும், சிறையில் பட்ட கொடூரமான வாழ்வும் இவரது வாழ்வில் மாபெரும் மாற்றத்தை உருவாக்கின எனலாம்.

## வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1942

தனிமனித சத்தியாக்கிரகப் போர் முடிவுக்கு வந்தாலும் அடுத்தக்கட்ட போராட்டத்திற்குத் முடிவெடுத்தனர். 6.7.1942 முதல் 14.7.1942 வரையில் மகாராட்டிர மாநிலத்திலுள்ள வார்தாவில் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கூடியது. இக்கூட்டத்தில் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன. இக்கூட்டத்தில் ஆங்கிலேயர்களையும் ஆங்கிலேயர் ஆட்சியையும் ஒட்டுமொத்தமாக வெளியேற்றிட வேண்டும் என்றும் அதற்கான இறுதிக்கட்ட போராட்டத்தை நடத்திடவும் திட்டமிட்டனர். அதே நேரத்தில் 1942 ஜுலை 18ஆம் தேதி மதுரையில் காங்கிரஸ் குழுவின் கூட்டமும் கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில் இந்து முஸ்லீம் மக்களுக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகளை நீக்கி அவர்களிடையே ஒற்றுமை ஏற்பட வழிவகை செய்யப்பட்டது. வைத்தியநாத ஐயர், நா.மா.ரா. சுப்பராமன், கக்கன் ஆகியோர் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு இந்து—முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்திப் பேசினர்.

அனைத்திந்தியக் காங்கிரஸ் குழுவின் கூட்டம் 7.8.1942ஆம் ஆண்டு பாம்பாயில் கூடியது. இக்கூட்டத்தில் மிகவும் தீவிரமான, நடவடிக்கைகள் எடுத்திட முடிவு செய்யப்பட்டது. 'வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானத்தை இக்கூட்டம் வெளியிட்டது. அப்படி ஆங்கிலேயர்கள் இந்திய மண்ணிலிருந்து வெளியேறாத நிலையில் முடிந்த வரையில் எல்லாவிதமான அஹிம்சை போராட்ட விதிமுறைகளைக் கையாண்டு வெற்றி கிட்டும் வரை போராடுவது என்றும் முடிவானது. இப்பேற்பட்ட போராட்டம் மகாத்மா காந்தியடிகள் தலைமையில் நடைபெற்றால் மட்டுமே வெற்றிபெற முடியும் என்றும் முடிவு எடுத்தனர். ''வெள்ளையனே வெளியேறு'' என்ற முழக்கம் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பரவியது. காந்தியடிகள்

தலைமையில் நடந்த அத்தனை போராட்டங்களும் வெற்றியில்தான் முடிந்தன. இப்படிப்பட்ட மிகவும் தீவிரமான போராட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசிய மகாத்மா காந்தியடிகள்,

**இந்தியாவை விடுதலை செய்வோம்.**
**இல்லாவிட்டால் இறுதிவரை போராடி**
**உயிர்நீப்போம்.**

என்று சூளுரைத்தார்.

''செய் அல்லது செத்துமடி'' என்ற முழக்கத்தைக் காந்தியடிகள் இப்போராட்டத்தினருக்கு வழங்கினார்.[19]

''வெள்ளையனே வெளியேறு'' எனும் தீவிரமான முழக்கம் ஆங்கிலேயர்களைத் திகைத்திடச் செய்தது. செய் அல்லது செத்துமடி என்ற முழக்கமும் இந்தியர்களின் போராட்டக் குணத்தை வெளிப்படுத்தியதாகவே அமைந்தது. இதனால் ஆங்கில அரசு அதிரடி நடவடிக்கை எடுத்து ''இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சி சட்டத்திற்குப் புறம்பானது'' என்று கூறித் தடைசெய்தது.

தேசியக் காங்கிரஸ் கட்சி தடைசெய்யப்பட்ட அறிக்கை வெளிவந்ததும் எல்லாக் காங்கிரஸ் தலைவர்களும் சிறை பிடிக்கப்பட்டனர். தேசியத் தலைவர்கள் கைது செய்யப்பட்ட செய்தி நாடெங்கிலும் பரவியது. அமைதிப் பூங்காவாகக் காட்சியளித்த இந்தியாவில் மாபெரும் பூகம்பம் ஏற்பட்டது. 'வெள்ளையனே வெளியேறு' எனும் வீர முழக்கம் நாடெங்கிலும் பரவியது. தொலைபேசி மற்றும் தந்தித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இரயில் தண்டவாளங்கள், பாலங்கள், கால்வாய்கள் தகர்க்கப்பட்டன. அரசாங்க ஊழியர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தார்கள். பல்வேறு இடங்களில் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன.[20]

காந்தியடிகளின் தீவிரமான அறிக்கைகள் உறங்கிக் கொண்டிருந்த இந்தியர்களைத் தட்டியெழுப்பின. காங்கிரஸ் கட்சியின் மாபெரும் தலைவர்களின் கைது தமிழகத்திலும் எதிரொலித்தது. குறிப்பாக மதுரை மாவட்டத்திலும் காமராசர், கக்கன் ஆகியோர் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தைத் தீவிரப்படுத்தி மக்களை வழிநடத்திச் சென்றனர். பல தலைவர்கள் தலைமறைவாகி இளைஞர்களைப் போராட்டக் களத்தில் ஈடுபடச் செய்தனர். காந்தியடிகளின் வழியில் தீவிரமான போராட்டத்தை மேலூர்ப் பகுதிகளில் கக்கன் வழி நடத்திவந்தார். மதுரை மேலூரைச் சார்ந்த

இராமசாமி, பழனிச்சாமி மற்றும் சத்திய மங்கலம் இராமச்சந்திரன் ஆகியோர் இவ்வியக்கத்தைத் தலைமை தாங்கி நடத்திவந்தனர். கக்கனின் வீர எழுச்சி உரையைக் கேட்ட பல இளைஞர்கள் தங்களுடைய பேராதரவை இவ்வியக்கத்திற்கு வழங்கினர். மேலூர் அரசாங்க விடுதிகளில் இரவில் இவ்வியக்கத்தின் செயல்பாடுகள் தொடர்பான கூட்டங்கள் நடைபெற்றன.

மேலூர் மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களில் கக்கனும் அவருடைய கூட்டாளிகளும் இவ்வியக்கத்தின் முக்கியத்துவம் பற்றியும் போராட்டத்தின் அவசியம் பற்றியும் எடுத்துரைத்து வந்தனர். 1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ஆம் தேதி காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார். பல தேசியத் தலைவர்கள் கைதானதை எதிர்த்துக் கக்கன் மற்றும் அவரது கூட்டாளிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இரவு நேரங்களில் போராட்டத் தலைவர்கள் ஒன்றுகூடி அடுத்தக்கட்ட போராட்டத் திட்டங்களைத் திட்டமிடுவதுண்டு. அவ்வாறு இரவு நேரக் கூட்டங்களை முடித்துக் கொண்டு அவரவர் விரும்பும் இடங்களுக்கு ஓய்வெடுக்கச் செல்வதுண்டு. கக்கன் அவர்களுக்கு மிட்டா மிராசுதாரர் வீடுகள் கிடையாது. இளமைக் கால முதல் தனக்குப் புகலிடமாக விளங்கிவரும் மேலூர் மாணவர் விடுதிக்கு அடிக்கடி வந்து ஓய்வெடுத்துப் போவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். கக்கன் அவர்களின் நடவடிக்கைகளை நன்கு கவனித்து வந்த காவல் துறையினர் இந்த விடுதிக்கு வருபவர்களைக் குறிப்பாகக் கக்கனின் வருகையை உன்னிப்பாகக் கவனித்து வந்தனர். பல நேரங்களில் கக்கன் மாறுவேடம் அணிந்துகொண்டு வந்து செல்வதை வழக்கமாகக் கொண்டார். பொதுவாகப் பெண்வேடமிட்டுச் செல்வது சிறந்தவழி என எண்ணினார்.[21]

இசுலாமியப் பெண் வடிவில் சென்று ஆங்கிலேயர் காவலில் இருந்த மணிகூண்டுப் பகுதியில் லால்பகதூர் சாஸ்திரி கொடியேற்றிக் காவல் துறையைத் திணறடித்த நிகழ்ச்சி இங்கு நினைவுக்கூர வேண்டியதாகும்.

கக்கனின் நடமாட்டத்தை உளவுத்துறை மூலமாகக் காவல்துறை கண்காணித்து வந்தது. விடுதிக்குள் அடிக்கடி பெண்வடிவில் சென்று வருவது கக்கனாகத்தான் இருக்கமுடியும்

என்ற முடிவுக்கு வந்த காவல்துறை இரவு நேரங்களில் விடுதியின் மொட்டை மாடியில் இருந்து கொண்டு கண்காணிக்க முன் வந்தது. ஒரு நாள் மொட்டை மாடியில் கக்கன் உறங்கிக் கொண்டிருக்கிறார் என்பதை உறுதி செய்து கொண்டு 1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ஆம் தேதி கைது செய்தது.[22]

பல நாள்கள் வட்டமிட்டுத் தேடியும் கிடைக்காத கக்கன் கைது செய்யப்பட்டதும் மறுநாள் மேலூர் காவல் நிலையத்தில் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டுத் துருவி துருவி அவரைத் பல விதங்களில் துன்புறுத்தி விசாரணை செய்தனர். போராட்டங்களில் கலந்து கொண்ட தலைவர்கள் யார்? யார்? அவர்கள் எங்கு மறைந்திருக்கிறார்கள், எங்கெல்லாம் கூடித் திட்டங்கள் தீட்டப்பட்டன, இரகசியக் கிடங்குகள் உள்ள இடங்கள் இப்படியாகப் பல கோணங்களில் விசாரித்தனர்.

தேசியப் போராட்டத் தலைவர்களை எந்த விதத்திலும் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது என்ற தீவிரமான எண்ணத்தை ஏற்றுக் கொண்ட கக்கன் கடைசி வரையில் காவல்துறை கேட்ட கேள்விகளுக்குத் தெரியாது என்றே பதில் சொன்னார். இதனால் கோபம் கொண்ட காவல்துறையினர் கக்கனுக்குக் கசை அடி கொடுத்தார்கள். 5 நாள்கள் தொடர்ந்து காவல் துறையால் அடைக்கப்பட்டுக் கொடுமையான தொல்லைகளுக்கு மத்தியில் விசாரணை நடத்தினார்கள். அதில் என்ன கொடுமை என்றால், இந்த 5 நாள்களும் கக்கனின் மனைவியைக் காவல்துறைக்கு அழைத்து வந்து, அவரது கண் முன்னால் விசாரணை நடந்ததோடு அல்லாமல் அவரை அடித்துத் துன்புறுத்திய கொடுமையும் நடைபெற்றது.

கணவரைத் தன் கண்முன்னால் கொடுமைப் படுத்துவதைப் எந்தப் பெண்தான் பொறுத்துக் கொள்வாள். ஆனால் கக்கனின் மனைவி இதையெல்லாம் பார்த்து இரத்தக் கண்ணீர் வடித்ததோடு அல்லாமல் மனதைக் கல்லாக்கிக் கொண்டு தாங்கினார். இங்கேதான் கக்கன் குடும்பத்தினரின் தேசியத் தாகத்தை உணர முடிகிறது. சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வரிசையில் கக்கன் குடும்பத்தினரின் தியாக மனப்பான்மை இந்திய வரலாற்றால் எவராலும் மறைத்துவிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## மக்கள் விட்ட கண்ணீர்

காவல்துறையின் கசையடி தாங்க முடியாமல் கக்கன் உணர்விழந்தார். சுய நினைவு இழந்த கக்கன், பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். அதோடு அவருக்குச் சிகிச்சை அளிக்கவும் திட்டமிட்டனர். நினைவிழந்த கக்கனைக் குதிரை வண்டியில் அனுப்பவும் முடிவு செய்தனர். கக்கனின் உடல் அமைப்பு என்பது சாதாரண மனித உடலைக் காட்டிலும் மாறுபட்ட உடலமைப்பாகும். உயர்ந்த உருவம், பருமனான உடலைக் குதிரை வண்டியில் (ஜட்கா) ஏற்ற முடியவில்லை. வண்டியின் உள்ளே அவரது உடலும் மறுபக்கம் அவரது தொடைப் பகுதியும் கால் பகுதியும் கீழே தொங்க, உடல் முழுவதும் வண்டியில் உரச மேடும் பள்ளமுமான சாலையில் கொண்டு சென்றனர்.

காங்கிரஸ் கட்சியின் தியாகி, நாட்டிற்காகக் குரல் கொடுத்ததற்காக இப்படி கேவலமாக, கொடூரமான தாக்குதலுக்கிடையே காவல் துறையினரால் அழைத்துச் செல்லப்படும் காட்சி தெரு ஓரங்களில் பொது மக்கள் கண்ணீர் மல்க அழுத காட்சி அனைவரின் உள்ளத்தைத் தொட்டது. பல்வேறு கொடுமையான துன்பங்களை அனுபவித்த நேரத்திலும் தலைவர்களைக் காட்டிக் கொடுக்காமல் தேசியப் போராட்டத்திற்குத் துரோகம் செய்யாமல் கடைசிவரையில் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டார். பல கொடுமைகளுக்குப் பின்னர் உயிர் தப்பினார்.[24]

## ஆந்திர மாநிலச் சிறையில் கக்கன்

கொடுமையான கசையடிகள் உடலை வருத்திய போதிலும், ஆங்கிலக் காவல்துறையின் அடக்கு முறைகளுக்கு அளவில்லாத நிலையிலும் கக்கனை நீதிமன்றத்தில் நிற்க வைத்துக் குற்றவாளியாக்கினார்கள். தடைசெய்யப்பட்ட தேசியக் காங்கிரஸ் கட்சியின் தீவிரமான உறுப்பினர் என்ற பார்வையில், மதுரையைச் சுற்றிலும் அறுக்கப்பட்ட தந்திக் கம்பிகளுக்குக் கக்கன்தான் காரணம் என்ற குற்றச்சாட்டை அவர் மீது பதியவைத்தனர். அதோடு அஞ்சல் நிலையங்களைக் கொளுத்திய குற்றவாளி என்றும் அவர் மீது அடுக்கடுக்கான குற்றங்கள் சுமத்தப்பட்டன. நீதி கிடைக்காத ஆங்கில ஆட்சியில் கக்கனுக்கு மட்டும் நீதி கிடைக்குமா? மேற்படி

குற்றங்களைச் செய்தாயா? இல்லையா? என்று நீதிபதிகள் கேட்கவில்லை. 'வாய் திறந்தால் வனவாசம்' என்ற கொடுமை ஆங்கிலேயர் ஆட்சியில் காணப்பட்டதால் விசாரணையே இல்லாமல் குற்றவாளி எனத் தீர்ப்பளித்தார்கள். சிறையில் அடைக்கவும் உத்தரவிட்டனர்.

தமிழகச் சிறைச்சாலையில் அடைத்தால் கக்கன் உரிமை பெறுவான் என்ற எண்ணமோ தெரியவில்லை. அடுத்து, கக்கன் மிகவும் தீவிரமான இந்தியன் என்ற நிலையில் அவரைத் தனிமைப்படுத்தக் காவல்துறை எண்ணியது. எனவே கக்கனைத் தமிழகச் சிறைச் சாலையில் அடைக்காமல் ஆந்திர மாநிலம் பெல்லாரி மாவட்டத்திலுள்ள அலிப்புரம் கொண்டு செல்லப்பட்டு அலிப்புரம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அலிப்புரம் சிறைச்சாலையானது திறந்தவெளிச் சிறைச்சாலை. தடுப்புச் சுவர்களுக்குப் பதிலாக மின் கம்பிகள் எல்லைச் சுவராகக் காட்சி அளித்தன. தடுப்புச்சுவரையாவது கைதிகள் தாண்டித் தப்பிக்க வழியுண்டு. ஆனால் மின் கம்பிகள் தொட்டால் ஷாக் அடித்து உயிரையே முடித்துவிடும் அபாயமான தடுப்புச்சுவராக அமைக்கப்பட்டது. இதிலிருந்து நாம் அறிந்து கொள்வதாவது, கக்கன் ஆங்கிலேயர்களின் பார்வையால் மிகவும் முக்கியமான சுதந்திரப் போராளியாக நினைத்த காரணத்தால் தண்டனையும் கொடுமையாகக் காணப்பட்டது.

நேரத்தை வீணடிக்காமல் கக்கன் தனது படிப்பறிவை மேலும் வளர்த்துக் கொள்ள ஆந்திர மாநிலத்தில் சிறைவாசம் ஏதுவாக அமைந்தது. மிகக்குறுகிய காலத்தில் இந்தியைப் படிக்கத் தெரிந்து கொண்டார். சுலபமாகப் பேசும் அளவிற்குத் தனது புலமையை வளர்த்துக் கொண்டார். இந்தி படிக்கத் துவங்கியதும் திலகர் இந்தியில் எழுதியுள்ள கீதையைப் படித்தறிந்தார். அதோடு திருக்குறள் மீது தனிப்பட்ட ஆர்வம் கொண்டிருந்த கக்கன் சிறைச்சாலைக் காலத்தைத் திருக்குறளைப் படித்து அறிந்து கொள்ளும் அளவிற்குக் கற்று உணர்ந்தார்.

பொதுவாகத் தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் கைது செய்யப்பட்டால் அவர்களுக்கு முதல் வகுப்பு ஒதுக்கித் தரப்படும். ஆனால் கக்கனுக்கு முதல் வகுப்பு அளிக்காமல் 2வது வகுப்பு அந்தஸ்து மட்டுமே வழங்கப்பட்டது.

**கக்கன் அனுபவித்த சிறைச்சாலைக் கொடுமைகள்**

ஆங்கில அரசுக் காலத்தில் சாதாரணத் தவறுகள் செய்பவர்களுக்கே சிறைச்சாலையில் மிகவும் கொடுமையான தண்டனை வழங்கப்படுவது வழக்கம். கக்கன் அவர்கள் ஆங்கில அரசால் தடைசெய்யப்பட்ட காங்கிரஸ் கட்சியின் தீவிரமான உறுப்பினர். அவருக்குத் தண்டனையும் உணவுவகையும் பற்றிச் சொல்லவா வேண்டும். சிறைச் சாலையில் கேழ்வரகுக் கூழ் ஊற்றும் போது அதில் கல்லும் மண்ணும் வேண்டுமென்றே கலந்து கொடுப்பதும், சிறைக் கைதிகள் படுக்கும் இடத்தை மேடு பள்ளமாகத் திட்டமிட்டு உடைப்பதும், இரவு நேரத்தில் தொல்லைகள் கொடுக்கும் மூட்டைப் பூச்சிகளை எங்கெங்கோ இருந்து கொண்டு வந்து கைதிகளைத் தூங்கவிடாமல் செய்வதும் வெள்ளை வெறியர்களின் அன்றாடச் செயலாகக் காணப்பட்டது. சிறையில் கருப்பு அரிசியில் செய்யப்பட்ட உணவே கொடுக்கப்பட்டது.

அப்படிப்பட்ட மோசமான உணவுகூடக் கழிவறையில் பயன்படுத்தும் பாத்திரத்தில் வழங்குவது போன்ற மோசமான நிலைகள் இருந்த போதிலும், கக்கன் தனது சிறை வாழ்வை மற்றவர்களோடு கலந்து உறவாடி மகிழ்ச்சிக் குரியதாக்கிக் கொண்டார். இவருடன் நாடக நடிகர் விஸ்வநாததாஸ் போன்றோரும் அலிப்புரம் சிறையில் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

18 மாதங்கள் இக்கொடுமையான சிறைச் சாலையில் கக்கன் கொடிய துன்பங்களுக்கிடையே வாழ்ந்து வரலானார். தினமும் நாட்டின் நடப்புக்களையும், கட்சியின் செயல்பாடுகளையும் அறிந்தும் வந்தார். இறுதியாக 15.1.1944இல் விடுதலை செய்யப்பட்டார்.[26]

15.1.1944இல் விடுதலை பெற்ற கக்கனுக்கு 5 நாட்கள் பிறகு அதாவது 20.1.1944இல் உடல் நலம் சரியில்லாமல் வேதனை வாழ்க்கையை நடத்திய பொழுதும் தனது அரசியல் கட்சியின் செயல்பாடுகளை விட்டுவிடவில்லை. கட்சியின் அனைத்துத் தொண்டர்களையும் அழைத்து 18 மாதங்கள் நாட்டில் நடைபெற்ற அனைத்துப் போராட்டங்களைப் பற்றிக் கேட்டு அறிந்து கொண்டார். ஆங்கிலேயர்கள் கொடுமையான அடக்குமுறைக்கு எதிராக தீவிரமாகச் செயல்படவேண்டிப் பல்வேறு அதிரடித் திட்டங்களைத் தீட்டி எழுச்சியுடன் செயல்படத் தொண்டர்களைத் தூண்டியதோடு அவர்களுக்கு ஊக்கத்தையும் கொடுத்தார்.

சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யும் போது தண்டனை அனுபவித்த காலம் முடிந்து அவரை விடுதலை செய்யவில்லை. ஒருசில நிபந்தனையின் பேரில்தான் கக்கனை விடுதலை செய்தனர். அதாவது ஆங்கில அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்பதாகும். இந்த நிபந்தனையைக் கக்கன் ஏற்றுக்கொள்ளவே இல்லை. தொடர்ப் போராட்டங்கள் மூலமாகவே சுதந்திரம் பெற முடியும் என்ற அசைக்க முடியாத கொள்கையில் தேசியத் தலைவர்கள் செயல்பட்டார்கள். கக்கனும் அதே கொள்கையைக் கடைப்பிடித்த காரணத்தால் தொடர்ந்து போராட்டங்கள் நடத்திட முன்வந்தார்.

## தஞ்சாவூர் சிறைச்சாலை

நிபந்தனையின் பெயரில் ஆந்திரச் சிறைச்சாலையிலிருந்து விடுதலை அடைந்த கக்கனின் எண்ணங்கள் எரிமலை போல் வெடித்தன. ஆங்கிலேயர்களின் மனிதாபிமானமற்ற நிலை, சிறைச் சாலைக் கைதிகளை வழி நடத்திய விதம் கக்கனின் இதயத்தை மேலும் சூடாக்கின. அவரது செயல்பாடுகள் மேலும் தீவிரம் அடைந்தன. ஆங்கில அரசுக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டிப் போராட முன்வந்தார். இந்தச் சமயத்தில் தான் 1944ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் நாள் மீண்டும் கைது செய்யப்பட்டு மூன்று மாதம் தாஞ்சாவூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

## இந்தியா சுதந்திர நாடு

இரண்டாவது உலகப் போரில் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் கூட்டணி அமைத்துப் போரில் இறங்கின. இந்த நாடுகளுக்கு எதிராக இங்கிலாந்து போரில் ஈடுபடப் பிரான்சு உருசியாவின் ஆதரவையும் ஏற்றுப் போரில் ஈடுபட்டது. இதற்கிடையில் ஜப்பான், அமெரிக்க நாட்டிற்குச் சொந்தமான போர்க்கப்பல்களைக் குண்டுகள் வீசித் தகர்த்தது. இதனால் ஆத்திரம் அடைந்த அமெரிக்கா, இங்கிலாந்திற்கு ஆதரவு தெரிவித்த பின் போரின் முடிவில் முன்னேற்றம் காண முடிந்தது. முதன் முதலாக அமெரிக்கா போரில் ஈடுபட்டது. அமெரிக்காவின் அணுகுண்டு தாக்கத்தால் ஜப்பான் நிலைக்குலைந்து போனது. மாபெரும் பாதிப்புக்கு ஆளான ஜப்பான் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு சரண் அடைந்ததின் விளைவாக இரண்டாவது உலகப்போர் முடிவுக்கு வந்தது.

1945ஆம் ஆண்டு இரண்டாவது உலகப் போர் முடிவுக்கு வந்ததும் மாபெரும் திருப்பம் இந்தியச் சுதந்தரப் போராளிகளுக்கு ஏற்பட்டது. பிரிட்டனில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. லேபர் கட்சியின் ஆட்சி ஏற்பட்டது. பிரிட்டனின் புதிய ஆட்சிக்கும் இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே சுமூகமான உறவு ஏற்படலாயிற்று.

## இடைக்கால அரசும் சுதந்திரமும்

இரண்டாவது உலகப் போரின் முடிவாக உலக நாடுகளில் மாபெரும் மாற்றங்கள் ஏற்படலாயின. பல்லாண்டுகளாக அடிமை விலங்கினை முத்தமிட்ட இந்தியர்களுக்கும் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது. லேபர் கட்சியின் ஆட்சியானது ஆங்கிலேயர்களின் மனதை மாற்றியது. 'கத்தி இன்றி ரத்தமின்றி' சுதந்திரக் காற்றை இந்தியர்கள் சுவாசிக்கும் உரிமை கிடைக்கலாயிற்று. அமைச்சரவைத் தூதுக்குழுவின் பரிந்துரையின்படி 1946ஆம் ஆண்டு 2ஆம் நாள் ஜவஹர்லால் நேரு அவர்களின் தலைமையில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது. இந்தியாவிற்குப் பூரண சுதந்திரம் கொடுக்கும் மசோதா தயாரிக்கப்பட்டு 1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் தேதி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்தது.

இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்த மாபெரும் வரலாற்று நிகழ்வுகளை நாம் பின் நோக்கிப் பார்த்தால் சாதி, மதம், இனம், நிறம், மாநிலம் என்ற வேறுபாடுகளை மறந்து 'இந்தியர் இரத்தம்' ஒன்றே என்ற நிலையில் மாபெரும் தியாகிகள் இந்திய இரத்தத்தில் உருவானதுதான் 'சுதந்திரம்' எனும் பெரிய ஆலமரமான இந்தியா.

இப்படிப்பட்ட ஆலமரத்தின் நிழலில் 110 கோடி இந்தியர்கள் இன்று சுதந்திரப் பெருமூச்சு விட்டு நிழலில் இளைப்பாருகின்றார்கள். இப்படி தங்கள் உயிரையே அபயம் வைத்துக் கசை அடி வாங்கி இந்த மாபெரும் மரத்தை வளர்த்த பெருமை தமிழக வரலாற்றில், காங்கிரஸ் வரலாற்றில் கக்கனும் இடம் பெற்றிருப்பது இந்தியராகிய நமக்கெல்லாம் பெருமை. தமிழர்களாகிய நமக்கெல்லாம் பூரிப்பு. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவனுக்குப் பெருமையான வரலாறு.

குடும்பம், குழந்தை போன்ற உறவுகளைப் பிரிந்து இமயமலைச் சாரலில் துப்பாக்கிகளைக் கையில் ஏந்திக் குளிரிலும்

நாட்டைப் பாதுகாக்கும் இராணுவத் தளபதிகளைப்போல, ஆங்கிலேய அடக்குமுறைகளை, கசையடிக் கொடுமைகளை நேரில் சந்தித்துத் "துப்பாக்கித் தோட்டாக்கள் துணிவுள்ள இளைஞர்களின் இதயத்தைத் துளைக்காது'' எனும் அம்பேத்கர் கொள்கைவழியில் வாழ்ந்து காட்டிய கக்கன் ''சுதந்திரப் போராட்ட மாவீரன்'' என்ற பெருமைக்குச் சொந்தக்காரர் என்பது வரலாறு நமக்குத் தரும் சாட்சியாகும். சுதந்திரக்காற்று வீசும்வரை கக்கனின் வாசனை வீசட்டும்.

## அடிக்குறிப்புகள்

1. அரங்க சம்பத்குமார், நடையில் நின்றுயர் நாயகன் கக்கன், ப.16, மகேசுவரி பதிப்பகம், சென்னை, 2000.
2. தினமலர் விடுதலைப் பொன்விழா மலர், ப.2, 1997.
3. மேலது.
4. Who is who freedom Fighter Vol.I, p.352, Madras, 1972.
5. Madras Legislative Assembly Who is Who, p.77, Madras, 1962.
6. Who is Who Freedom Fighter, Vol.I, p.352, Madras, 1972.
7. ம.பொ.சிவஞானம் விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு, இரண்டாம் தொகுதி, பூங்கொடி பதிப்பகம், ப.393, 1993.
8. மேலது, ப.394.
9. அ. கணபதி, காந்திஜி வழிகண்ட கக்கன்ஜீ, ப.33, மல்லிகை பதிப்பகம், மதுரை, 1997.
10. மேலது.
11. ஜி. வெங்கடேசன், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, ஜெ.ஜெ. பதிப்பகம், ப.216, 1999.
12. ம.பொ. சிவஞானம், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, ப.337.
13. Police Administration Report, p.174, Madras, 1939-40.
14. ஜி. வெங்கடேசன், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, ப.220.
15. ம.பொ.சிவஞானம், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, ப.411.
16. மேலது, ப.426.

17. அப்துல் ரசாக், சத்தியப்பாதை (மகாத்மா காந்தியின் முழுவரலாறு), ப.61, செந்தில் பதிப்கம், திருச்செந்தூர், 1992.
18. Police Committee Statement on the Administration for Madras Police, p.312, 1939.
19. ம.பொ.சிவஞானம், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, ப.445.
20. ம.பொ.சிவஞானம், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, ப.450.
21. விஸ்வநாதன் கக்கன் அவர்களுடன் நேர்காணல், 2001.
22. District Calender of the Civil Disobiedience Movement Govt. press, Madras, 1943.
23. விஸ்வநாதன் கக்கன் அவர்களுடன் நேர்காணல், 2001.
24. அரங்க சம்பத்குமார், நடையில் நின்றுயர் நாயகன் கக்கன், ப.16, மகேசுவரி பதிப்பகம், சென்னை, 2000.
25. மாலை முரசு, ப.2, டிசம்பர், 24, 1981.
26. மாலை மலர், ப. 3, டிசம்பர் 24, 1981.
27. Who is who freedom Fighter Vol.I, p.412, Madras, 1972.
28. ம.பொ.சிவஞானம், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, ப.542.
29. ம.பொ.சிவஞானம், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, ப.574.
30. ஜி. வெங்கடேசன், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, ஜெ.ஜெ. பதிப்பகம், ப.295, 1999.

# 7. உழைப்பால் உயர் பதவிகள்

'கக்கன்' என்ற பெயரில் மூன்று 'க' எழுத்துக்கள் இடம் பெறுகின்றன. இது இயற்கையாகவே கிடைத்த பெயர்தானே தவிரத் திட்டமிட்டு வைத்த பெயர் அல்ல. பெற்றோர்கள் எப்பொழுதும் எதிர்கால வளர்ச்சியை நோக்கிப் பெயர் வைப்பதில்லை. அதே நேரத்தில் பெயர் சூட்டிய பிறகு பெயருக்குப் பெருமை சேர்த்து வாழ்ந்த தலைவர்கள் ஏராளம்.

**கா**ந்தி

**கா**மராஜ்

**க**க்கன்

எனும் பெயர்களில் தொடக்க எழுத்துக்கள் 'க' என்பன. இவை இயற்கையாகவே சூட்டப்பட்ட பெயர்கள் என்பதை ஆய்வு செய்து பார்க்க முடிகிறது.

கக்கன் அவர்களின் அகில இந்தியத் தலைவர் காந்தியடிகள் என்பது வரலாறு சொல்லும் உண்மை நிகழ்வாகும். காந்தியடிகள் நடத்திய அனைத்துப் போராட்டங்களையும் தலைமை ஏற்றுத் தமிழகத்தில் நடத்தியவர் கக்கன் என்பதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். காந்தியடிகளை அதிகம் நேசித்த கக்கன் காங்கிரஸ் கொள்கைகளையும் உயிர் மூச்சாக ஏற்றுக் கொண்டார். காங்கிரஸ் இயக்கத்தின் தேசிய விடுதலைப் போராட்டக்களத்தில் இறங்கி வரலாறு படைத்த காமராசர் அவர்களின் உண்மைத் தொண்டனாகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் கக்கன்.

நாட்டின் பூரண விடுதலையை மையப்படுத்திக் காந்தியடிகள் மாபெரும் புரட்சியை இந்திய மண்ணில் அரங்கேற்றம் செய்தார். ஆங்கிலேயர்களை இந்திய மண்ணிலிருந்து விரட்டி அடிக்கும் நாளைக் குறிவைத்துப் போராட்டத்தைக் கணக்கிட்டு நடத்தினார்.

**சமுதாயத் தொண்டு செய்ய அரசியல்**
**பணியின் உதவியை எடுத்துக் கொள்கிறேன்**

எனும் காந்தியடிகளின் போதனையை மனதில் தாங்கிக் கொண்ட கக்கன், புனித அரசியல் பயணத்தைப் பின்பற்றினார். மேலே குறிப்பிட்ட காந்தியடிகளின் கொள்கையைக் கக்கன் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்தார். சமுதாயத் தொண்டு வாயிலாக மக்களின் இடத்தைப் பிடித்து, அதையே அரசியல் வளர்ச்சிக்கு வித்தாக இம்மண்களில் விதைத்தவர் கக்கன்.

அரசியலில் பெறுகின்ற வெற்றி என்பது தொண்டு செய்ய மக்கள் வழங்கும் ஆயுதமே எனும் கொள்கையைத் தன் வாழ்நாள் கொள்கையாகக் கடைப்பிடித்த கக்கன், அரசியல் எனும் மைதானத்தில் சேவை எனும் பந்தினை உருட்டி, விளையாடிப் பதவி உயர்வுகள் எனும் கோல் அடித்தவர் கக்கன். கடின உழைப்பிற்கு, தன்னலம் கருதாமல் பொதுநலன் கருதி ஆற்றிய சேவைகளுக்கு என்றும் தோல்வி இல்லை என்பதற்கு அரசியல் வாழ்வில் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்தான் கக்கன்.

## தூதுக்குழு வருகை

'பூரண சுயராஜ்யம்' எனும் கொள்கையை முன்வைத்துக் காந்தியடிகள் சுதந்திரப் போராட்டத் தீயை நாடெங்கும் மூட்டினார். முழுவிடுதலைதான் எங்கள் மூச்சு என்ற சிந்தனையை மக்களிடையே பரப்பிவந்தார். ஆனால் ஆங்கில அரசோ இக்கோரிக்கையை ஏற்கவில்லை. அடம்பிடித்தது ஆங்கில அரசு. சுதந்திரம் பெற்றே தீருவது எனக் காந்தியடிகள் சபதம் மேற்கொண்டார். ஆங்கிலேயர்கள் பூட்டிய அடிமை விலங்கினை முறித்தெறிய வேண்டும் என்ற சிந்தனை காந்தியடிகள் தலைமையில் போராடிய அனைத்துத் தலைவர்களின் எண்ணமாக இருந்தது.

1945இல் இங்கிலாந்தில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் தொழிற்கட்சி வெற்றிபெற்றது. கிளமெண்ட் அட்லி அவர்கள் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தல் இருள் சூழ்ந்த இந்தியாவினை ஆங்கில அரசால் வெளிச்சம் காட்டத் துவங்கியது. 1600ஆம் ஆண்டில் காலடி எடுத்துவைத்த ஆங்கிலேயரின் மனநிலை மாறிட 347 ஆண்டுகள் ஆயின. முழுவிடுதலை கொடுக்க மனம்வராத ஆங்கில அரசு இத்தேர்தலுக்குப்பின் மனம் மாறியது. பிரதம மந்திரி கிளமெண்ட் அட்லி 1945ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் தேதி அமைச்சரவை தூதுக்குழுவை இந்தியாவிற்கு அனுப்பிவைத்தார்.[1] இத்தூதுக்குழு இந்திய மக்களின் நாடி நரம்புகளைக் கணக்கிட்டு உணர்ச்சிகளை

அறிந்தது. இனிமேலும் விடுதலை கொடுக்கவில்லையெனில் இந்தியர்களின் ஒட்டுமொத்த உணர்வுகளுக்கு ஆங்கில அரசால் பதில் சொல்ல முடியாது என்ற சூழ்நிலையை நன்கு அறிந்து கொண்டனர். இந்தத் தூதுக்குழுவின் போராட்டக்குழுத் தலைவர்களையும் மேலும் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினர். அனைவரின் கருத்துக்களை முழுமையாக அறிந்து கொண்ட தூதுக்குழு, சேகரித்த செய்திகளை ஒன்று திரட்டி இறுதியாக 1945ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் தேதி தங்களது பரிந்துரைகளை வெளியிட்டது. அதன்படி

1. இந்தியாவில் அரசியல் பூசலைத் தீர்த்து வைக்க இந்தியா முழுவதற்கும் ''ஒரு கூட்டாட்சி'' அரசை அமைக்கப் பரிந்துரை செய்தது.
2. தேர்ந்தெடுக்கப்படும் அரசியல் நிர்ணயசபை ஒரு ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும்.
3. அதுவரையில் ''இடைக்கால அரசாங்கம்'' பணிபுரியும் என்று அக்குழு கூறியது.

## அரசியல் அமைப்புச் சட்டசபை உறுப்பினர்

இத்தூதுக்குழுவின் பரிந்துரைப்படி 26.1.1946இல் அரசியல் அமைப்புச் சட்டசபை உறுப்பினர்கள் பொறுப்பேற்றார்கள். பல்லாண்டுக் காலம் நாட்டின் விடுதலைக்குக் குரல் கொடுத்த குடிசையில் பிறந்த கோமகன், தோட்டிக்கு மகனாகப் பிறந்த கக்கன், இந்திய நாட்டின் சுதந்திரத்திற்கு முதல் கட்டமாக உருவாக்கப்பட்ட 'அரசியல் அமைப்புச் சட்டசபை'க் குழுவின் (Constituent Assembly) உறுப்பினராக அதே (26.1.1946) நாளில் பொறுப்பேற்றார்.

அரசியல் அமைப்புச் சட்டசபை உறுப்பினராகப் பொறுப்பேற்ற கக்கன் அகில இந்தியத் தலைவர்களுடன் பழகும் வாய்ப்பினைப் பெற்றார். குறிப்பாக அரசியல் சாசனத்தின் தந்தை மாமேதை டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களுடனும் கே.எம். முன்ஷி ஆகியோருடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றார். வாழ்க்கை அனுபவத்தையும் தேசியத்தின் மீது கொண்ட பாசத்தால் விடுதலையின் முக்கியத்துவத்தையும் உணர்ந்த கக்கன் பல்வேறு வாதங்களில் தன்னையும் இணைத்துக் கொண்டார். நாட்டின் வளர்ச்சி குறித்து ஆங்கிலேயர்களிடமிருந்து போராடிப் பெறவேண்டிய உரிமைகளைச் சிந்தித்துச் செயல் வடிவத்திற்குப் கொண்டுவரப் பாடுபட்டார்.

இவர்களால் உருவாக்கப்பட்ட விடுதலைக் குடியுரிமை (Dominon States) 15.8.1947 அன்று நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. ஆம்! அன்றுதான் இந்திய நாட்டிற்குப் பூரண சுதந்திரம் கிடைத்தது.

ஆக, கக்கன் அவர்களின் அரும்பணி இந்தியத் தேசிய விடுதலைக்குப் பயனளித்தது என்று நினைத்துப் பார்க்கும்போது தமிழகத்தில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் பெருமை அளிப்பதாகவே அமைந்துள்ளது. அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சித்தலைவர்களையும் சிந்திக்க வைத்தது.

## மாவட்டக் கழக உறுப்பினர்

வறுமைகள் தொடர்ந்தாலும், கவலைகள் நிலைத்தாலும் மக்கள் சேவை என்பதற்கு முற்றுப்புள்ளி வைக்காமல் தொடர்ந்து சேவை செய்து வந்தவர் கக்கன். அரசியல் கட்சிகளில் பதவிகளைப் பெற்று விடலாம். ஆனால் ''மக்கள் தொண்டன்'' என்ற பெயரினைப் பெற வேண்டுமானல் அதற்காகப் பல்லாண்டுகள் உழைக்க வேண்டும். நீதி, நேர்மை, நாணயம், உழைப்பு, எதையும் தாங்கும் இதயம், அர்ப்பணிப்பு, பாசம், பணிவு, விட்டுக் கொடுக்கும் எண்ணம், எதிர்ப்பு, சிறைச்சாலை வாழ்க்கை, தலைவர்களிடம் விசுவாசம், எவரிடமும் எதையும் எதிர்பாரத குணம் போன்ற குணநலன்கள்தாம் ஒருவரை 'மக்கள் தொண்டன்' என்ற பெயரினை உருவாக்கும். ஆம்! கக்கனிடம் மேலே குறிப்பிட்ட அனைத்துக் குணநலன்களும் இருந்தன.

சாதியால் தள்ளப்பட்டிருந்தாலும் அதே சாதிதான் அவருக்கு அடித்தளமாக அமைந்தது. தீண்டாமையால் அதிகம் பாதிக்கப்பட்ட கக்கனுக்கு அரசியலில் பல தடைகள் ஏற்பட்டதுண்டு. அனைத்துத் தடைகளையும் உடைத்தெறிந்து அவற்றையே வெற்றியின் படிக்கட்டுக்களாக மாற்றி அமைத்தார். தாழ்த்தப்பட்ட சாதியில் இவர் பிறந்திருந்தாலும், உயர் இனத்தைச் சார்ந்த தலைவர்களுடன் இவர் கொண்டிருந்த நட்பு நாளடைவில் இவரது உழைப்பு, நேர்மை, விசுவாசம் இவற்றிற்கு முன் இவரது சாதி தோல்விகண்டது. கக்கனைத் தியாகியாகப் பார்த்தார்களே தவிர அவரது சாதியைப் பார்க்கவில்லை.

காங்கிரஸ் பேரியக்கத்தில் இவரது உழைப்பு என்பது தமிழக வரலாற்றில் காந்தி, காமராசர் இவர்களை அடுத்துக் 'கக்கன்' எனும் புகழிடத்திற்கு அழைத்துச் சென்றது. காங்கிரஸ் இயக்கத்தில் உள்ள

அனைத்துத் தலைவர்களிலும், தொண்டர்களிலும் 'கக்கன்' பற்றித் தெரியாதவர்கள் எவரும் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. இரவுப் பள்ளி நடத்தியமை, விடுதியை நல்வழிக்கொண்டு நடத்தியமை, தேசியச் சுதந்திரப் போராட்டங்களில் பங்கேற்றமை போன்ற செயல்பாடுகள் கக்கனைப் பல தலைவர்களின் உள்ளத்தில் நீங்கா இடம்பெறச் செய்ததோடு பொது மக்களிடத்திலும், காங்கிரஸ் பேரியக்கத் தொண்டர்களிடத்திலும் சரியான உயர்நிலைக்குக் கொண்டு சென்றன.

மாவட்டக் கழக உறுப்பினர் (District Board Members) என்ற பதவிக்குத் தேர்தல் வந்தது. **1941–1942**ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இத்தேர்தலில் போட்டியிட வேட்பாளர் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அப்பட்டியலில் மேலூர் வட்டத்தில் கக்கன் போட்டியிட அனைத்துத் தலைவர்களாலும் முடிவு செய்யப்பட்டது.

சாதித்துவ ஆதிக்கம் என்பது தேர்தல் காலங்களில் தலைக்காட்டச் செய்யும் என்பது சுதந்திரம் ஆவதற்கு முன்னும் பின்னும் இந்திய மண்ணில் காணப்பட்டது. இவரது உழைப்பினைக் கண்டு பெருமைப்பட்ட அனைத்து இனக் காங்கிரஸ் தலைவர்கள் ஒரு மனதாகக் கூடி முடிவு எடுத்துக் கக்கன் அவர்களைத் தேர்தல் களத்தில் நிற்க வைத்தார்களே தவிர, கக்கனே இத்தேர்தலில் போட்டியிட விரும்பினார் என்று சொல்வதற்கே இடமில்லை.

எப்பொழுதும் பிரச்சினைகள் வந்து விட்டால் பாதிக்கப்படுவது தாழ்த்தப்பட்டவராகத் தான் இருப்பார்கள். இதற்கு இந்திய வரலாற்றில் ஏராளமான சான்றுகள் உண்டு. இத்தேர்தலில் கக்கன் போட்டியிடத் தூண்டியதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் இரண்டு காரணங்கள் மையப்படுத்தப்பட்டன.

1. இவரது அயராத, உண்மையான, தன்னலமற்ற மக்கள் மீது கொண்டுள்ள சேவை மனப்பான்மை போன்ற குணநலன்கள் முதல் காரணம்.

2. இவரை எதிர்த்துப் போட்டியிடும் மதுரை மேலூர் வையாபுரி அம்பலம் அவர்களின் செல்வாக்கு, மக்கள் இவர் மீது கொண்டுள்ள எதிர்ப்பு, தலவர்கள் இவரை ஏற்க மறுப்பு போன்றவை பிற காரணங்கள். ஆக இத்தேர்தல் என்பது பணக்காரருக்கும் ஏழைக்கும் இடையே நடக்கும் தேர்தல். பணத்திற்கும் சேவைக்கும் சவாலான தேர்தல் என்றே

சொல்லலாம். எல்லாவற்றையும்விட இனத்தால் உயர்சாதியான மேல்தட்டுக்காரரை எதிர்த்துத் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர் போட்டியிடும் தேர்தல். அம்பலவர் இனத்தைச் சார்ந்தவரை எதிர்த்துத் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர் தேர்தலைச் சந்திக்கும் சூழ்நிலை. போட்டி என்று வந்தாலே சவால் என்றுதானே எடுத்துக் கொள்ளவேண்டும். கக்கன் சந்தித்த முதல் சவாலான தேர்தலாக இத்தேர்தல் அமைந்தது.

கக்கனுக்குப் பக்க பலமாக 'மக்கள் தலைவர்' என்று அழைக்கப்பட்ட வைத்தியநாத ஐயர், என்.எம்.ஆர். சுப்பராமன், கருப்பன் செட்டியார் ஆகியோரின் செல்வாக்குகள் அமைந்திருந்தன. அம்பல இனத்தை எதிர்த்து, தாழ்த்தப்பட்டவர் பங்கேற்க நடைபெறும் தேர்தல் இதுவே முதல் களம் என்று எல்லோராலும் நினைக்கத் தோன்றியது.

**வாசகர்களின் கனிவான கவனத்திற்கு**

1942இல் நடைபெற்ற தேர்தலுக்கும் 2008இல் நடைபெற்ற மேலவளவு பஞ்சாயத்துத் தேர்தலுக்கும் நாம் ஒரு ஒப்புமையைக் கணக்கிட்டுப் பார்த்தால் 'கக்கன்' எனும் மாமனிதரின் பெருமையைக் கணக்கிட, கண்டறிய எடுத்துக்காட்டாக அமையும் எனத் தோன்றுகிறது.

சுதந்திரம் பெற்ற இந்தியத் திருநாட்டில் அண்மைக் காலங்களில் பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெற்றதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். 1947 ஆகஸ்ட் 15இல் பூரண சுதந்திரம், பூரண குடியுரிமை பெற்ற இந்தியத் திருநாட்டில் சுமார் 60 ஆண்டுகள் கழித்து நடைபெற்ற 'பஞ்சாயத்துத் தேர்தலை' நினைத்துப் பார்ப்போம்.

மக்களாட்சி நடைபெற்றுவரும் இந்திய நாட்டில் பஞ்சாயத்துத் தேர்தல் என்பது சாதிகளின் ஒட்டுமொத்த கொட்டம் கொண்டதாகவே அமைந்ததை நம்மால் காண முடிந்தது. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவன் பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றுத் 'தலைவர் நாற்காலியில்' உட்கார்வதைப் பொறுத்துக் கொள்ள மனமில்லாதவர்கள், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படாத அளவில், தீண்டாமை தலைவிரித்தாடியதைத் தட்டிக் கேட்கத் தமிழகக் கட்சிகள் எதுவும் முன்வரவில்லை. அண்டை மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்குக் குரல் கொடுக்க வரிசையில்

நிற்கும் தமிழகச் சாதி இந்து அரசியல் கட்சிகள் இக்கொடுமையைத் தட்டிக் கேட்க முன்வரவில்லை. தீண்டாமை ஒழியப் போராடவும் முன் வரவில்லை. இந்த இழிவான நிலை சுதந்திரம் பெற்ற, குடியுரிமை பெற்ற, மக்களாட்சி கண்ட இந்திய நாட்டில் நடைபெற்றது என்று பார்க்கும்போது சுதந்திரம் பெறுவதற்கு முன், சாதித் தீ காட்டுத் தீப்போலப் பரவிய காலக்கட்டத்தில், அதுவும் மேலவளவு எனும் கிராமத்திற்குப் பக்கத்தில், தும்பைப்பட்டி கிராமம் அமைந்துள்ள சூழலில் 'கக்கன்' தேர்தலில் போட்டியிட்டார். அதுவும் 'அம்பலவர்' இனத்தைச் சார்ந்த வசதிபடைத்த மதுரை 'மேலூர் வையாபுரி அம்பலம்' அவர்களை எதிர்த்துப் போட்டியிடுவது எவ்வளவு கடினம் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தேர்தல் நேரங்களில் நாம் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும்; தெளிவு பெற்றாக வேண்டும். அதாவது கக்கன் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், அவர் அங்கம் வகிக்கும் கட்சியானது தேசிய அளவிலான கட்சி. இது ஒரு கடல். இக்கடலில் 'தீண்டாமை' என்ற உப்பு கரைந்து போய்விடும். காரணம் அக்காலக் கட்டத்தில் வாழ்ந்த தலைவர்கள் வைத்தியநாத ஐயர், என்.எம்.ஆர். சுப்பராமன், கருப்பன் செட்டியார் போன்ற நல்ல உள்ளம் படைத்த, சமுதாயச் சீர்திருத்தச் செம்மல்கள் 'கக்கனின்' சாதியைப் பார்க்கவில்லை, அவரது தேசியப்பற்று, மக்கள் தொண்டு, தியாகம் இவர்களைப் பார்த்தவர்கள், பணச் செல்வாக்கு, உயர்சாதி இவைகள் முன்னால் 'தியாகம்' தோற்றுவிடக்கூடாது என்பதற்காகத் தேர்தலில் திட்டமிட்டுக் கக்கனைக் களத்தில் இறக்கினார்கள்.

பலர் பலவிதத்தில் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். எங்கே இத்தேர்தலில் என் மகன் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ என அவரது தந்தை பூசாரிக்கக்கன் அஞ்சினார். கலவரங்கள் வளர்ந்துவிடக்கூடாது என்ற அச்சமும் அவருக்கு இருந்தது. தன் மகனின் தேர்தல் சம்மந்தமாகப் பிரச்சினை ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ளப் பூசாரிக் கக்கன் எதிராளி வேட்பாளரை நேரில் சந்தித்து மன்னிப்புக் கேட்டதாக அறியமுடிகிறது.

## தேர்தலில் வெற்றி

பல்வேறு எதிர்ப்புகள் இருந்த போதிலும் காங்கிரஸ் கட்சியின் உண்மைத் தலைவர்களின் அயராத உழைப்பிற்கு வெற்றி கிடைக்கும் வகையில் நடைபெற்ற 'மாவட்டக் கழகத் தேர்தலில்'

கக்கன் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தியை வெளியிட்டனர்.

''உழைப்பு உண்மையானால் உயர்வு உண்டு'' என்ற சொல்லிற்கு எடுத்துக்காட்டாகக் கக்கனின் வெற்றி அமைந்தது. இந்த வெற்றிதான் 'கக்கனின்' எதிர்கால அரசியல் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது என்றே சொல்லலாம்.

**நாடாளுமன்ற உறுப்பினர்**

1947 ஆகஸ்ட் 15ஆம் தேதி இந்திய நாடு பூரண சுதந்திரம் பெற்ற நாடாக அறிவிக்கப்பட்டாலும், பூரண குடியரசு நாடாக அறிவிக்கப்படவில்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். சுதந்திரம் என்ற உரிமையைப் பெற்றும் நம்மை நாமே ஆண்டு கொள்ளக்கூடிய 'குடியுரிமை' வழங்கப்படாத நிலையில் ஆங்கில அரசு நமக்கு தடைவிதித்தது. இந்திய நாட்டிற்குத் தேவையான அரசியல் சட்டம் எழுதப்பட்டால் மட்டுமே 'குடியுரிமை' வழங்கப்படும் என்ற முட்டுக்கட்டை போட்டனர்.

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் தேதி பாராளுமன்றக் குழுவானது கூடியது. இக்கூட்டத்தில் 'இந்திய அரசியல் சாசனம் நிர்ணயக்குழு' அமைக்கப்பட்டது. இந்த நிர்ணயக் குழுவின் தலைவராக டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களை நியமித்தார்கள். இவருக்கு உதவியாக ஏழு சிறந்த அறிஞர் பெருமக்களை நியமித்தார்கள். அவர்கள்

1. சர் அல்லாடி கிருஷ்ணசாமி
2. சர் B.N. ராவ்
3. சையத் எம் அப்துல்லா
4. சர். என். கோபாலசாமி அய்யங்கார்
5. டாக்டர் கே.எம். முன்ஷி
6. சர் B.L. மித்ரா
7. D.P. கெய்தான்

இந்த அரசியல் சாசன நிர்ணயக் குழுவின் உறுப்பினர்களை மாற்றி அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்படி சர் B.L. மித்ரா அவர்களுக்குப் பதிலாக N. மாதவராவ் அவர்களையும் D.P. கெய்தான் அவர்களுக்குப் பதிலாக டி.டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களையும் நியமித்தார்கள்.

1949ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் தேதி அரசியல் நிர்ணய சபையானது இறுதியாக 'அரசியல் சாசனத்தை' ஏற்றுக் கொண்டது. நமது இந்திய அரசியல் சாசனம் 395 சரத்துக்களோடு (Articles) 8 அட்டவணைகளைக் கொண்டது. 1949ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் தேதி மூன்றாவது முறையாக எழுப்பப்பட்ட விவாதத்திற்கு 40 நிமிடம் பதிலளித்து டாக்டர் B.R. அம்பேத்கர் பேசும்போது,

> 1950 ஜனவரி 26ஆம் தேதி இந்தியர்களாகிய நாமெல்லாம் பிரகாசமான உலகிற்குச் செல்ல இருக்கின்றோம். அரசியலில் சமத்துவம், சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் சட்டத்தைப் பெற்றுள்ளோம். அரசியலில் அனைவருக்கும் ''ஒரு மனிதர் ஒரு வாக்கு'' (One Man One Vote) என்ற விதத்திலேயும்
>
> ஒரு வாக்கு ஒரு மதிப்பு (One vote one value) என்ற விதத்திலேயும் நாம் அரசியல் சட்டம் பெற்றுள்ளோம்.
>
> நாம் பெற்றிருக்கும் அரசியல் ஜனநாயகத்தைக் காத்து, அனைவரும் சமம் என்ற நீதியில், சமூகம், பொருளாதாரம் மதிக்கப்பட்டு நவீன இந்தியாவை உருவாக்கப் பாடுபடவேண்டும்.[1]

என இந்தியர்களிடையே தமது வேண்டுகோளை வைத்தார்.

1950 ஜனவரி 26ஆம் தேதி இந்தியாவைக் குடியரசு நாடாக டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் எழுதிய அரசியல் சாசனத்தை ஏற்றுக் கொண்டு அறிவித்தார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டிருந்ததைப் போல இரண்டு ஆண்டுகள் கழித்துத் தேர்தல் நடத்திக் கொள்ளலாம் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதன்படி பூரண சுதந்திரம் பெற்ற இந்தியத் திருநாட்டில் 1952இல் இந்திய நாட்டின் முதல் தேர்தல் நடைபெற்றது.

தேசியக் காங்கிரஸ் இயக்கத்தில் அடிப்படை உறுப்பினராகச் சேர்ந்து, கட்சியின் போராட்டங்களில் பாடுபட்டு மக்கள் மத்தியிலே தன்னை முழுமையாக அடையாளம் காட்டிக் கொண்டு, காங்கிரஸ் பேரியக்கத் தலைவர்களால் போற்றுதலுக்குரிய பாராட்டுக்களைப் பெற்ற கக்கன் 1952இல் இந்திய மண்ணில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பினைப் பெற்றார். நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட வீரத் தழும்புகள் உடலில் காணப்பட்டாலும்

அவை எல்லாம் வெற்றித் தழும்புகளாக மாற்றப்பட்டன. பணக்காரர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிடும் சூழ்நிலையில் முதல் பாராளுமன்ற தேர்தல் காணப்பட்டாலும், ஏழையாகப் பிறந்திருந்தாலும் கட்சியில் உள்ள பணக்காரர்களின் வாசத்திற்கும் நேசத்திற்கும் சொந்தக்காரராகக் கக்கன் காணப்பட்டார்.

1952ம் ஆண்டு நடைபெற்ற முதல் பாராளுமன்ற தேர்தலில் தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று தனித்தொகுதி ஒதுக்கப் படவில்லை. ஆனால் இரட்டை வாக்குரிமை தேர்தல் நடைமுறையில் இருந்தபடியால் மதுரைத் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக இரண்டு நபர்கள் போட்டியிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

## இரட்டை வாக்குரிமை என்றால் என்ன?

2005–2009ஆம் ஆண்டுகளில் இந்திய நாடு முழுவதும் செட்யூல்டு இன மக்களால் எழுப்பப்படும் முக்கிய முழக்கம் ''இரட்டை வாக்குரிமை'' ஆகும். இந்த உரிமை மக்களிடையே குழப்பத்தை விளைவித்து வருவதை நம்மால் அறிய முடிகிறது. காரணம் இன்றைய தேர்தல் நடைமுறைப்படி நமக்குத் தெரிந்ததெல்லாம் 'தொகுதி' என்பதுதான். அதாவது செட்யூல்டு இன மக்களுக்காக ஒதுக்கப்படும் தனித்தொகுதி முறையாகும். தனித்தொகுதி என்பது, ஒரு தொகுதி செட்யூல்டு உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டு அந்தத் தொகுதியில் செட்யூல்டு இனத்தவர் போட்டியிடும் பட்சத்தில் அந்தத் தொகுதியில் வாழ்கின்ற அனைத்து இன மக்களும் ஒட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இதுதான் இன்றைய நடைமுறைப்படி நடத்தப்படும் தேர்தல் முறையாகும். இதற்குத் 'தனித்தொகுதி' முறை எனப்படும். 'இந்தத் தனித்தொகுதி முறை'த் தேர்தலை டாக்டர் அம்பேத்கர் எதிர்த்தார். இந்தத் தேர்தல் முறைப்படி செட்யூல்டு இன வேட்பாளர் அரசியல் கட்சிகளுக்கு அடிமையாகும் வழியை உருவாக்கும் என்றார். இருந்தாலும் இந்த முறையையே பின்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

ஆனால் 'இரட்டை வாக்குரிமை' முற்றிலும் மாறுபட்டது. ஒரே தொகுதியில் இரண்டு இனத்தைச் சார்ந்தவர்கள் போட்டியிடுவது. அதாவது ''One man two ballot'' ஒரு மனிதர் இரண்டு வாக்கு என்பதாகும். வாக்காளர் ஒவ்வொருவரும் தன்னுடைய வாக்கினை இரண்டு நபர்களுக்குச் செலுத்த வேண்டும்.

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த ஒருவருக்கு ஒரு வாக்கும், பிற இனத்தைச் சார்ந்த வருக்கு ஒரு வாக்கும் ஆக இரண்டு வாக்குகள் அளிக்க வேண்டும். இந்தத் தேர்தல் முறைக்குத்தான் ''இரட்டை வாக்குரிமை'' எனப்பெயர். இதனால் என்ன நன்மை?

ஒரு பாராளுமன்ற தொகுதியில் வாழ்கின்ற செட்யூல்டு இன மக்கள் எல்லோரும் செட்யூல்டு இனத்தைச் சார்ந்தவருக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்தால், அந்த வேட்பாளர் வெற்றி பெற்றபின் வாக்களித்த செட்யூல்டு இன மக்களின் உரிமைகளுக்குப் பாடுபடுவார், பாரளுமன்றத்தில் போராடுவார். அதைப் போலவே வேறு இனத்தைச் சார்ந்த மக்கள் அவர்கள இனத்தைச் சார்ந்த ஒருவருக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்தால் அவள் அந்த இனத்து மக்களின் உரிமைக்குப் பாடுபடுவார்.

ஆக 1952ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் பாராளுமன்றத் தேர்தலில் இரட்டை வேட்பாளர் முறை கடைப்பிடிக்கப்பட்டதால் கக்கன் மதுரைப் பாராளுமன்றத் தேர்தலில் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பிலும், பிற மக்களின் சார்பில் கொடிமங்கலம் பால சுப்ரமணியம் அய்யரையும் வேட்பாளர்களாகக் காங்கிரஸ் கட்சி அறிவித்தது. இந்தத் தேர்தலில் மக்கள் உணர்வோடு காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களித்து இரண்டு காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களும் வெற்றி பெற்றார்கள், இரண்டு காங்கிரஸ் கட்சி நபர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாக செயல்பட்டனர்.

1952 முதல் 1957 வரை நடைபெற்ற பாராளுமன்ற அனைத்துக் கூட்டத் தொடர்களிலும் தவறாமல் பங்கேற்று மக்களின் நன்றிகளை உறுதியிட்டுப் பெற்றுத்தந்த உறுப்பினராகச் செயல்பட்டார். அவர் அதிகம் படிக்கவில்லை யென்றாலும் அனுபவக்கல்வி அதிகம் பெற்றிருந்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று ஆந்திரா மாநிலம் அலிப்புரம் சிறையில் அடைக்கப்பட்ட காலங்களில், அவருடன் தங்கிருந்த வடஇந்திய மாநிலத் தியாகிகளுடன் ஏற்பட்ட நட்புறவால், சிறுகச் சிறுக இந்தி பேசப் பழகலானார் கக்கன். இந்தி பேச அறிந்திருந்த காரணத்தால் பாராளுமன்ற உறுப்பினரானதும் டெல்லி மக்கள் உயர் அதிகாரிகளுடன் இந்தியில் பேசி, தமிழக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டார்.

அதுமட்டுமின்றி அரசியல் அமைப்புச் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தபோது வடஇந்தியத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்ததால் அவருக்கு இந்தி மொழி ஒரு பிரச்சினையாகத் தென்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினராக செயல்பட்ட காலங்களில் சேவை செய்ய நேரிடையான உறவு அவருக்கு கிடைத்தது. ''காற்று உள்ளபோதே தூற்றிக் கொள்'' என்பதைப் போலக் கக்கன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலங்களில் காங்கிரஸ் பேரியக்கத்தின் வளர்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்டிருந்ததோடு தமிழக முழுவதும் மக்கள் மனதில் கர்ம வீரர் காமராஜ் அவர்களுக்கு அடுத்த இடம் மக்கள் மத்தியிலும் கட்சித் தலைவர்கள் மத்தியிலும் அவருடைய அபரிதமான வளர்ச்சிதான் நாளடைவில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் எனும் பதவி நாற்காலியை அலங்கரிக்கச் செய்தது.

## தமிழகக் காங்கிரஸ் கட்சித் தலைவர்

பாராளுமன்ற உறுப்பினராக, பதவி சுகம் காணாமல் பாமர மக்களின் வாழ்வாதார உரிமைக்குக் குரல் கொடுத்து உரிமையயைப் பெற்றுத்தரப் பாடுபட்டார். பேராட்டமும் நடத்திட முன்வந்தார். தமிழகமெங்கும் காங்கிரஸ் கட்சியின் தொண்டர்கள் உற்சாகமாகப் பணியாற்றினர். கக்கனின் நேர்மையான அரசியல் பல தலைவர்களைச் சிந்திக்க வைத்தது. காங்கிரஸ் கட்சி முதல்வராகப் பணியாற்றிய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பதவி விலகினார்கள். தமிழகத்தின் முதல்வர் அடுத்தது யார்? என்ற கேள்வி தலைவர்கள் மத்தியிலே உருவானது. பல்வேறு விவாதங்கள் நடைபெற்றன. முடிவு எடுக்கும் தலைவர் வரிசையில் கக்கன் முக்கியப் பங்கினை ஏற்றார்.

கக்கன், கர்மவீரர் காமராஜ் அவர்களின் தீவிரத் தொண்டனாக செயல்பட்ட காரணத்தால் காமராஜ் அவர்களைத் தமிழக முதல்வராக்கத் தீவிரமாகச் செயல்பட்டார். அனைத்துத் தலைவர்களின் ஆதரவினைத் திரட்டும் செயலில் ஈடுபட்டதோடு காமராஜ் அவர்களை முதல்வர் பொறுப்பேற்கவும் வலியுறுத்தினார். அனைத்துத் தலைவர்களும் ஒன்றுகூடி ஒரு மனதாகக் காமராஜ் அவர்களைத் தமிழக முதலவராகத் தேர்ந்தெடுத்தார்கள். 7 நபர்கள் கொண்ட அமைச்சரவை உருவாக்கப்பட்டது. அவரது அமைச்சரவையில் எம். பக்தவச்சலம், சி. சுப்பிரமணியம், எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் ஆகியோர் அமைச்சர்களாக இடம்பெற்றிருந்தனர்.

காமராஜ் முதல்வராகப் பொறுப்பேற்றதும் மக்களின் நலனில் அதிகமாக ஈடுபட்டார். மூதறிஞர் இராஜாஜி அவர்களால் கொண்டுவரப்பட்ட குலக்கல்வித் திட்டத்தைத் திருப்பப் பெற்றுக் கொண்டார். காமராஜ் முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் காங்கிரஸ் கட்சியின் தலைவர் யார்? என்ற கேள்வி எழுந்தது. கட்சியின் மீது அதிகமான விசுவாசம் கொண்டவர் மட்டுமல்ல காமராஜ் அவர்கள் மீது அதிகம் விசுவாசம் கொண்டவர் கக்கன் என்பதனால் காங்கிரஸ் செயற்குழு கூடிக் கக்கனைத் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

**எதையும் எதிர்பார்க்காமல் உழைத்தால்**
**உயர்வு நம்மை வந்து சேரும்**

என்பதற்கிணங்கக் கட்சியின் வளர்ச்சிக்குத் தொண்டனாகச் செயல்பட்ட கக்கன், காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொறுப்பினை ஏற்றுத் தலைவர் எனும் நாற்காலிக்குப் பெருமை சேர்ந்தார். 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்பார்களே, அதைப் போலவே 'பாராளுமன்ற உறுப்பினர் எனும் பதவியோடு காங்கிரஸ் பேரியக்கத்தின் தமிழகத் தலைவர் எனும் பதவியும் அவருக்குப் பெருமை சேர்த்தது.



தமிழக முதல்வர் - கட்சியின் தலைவர் காமராசர் - கக்கன்

நாடாளுமன்ற உறுப்பினராகக் கக்கன் 1954 முதல் 1957 வரை பணியாற்றிய அக்காலத்தில் தமிழகக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் செம்மையாகப் பணியாற்றினார்.


பறையருக்கும் புலையருக்கும் விடுதலை என மகாகவிபாரதி பாடிய வரிகள் பொய்த்துவிடாத வண்ணம் உயிர் பெற்றன. ஆம்! விடுதலை பெற்ற இந்தியாவில் தாழ்த்தப்பட்டோருக்கு விடுதலை கிடைத்த அதே வண்ணம் கக்கன் அவர்களுக்கு இரண்டு விடுதலை கிடைத்தன என்றே சொல்லலாம். ஒன்று நாட்டிற்கு விடுதலை மற்றொன்று காங்கிரஸ் கட்சியால் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த ஒருவர் காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவராகப் பொறுப்பேற்றது மாபெரும் விடுதலை என்றே சொல்லலாம். கக்கன் மாநிலத் தலைவராகப் பொறுப்பேற்றதனால்

1. காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட முதல் சமுதாய மறுமலர்ச்சி என்றே சொல்லலாம்.
2. உண்மைத் தொண்டனைத் தலைவர் எனும் அழகு நாற்காலியில் அமரவைத்து அழகு பார்த்த கட்சி காங்கிரஸ் என்ற பெருமையைத் தமிழக மண்ணில் பெற்றது என்றும் சொல்லலாம்.
3. விசுவாசத்தோடு உழைத்ததனால் காமராசர், தன் உண்மைத் தொண்டனுக்கு மாபெரும் மரியாதையாகத் தான் அமர்ந்த ‘‘தலைவர்’’ நாற்காலியைத் தொண்டனுக்குக் கொடுத்து உயர்த்தினார் என்றும் சொல்லலாம்.

தமிழக வரலாற்றில இன்றைய காலக்கட்டத்தில் சாதி வாரியாக கட்சிகள் இருந்தாலும் **காங்கிரஸ் கட்சி ஒன்று மட்டுமே செட்யூல்டு இனத் தலைவர்களைத் தலைவர் நாற்காலியில் உட்கார வைத்து அழகுபார்த்த கட்சி என்ற பெருமையைப் பெற்றுள்ளது.**

## அகில இந்திய காங்கிரஸ் மாநாடு

தேசியக் காங்கிரஸ் இயக்கம் 1885ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 1955ஆம் ஆண்டில் 70 வயதினைத் தேசியக் காங்கிரஸ் இயக்கம் கண்டது. அகில இந்தியத் தேசிய காங்கிரஸ் கட்சியின் மாநாட்டினைச் சென்னையில் நடத்திட அகில இந்தியக் காரியக் கமிட்டி முடிவு செய்தது. தமிழகத்திற்குப் பெருமை தேடித்தர



இந்திய நாட்டின் முதல் பாரதப் பிரதமர் மனிதருள் மாணிக்கம்
நேருஜியை வரவேற்கும் கக்கன்ஜி



ஆவடி மாநாடு
இந்திய நாட்டின் முதல் பாரதப் பிரதமர் மனிதருள் மாணிக்கம்
நேருஜியுடன் மனிதப் புனிதர் கக்கன்ஜி

9212

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி வாய்ப்புக் கொடுத்ததோடு தமிழகத் தலைவர் கக்கன் அவர்களின் திறமையை வெளிக்காட்ட மிகப்பெரிய வாய்ப்பு கிடைத்தது. காங்கிரஸ், காமராஜ், கக்கன் எனும் பெயர்களுக்கு மாபெரும் பெருமை கிடைத்திட இம்மாநாடு அமைந்தது. காமராஜ், முதல்வராக இருந்த காரணத்தால் கக்கன் தலைமை ஏற்று நடத்திய இம்மாநாட்டிற்கு ஊக்கத்தையும், உறுதுணையும் கொடுத்தார். சென்னையில் வரலாறு போற்றும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**21.1.1955** முதல் **23.1.1955** வரை நடைபெற்ற மூன்று நாள் மாநாடு இந்தியர்களைச் சென்னையில் சங்கமிக்கவைத்தது. வரலாறு போற்றும் 70ஆம் ஆண்டு மாநாட்டிற்கு அன்றைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லார் நேரு அவர்கள் தலைமை ஏற்றார்கள் என்பதுதான் வரலாற்றுச் சிறப்பு. தலைமை ஏற்று எழுச்சியுரை ஆற்றிய ஜவஹாலால் நேரு அவர்கள் கக்கனைப் பற்றிப் போற்றிப் பெருமைப்படுத்தி பேசியதோடு 'கக்கன்' அவர்களைக் 'கக்கன்ஜி' என்றே அழைத்தார் என்பதுதான் வரலாற்று உண்மை. (ஜி என்றால் பெருமைப் படுத்தி 'அவர்கள்' என்று அழைப்பதாகும்) நேரு அவர்கள் அழைத்தபின் அனைத்துத் தலைவர்களும் கக்கன் என்பதற்குக் 'கக்கன்ஜி' என்றே அழைக்கலாயினர்.

வரலாறு போற்றும் வகையில் அமைந்த இந்த மாநாட்டினைப் பாராட்டிய நேரு, கக்கன்ஜி அவர்களுக்குப் புகழாரம் சூட்டினார். கக்கன்ஜி அவர்களுக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் நேரு மேடைக்குச் செல்வதற்கு முன் தரையிலே அமர்ந்து கொண்டு மாநாட்டினை இரசித்துக் கொண்டிருந்த கக்கனின் தந்தை பூசாரிக் கக்கன் அமர்ந்திருக்கும் இடத்திற்குச் சென்று நலன் விசாரித்துவிட்டு பின் மேடைக்குச் சென்றார் எனில் இதுதானே உண்மைத் தொண்டனுக்குக் கிடைத்த வெற்றி. பல காலக்கட்டத்தில் கக்கன் அரசியலில் ஈடுபடுவதை எதிர்த்தும், கண்டித்தும் வந்த பூசாரிக்கக்கனைப் பாரதப் பிரதமர் நேரு நேரில் சென்று நலன் விசாரித்த பெருந் தன்மையை நினைத்துப் பூசாரிக் கக்கன் பெருமிதம் கொண்டார்.

தமிழக மண்ணில் மாநாடு நடந்த காரணத்தால் 'கக்கன்' என மக்களால் அழைக்கின்றனர் 'கக்கன்ஜி' என்று பெருமையோடு அழைக்கப்பட்டார். அன்று முதல் இன்று வரையில் அரசியல் உலகில் மாபெரும் தலைவர்களால் 'கக்கன்' எனும் பெயரை 'கக்கன்ஜி'

என்று பெருமையோடு அழைக்கப்பட்டனர். அவர் மறைந்து விட்டாலும் நேரு அவர்களால் சூட்டப்பட்ட பெயர் இன்றளவும் மறையாமல் மக்களால் உச்சரிக்கப்பட்டிருப்பது பெருமையாகத்தான் இருக்கிறது.

வாய்ப்பு மட்டும் இந்நாட்டில் கொடுக்கப் படுமேயெனில் கக்கன் போன்றவர்கள் பலர் தனித் திறமைகளை வெளிக்காட்டத் தயாராக உள்ளனர். காங்கிரஸ் கட்சியில் கக்கன்ஜி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பினைப் போல் இந்தியத் திருநாட்டில் இதுவரையில் எந்தக் கட்சியும் செட்யூல்டு இனத் தொண்டர்களுக்கு இப்படிப்பட்ட வாய்ப்புக் கொடுக்கவில்லை. இனிமேலும் கொடுக்கப்போவதுமில்லை.

## மாநில அமைச்சர் – பதவி உயர்வு

1952 முதல் 1957 வரையில் பாராளுமன்ற உறுப்பினராகவும், தேசியக் காங்கிரஸ் கட்சியின் தமிழ்மாநிலத் தலைவராகவும் பணியாற்றி மக்கள் மனதில் இடம் பெற்றார் கக்கன். 1957ஆம் ஆண்டு மாநிலத் தலைவராகச் செயல்பட்ட காலத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் வந்தது. இந்தத் தேர்தல் கக்கன் தலைமையில் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் தேர்வுக்குழுவின் ஆணைப்படி கக்கன் தேர்தலில் போட்டியிட வேண்டிய வாய்ப்பு கிடைத்தது. தனது சொந்த மாவட்டத்தில் சமயநல்லூர் தனித் தொகுதியில் சட்டப்பேரவை உறுப்பினராகப் போட்டியிட்டார். அக்காலக் கட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணாதுரை அவர்களின் தலைமையில் இலட்சியக் கொள்கைகளை முன்வைத்து நல்ல முறையில் வளர்ந்துவரும் சூழ்நிலை. இந்தத் தேர்தலில் கக்கன் போட்டியிடும் சமயநல்லூர் தனித் தொகுதியில் எதிர்த்து வேட்பாளர் நிறுத்தி வைக்கவில்லை என்பது செய்தியாகும். ஆனால் பொதுவுடமைக் கட்சியைச் சார்ந்த பி. வடிவேலு என்பவர் இவரை எதிர்த்து நின்றார்.

கடுமையான போட்டிகளுக்கிடையே நடைபெற்ற இந்தத் தேர்தல், ஏற்கெனவே கக்கன் செய்திருந்த மனித சேவையும், அவரது அன்பான கருத்துகள், நன்னடத்தை, ஈடுபாடு இவைகளை மையமாகக் கொண்டு, மக்களின் அமோகமான ஆதாரவு பெற்று 12,000 வாக்குகள் அதிகமாகப் பெற்று வடிவேலுவை தோற்கடித்து வெற்றிவாகைச் சூடினார் கக்கன்.

## முதல்வர் காமராஜ்

காமராஜ் முதல்வராக 1952–57ஆம் ஆண்டுகளில் ஆற்றிய மனித நேய சேவைகள் மீண்டும் காமராஜ் அவர்களைத் தமிழக முதல்வர் நாற்காலியில் அமரவைத்து அழகு பார்த்தன. ஆம்! 133 எம்.எல். ஏக்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் வெற்றி பெற்று அமைச்சரவையை அமைக்கும் பொறுப்பினை ஏற்க முன் வந்தனர். இரண்டாவது முறையாகக் காமராஜ் தமிழகத்தின் முதல்வராகக் பொறுப்பேற்றுக் கொண்டார்.

காமராஜ் தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் கக்கன் இடம் பெற்றார். ஏழு பேர் கொண்ட தனது அமைச்சரவையில் கக்கனையும் சேர்த்துக் கொண்டார்.



*காமராசர் தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் கக்கன் அமைச்சர்*

1. எம். பக்தவச்சலம் 2. சி. சுப்பிரமணியம்
3. ஆர் வெங்கட்ராமன் 4. வி. இராமையா
5. லூர்தம்மாள் சைமன், எம்.ஏ. 6. மாணிக்கவேல் நாய்ககர்
7. பூவராகவன்

1957ஆம் ஆண்டு ஏப்ரல் மதம் 13ஆம் தேதி காமராஜர் தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் கக்கன் அமைச்சர் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்.

காமராஜ் அமைச்சரவையில் கக்கனுக்குப் பொதுப்பணி மற்றும் ஆசன நலத்துறை ஆகிய துறைகள் ஒதுக்கப்பட்டன. இரண்டு துறைகளிலும் சேவையில் தனி முத்திரை பதித்தார். இந்த இரண்டு துறைகளுக்குக் கக்கன் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க பணிகளை ''சமூகப்பணி'' எனும் தனி அதிகாரத்தில் மிகவும் விளக்கமாக விவரித்துள்ளேன். அதனைப் பார்த்து அறிவதன் வாயிலாகக் 'கக்கன் சிறந்த ஆட்சியாளர்' என்பதற்கும், மனிதநேய மிக்க மாமனிதர் என்பதனையும் பதவி நாற்காலியில் அமர்ந்து கொண்டு சுகம் காணாமல் பதவி எனும் நாற்காலிக்குப் பெருமை சேர்த்தவர் கக்கன் என்பதனையும் அறிந்து கொள்ளலாம்.

கக்கன் அமைச்சராகச் செயல்பட்ட காலங்களில் காங்கிரஸ் ஆட்சிக்கு எதிரணியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் செயல்பட்டது. எப்பொழுதும் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் கொள்கை மற்றும செயல் பாடுகளில்படம் எதிர்ப்புகள் ஏற்படத்தான் செய்யும். இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கக்கன் தி.மு.க. உறுப்பினர்களுடன் நல்ல நட்புறவை மேற்கொண்டார். தான் அமைச்சர் என்ற எண்ணத்தில் செயல்படாமல் அனைவரும் சமம் என்ற மனித நேயப் பாசப் பிணைப்புடன் செயல்பட்டார். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு காட்டிய அதே பாசத்தையும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அளித்து வந்தார் என்பதுதான் முக்கியச் செய்தியாகும்.

## முதல் சுற்றுப்பயணம்

கக்கன் அமைச்சராகப் பொறுப்பேற்றதும் தன்னை வளர்த்து அமைச்சர் அளவிற்கு உயர்த்திய தாய் மண்ணிற்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் மதுரை மேலூருக்கு தனது முதல் சுற்றுப்பயணமாக மேற்கொண்டார். இளமைக் காலங்களில் கல்வியைப் பெற்றிடப் பட்டபாடுகளையும், விடுதியில் பணியாற்றிய காலங்களில் மாணவர்களின் சூழ்நிலையை நன்கு அறிந்த கக்கன், அத்துறைக்கு முதலிடம் கொடுத்தார். நிலமற்று ஏழ்மையால் பிறக்கும் தாழ்த்தப்பட்ட மகனுக்குக் கல்வி மட்டுமே நிலையான சொத்து என்பதனை அறிந்த கக்கன் மதுரை மேலூரில் பயணியர் மாளிகையில் தங்கிக் கொண்டு மாவட்டக் கல்வி அதிகாரியைத் தான் முதன் முதலில் சந்தித்தார்.

கக்கன் பொதுப்பணி மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர். ஆனால் தான் பிறந்த புண்ணிய பூமியில் தனது துறையைச் சார்ந்த அதிகாரிகளை வரவழைத்துத் திட்டப்பணிகள் குறித்துப் பேசாமல், கல்வித்துறையைச் சார்ந்த மாவட்டக் கல்வி அதிகாரிகளை வரவழைத்து பேசியது வியப்புக்கு மட்டுமல்ல, மக்களின் நலனில் அக்கறை மட்டுமல்ல, முதல்வர் காமராசர் அவர்களின் அடித்தள எண்ணமாகிய கல்வி வளர்ச்சிக்கு முதலில் தான் பிறந்த மண்ணில் விதை ஊன்றினார் கக்கன்.

அப்பொழுது மாவட்டக் கல்வி அதிகாரியாக முனைவர் வேங்கட சுப்பிரமணியம் இருந்தார். இவர்தான் பிற்காலத்தில் புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றினார். கக்கன், இவரை அழைத்து மாவட்டத்தில் எத்தனை கிராமங்களில் பள்ளிகள் உள்ளன என்றும், எத்தனைக் கிராமங்களில் பள்ளிகள் இல்லை என்பதனையும் தகவல் கேட்டறிந்து, ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்துப் பள்ளிகள் துவங்க ஆவன செய்தார். கக்கன் அமைச்சரானதும் செய்த முதல் பணி இதுதான் என்பதனை இக்காலச் சமுதாய இளைஞர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 1962 மார்ச் 14ஆம் தேதி வரையில் சிறந்த அமைச்சராகச் சிறப்பாகச் செயல்பட்டுத் துறைகளின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார்.

**கடவுளுக்குச் செலுத்திடும் காணிக்கையைக்**
**குழந்தையின் கல்விக்குச் செலுத்து**

எனும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் எண்ணப்படி கக்கன், கல்விக்கு முதலிடம் கொடுத்தார்.


கல்வி மட்டுமே மனித விடுதலைப்பற்றிச் சிந்திக்க வைப்பது என்பதனைத் தன் வாழ்வில் நினைத்தவர் பூசாரிக்கக்கன். தன்னை படிக்கவைக்க எவ்விதமெல்லாம் தந்தை பாடுபட்டார் என்பதனை உணர்ந்த கக்கன், தன் தந்தையைப் போல் பிற மாணவர்களின் தந்தைகள் கஷ்டப்படக்கூடாது என்பதனை உணர்ந்து, அரசு சலுகை மூலமாக கல்விக் கண்ணை திறந்திட பாடுபட்டார் கக்கன். தன் தலைவர், முதல்வர் காமராஜ் அவர்களின் எண்ணப் படியே செயல்பட்டார் என்பதுதான் வரலாறு.

மதுரை மாவட்டம் மேலூரில் கக்கன் செய்த இந்தப் பணி நாளடைவில் தமிழகம் முழுவதும் பரவியது. ஓட்டு போட்ட மக்களுக்கு எது தேவை என்பதை உணர்ந்து, தனது பொறுப்பில் இல்லாத துறையாக இருந்தாலும் மக்கள் நலன் கருதி உதவி செய்தார் கக்கன் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் அமைச்சர்

பொதுப்பணி மற்றும் அரிசன நலத்துறை அமைச்சராக இருந்த காலங்களில் அவர் ஆற்றிய அரும் பணிகள் மக்களின் அமைதியான முன்னேற்றமான வாழ்விற்கு வழிவகுத்தன என்றுதான் சொல்ல வேண்டும். அணைகள் கட்டி, நீர்த் தேக்கிட, விவசாயிகளின் மனம் குளிர்ந்திட விவசாய மேம்பாட்டிற்குப் பாடுபட்டார். அரிசனத் துறைகள் மூலமாகப் பல்வேறு சமூகச் சீர்திருத்தங்கள் செய்தார். இந்த இரண்டு துறைகள் மட்டுமின்றி தமிழக மக்கள் தேவைகளை அறிந்து பல துறைகள் மூலமாகவும் தொய்வின்றி பணியாற்றினார். சிக்கனமான வாழ்வு, அதிகாரத்தை தவறாக பயன்படுத்தாமை நாடிவரும் மக்களுக்கு மனம் மாறாமல் செய்யும் உதவி, அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளை நிறைவேற்றும் விதம் போன்ற பல்வேறு நல்ல குணங்கள் இவரை மீண்டும் அமைச்சர் பதவியில் அமர வைத்தன.


1962 மார்ச் மாதத்தில் 1962–67க்கான அடுத்த பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. இந்தத் தேர்தலில், தான் பிறந்த மண்ணில் வாழ்கின்ற மைந்தர்களுக்கு ஐந்தாண்டுக் கால அமைச்சர் காலத்தில் செய்த நல்ல பல திட்டங்களால் மக்கள் மத்தியில் நிலையா இடத்தைப் பெற்ற கக்கன், கட்சியின் ஆணைப்படி மேலூர் தனித் தொகுதியில் போட்டியிட்டார். இந்தத் தேர்தலிலும் திராவிட



தமிழக சட்டப்பேரவையில் கக்கன்ஜி

முன்னேற்றக் கழகம் கக்கனுக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என்றாலும், பொதுவுடமைக் கட்சி கக்கனுக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தியது. கக்கனுக்கு மக்கள் மத்தியில் அதிகமான செல்வாக்கு இருந்த காரணத்தால் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பொதுவுடமைக் கட்சி வேட்பாளரைக் காட்டிலும் 16495 வாக்குகள் அதிகம் பெற்று இரண்டாவது முறையும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

இந்தத் தேர்தலிலும் காங்கிரஸ் கட்சி அதிக அளவில் வெற்றிப்பெற்றக் காரணத்தால் இந்த முறையும் கர்மவீரர் காமராசர் அவர்களையே மீண்டும் தமிழக முதல்வராக தேர்ந்தெடுத்தனர். மூன்றாவது முறையாகக் காமராசர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்றார். இம்முறையும் கக்கனை அமைச்சராகக் காமராசர் சேர்த்துக் கொண்டார்.



காமராசர் முதலவர மறறும் அமைச்சரகளோடு அமைச்சர் கக்கன்

1962 மார்ச் 15ம் தேதி கக்கன் இரண்டாவது முறையாக அமைச்சர் பொறுப்பேற்றார். இம்முறை கக்கனுக்கு வேளாண்மை, உணவு, சிறுபாசனம், மதுவிலக்கே, கால்நடைக் காப்பு, அரிசன நலம் போன்ற மிகவும் முக்கியமான துறைகள் அவருக்கு ஒதுக்கப்பட்டன. காமராஜ் அமைச்சரவையில்.

1. எம். பக்தவச்சலம்
2. சோதி வெங்கடாச்சலம்
3. ஆர். வெங்கட்ராமன்
4. வி. இராமையா

5. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்
6. ஜி. பூவராகவன்

போன்றவர்கள் அமைச்சர்கள் நாற்காலியில் அமர்ந்தார்கள்.

கக்கனுக்கு ஏற்பட்டிருந்த பல்வேறு துறையின் அனுபவங்கள் மேலும் தன் பணியை மக்கள் பயன்படும் அளவிற்கு அமைந்தன என்பது உண்மை.

**காமராசர் முதல்வர் பதவி இராஜினாமா**

'கர்மவீரர்' காமராசர் முதல்வர் பொறுப்பினை ஏற்றுச் சிறப்பான ஆட்சி முறையைத் தமிழக மக்களுக்குக் கொடுத்து வந்தார். காமராசர், காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியத் தலைவர்களில் மூத்த தலைவர் என்பதோடு, கட்சியின் வளர்ச்சியில் அதிகமான ஈடுபாடு கொண்டவர். அரசியல் பதவிகளோடு கட்சியிலும் பதவி வகித்து வருபவர்கள் கட்சியின் வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனை காமராஜ் கவனத்தோடு கண்காணித்து வந்தார். அரசியல் பதவிகளில் நிலை நிற்கும் மூத்த கட்சித் தலைவர்கள், கட்சியின் வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் எனும் கோரிக்கையை அகில இந்திய அளவில் காமராசர் வலியுறுத்தி வந்தார். அதனால் அரசியல் பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும் எனும் திட்டத்தைக் கொண்டுவந்தார்.

காமராசர் தமிழகத்தின் முதல்வர் எனும் பொறுப்பில் தமிழகத்தை நல்வழிப்படுத்தி வரும் நேரத்தில், இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வந்ததோடு, இந்தத் திட்டத்திற்கு தானே முன் உதாரணமாகத் திகழவேண்டும் என்பதற்காக முதன் முதலில் தான் வகித்து வந்த 'முதல்வர்' பதவியை இராஜினாமா செய்தார். 'முதல்வர்' எனும் பதவி சுகத்தைவிடக் கட்சி வளர்ச்சி மூலமாக மக்களுக்குச் சேவை செய்வதையே சிறந்தது, மன அமைதி கிடைக்கும் எனக் காமராசர் நினைத்தார். முதல்வர் பதவியிலிருந்து கோடிக்கணக்கில் பட்ஜெட் போட்டுக் கொண்டு மக்களைக் காப்பதைவிட, தெருக்கோடியில் வாழ்கின்ற பாமர மக்களின் பிரச்சினைகளை அறிந்திடக் கட்சிப் பணியே சிறந்தது என முடிவு எடுத்தவர் காமராசர்.

முதல்வர் பொறுப்பினை ஏற்று மக்கள் நலனே என் வாழ்க்கைப் பயணம் எனும் நோக்கத்தோடு சாதாரணப் பாமர மக்களின் வாழ்க்கையைப் போல் தன் வாழ்க்கையை அமைத்துக்

கொண்ட காமராசர் முதல்வர் பதவியை இராஜினாமா செய்ய முன் வந்தது பலருக்கு அதிர்ச்சிச் செய்தியாகவே இருந்தது.

இந்திய அரசியல் வரலாற்றில் முதன் முதலாகத் தான் வகித்தச் சட்ட அமைச்சர் பதவியைத் தானாகவே முன் வந்து இராஜினாமா செய்த பெருமை, துணிவு பாசாகிப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களுக்கு இருந்தது. அடுத்து, காமராசர் அவர்கள் தானாகவே முன்வந்து தமிழக முதல்வர் பதவியை இராஜினாமா செய்து வரலாற்றில் இடம் பெற்றார். காமராசர் அவர்களின் இராஜினாமா அகில இந்திய காங்கிரஸ் கட்சியில் பல மாற்றங்களைக் கொண்டு வந்ததோடு தமிழக அரசியலிலும் பல மாற்றங்கள் ஏற்பட முன் உதாரணமாகத் திகழ்ந்தது. அகில இந்திய அளவில பல்லாண்டுக் காலம் வடஇந்தியர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியத் தலைவர் பதவி முதன் முதலில் தென்னிந்தியருக்கு அதுவும் தமிழகத்தைச் சார்ந்த காமராசர் அவர்களுக்குக் கிடைத்தது. இது மாபெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தது.

## அடுத்த முதல்வர் யார்?

அடுத்து, காமராசர் அவர்களுக்குப் பிறகு தமிழகத்தின் முதல்வர் யார்? என்ற கேள்வி தமிழக அரசியல் உலகில் கேட்கப்பட்டது. காமராசுர் முதல்வராக அமர்ந்து பெருமை சேர்த்த நாற்காலியில் யார் அமர்ந்தால் அதே பெருமை கிடைக்கும் என்ற பேச்சின் பெருமூச்சு அனைவருக்கும் ஏற்பட்டது. காமராசர் தெளிவாக இருந்தார், ஏனென்றால், தனக்கு அடுத்து முதல்வர் நாற்காலியை அலங்கரிக்கும் தகுதி படைத்தவர் கக்கன் மட்டுமே என உணர்ந்திருந்தார். இருந்தாலும் கட்சியின் கொள்கைக்குக் கட்டுப்பட வேண்டிய நிலை இருந்ததால் தன் எண்ணத்தில் பிடிவாதமாக இருக்க முடிந்ததே தவிர முடிவு எடுக்கும் அதிகாரம் 'அவரிடம்' இல்லை என்பதையும் உணர்ந்தார். கடைசியில் கட்சியின் செயற்குழு என்ன முடிவு எடுக்கிறதோ? அந்த முடிவுக்கு விட்டு விடுவதாகக் காமரசர் முடிவு எடுத்தார்.

இந்த நிலையில் செயற்க்குழு கூடி நடத்திய விவாதத்தில் கூடக் கக்கன் முதல்வராக வருவதற்கு மிகவும் பிரகாசமான பாதை இருந்தாலும் கட்சியில் பிளவு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலும் மிகவும் கவனமாக இருந்தார். காமராசரின் ஆதரவு ஒரு பக்கம்

பெருகிக் கொண்டு வருகிறது. மறுபக்கம் வேறு நபரை முதல்வராக்கும் முயற்சியும் நடைபெற்று வருவதை நன்கு புரிந்து கொண்ட கக்கன் அனைவரும் வியக்கும் வண்ணம் தீர்க்க தரிசனமான முடிவினை எடுத்தார்.

## முதல்வர் பதவியை விட்டுக் கொடுத்த கக்கன்

காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்ட கக்கன், தான் முதல்வர் பதவிக்கு போட்டியிட்டால் ஏதாவது பிளவு ஏற்பட்டுவிடுமோ, அதனால் காமராசர் பெயருக்கும் புகழுக்கும் களங்கம் ஏற்பட்டுவிடுமோ என்றறெல்லாம் நினைத்துப் பார்த்த கக்கன், தானே முன் வந்து அமைச்சர் அவையில் மூத்த உறுப்பினரான எம். பக்தவச்சலம் அவர்களை முதல்வராக முன் மொழிந்தார். கக்கன் முன் வந்து தன்னை முதல்வராக இன்முகம் காட்டி, எவ்விதமான விகிதத்தையும் மனதில் வைத்துக் கொள்ளாமல் முன்மொழிதலைக் கண்ட எம். பக்தவச்சலம் மனம் நெகிழ்ந்துபோனார். 'தியாகம்' என்ற சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உண்டு. ஆனால் கக்கன் செய்த 'தியாகத்திற்கு' என்ன அர்த்தம் என்று எல்லோரும் திகைக்கின்ற அளவில் கக்கன் பெருந்தன்மையோடு போற்றப்பட்டார்.

கக்கன் இந்த முடிவை எடுக்காமல் காமராசரின் பிடிவாத எண்ணப்படி இருந்திருந்தால் தமிழக சட்டமன்ற வரலாற்றில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த 'முதல்வர்' எனும் புகழினைத் தமிழக வரலாற்றில் நிகழ்ந்திருக்கும். அவருக்கு அடுத்து இதுவரை எவரும் அந்த இடத்தை நிரப்பவுமில்லை. இனிமேல் நிரப்புவதற்கு வேண்டிய அரசியல் சூழ்நிலையும் தமிழகத்தில் இல்லை என்றுதான் உணரமுடிகின்றது.

1963 அக்டோபர் 3ஆம் நாள் எம். பக்தவச்சலம் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றார். காமராசர் அமைச்சரவையில் இருந்த அமைச்சர்கள் அனைவரையும் அப்படியே செயல்படவைத்தார். கக்கனின் தியாக உள்ளத்தைப் பாராட்டிய தமிழக முதல்வர் எம். பக்தவச்சலம் அவருக்குப் பெருமைத் தேடித் தரும் வகையில்

1. உள்துறை
2. நிதி
3. கல்வி
4. சிறை

5. தொழிலாளர் நலம்
6. அறநிலையத் துறை
7. அரிசன நலம்

போன்ற புகழ்பெற்ற, முக்கியமான, மக்களுக்குச் சேவை செய்யும் துறைகளை ஒதுக்கிக் கொடுத்தார்.

காங்கிரஸ் கட்சியில் தலைவர்கள் எப்படி விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை கொண்டவர்களாகத் திகழ்ந்தார்கள் என்பதற்கு இப்பதவிகள் மாபெரும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. தமிழக முதல்வர் எம். பக்தவச்சலத்திற்கு 'முதல்வர்' பதவியை விட்டுக் கொடுத்த கக்கனுக்கு முதல்வர் பல உயர் இலக்காக்களை விட்டுக் கொடுத்ததுதான் மனிதநேயப் பண்பினை பளிச்சிட்டுக் காட்டுகிறது.

கக்கனுக்கு ஒதுக்கப்பட்ட இலாக்காக்கள் வரலாற்றில் இடம் பிடிக்கும் அளவில் இருந்தன. தான் பொறுப்பேற்ற அனைத்துத் துறைகளிலும் மிகவும் சிறப்பாகப் பணியாற்றித் தனிப்பட்ட சரித்திரம் படைத்தார். அவரது அயராத உழைப்பு, மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற உயரிய பண்பு, பதவியைத் தவறாகப் பயன்படுத்தாமை உறவினர்களுக்கும் உடன் பிறந்தவர்களுக்கும் உதவி செய்தால் எங்கே பதவிக்கு இழுக்கு ஏற்பட்டு விடுமோ என்ற பரந்த எண்ணம் போன்ற குணநலன்கள் அனைத்து மக்களாலும் பாராட்டினைப் பெற்றன.

காங்கிரஸ் கட்சியில் கக்கனுக்குக் கொடுக்கப்பட்ட இப்பேற்பட்ட உயர் இலாக்காக்கள் அடுத்து ஆட்சிக்கு வந்த திராவிடர்கள் கொள்கைகளையும் ஏற்று நடத்திய அரசியல் கட்சிகள் இதுவரை எந்த ஒரு தாழ்த்தப்பட்ட அமைச்சர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது வரலாறு நமக்கு அளிக்கும் சாட்சியாகும்.

## அகில இந்திய வீட்டுவசதி வாரிய உறுப்பினர்

காங்கிரஸ் கட்சிகளின் இணைப்பிற்குப்பின் அமைக்கப்பட்ட மத்திய அரசு, கக்கனின் நேர்மையைப் பாராட்டி அவரை ''அகில இந்திய வீட்டுவசதி வாரிய உறுப்பினராக நியமித்தது. அமைச்சராக இருக்கும் போது பணத்திற்கு ஆசைப்படாத கக்கன், இப்படிப்பட்ட அகில இந்திய அளவில் கிடைத்த உயர் பதவியைக் கொண்டு தன்னை உயர்த்திக் கொள்ளவில்லை. அரசியலில் தூய்மையான

வாழ்வினை மேற்கொண்ட கக்கன் வயதான நிலையில் டெல்லியில் நடக்கும் வாரியக் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாத நிலையில் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பதவி கிடைத்தபோது கவலைப்படாத கக்கன், பதவியை எடுத்துக்கொண்ட போதும் கவலைப்படவில்லை என்பதுதான் அவரது வரலாறு காட்டும் உண்மையாகும். நெருப்பாற்றினைக் கடந்து அரசியல் பயணம் மேற்கொண்ட கக்கன், வாழ்நாள் முழுவதும் துன்பங்களைச் சுவைத்தார். எதிர்ப்புகளை வெற்றிக்கனியாக்கினார். இவருக்கு அடுத்து எந்த ஒரு மனிதராலும் இவரது இடத்தை நிரப்ப முடியாது என்று வரலாறு பேசும் அளவிற்கு வாழ்ந்தார். இன்னும் நாம் நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருப்பவர்தான் ''மனிதப் புனிதர் கக்கன்''.

# 8. அமைச்சர் கக்கன் ஆற்றிய பணிகள்

காந்தியின் வழியில் தனது பொதுச்சேவையை ஏற்றுக் கொண்ட கக்கன், காமராசர் அவர்களைத் தனது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டு வாழ்நாள் முழுவதும் அரசியல் பணியாற்றி வந்தார். ''அரசியலில் வெற்றிபெறுவது என்பது மீண்டும் மக்களுக்கு நல்லபல சமூகப்பணி ஆற்றிடவே அளிக்கப்படும் வாய்ப்பு'' எனக் கக்கன் நினைத்தார். அரசியல் அதிகாரம் கிடைக்கும்போது மக்களுக்குச் சேவை செய்யும் அதிகாரம் கிடைக்கிறது என்பது கக்கனின் இலட்சியமாகக் காணப்பட்டது.

1957இல் காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவராகச் செயல்பட்ட போது சமயநல்லூர் தனித்தொகுதியில் சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டார். இவரை எதிர்த்துப் பொதுவுடமைக் கட்சியின் வேட்பாளராகப் பி.வடிவேலு போட்டியிட்டார். கக்கனின் சமூகச் சேவைக்கு மாபெரும் வரவேற்பு இருந்த காரணத்தாலும், காங்கிரஸ் மீதும் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் மீதுள்ள பாசத்தாலும் இத்தேர்தலில் 12000 வாக்குகள் வித்தியாசத்தில் கக்கன் வெற்றி பெற்றார்.

இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு மாபெரும் வெற்றி கிடைத்தது. 133 எம்.எல்.ஏக்களைக் கொண்டு மக்கள் தலைவர் காமராசர் முதல்வரானார். 7 நபர்களைக் கொண்ட அமைச்சரவை காமராசர் முதல்வர் தலைமையில் உருவாக்கப்பட்டது. இவர்களில் கக்கனும் அமைச்சரானார். 1957ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் தேதி கக்கன் பொதுப்பணித்துறை மற்றும் அரிசன நலத்துறை போன்ற துறைகளுக்கு அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் என நாம் ஏற்கெனவே பார்த்தோம்.

1962ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலும் கக்கன் போட்டியிட வாய்ப்பு கிடைத்தது. இந்தத் தேர்தலில்தான் பிறந்த மண்ணின் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதின் அடிப்படையில் மேலூர் தனித் தொகுதி சட்டமன்றத் தேர்தலில்

போட்டியிட்டார். இத்தேர்தலில் எதிர்க்கட்சியாக விளங்கிய தி.மு.க. கக்கனை எதிர்த்து வேட்பாளரை அறிவிக்காத காரணத்தால் பொதுவுடமைக் கட்சியின் வேட்பாளர் எதிர்த்து போட்டியிட்டார். இத்தேர்தலில் கக்கன் 16495 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். இத்தேர்தலிலும் காங்கிரஸ் கட்சிக்கு அதிகமாக வெற்றி கிடைத்தது மீண்டும் கர்மவீரர் காமராசர் முதல்வரானார். காமராசர் அமைத்த அமைச்சரவையில் கக்கனுக்கு வேளாண்மைத்துறை, உணவுத்துறை, சிறுபாசனம், மதுவிலக்கு, கால் நடைக்காப்பு, அரிசன நலத்துறை போன்ற துறைகள் ஒதுக்கப்பட்டு 1962 மார்ச் மாதம் 15ம் தேதி பொறுப்பேற்றுக் கொண்டார் எனவும் பார்த்தோம்.

காமராசர் அகில இந்தியத் தலைவராகப் பொறுப்பேற்றுச் செயல்பட வேண்டியும், காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்த வேண்டியும், முதல்வர் பதவியை இராஜினாமா செய்த காரணத்தால் பக்தவச்சலம் தமிழக முதல்வராக நியமிக்கப்பட்டார் என்ற வரலாற்றை நாம் ஏற்கெனவே பார்த்தோம். இவரது அமைச்சரவையில் கக்கனுக்கு முதல்வருக்கு நிகரான பல துறைகள் உள்துறை, நிதி, கல்வி, சிறை, தொழிலாளர் நலம், அறநிலையத்துறை, அரிசன நலம் போன்ற முக்கியப் பொறுப்புகள் அளிக்கப்பட்டன. இப்படி மூன்று முறையும் அமைச்சராகச் செயல்பட்ட கக்கன் ஆற்றிய மக்கள் சேவைகள் இன்றளவும் சாட்சிகளாகக் காட்சி அளித்து வருகின்றன.



**வேளாண்மைத்துறை**

திட்டப்பணிகள் குறித்த ஆலோசனை

## வேளாண்மைத்துறை

கக்கன் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த காரணத்தால் விவசாயம் பற்றிய செயல்பாடுகளை நன்கு அறிந்திருந்தார். சுதந்திரம் பெற்ற இந்திய நாடு விவசாய நாடாக இருந்த காரணத்தால் வறுமையை ஒழிப்பது காங்கிரஸ் கட்சியின் நோக்கமாக இருந்தது. பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் விவசாயத் துறையில் வெளிநாட்டுக் கருவிகளை இந்தியாவிற்குக் கொண்டு வந்து மாபெரும் மாற்றத்தை உருவாக்கிய காலமது. தமிழகத்தில் கக்கன் விவசாயத்துறையில் மாபெரும் மாற்றத்தைக் கொண்டுவந்தார். 1957இல் அமைச்சரான கக்கன் நீண்டகால விவசாயத் திட்டங்களைக் கொண்டு வந்தார். அவரது நோக்கமெல்லாம் தமிழகம் நீண்டகாலத்திற்கும் பசுமை வயல்களைக் கொண்டு திகழவேண்டும் என்பதாகும். விவசாயிகளுக்குத் தேவையான உர விற்பனையை முறைப்படுத்தி எளிதான முறையில் கிடைத்திட வழிவகை செய்தார். நவீன விவசாய முறைகளை அறிமுகப்படுத்தி விவசாயக் கருவிகள், டிராக்டர்கள் வாங்கிட ஏழை விவசாயிகளுக்கு நிதி உதவி ஏற்பாடு செய்து கொடுத்தார். விவசாயப் போக்குவரத்துக்குச் சாலைகள் சீரமைக்கப்பட்டுப் பல கிராமங்களை இணைத்திடச் செய்தார். தரமான விதைகள் கிடைத்திடக் கக்கன் ஏற்பாடு செய்து கொடுத்தார். கிணறு தோண்டுதல், அடிகுழாய் அமைத்தல் போன்றவற்றிற்குக் கடன்கள் வழங்கப்பட்டு விவசாயம் பெருகிட வழிவகை செய்தார்.

கக்கன் அமைச்சரான பிறகுதான் ஏழை விவசாயிகளுக்குத் தரமான மாடுகள் வாங்கிடக் கடனுதவி செய்து கொடுக்கப்பட்டது. சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என வித்தியாசமில்லாமல் விவசாயிகள் அனைவரும் சமம் எனும் பொதுநோக்கு ஏற்பட்டது. பல பகுதிகளுக்கு நேரில் சென்று விவசாய மக்களின் குறைகளைக் கண்டறிந்து உடனடி நடவடிக்கை எடுக்க அரசு அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார்.

## நீர்ப்பாசனத் திட்டங்கள்

விவசாயத்திற்கு முக்கியத்தேவை நீர்ப்பாசனமாகும். நீரைத் தேக்கிவைத்து விவசாயத்திற்கும், மின்சாரத்திற்கும் பயன்படும் வகையில் அக்காலக்கட்டத்தில் திட்டமிட்ட பெருமை கக்கனையே சாரும். இன்று தமிழகத்தில் புகழ்பெற்ற அணைக்கட்டுகள் இருக்கின்றன என்றால் அதற்கு அதிகமாகப் பாடுபட்ட பெருமை

கக்கனையே சாரும். தன்னுடைய செல்வாக்கைப் பயன்டுத்தி நீர்ப்பாசனத் திட்டத்திற்கு மைய அரசிடம், மாநில அரசிடம் அதிகமான நிதியினைப் பெற்றுப் பல அணைக்கட்டுகள் கக்கனால் கட்டப்பட்டன.

1957ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் நாள் திட்டக்குழுத் துணைத் தலைவர் வி.டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களுடன் பல்வேறு திட்டங்களை விளக்கமாக எடுத்துக் கூறி அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டிட நிதி உதவியினைப் பெற்றார்.

## ஆரணியாற்றுத்திட்டம்

கோயமுத்தூர் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக இக்காலத்தில் காட்சியளித்தாலும், அக்காலத்தில் மலைப் பகுதிகளிலிருந்து வரும் ஏராளமான நீரைத் தேக்கிவைத்து விவசாயத்துக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற திட்டத்திற்குக் கக்கன் அரும்பாடுபட்டார். 3000 ஏக்கர் நிலங்கள் சாகுபடி பெற்றிட வழிவகை செய்யக்கூடிய நிலையில் ஆரணியாற்றுத் திட்டத்தைக் கக்கன் கொண்டுவந்தார். 6.5.1957இல் கக்கனால் இத்திட்டம் துவக்கப்பட்டு 104.12 இலட்சம் ரூபாயில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தால் இன்றளவும் கோவை மாவட்டத்தில் விவசாயம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

## கிருஷ்ணகிரி திட்டம்

சேலம் பகுதியில் விவசாய முன்னேற்றத்தில் கக்கன் அதிகமான கவனம் செலுத்தினார். ஏற்காடு மலைச் சரிவிலிருந்து வீணாகப் போகும் நீரைத் தேக்கி விவசாயத்திற்குப் பயன்படும் வகையில் 202.28 இலட்சம் ரூபாய்ச் செலவில் 6500 ஏக்கர் நீர்ப் பாசனத்திற்குப் பயன்படும் வகையில் கிருஷ்ணகிரி திட்டத்திற்குக் கக்கன் 28.1.1958 அன்று அடிக்கல் நாட்டினார். விவசாயப் பலநோக்குத் திட்டம் தேவை என்பதனை உணர்ந்து சலிப்படையாமல் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து மக்களின் எண்ணப்படி செயல்பட்ட பெருமை கக்கனுக்கு உண்டு.

## மணிமுத்தாறு திட்டம்

திருநெல்வேலிப் பகுதியில் விவசாயம் மேம்பாடு அடைய வேண்டும் என்பது அப்பகுதி வாழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாகும். இக்கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு, கக்கன் தனிக்கவனம் செலுத்திட 505 இலட்சம் ரூபாய்ச் செலவில் 2000 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில்

மணிமுத்தாறு திட்டம் துவக்கப்பட்டது. மிகவும் விரைவாகப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு 1958ஆம் ஆண்டே நிறைவேற்றப்பட்டன. கக்கன் அமைச்சராகப் பணியாற்றிய காலக்கட்டங்களில் அதிகாரிகள் மீது பாசத்தைக் காட்டித் திட்டங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளே முடிக்கும் பாங்கினைப் பெற்றிருந்தார்.

## அமராவதி அணைத்திட்டம்

கோயமுத்தூர் பகுதிகளில் 21,000 ஏக்கர் விவசாய நிலத்திற்குப் பாசன வசதி பெற்றிடும் வகையில் 324.40 இலட்சம் ரூபாய்ச் செலவில் அமராவதி அணைத்திட்டம் கொண்டு வரப்பட்டது. கக்கன் ஆற்றிய பாராட்டப்படும் சேவைகளில் இத்திட்டம் மிகவும் முக்கியமானதாகும். 15.4.1958 அன்று கக்கன் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது தமிழக முதல்வர் காமராசர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்ட திட்டமாகும். வரண்டு காணப்பட்ட நிலங்கள் விவசாய சாகுபடி நிலங்களாக மாற்றப்பட்டுப் பாலைவனம் பசுமையாகக் காட்சியளித்தது.

## மேட்டூர் அணைத்திட்டம்

கரைபுரண்டு ஓடும் ஜீவ நதியாம் காவிரி ஆற்றுப் பகுதியில் நீரைத் தேக்கிவைத்து விவசாயத்திற்குப் பயன்படும் வகையில் மாபெரும் திட்டம் உருவாக்கப்பட்டது. 1183 இலட்ச ரூபாய்ச் செலவில் காவிரி ஆற்றுப் பகுதியில் 17,200 ஏக்கர் நிலத்திற்குப் பயன்படும் வகையில் மேட்டூர் அணைக்கட்டு திட்டமிடப்பட்டுப் பணிகள் துவக்கப்பட்டன. இப்பணிகள் மிகவும் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு 1959ஆம் ஆண்டு இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டது. மேட்டூர் அணை அன்று திட்டமிட்டுக் கட்டப்படவில்லையெனில் பல ஆயிரம் விவசாய நிலங்கள் பாலைவனம் போலத்தான் காட்சி அளித்து இருக்கும். கக்கனின் கனவில் நின்ற கன்னியாக மேட்டூர் அணை இன்றளவும் பல மக்களின் கவலைக் கண்ணீர் மகிழ்ச்சிக் கடலாக உருவெடுத்துள்ளது. காலத்தால் அழிக்க முடியாத வரலாற்றுச் சான்றுதான் மேட்டூர் அணைத்திட்டம். எதிர்காலத் தமிழகத்தின் வளமையை முன்வைத்துத் தீட்டப்பட்ட திட்டமாகும். காவிரி ஆற்றுப் பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்களின் நிம்மதியான வாழ்விற்கு இயற்கை அன்னை கொடுத்த பரிசுதான் காவிரியும், மேட்டூர் அணைத்திட்டமுமாகும்.

விடுதலை பெற்ற இந்தியாவிற்கு விவசாயத்தின் வளர்ச்சியிலே அடிப்படை ஆதாரமாக விளங்கியது. மக்களின் பசியைப் போக்கிவிட்டாலே இந்தியா சுதந்திரம் பெற்றதன் பயன் என்பதனைக் கக்கன் உள்பட அனைவரும் அறிந்திருந்தனர்.

## வைகை அணைத்திட்டம்

மதுரை மாவட்டத்தில் வைகை ஆற்றுப் பகுதியில் 13000 ஏக்கர் நிலத்திற்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 7000 ஏக்கர் நிலத்திற்கும் பாசன வசதிகள் கிடைக்கும் வகையில் வைகை அணைத்திட்டம் 2.7.1959 அன்று கக்கனால் துவக்கி வைக்கப்பட்டது. மதுரை மாவட்டத்தின் பெருமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வது வைகை ஆறாகும். வைகை ஆற்றில் வீணாகும் நீரைத் தேக்கி விவசாய நிலங்களுக்குப் பயன்படும் வகையில் கக்கன் திட்டமிட்டுச் செயல்பட்டதின் விளைவாக இன்று சுமார் 20,000 ஏக்கர் நிலங்களில் மக்கள் விவசாயம் செய்து தங்களது வாழ்க்கையைச் செழுமைப் படுத்தி வருகின்றார்கள் என்றால் கக்கனின் சேவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

## பூண்டி நீர் ஆய்வுமையம்

கக்கன் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுப் புதிய அணைகளைக் கட்டியதோடு பூண்டி ஏரிப்பகுதிகளுக்கு வருகின்ற நீரின் அளவினை ஆய்வு செய்திட ஆய்வு மையம் அமைத்திடக் கக்கன் திட்டமிட்டார். அந்த வகையிலே 7.9.1959ஆம் ஆண்டு பூண்டியில் நீர்ப்பாசன ஆய்வு மையத்திற்குக் கக்கன் அடிக்கல் நாட்டினார். அன்று அவரால் உருவாக்கப்பட்ட ஆய்வு மையத்தின் மூலமாகக் கணக்கிடப்பட்ட நீர் வரவுதான் சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினை இல்லாத நிலையில் உதவிக்கரமாகச் செயல்படுகிறது.

## மண் பரிசோதனை மையம்

விவசாயத்திற்கு அடிப்படைத் தேவை மண் பரிசோதனையாகும். இயற்கை விவசாய முறையைப் பின்பற்றி வந்ததால் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் காணப்பட்டது. நீர் வளம் எவ்வளவுதான் கிடைத்தாலும் மண்வளம் மிகவும் முக்கியம் என்பதனை உணர்ந்த கக்கன், பல் நோக்குத் திட்டப்படி மண் பரிசோதனை மிகவும் முக்கியமானதாக உணர்ந்தார். சென்னைச் சேப்பாக்கத்தில் ‘‘மண்வளப் பொருளியல் மையத்துறை’’ எனும்

துறையைத் துவக்கி வைத்தார் இதனால் மண்பரிசோதனையின் முக்கியத்துவத்தை விவசாயிகள் குறுகிய காலங்களிலே அறிந்து கொண்டனர்.

பல்வேறு பாசனத் திட்டங்களை முறைப்படுத்தவும், கண்காணிக்கவும் 1960ஆம் ஆண்டு மாநிலப் பாசன வசதி ஆலோசனைக் குழுவினைக் கக்கன் உருவாக்கினார். இதன்படி அனைத்து நீர்ப்பாசனத் திட்டங்களும் அடிக்கடி ஆய்வுகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முறைப்படுத்தவும் வளர்ச்சியடையவும் இக்குழு பாடுபட்டது.

விவசாயத்துறையில் கக்கன் ஆற்றிய பணிகள் என்பது மக்கள் நன்மையடையவும், தன்னை நம்பி அமைச்சர் பதவியைக் கொடுத்த தாயுள்ளம் கொண்ட கர்மவீரர் காமராசர் அவர்களின் கரங்களை வலுப்படுத்தவும், காங்கிரஸ் கட்சியின் செயல்பாட்டினை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்ற உயர்கொள்கை களுக்காகவும் கக்கன் இரவும் பகலும் உழைத்தார் என்பதுதான் உண்மை. விவசாயக் குடும்பத்தில் பிறந்த கக்கன் விவசாயத் துறையைச் செம்மைப்படுத்த உழைத்த உழைப்புகள் ஏராளம், ஏராளம்.

ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் தாக்கல் செய்தபின் நிதிநிலைக் குழுவின் அதிகாரிகளை நேரில் சந்தித்து அணைக்கட்டுத் திட்டங்களுக்கான நிதியினைச் சாமர்த்தியமாகப் பேசித் தடையின்றிப் பெற்றுத் திட்டங்களைக் கக்கன் நிறைவேற்றினார். திட்டத்தை நிர்ணயிக்கப்படும் காலத்திற்குள்ளாகவும், ஒதுக்கப்படும் தொகைக்குள்ளும் ஒரு சில திட்டங்களில் அரசுக்குச் சேமிப்பாகவும் கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவரது அயராத உழைப்பு, இடைவிடாத வண்ணம் நேரில் சென்று ஆய்வு மற்றும் ஊக்குவித்தல் போன்ற தனித்தன்மைக் குணநலன்கள் இவரது வெற்றிக்குக் காரணமாக அமைந்தன எனலாம்.


## இந்தோ–ஜெர்மன் திட்டம்

இயற்கைவளம் செறிந்த பூமியாகக் கருதப்படும் நீலகிரி மாவட்டத்தில் விளையக்கூடிய உருளைக்கிழங்கு, காரட், பீட்ரூட், கோசு மற்றும் பச்சைப் பட்டாணி போன்ற காய்கறிகளின் உற்பத்தியை அதிகப்படுத்தவும், புதுமையைப் புகுத்தவும் இந்திய நாட்டின் அழைப்பினை ஏற்று இந்தியா வந்திருந்த ஜெர்மனி நாட்டைச் சார்ந்த வேளாண்மைத்துறை அமைச்சர் எச். கோஸ்ச்சல் அவர்கள் கலந்து

கொண்ட உயர்மட்டக்குழுக் கூட்டத்தில் கக்கன் கலந்து கொண்டு சிறந்த ஆலோசனைகளை வழங்கினார். 8.2.1967இல் கையொப்பமான ''இந்தோ–ஜெர்மன் விவசாய ஒப்பந்தம்'' வெற்றிபெறக் கக்கன் ஒத்துழைத்தார். இதன் விளைவாக உதகையில் இந்தோ–ஜெர்மன் விவசாய ஒப்பந்தப்படி பல ஏக்கர் நிலங்களில் காய்கனிகள் பயிரிடப்பட்டன.

கக்கன் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது முக்காணியில் ஒரு பாலம், தாமிரபரணியின் குறுக்கே கட்டப்பட்டு 1957ஆம் ஆண்டு ஜூன் 7இல் திறந்து வைக்கப் பட்டது. திருச்சி, தஞ்சாவூர், ஸ்ரீரங்கம், கீழ்அணைக்கட்டு, அண்ணக்காரச் சத்திரம் ஆகிய இடங்களில் 1957இல் ஜூன் மாதம் 11ஆம் தேதி பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

பக்கிங்காம் கால்வாயை வேதாரண்யம் நாகபட்டினம் கால்வாயுடன் இணைப்பது பற்றி ''ஆய்வு செய்ய உள்நாட்டுச் சாலைக்குழு'' ஒன்றை அமைக்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. இத்திட்டத்தின் மூலம் சாலைப் போக்குவரத்தை



வெளிநாட்டருடன் அமைச்சர் கக்கன்

நவீனப்படுத்தலாம் என்று கக்கன் ஆலோசனை வழங்கியதாக அறிய முடிகின்றது. நாயர் அணைக்கட்டு அருகில் ஒரு கால்வாய் அமைத்துக் கொள்வதற்காக 1959ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் நாள் சென்னை அரசாங்கம் திருவாங்கூர்–கொச்சின் அரசாங்கத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இப்படி அமைச்சராக விளங்கிய கக்கன், தான் பதவி வகித்த ஒவ்வொரு துறையிலும் தனி முத்திரை பதித்துச் செயல்பாட்டில், சிந்தனையில் தனக்கு நிகர் தானே எனும் புதிய வரலாற்றைப் பதித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## அரிசன நலத்திட்டங்கள்

இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்த போதிலும் தீண்டப்படாத மக்களின் அடிமை விலங்கிற்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை. அடிமை மக்களாக வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகள் கிடைத்தாக வேண்டும் எனும் உயர் எண்ணத்தால் காமராசர், கக்கனை அரிசன நலத்துறை அமைச்சராக்கி அழகு பார்த்தார். இனப் பாகுபாடுகளுக்குள் புழுவாய்த் தத்தளித்த கக்கனுக்குத் தான் பிறந்த இனத்தின் பெருமைக்குப் பாடுபட வாய்ப்பு கிட்டியதை உயர்வாக நினைத்து அதிகாரத்தைத் தன் கையில் பிடித்தார். பல சட்டங்களை அதிரடியாக நிறைவேற்றிக் கடைப்பிடிக்கச் செய்தார்.

எவரேனும் தீண்டாமையைப் பயன்படுத்தினால் 500 ரூபாய் அபராதமும், ஆறுமாதக் காலம் சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டன.

1.3.1956இல் மேலூரில் அரிசன சேவா சங்கம் கட்டடத்தில் நரிக்குறவர் விடுதியைத் தொடங்கினார்.

30.1.1961இல் அரசு சட்டப்பூர்வமான வீட்டு வசதி வாரியத்தை ஏற்படுத்தியது.

குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு வீடுகள் கட்டிக் கொள்ள வீட்டு மனைகளும் பண உதவியும் அளிக்கப்பட்டன.

ஒவ்வொரு வீடும் ரூ.750/– ரூபாயில் கட்டத் திட்ட மிடப்பட்டது. அதில் ரூ.550/– அரசு மான்யம்.

இப்படிப்பட்ட வீடுகளில் 10% வீடுகள் அரிசன மக்களோடு சேர்ந்து வாழ விரும்பும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கு வழங்கப்பட்டது.

1966–67ஆம் ஆண்டுகளில் 3.75 இலட்சம் செலவில் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தார்.

உழவு மாடுகள், விதைகள், விவசாயக் கருவிகள் வாங்கிட ஒரு குடும்பத்திற்கு 285 ரூபாய் வீதம் மொத்தம் 7.32 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது.

தொழில் துவக்கிட ஒருவருக்கு 440 ரூபாய் வீதம் 7.29 இலட்சம் மானியமாகக் கொடுக்கப்பட்டது.

பள்ளி இறுதித் தேர்வில் முதல் இரண்டு மதிப்பெண் பெற்ற அரிசன மாணவர்களுக்கு ரூ.50 வீதம் மதிப்புள்ள தங்கப் பதக்கம் ரூ.10/– மதிப்புள்ள வெள்ளிப் பதக்கம் வழங்கப்பட்டன.

1966 அக்டோபர் 6ஆம் தேதி மதுரைக்கு அருகே உள்ள மேலூரில் ''அரிசனநலக்குழு'' உருவாக்கினர்.


1966–67 வரை 3500 வீட்டுமனைகள் அரிசன மக்களுக்கு வழங்கப்பட்டன.

**கக்கனின் தனிக்கவனம் கல்வித்துறை**

கக்கனின் இளமைக்கால வாழ்வினை ஆய்வு செய்யும் போது கல்வி கற்றிட அவர் பட்டபாடுகள், எதிர் நீச்சல் ஏராளம். அதுவும் தன் இளமைக்கால வாழ்வினை விடுதிக் காப்பாளராகத் துவக்கிய இவர் அதிகம் படித்துப் பட்டம்பெற்றிட வாய்ப்பு இல்லையென்றாலும் அமைச்சராகப் பதவி ஏற்றபின், அதிகாரம் அவரது கையில் குவிந்தபின் அவர் மனதில் அதிக ஈடுபாட்டுடன் வளர்த்த துறை கல்வித்துறைதான். கல்வித்துறைக்கு அமைச்சராக இல்லை என்றாலும் அவர் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் கல்வித்துறை அதிகாரிகளையே சந்திப்பார்.

1957ஆம் ஆண்டு விவசாய அமைச்சராகப் பொறுப்பேற்று மதுரை மாவட்டத்திற்கு வருகை தந்தபோது விவசாயத்துறை அதிகாரிகளை அழைத்து வளர்ச்சிப்பணிகள் குறித்துப் பேசவில்லை; மாவட்டக் கல்வி அதிகாரிகளை அழைத்து விவரம் சேகரித்தார் என்பதிலிருந்து இவரது பார்வை காமராசர் பார்வையாகவே காணப்பட்டது. தான் பள்ளி நிழலில் அதிகம் படிக்கவில்லை யென்றாலும் தமிழகத்தில் பிறந்த ஒவ்வொரு குழந்தைகளும் படிக்க வேண்டும் எனத் திட்டம் கொண்டுவந்த படிக்காத மேதை காமராசர் வழியில் கல்விப்பணி ஆற்றினார் கக்கன்.

பட்டினி என்பது ஒரு குழந்தையின் கல்விச் செல்வத்திற்கு எதிராக உள்ளது என்பதை உணர்ந்த முதல்வர் காமராசர் அவர்கள் மதிய இலவச உணவினைத் தந்து வயிறு நிரம்பவைத்துக் கல்விக்கண்ணைத் திறந்தார் என்பது வரலாறு நமக்களிக்கும் சாட்சி. ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிகள் இருந்தாலும் வெகுதூரக் கிராமக் குழந்தைகள் நடந்து சென்று படிக்க வாய்ப்பில்லை என்பதனை உணர்ந்து ஆங்காங்கே மாணவர்கள் தங்கிப் படிக்க விடுதிகளைக் கக்கன் கட்டித்தந்தார்.



*அரிசன நலத் துவக்க விழாவில் முதல்வர் காமராசருடன் அமைச்சர் கக்கன்*

அரிசன நலத்துறை அமைச்சர் பதவி மேலும் இவரது கல்வித் திட்டங்களுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது. படிக்கும் மாணவர்களிடையே சாதித் தீயை வளர்த்துவிடக் கூடாது என்ற நோக்கத்தில் கக்கன் பள்ளி விடுதிகளில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் குறிப்பிட்ட விழுக்காடு ஒதுக்கித்தந்து சாதியற்ற மாணவர் சமுதாயத்தைக் கக்கன் உருவாக்கினார். பிஞ்சு மனங்களில் நஞ்சுச் சாதீத்தீயை வளர்த்து விடக்கூடாது என்பது கக்கனின் இலட்சியக் கொள்கையாகும். 1963ஆம் ஆண்டிற்குள் தாழ்த்தப்பட்ட நலத்துறையின் கீழ் இயங்கிவரும் 1052 பள்ளிகளைத் திறந்த பெருமை

கக்கனுக்கு உண்டு. காமராசரின் இலவச மதிய உணவுத் திட்டத்தினை அதிவேகமாகச் செயல்முறைப் படுத்தியவர் கக்கன்.

சாதி ஒழிக்கப்பட வேண்டுமானால் சமமான கல்வி தேவைப்படுகிறது. கல்வி ஒரு மனிதனை உயர்ந்த நிலைக்கு உயர்த்தும். கல்வியின் வளர்ச்சிதான் தேசத்தின் வளர்ச்சி. இளமைக் காலங்களில் கக்கன் வடித்த கண்ணீர்தான் பிற்காலத்தில் எந்த ஒரு குழந்தையும் கல்வி பெற்றிட ஏங்கக் கூடாது; கண்ணீர் வடிக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் கல்வித்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

கல்வித்துறை உள்ள வரையில் காலத்தால் கக்கனின் சேவை நிலைத்திருக்கும் என்பது உண்மை.

## காவல்துறை நவீனமயமாக்கல்

கக்கன் கால்பட்ட இடங்கள் 'சொகுசுப் பூமி' என்பார்கள். காவல்துறை என்பது நாட்டின் இதயத்துடிப்பாகும். மக்களின் பாதுகாப்பான வாழ்விற்குக் காவல்துறை முக்கியப் பங்கினை வகித்து வருவதை நாம் பார்க்கின்றோம். உலகக் காவல்துறை வரலாற்றில் தமிழகக் காவல்துறைக்கு முக்கியப் பங்கு இருக்கிறது. இதற்குக் காரணம் சுதந்திரம்பெற்ற இந்திய நாட்டில் குறிப்பாகத் தமிழக வரலாற்றில் 1957க்குப்பின் காவல்துறை நவீனமயமாக்கப்பட்டு முக்கிய இடத்தைப் பிடிப்பதற்குக் காரணம் இத்துறையில் பணியாற்றியவர்களின் பங்களிப்பே காரணமாகும். குறிப்பாகக் கக்கன் அமைச்சரான பிறகு தனது முழுக்கவனத்தையும் காவல்துறையின் வளர்ச்சிக்காகச் செலவிட்டார். 1963க்குப்பின் மக்களின் பாதுகாப்பு நலனைக் கருதிக் காவலர்களை நியமனம் செய்வதில் அதிக எண்ணிக்கையைக் கையாண்டார். உலக நாடுகளில் நவீனக் கருவிகள் மூலம் குற்றங்களைத் தடுக்கும் வழிமுறைகளைத் தமிழகத்தில் பின்பற்றவும் முயற்சிகளை மேற்கொண்டார்.

இவரது ஊக்கத்தின் காரணமாக 30.7.1966இல் ஒரிசா மாநிலத்தில் ரூர் கேலாவில் சிறப்பாகப் பணியாற்றியமைக்காகச் சென்னை ஆயுதக் காவல்படைப் பிரிவுக்கு வெள்ளிக் கேடயம் பரிசளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

குற்றங்களை வகைப்படுத்தி, அதற்கென்று துறைகளைத் துவக்கி ஆட்சிமுறை செய்வதில் அதிகக் கவனம் செலுத்திய

கக்கன், இலஞ்ச ஒழிப்பிற்கென்று தனித்துறையைத் துவக்கி 'இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்' என்ற மாநிலக் காவல்துறைத் தலைவருக்கு இணையான அதிகாரியை நியமனம் செய்து தவறுகளைக் கண்டறிய அரும்பாடுபட்டார்.

காவலர் குடியிருப்பு, காவலருக்கான மருத்துவ வசதி இவர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. தாழ்த்தப்பட்டவர்கள் இவர் காலத்தில்தான் காவல்துறை நுழைவாசலில் காலடி எடுத்து வைத்தார்கள். இவர் காலத்தில்தான் பெண்கள் காவல்துறையில் சேர்க்கப்பட்டனர்.

காவலர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு அறிவுப் பாதையில் உடல் தகுதி மற்றும் குற்றங்களைக் கண்டறியும் நுண்ணறிவுகளைப் பெற்றிடக் காவல்துறைப் பள்ளியும் இவர் காலத்தில்தான் துவக்கப்பட்டது.

அடிக்கடி ஏற்படும் இனக்கலவரங்களை முன்கூட்டியே அறிந்துகொள்ளச் சிறப்புப் புலன் ஆய்வுத்துறையை உருவாக்கி, அதன் மூலம் இனக்கலவரங்கள் உருவாகாமல் கலந்து பேசி முடிவு எடுக்கும் வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. காவல்துறைக்கும் பொதுமக்களுக்கும் நல்லிணக்கம் ஏற்படக் கிராம பாதுகாப்புக் குழுக்களைக் கக்கன் துவக்கினார்.

சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்குத் தியாகி உதவித் தொகை கிடைத்திடக் கக்கன் முயற்சி செய்து வாங்கித் தந்தார்.

திறமையான அதிகாரிகள் மூலமாகக் காவல்துறையைச் செம்மைப்படுத்திய கக்கன், தன் வாழ்நாள் கடைசியில் இவரிடம் பயன்பெற்ற மனிதர்களும் சரி, துறைகளும் சரி, அரசாங்கமும் சரி இவரைக் கண்டு கொள்ளவில்லை என்பது கவலையாக உள்ளது.

'தியாகமே தன் இலட்சியம்' என்ற கொள்கையை ஏற்று அமைச்சராகப் பதவி வகித்த காலங்களில் பதவிக்குப் பெருமை சேர்த்து, தூய்மை, வாய்மை நன்மை இவைகளை மட்டுமே பின்பற்றித் தூய்மையாக வாழ்ந்தவர் 'மனிதப் புனிதர் கக்கன்' ஒருவராகத்தான் இருக்க முடியும் என்பது அன்றும், இன்றும், என்றும் நமக்குச் சாட்சியாக அமையும் என்பது மட்டும் உறுதி.

# 9. கக்கனின் சமுதாயப் பார்வை

மனித உடலுக்கு ஜீவன் எப்படி முக்கியமோ அப்படித்தான் கக்கனுக்குச் சமுதாயம் முக்கியமாகக் காணப்பட்டது. காற்றில் ஆக்சிஜன் இல்லையெனில் மனிதனின் வாழ்வு இல்லை. ஆம்! கக்கன் என்றாலே சமுதாயம்! சமுதாயம் என்றாலே கக்கன். இதுதான் கக்கனின் வாழ்வில் கண்ட உண்மை. கக்கனின் வாழ்க்கை வரலாற்றில் அமைச்சராக இருந்த காலங்களில் அவரது உள்ளத்தின் அடித்தளத்தில் கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என அறிய முடியும். தாழ்த்தப்பட்ட மக்களின் அவல வாழ்க்கையை மாற்றி அமைப்பது கல்வியே என்பதனைத் திட்டவட்டமாகக் கணக்கிட்டார். இளமையில் தான் படிக்கும் போது 'கல்வி' ஏழைகளுக்குக் கிடைக்காத எட்டாக்கனி என்றுதான் நினைத்தார். ஆனால் அரசு அதிகாரம் கையில் இருக்கும்போது எட்டாக்கனி கல்வியானது எட்டும் கனியாகிவிடுகின்றது.

## கல்வித் தொண்டு

சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபடும்போது ஒவ்வொரு கிராம இளைஞர்களும் படிக்க வாய்ப்பு இல்லாததை நேரில் கண்டறிந்தார் கக்கன். தனக்கு ஏற்பட்ட கல்வி கற்கக் கடன் பட்டதை வேறு எந்தக் குழந்தைகளுக்கும் வரக்கூடாது என்பதில் கவனமாகவே இருந்தார். 1940–41ஆம் ஆண்டில் கக்கன் பள்ளி மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் விடுதிகள் தொடங்கினார். எல்லோரும் பள்ளிகளையும் கல்லூரிகளையும் கட்டிக் கொண்டு கல்வியைப் பணமாக்கிடும் காலங்களில் கக்கன் விடுதிகளைக் கட்ட முன்வந்தார். தங்கிப் படிக்கும் வசதி இல்லாத காரணங்களினால் ஏராளமான குழந்தைகளின் கல்வி வளர்ச்சி பாதிக்கப்படுவதைக் கண்டு விடுதியைத் துவக்கினார் விடுதலைப் போராட்டத்தில் அதிகம் ஈடுபட்ட காரணத்தால் விடுதியின் மீது அதிக அக்கறை காட்ட முடியாத சூழ்நிலையில் விடுதியைக் கண்காணித்துக் கொள்ளத் திரு. செல்லப்பா என்பவரை நியமித்து அதிக

அக்கறையோடு நடத்திவந்தார். சுதந்திரப் போராட்டமும் தடைபடாமல் கல்விப் பணியில் தொய்வுப்பணியில்லாமல் பார்த்துக்கொண்டார்.

மொத்தத்தில் 5 மாணவர்களும், 5 மாணவிகளும் தங்கிப் படிக்கும் விடுதியை நடத்தினார். இவருக்கு வருமானம் கிடையாது. காரணம் பகல் முழுவதும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுவது. எனவே வருமானத்திற்கு வழியில்லை. ஆனால் கக்கனைச் சுற்றிலும் உதவி செய்யும் நல்ல மனம் படைத்தவர்கள் ஏராளம் உண்டு. அவர்களின் நன்கொடையை நம்பித்தான் இந்த விடுதியை மிகவும் சிறப்பாக நடத்தி வந்தார்.

கக்கனின் நெருங்கிய நண்பர்களான மதுரை மேலூர் தங்கச்சாமி அம்பலம், கருப்பண்ண அம்பலம் ஆகியோரின் நல்ல எண்ணத்தால் கொடுக்கப்பட்ட உதவிகளைக் கொண்டு அரசாங்கக் கட்டிடத்தின் தாழ்வாரத்தில் அந்த விடுதி துவக்கப்பட்டது.

மதுரை மேலூர் பார்ப்பன மக்கள் வாழ்கின்ற அக்கிரகாரத்தில் துவங்கப்பட்டதால் பல்வேறு வகையான எதிர்ப்புகள் வந்தன. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்கள் இப்பகுதியில் விடுதியில் தங்கி வாழ்க்கை நடத்துவதா? எனும் எழுச்சிக் குரல்கள் எதிராகக் கிளம்பின. இதனால் விடுதி நடத்துவதில் சிரமம் ஏற்பட்டதோடு மனமுவந்து நன்கொடை கொடுத்தவர்கள் சிறிது சிந்திக்க முற்பட்டனர். இதனால் இடையூறுகள் இருந்தன.

வாழ்க்கையில் பல எதிர்ப்புக்களை எதிர்த்து வாழ்க்கை நடத்தியதால் மரணத்தை நெருங்கும் வரையில் இவரது வாழ்க்கையில் கஷ்டங்களே முதலீடு செய்யப்பட்டன. திருமணத்திற்குப் பிறகு தன் மனைவியின் ஒப்புதலோடு தாலியை அடகுக் கடையில் வைத்து மாணவர்களுக்கு உணவளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது எனில் எந்த அளவிற்கு மாணவர்களுக்கு உணவும் கல்வியும் அவசியம் என்பதனை நன்கு உணர்ந்திருந்தார். திருமணம் நடக்கும் வரையில் தனிமனிதனாக, பிரச்சினைகளைத் தாங்கிக் கொண்டவர், திருமணத்திற்குப் பின் மனைவியும் இவரது கல்விச் சேவையில் அதிகம் நாட்டம் கொண்டிருந்தார்.

விடுதி நடத்துவதற்குத் தேவையான நிதி உதவி கிடைப்பதில் சிரமம் ஏற்பட்ட காரணத்தால் அரிசன சேவா சங்கத்தின் உதவியால் விடுதி நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இப்படி சில மாணவர்களைக் கொண்டு துவங்கப்பட்ட இவ்விடுதியில்தான்

இன்று நூற்றுக்கணக்கான மாணவர்கள் தங்கிப்படிக்கும் நல்ல சூழ்நிலை ஏற்பட்டது.

கக்கன் தனது இளமைக் காலத்தில் கல்வி கற்றிட மேற்கொண்ட பிரச்சினைகள் இவரை நன்றாகச் சிந்திக்க வைத்தன. கல்விக்கு முதலிடம் கொடுத்த கக்கன் மாணவர்களின் வயிறு நிரம்பினால் கல்வி தானாக வரும் என்பதனைக் கர்ம வீரர் காமராசர் அவர்களும் கக்கனும் நன்கு அறிந்திருந்தனர். அரிசன நலத்தின் அமைச்சர் பொறுப்பினை ஏற்று, மதுரை மாவட்டத்திற்கு முதன் முதலில் சென்றபோது மாவட்ட அரிசன நலத்துறை அதிகாரியை அழைக்காமல் மாவட்டக் கல்வி அலுவலரை வரவழைத்து மாணவர்களின் நலனைக் குறித்துப் பேசியதிலிருந்து ஓர் உண்மையை அறிந்து கொள்ளலாம். அதாவது தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம் அவர்களின் கல்வி வளர்ச்சியில் உண்டு; கல்வியின் முன்னேற்றம் என்பது அவர்களின் விடுதியில் உண்டு என்பதாகும்.

கடவுளுக்குச் செலுத்தும் காணிக்கையைக்
குழந்தையின் கல்விக்குச் செலுத்துங்கள்

எனும் மாமேதை அம்பேத்கர் அவர்களின் உயர்வான எண்ணத்தைக் கக்கன் தனது வாழ்நாளில் கடைப்பிடித்தார் என்பது முக்கியமான செய்தியாகும்.



கல்விமேதை டாக்டர் இராதாகிருஷ்ணனோடு அமைச்சர் கக்கன்

ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம் அச்சமுதாய மக்களின் வளர்ச்சியில் உண்டு. தனிமனிதனின் வளர்ச்சி என்பது அவனது கல்வி வளர்ச்சியில் உண்டு. இதை உணர்ந்து செயல்பட்டவர்தான் மனிதப் புனிதர் கக்கன்.

## தீண்டாமையை எதிர்த்துப் போராட்டம்

உலகம் தோன்றியதும் 'தீண்டாமை' எனும் அவலம் தோன்றியிருக்குமா? என நினைக்கும் நிலையில் கக்கன் வாழ்ந்த காலங்களில் தீண்டாமைக் கொடுமை மனிதனை வேறுபடுத்தியது. உடல் அமைப்பால் ஒன்றுபட்டுப் பிறந்த மனித இனம், இனத்தால், பிளவுபட்டு விட்டது. சுதந்திரமாகப் பிறக்கும் மனிதன் பின் தீண்டாமை எனும் சங்கிலியால் பின்னிப் பிணைக்கப்படுகின்றான்,

**Man 'borns' free. but everywhere**
**he is in chains.**

என்றான் பிரான்சு நாட்டுத் தத்துவஞானி ரூசோ. இப்பேற்பட்ட தீண்டாமைக் கொடுமையும், மனிதனின் கெட்ட புத்தியும் கக்கன் கிராமத்தையும் விட்டுவைக்கவில்லை.

கக்கன் பிறந்த கிராமமான தும்பைப்பட்டியில் வாழ்கின்ற மக்கள் குளங்களில் தேங்கும் மழைநீரைத் தான் பயன்படுத்த வேண்டும். இக்கிராமத்தில் பல குளங்கள் இருப்பதாக நாம் ஏற்கெனவே பார்த்தோம். இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் ''பீக்குளம்'' என்ற குளத்திலிருந்தும், பிற சாதி மக்கள் ''ஊருணி'' என்ற குளத்திலிருந்தும் குடிநீர் எடுப்பது வழக்கம்.

''பீக்குளம்'' என்பது வெளிவாசல் சென்று கைகால்கள் கழுவுவதற்கும், மாடுகள் தண்ணீர் குடிக்கவும், மாடுகளைக் குளிப்பாட்டுவதற்கும் பயன்படுத்தப்படும் குளமாகும். அந்த நீரைத்தான் தாழ்த்தப்பட்ட மக்களும் குடிநீராகப் பயன்படுத்தி வந்தனர்.

ஆனால் ''ஊருணி'' எனும் குளமானது உயர் இனத்தைச் சார்ந்த மக்கள் குடிக்கும் குடிநீராக இருப்பதால் எவரும் குளிக்காமல், மாடுகள் வாய் வைக்காமல் மிகவும் பாதுகாப்பாகப் பாதுகாக்கப்பட்டு வரும் குளமாகும். அதோடு பொது மக்களால் எவ்விதமான அசுத்தமும் ஏற்படாத வண்ணம் மிகவும் சுகாதாரத்தோடு பாதுகாத்து வந்தனர். இந்தக் குளத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடிநீர் எடுக்காத வண்ணம் ஊர்க் கட்டுப்பாட்டினைக் கொண்டு வந்தார்கள்.

ஒரே கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனும் உயர் எண்ணம் மக்களிடையே காணப்பட்டாலும், ஊருணிக் குளத்தில் குடிநீர் ஒரு குறிப்பிட்ட இன மக்களுக்கு மட்டுமே உரிமை என்பதனைக் கண்ட தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஒருவிதமான எழுச்சியைக் காண முடிந்தது. இதனைத் தன் வாழ்நாளில் மிகக் கடுமையாக எதிர்க்க முனவந்தார் கக்கன். இறைவன் படைப்பில் அனைவரும் சமம் எனும் சமதர்மக் கொள்கையை நிலைநாட்டத் துடித்தார் கக்கன். ''ஊருணிக் குளத்தில் தாழ்த்தப்பட்ட மக்களும் குடிநீர் எடுக்க வேண்டும்'' எனும் எண்ணம் அவரது உள்ளத்தில் எழுச்சியைத் துவக்கிடச் செய்தது. அதற்காகக் கக்கனுடன் இணைந்து செயல்பட்டு வரும் நெருங்கிய தலைவர்களான ஒருங்கான் அம்பலம் மற்றும் கருப்பையா செட்டியார் ஆகியோருடன் கலந்து ஆலோசித்தார் கக்கன்.

''மக்கள் சமாதானத்துடன் வாழ வேண்டுமானால் சமத்துவம் தேவை. சமத்துவம் தேவை எனில் தீண்டாமை எனும் எண்ணத்தைத் தீயிட்டுக் கொழுத்த வேண்டும்'' என இரண்டு தலைவர்களும் அதிகமாகச் சிந்தித்துக் கக்கனுடைய சமுதாயப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்தனர்.

ஆதரவு தெரிவிக்கும் அதே தலைவர்கள் இக்கொடுமையை அதுவும் மனிதக் கொடுமையைத் தாங்களே முன்வந்து போராடவும் ஒப்புக்கொண்டனர். அனைவரும் ஒன்று கூடிப் பேசினார்கள். கக்கன் துணிந்துப் போராடவும் முன் வந்தார். அப்பொழுது ஊர்ப் பொதுச் சேவையில் ஈடுபட்டு வந்த குப்பையன் (குப்புசாமி) என்பவரின் தலைமையில் ஊருணியில் குடிநீர் எடுப்பது எனும் முடிவுக்கு வந்தனர்.

உறங்கிக் கொண்டிருந்த சமுதாயம் போராட முன் வந்தது. அமைதியான நடுக்கடல் கொந்தளிப்பது போல உரிமையைப் பெற்றிட முடியாமல் அமைதியாக வாழ்வினை அடிமை வாழ்வினை மேற்கொண்ட தும்பைப்பட்டி மக்கள் கொந்தளிக்க முன்வந்தனர். கக்கன் தலைமையில் ஒன்று கூடினர். ஏன்? எதற்கு என்ற கேள்வி கேட்கும் துணிவு மக்களுக்கு ஏற்பட்டது. கக்கனின் சமுதாய எண்ணமும், போராட்டக் குணமும் மக்களுக்கு அதிகமாகவே பிடித்திருந்தன. கக்கனின் நியாயமான பேராட்டத்திற்குத் தலைவர்கள் ஒருங்கான் அம்பலம், கருப்பன் செட்டியார் ஆகியோர் துணை

நின்றனர். ஊர்வலமாகச் சென்று குளத்தில் இறங்கிக் குடிநீர் எடுப்பதென முடிவு எடுக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களை ஓரணியாகத் திரட்டிய கக்கன் ஒருங்கான் அம்பலம், கருப்பன் செட்டியார் ஆகியோர் முன் செல்ல மக்களைத் திரட்டிக் கொண்டு எழுச்சியான எண்ணத்தோடு, உரிமையை மீட்டு எடுக்கவேண்டும் எனும் இலட்சியப் போராட்டத்தை வழிநடத்திச் சென்றார். எல்லோரும் எழுச்சிக்குரலோடு ஒற்றுமையாகத் தண்ணீர் எடுத்துக் கொண்டு திரும்பும்போது அம்பலவர் இனத்தைச் சார்ந்த மக்கள் மிகவும் தீவிர எண்ணத்தோடு கைகளில் கம்பி, கத்தி போன்ற ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு வெறித்தனமாகத் தடுத்து நிறுத்தினர். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களின் கைகளிலும், இடுப்பிலும், தலையிலும் தண்ணீர்க் குடங்கள் மட்டுமே இருந்தன. சமாதானத்தோடு வாழ நினைக்கும் மக்களான தாழ்த்தப்பட்ட மக்கள் கைகளிலே ஆயுதம் இல்லை. சமாதானத்தை எதிர்க்கும் வேறு இனத்தவர்களின் கைகளிலே கம்பு, கத்தி போன்ற ஆயுதங்கள். தீண்டாமையின் வெறித்தனம் எந்த அளவிற்கு மக்களைத் தூண்டிற்று என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். என்ன நடக்குமோ? என்ற அச்சம் ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஏற்பட்டது. காந்திய வழியில் மக்களை அமைதிப்படுத்தத் தலைவர்கள் முயன்றும் பயனில்லை. இருந்தாலும் ஒருங்கான் அம்பலம் மட்டும் துணிந்து காந்திய வழியில், அன்பான வழியில் போராளிகளுடன் பேச முன்வந்தார். அவர் பேசும்பொழுது:

> நானும் அம்பலவ சமுதாயத்தைச் சார்ந்தவன்தான். நம்மோடு வாழ்கின்ற மக்கள் கழிவு நீரைக் குடிப்பது எந்த விதத்தில் நியாயம்? இயற்கையால் வழங்கப்பட்ட நீரைக் கொடுக்க மறுப்பது எவ்வளவு பெரிய கொடுமை?

என அனைவரும் சிந்திக்கும் விதத்தில் பேசினார். கேட்டவர்கள் நிதானித்தார்கள். பின் சிந்தித்தார்கள். இருந்தாலும் இவரது பேச்சை எவரும் ஏற்றுக் கொண்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தாகத் தெரியவில்லை. இருந்தாலும் ஒருங்கான் அம்பலம் துணிந்து பேசினார்.

> இதோ நம்மோடு, நமக்காக உழைத்துக் கொண்டிருக்கும் இவர்களை வெட்டி உங்கள் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமானால்

> என்னை முதலில் வெட்டிவிட்டுப் பிறகு மற்றவர்களை வெட்டுங்கள்

என்று சொல்லிவிட்டுச் சாலையின் நடுவில் அமர்ந்தார். ஒருங்கான் அம்பலத்தின் எழுச்சிமிக்க, சகோதரத்துவ எண்ணப்படி பேசியதைக் கேட்ட கருப்பன் செட்டியார்,

> உங்கள் ஆயுதத்தால்தான் இந்தச் சமூகக் கொடுமைக்கு முடிவு என்று எண்ணினால் என்னைத் தீர்த்துக் கட்டிவிட்டுப் பிறகு தீர்வு காணுங்கள்

என்று எழுச்சியோடு பேசிவிட்டு அவரும் சாலையின் நடுவில் அமர்ந்து கொண்டார். அடுத்துப் போராட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தும் கக்கனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. தாழ்த்தப்பட்ட டிக்களின் உரிமைக்குக் குரல் கொடுக்க வந்த வேறு இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் நமது உரிமைக்குக் குரல் கொடுக்க வந்த தலைவர்களுக்கு எவ்விதமான ஆபத்தும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் அதிகக் கவனம் செலுத்திய கக்கன், போராட்டம் நடத்துபவர்களின் எண்ணத்தைத் திசைதிருப்பும் வகையிலே,

> இந்த இரு தலைவர்களை வெட்டுவதற்கு முன் என்னை வெட்டி விடுங்கள். எங்கள் சமுதாயத்திற்கு விடுதலை பெற்றுத்தர முன்வந்த தலைவர்கள் சாவதை நான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். அவர்களுக்கு முன் நான் மரணம் அடைய வேண்டும். இதோ என்னை முதலில் வெட்டி விட்டு என் தந்தைமார்களை வெட்டுங்கள்

என்று ஆவேசமாகப் பேசிவிட்டு அவரும் அவர்களுடனே சாலையில் அமர்ந்தார்.

போராட்டத்தை முன்னின்று நடத்தும் தலைவர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சூழ்நிலை போராட்டத்தைத் தூண்டும் நிலையில் இருப்பதை உணர்ந்த போராட்டத் தலைவர்கள் இன்று இரவு கிராமியப் பஞ்சாயத்தைக் கூட்டி நல்லதொரு முடிவு எடுக்கலாம் என்ற முடிவோடு போராட்டம் தடுத்து நிறுத்தப்பட்டது.

திட்டமிட்டபடி அன்று இரவு எல்லோரும் வியப்படையும் விதத்தில் பஞ்சாயத்து கூட்டப்பட்டது. இனக்கலவரமாக உருவெடுக்க வேண்டிய போராட்டம் பஞ்சாயத்துக் கூட்டத்தில் முடிவு எடுக்கும் நல்ல சூழ்நிலை ஏற்பட்டதை எண்ணிப் பலர் பெருமை அடைந்தார்கள். ஒருங்கான் அம்பலம், கருப்பன் செட்டியார் ஆகிய இருவரின் சமத்துவமான பேச்சும், சாதி ஒழிப்பிற்கான அவர்கள் முன்வைத்த வாதமும் அனைவரின் மனதையும் மாற்றின. கடைசியாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

> தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு மூலையிலும் சாதி இந்துக்கள் மறுமூலையிலும் குடிநீர் எடுத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது

சுதந்திரம் பெறுவதற்கு முன் இப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டதும், மக்களின் தலைவர்கள் மக்களின் வாழ்க்கையை மனதில் கொண்டு எடுத்த முடிவிற்கு மக்கள் பெருமை கொண்டனர். ஆனால் இன்றைய நிலையில் அனைத்து மக்களும் வேறுபாடின்றி ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றார்கள். தீண்டாமை ஒழிப்பு என்பது அனைத்து இன மக்களின் ''மனமாற்றத்தால்'' ஏற்படவேண்டியது என்பதனைக் கக்கன் தன் வாழ்க்கையில் நிரூபித்துள்ளார் என்பதுதான் உண்மை. அதே நேரத்தில் ஒருங்கான் அம்பலம், கருப்பன் செட்டியார் போன்ற நல்லவர்கள் அனைத்து இனத்திலும் இருந்துவிட்டால் தீண்டாமை எனும் கொடிய நோயை ஒழித்துவிட முடியும் என்பது உண்மை.

## கோயில் நுழைவு

> மதம் எதுவானாலும் மனிதன் நல்லவனாய் இருக்க வேண்டும். ஒரு சாதி, ஒரு மதம், ஒரு கடவுள்— மனிதனுக்கு எனும் கொள்கையை இம்மண்ணில் விதைத்தவர் கேரள மண்ணில் பிறந்த மகான் ஸ்ரீ நாராயண குரு ஆவார்.
>
> ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' எனும் கொள்கையும் தமிழ் மண்ணில் விதைக்கப்பட்டது தான்.
>
> கடவுளை எங்கும் தேடாதே, அவர் இருதயத்திற்குள்ளே இருக்கிறார். ஒவ்வொருவரும் தன் இதயத்தைச் சுத்தமாக வைத்துக் கொண்டாலே போதும்

எனும் இறை தத்துவம் ஸ்ரீ நாராயணகுரு மூலமாக இந்நாட்டிற்குக் கிடைத்த வேதமாகும்.

ஆக இறைவன் என்பதும், கடவுள் என்பதும், அருளாளர் என்பதும், இரட்சகர் என்பதும் மனிதனால் அழைக்கப்பட்ட பெயர்களே தவிர வேறொன்றில்லை. ''அன்பே கடவுள்'' என்பதுதான் உண்மை. இந்த அன்பான கடவுளைத் தரிசிப்பவர்கள் ஏனைய மக்களிடம் அன்பாக இருந்தாலே போதும்.

என் மீது அன்பு செலுத்துவதைப் போலப் பிறரிடத்திலும்
அன்பாய் இருங்கள்

என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் வேத அன்பே கடவுளுக்குச் சமமானதாகும்.

கோயில் என்பது கடவுளை வணங்கும் இடமாக இருக்க வேண்டுமே தவிரப் பூசாரிகளின் புகலிடமாக இருக்கக்கூடாது. கருவறை என்பது கடவுளின் இடமாக இருக்க வேண்டுமே தவிரக் கற்பழிக்கப்படும் கூடாரமாக அமைந்துவிடக் கூடாது போன்ற சிந்தனைக் கருத்துக்கள் மக்களிடையே பரப்பப்பட்ட காலம்.

கோயிலைக் கட்டுவதற்காகத் தலையில் மண் சுமந்து, கல் சுமந்து நெற்றியின் வியர்வை நிலத்திலே சிந்தும் அளவிற்கு உழைக்கும் கட்டடத் தொழிலாளி, அதே கோவில் கும்பாபிஷேகம்



மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் தலைவர்கள் பங்கேற்பு

நடக்கும் போது சாதியின் பெயரால் அந்தத் தொழிலாளியை உள்ளே செல்வதை மறுப்பது எந்த அளவிற்கு நியாயம் என வைத்தியநாத ஐயர் போன்ற சமுதாயச் சான்றோர்கள் தட்டிக் கேட்டனர்.

கோயிலின் கருவறை கட்டும்போது கல் சுமக்கும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பெண், தான் தீட்டுப்பட்ட காலத்திலும் கருவறைக்குக் கல் சுமந்து சென்று கட்டும்போது கருவறை தீட்டுப்படவில்லை. ஆனால் கோயில் திறக்கும்போது பயபக்தியுடன் புத்தாடை அணிந்து, சுத்தமாகக் கற்பூரம், தேங்காய் எடுத்துக்கொண்டு பூசை செய்யச் செல்லும் போது ‘‘தீட்டுப்பட்டுவிடும்’’ என்ற சொல்லால் அவர்களை ஒதுக்குவது எந்த விதத்தில் நியாயம் எனத் தட்டிக் கேட்டனர்.

தேசியக் காங்கிரஸ் இயக்கம் விடுதலை எனும் வேட்கையில் இறங்கும் போது கோயில் நுழைவு என்பது அனைவருக்கும் சமமானது என்ற கொள்கையை ஏன் மக்கள் மத்தியில் திணிக்கக் கூடாது? என்ற கேள்வியை வைத்திய நாத ஐயர் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டங்களில் எழுப்பினார். கோயிலுக்குள் நுழைவதால் விடுதலைப் போரில் பாதிப்பு ஏற்பட்டுவிடும் எனவும் காங்கிரஸ் கட்சி நினைப்பதாக ஐயர் குறை கூறினார். இந்தியத் திருநாட்டில் நம்முடன் வாழ்கின்ற இந்தியனுக்கு நாமே விடுதலை கொடுக்காமல் அடிமையாக வைத்துக் கொண்டு, ஆங்கிலேயர்களிடம் விடுதலை கேட்பது விந்தையாக இருப்பதாகவும் ஐயர் கேள்வி எழுப்பினார்.

காந்தியின் தலைமையில் விடுதலைக்குக் குரல் கொடுக்கும் நாம் அவரது தலைமையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலை கொடுக்க மறுக்கும் போது பின் எவர் தலைமையில் விடுதலை கிடைக்கும் எனவும் அனைவரையும் சிந்திக்கவைத்தார். காங்கிரஸ் கட்சியின் ஒப்புதலைப் பெற்றபின்பே போராட்டம் நடத்த முடிவு எடுத்த வைத்திய நாத ஐயரின் குரலுக்கு எதிர்ப்பு கிடைத்ததே தவிர ஆறுதல் வார்த்தைகள் எவரிடமும் வரவில்லை. இதனால் கலவரங்கள் வெடித்தாலும் பரவாயில்லை கோயில் நுழைவுப் போராட்டம் நடத்துவதென முடிவு எடுத்தார். காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் வைத்தியநாத ஐயரின் முடிவிற்கு அச்சுறுத்தலைக் கொடுத்தார்கள். எதற்கும் துணிந்த வைத்தியநாத ஐயர் சமூக நீதிக்குக் குரல் கொடுப்பதென முடிவு எடுத்தார்.

1. சேவாலய ஊழியர் பி.ஆர். பூவலிங்கம்
2. ஆலம்பட்டி சுவாமி முருகானந்தம்
3. விருதுநகர் நகராட்சி உறுப்பினர் எஸ்.எஸ். சண்முக நாடார்
4. காங்கிரஸ் கட்சியின் மாவட்ட உறுப்பினர் கக்கன்

போன்ற தனது ஆதரவாளர்களை ஒருங்கிணைத்து, அதிக நேரம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின் ஆலயப் பிரவேசம் செய்திட நாள் குறித்தார். இவர்களது தீவிரமான முடிவினை அறிந்ததும் காங்கிரஸ் கட்சியின் மேலிடம் வைத்தியநாத ஐயரை அழைத்து அச்சுறுத்தல் செய்ததோடு ஆலயப் பிரவேசம் செய்வதைக் கைவிடுமாறு வற்புறுத்தியது.

## முதல்வர் இராஜாஜியின் எதிர்ப்பு

இக்காலக்கட்டத்தில் அன்றைய மதராஸ் மாகாண முதலமைச்சராக மூதறிஞர் இராஜகோபாலாச்சாரியர் பதவியில் இருந்தார். ஆலயப் பிரவேசம் குறித்துத் தமிழகமெங்கும் மக்களிடையே மாபெரும் எழுச்சி ஏற்பட்டது. ''ஆலயப் பிரவேசத்திற்கு அனுமதி வழங்கவில்லை என்றும், இப்பிரச்சினை குறித்துச் சட்டசபையைக் கூட்டிச் சட்டம் இயற்றிய பிறகே இது சம்பந்தமாக முடிவு எடுக்க முடியும்'' என்ற முதல்வரின் வாதத்தை வைத்தியநாத ஐயர் ஏற்றுக் கொள்ளவில்லை. அரசு என்பது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும், எங்களுக்காகத்தான் அரசாங்கமே தவிர அரசாங்கத்திற்காக நாங்களில்லை என்பதைத் திட்டவட்டமாகக் கூறினார்.

சமுதாயத் தலைவர்களின் அச்சுறுத்தல் ஒருபக்கம், கட்சியின் எதிரான கொள்கை ஒரு பக்கம், காவல்துறையின் பயமுறுத்தல் ஒருபக்கம் இப்படி பல பக்கங்களிலிருந்து அச்சுறுத்தல் வந்தபோதும் ''மனிதனை மனிதனாக மதிக்காத நாடு நாடாகாது'' என்பதை உணர்ந்து ஆலயப் பிரவேசம் துணிந்து நடத்திடப் போராட்டத்தினர் முடிவு எடுத்தனர்.

1939ஆம் ஆண்டு ஜூலை மாதம் எட்டாம் நாள் வரலாற்றில் இடம்பெறும் நாளாக மாறியது. ''இறைவன் முன் அனைவரும் சமம்'' என்பதனை நிரூபிக்க மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் நுழைந்தனர். பகலில் இந்தக் கோயில் நுழைவு நடத்தியதால்

காவல்துறையின் தடைகள் ஏராளமாகவே இருந்தன. பேராட்டத் தளத்தில் எடுத்த முடிவின்படி இரவு நேரத்தில் கோயிலுக்குள் நுழைவதென முடிவு எடுத்து, நடு இரவு சரியாக 1 மணிக்குக் கோயிலுக்குள் போராட்ட வீரர்கள் நுழைந்தார்கள். கோயிலுக்குப் போகக் கூடாது என்று எந்தெந்தச் சமுதாயத்திற்குத் தடை விதிக்கப்பட்டதோ அத்தனை தடைகளையும் தூக்கி எரிந்துவிட்டு, சுதந்திரமாக நுழைந்தனர். இதில் முக்கியப் பங்கினை வகித்த பெருமை போராட்டத் தளபதி கக்கனையேசாரும்.

சூத்திரர்கள் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் நுழைந்து விட்டதால் மதுரை மீனாட்சி அம்மனே கோயிலை விட்டு வெளியே சென்று விட்டதாகக் கோயில் பூசாரிகள் கட்டுக் கதைகளை வெளியிட்டார்கள். அதோடு மட்டுமின்றி மதுரை மீனாட்சி அம்மன் கோயில் வளாகத்தில் எழுந்தருளியுள்ள சொக்கநாதர் சன்னதியில் வழிபாட்டைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். இந்தச் செய்தி காட்டுத்தீப் போல மாநில மெங்கும் பரவியது.

அன்றைய முதல்வர் இராஜாஜி அவர்கள் மதுரை மீனாட்சி உண்மையிலேயே கோயிலிலிருந்து வெளியேறி விட்டாளா? இல்லையா? எனும் உண்மையை அறிந்து கொள்ளக் காமராசர் அவர்களை அழைத்துக் கொண்டு ஆலயத்திற்குள் சென்றிருக்கிறார். அப்பொழுது இராஜாஜி, காமராசரைப் பார்த்து, ''தற்போது மீனாட்சி எப்படி இருக்கிறாள்? ஆலயத்தில் இருக்கிறாளா? போய்விட்டாளா? என்று கேட்டிருக்கிறார். அதற்குக் காமராசர் உண்மையை அறிந்து கொண்டு,

> இப்போதுதான் மீனாட்சி மகிழ்வோடு இருக்கிறாள். தான் பெற்ற பிள்ளைகளைப் பார்க்கத் தடைவிதித்திருந்த துரோகிகள் விலகியதால் மீனாட்சி மகிழ்வாக இருக்கிறாள்

என்று காமராசர் கூறினாராம் (குமரி அனந்தன் பேச்சு). இப்போராட்டத்தில் கக்கன் மாபெரும் பங்கேற்றுக் கொண்டார் என்பதுதான் உண்மை. கக்கனின் செயல்பாடு யாருடைய மனத்தையும் புண்படுத்தாமல் பலரைச் சிந்திக்க வைத்தது என்றே சொல்லலாம். இந்த ஆலயப் பிரவேசப் போராட்டம் எதனை நமக்கு எடுத்துக்காட்டுகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்த்தால் கீழ்க்கண்ட முடிவுகளை நாம் பெற்றிருக்கின்றோம் என்பதுதான் உண்மை.

## 1. சமுதாய இழிவு அகற்றல்

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயப் பிரவேசம் என்பது கடவுள் முன் அனைவரும் சமம் என்பதனை நிலைநாட்டுவதுதான். தீண்டப்படாத மக்களைக் கோயிலுக்குள் சேர்த்தால் கோயிலும் தீட்டுப்பட்டுவிடும், கோயிலுக்குள் இருக்கும் சுவாமிக்கும் தீட்டு ஏற்பட்டுவிடும் எனும் மூடர்களின் எண்ணம் ஒழிக்கப்பட்டது. கடவுள் முன் அனைவரும் சமம் என்பதோடு தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலுக்குள் சென்று கடவுளை வணங்குவதில் எவ்விதத் தடையும் வந்துவிடக்கூடாது என்பதில் கக்கன் கவனமாக இருந்தார். பல்லாண்டுக் காலம் தூரத்திலிருந்து கொண்டு மீனாட்சி அம்மனைத் தரிசித்தவர்கள் இப்போராட்டத்தால் தன் தாயை நேரில் துதிக்கும் பெருமை கிடைத்தது பாராட்டப்படவேண்டிய தாகும். கக்கன் இனத்தின் உரிமைக்குக் குரல் கொடுத்தார். பல்லாண்டுகள் மறுக்கப்பட்ட உரிமையைப் பெற்றுத் தந்த பெருமை கக்கனுக்குக் கிடைத்தது.

## நன்றியுள்ள தொண்டன்

இப்படிப்பட்ட கோயில் நுழைவுப் போராட்டத்தில் வைத்தியநாத ஐயருக்கு நம்பிக்கையுள்ள தொண்டன் கக்கன் கிடைத்தார். அதோடு தலைவருக்குப் பெருமை தேடித்தருவது தொண்டனின் கடமையாகும். அந்த வகையில் ஒரே கட்சியில் இருவரும் அங்கம் வகித்திருந்தாலும் கட்சியின் கொள்கைகளைவிட, காட்சியைத் தாங்கி நிற்கும் சமுதாயத்திற்கு வெற்றி கிடைக்கவேண்டும். எனவே தலைவரும், தொண்டரும் இணைந்து கொள்கை அளவில் ஒன்றுபட்டு நடத்திய போராட்டத்திற்கு வெற்றி கிட்டியது. இந்தப் போராட்டத்தின் மூலமாகக் கக்கன் மீது அதிக நம்பிக்கை ஐயருக்குத் தோன்றியதே, தன் தலைவருக்குப் பெருமை கிடைக்கப் பாடுபடுவதே தொண்டனின் கடமை என்பதைக் கக்கன் நிரூபித்துவிட்டார். இப்போராட்டத்தில் ஐயர் தோல்வி கண்டிருந்தால் அடுத்தடுத்து நடைபெற இருக்கும் பல்வேறு போராட்டங்களும் தோல்வியைத்தான் தழுவி இருக்கும். ஆனால் முதல்வர் இராஜாஜி அவர்களுக்கு எதிராகக் குரல் கொடுத்து ஊமைச் சமுதாயத்தின் இலட்சியக் கொள்கை வெற்றிபெறக் கக்கனின் பெரும் பங்கு காரணமாகத் திகழ்ந்ததை வரலாறு பாராட்டுகின்றது.

## குழந்தை உள்ளம் கக்கன்

கடவுளும் குழந்தையும் ஒன்று என்பார்கள். கடவுளிடம் யார் வந்தாலும் வணங்கலாம். காரணம் கடவுளுக்கு எல்லோரும் வேண்டியவர்கள். யார் வேண்டுமானாலும் உரிமை கொண்டாடலாம். சாதி, மதம், நல்லவர், கெட்டவர் என்பது கடவுளிடம் இல்லை. கடவுளின் எண்ணமெல்லாம் நம்மை நோக்கி வருபவர்களுக்கு நல்லதைச் செய்யவேண்டும் என்பதாகும். எனவேதான் மக்கள் வாழ்கின்ற இடமெல்லாம் கோயில்கட்டிக் கடவுளை வைத்து வணங்குகின்றார்கள்.

குழந்தைகளும் அப்படித்தான். யார் கூப்பிட்டாலும் குழந்தைகள் சிரித்துக் கொண்டே போய்விடும். குழந்தைகளுக்கும் பாகுபாடு கிடையாது. கள்ளம் கபடமற்ற நல்ல உள்ளம் குழந்தைகளுக்கு உண்டு. தவறு என்பது குழந்தைகள் செய்வது கிடையாது. இதே குழந்தை உள்ளம்தான் கக்கனிடம் இருந்தது. தன்னை நேரில் சந்தித்து எந்த உதவி கேட்டாலும் செய்துவரும் நல்ல குணம். விரோதிகளைக் கூடத் தனது புன்சிரிப்பால் கவர்ந்துவிடும் தனித் தன்மைகொண்டவர்.

இவருக்கு அனைவரும் சமமே. அரசியல் தொண்டர்கள், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் இவருக்குச் சமம்தான். இவரிடத்தில் உண்மை வாழ்வு இருந்தது. உருக்கமான எண்ணம் இருந்தது. உதவி செய்யும் கரம் இருந்தது. சிரிப்பால் கவரும் ஆற்றல் இருந்தது. பணிவு இருந்தது. பண்பு இருந்தது. நட்பின் இலக்கணம் இருந்தது. கருணை உள்ளம் அதிகமாக இருந்தது. அதே நேரத்தில் மறதியும் அதிகமாக இருந்தது. ஆம்? இவர் ஒருவரிடம் பல மணிநேரம் பேசிக்கொண்டிருப்பார். திடீரென்று எப்போது வந்தீர்கள் என்று கேட்பார். முதிரான வயதில் கக்கன் குழந்தை உள்ளம் போல் மறதி ஏற்பட்ட காரணத்தால் யார் நல்லவர்? யார் கெட்டவர்? என்று தீர்மானிக்கும் குணம் அவரிடம் இல்லை. யார் எதைக் கேட்டாலும் கொடுத்துவிடுவார். இவரைப் பலர் ஏமாற்றினார்கள் என்பதற்கும் பல ஆதாரங்கள் உண்டு.

இவரது காலத்தில் நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட வீரர்களுக்கு ஒய்வு ஊதியம் கொடுக்கும் அரசு ஆணை கொண்டுவரப்பட்டது. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது நாடறிந்த விடுதலை வீரருடன் சிறையில் இருந்ததாகச் சான்று

பெற்றால்தான் இந்த ஓய்வு ஊதியத்திற்கு அவர்கள் விண்ணப்பம் செய்ய முடியும்.

இந்த நிலையில் கக்கன் நாடறிந்த சுதந்திரப் போராட்ட வீரர். ஜெயிலில் அடைக்கப்பட்டு அவர் அடைந்த துன்பங்களை ஏற்கெனவே பார்த்தோம். எனவே சுதந்திரப் போராட்டத் தியாகி கக்கன் சான்றிதழ் கொடுத்தால் அவர்களுக்கு ஓய்வு ஊதியம் என்ற நிலை இருந்தது. கக்கனின் ஞாபக மறதியை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு பலர் இவரிடம் சான்றிதழ் பெற்றுக் கொண்டனர். இவரும் யாரெல்லாம் கதர்த் தொப்பி, கதராடை அணிந்து கொண்டு நானும் சிறையில் இருந்தேன் என்று சொல்பவர்களுக்கு உடனே நற்சான்றிதழ் வழங்கிவிடுவார். இவர் வழங்குவது சரிதானா? என்பதனை ஆய்வு செய்ய அரசு அதிகாரிகள் முன்வந்தனர்.

அப்போதுதான் பலர் கக்கனின் மறதிக் குணத்தைப் பயன்படுத்திக் கொண்டு பொய்யான சான்றிதழ் வழங்கப்பட்டிருந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டு அதன் பிறகு பலருக்கும் நற்சான்றிதழ் கொடுக்க வேண்டாம் என்று சொன்னதாகவும், அதன் பிறகு கக்கன் சொல்வதையும் நிறுத்திக் கொண்டதாகவும், இதனால் உண்மையாகவே சிறைசென்ற தேசியப்பற்று வீரர்கள் பாதிக்கப்பட்டதாகவும் அறிய முடிகின்றது.

கக்கனின் குழந்தை உள்ளத்தைக் கதராடை அணிந்த காங்கிரஸ் தொண்டர்களே தவறாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் எனில் கதராடைக்குள் கருப்பு ஆடுகளும் இருந்திருக்கின்றன என எண்ணத் தோன்றுகிறதல்லவா?

## இராஜாஜியின் குலக்கல்விக்கு எதிர்ப்பு

இந்தியா சுதந்திரம் பெற்றதும் முதல் தேர்தல் நாட்டில் நடைபெற்றது. இதில் தமிழகத்தில் முதன் முதலாகக் காங்கிரஸ் கட்சிக்கு அமோகமான வெற்றி கிடைத்து, முதன் முதலாக முதலமைச்சராகப் பதவி வகித்தவர் இராஜகோபாலச்சாரியர். இவர்தான் இந்திய நாட்டின் உயர் பதவியாக அக்காலக் கட்டத்தில் கருதப்பட்ட கவர்னர் ஜெனரல் பதவியில் இருந்தார். இராஜாஜி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் பல்வேறு சீர்திருத்தக் கொள்கைகளை மக்களின் நலனுக்காகக் கொண்டுவந்தார். அவர் கொண்டு வந்த சீர்திருத்தங்களில் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத சீர்திருத்தம்தான் குலக்கல்வி சீர்திருத்தமாகும்.

பகுதி நேரம் பள்ளிப்படிப்பு
மீதி நேரம் குலக்கல்வி

எனும் திட்டமாகும். இந்தத் திட்டத்தை மக்கள் கடுமையாக எதிர்த்தார்கள். காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும், தொண்டர்களும் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இதன் மூலம் தோட்டி வேலை செய்யும் மகன் தோட்டி வேலைதான் செய்ய வேண்டும் எனும் அவல நிலை இராஜாஜி காலத்தில் ஏற்பட்டது.

மந்திரம் சொல்லும் பிராமணர் இனத்தைச் சார்ந்தவன் குழந்தை குலக்கல்வியைக் கற்றாக வேண்டும் எனும் நிலையைக் கொண்டுவந்தார். இப்பேற்பட்ட குலக் கல்வித் திட்டத்தால் மாபெரும் பாதிப்பு தீண்டப்படாத மக்களின் வாழ்வில் ஏற்பட்டது. இழிவான தொழிலைச் செய்பவன் மகன் இழிவான தொழிலைத்தான் கற்றுக்கொள்ள வேண்டும். அவன் ஐ.ஏ.எஸ். போன்ற உயர் பதவிகளுக்குத் தகுதியான படிப்புப் படித்துவிடக் கூடாது என்ற கொடுமையான குலக்கல்வி திட்டத்தைக் கக்கன் போன்றவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள்.

காங்கிரஸ் கட்சியை மக்கள் வெறுக்கும் அளவிற்கு இக்கல்வித் திட்டம் காணப்பட்டது. கக்கன் இதனை எதிர்த்துத் தீவிரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டதால் காங்கிரஸ் தலைவர்கள் நல்ல முடிவு எடுக்கத் திட்டமிட்டனர். தமிழ்நாடு முழுவதும் உருவாக்கப்பட்ட எதிர்ப்புகளின் பயனாகவும், கட்சிகள் தனக்கு எதிராக எடுக்கப்பட்ட முடிவுகளின் பயனாகவும் தமிழ்நாட்டின் முதல் அமைச்சர், மக்களால் ஒட்டுப்போட்டுத் தேர்ந்தெடுக்கப்படாத முதல் அமைச்சர் தானே முன்வந்து முதலமைச்சர் பதவியை 1954ஆம் ஆண்டு இராஜினாமா செய்ய நேரிட்டது. இவரது பதவி விலகல் மக்கள் மத்தியிலே எவ்விதமான எதிர்ப்போ பாதிப்போ ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

ஆக, காங்கிரஸ் கட்சியின் கொள்கைகள் மக்களுக்கு எதிராக இருக்கும் பட்சத்தில் மக்கள் எதிர்ப்பதோடு, காங்கிரஸ் கட்சிகளுக்குள் இருக்கும் மக்களின் நலனை அதிகமாக விரும்புகின்ற கக்கன் போன்ற சமுதாயச் சிந்தனையாளர்களும் எதிர்த்தனர் என்பதுதான் சான்று. கக்கனைப் போன்று எத்தனை தலைவர்கள் இன்றைய அரசியல் கட்சிகளில் அங்கம் வகிப்பவர்கள் எதிர்த்துக் குரல் கொடுக்கின்றார்கள். கட்சித் தலைவர் எதைச் சொன்னாலும் அதற்குக் கைதூக்கும் ஜால்ராக்களைத் தான் பார்க்கமுடிகிறது.

தேசப் பற்றும், சமுதாயப்பற்றும் கக்கனுக்கு இரண்டு கண்களாகவே காணப்பட்டன. இதில் ஒரு கண் பறித்தாலும் மறுகண்ணிற்கு அந்தப் பாதிப்பு ஏற்படும் என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாகவே கக்கன் தன் வாழ்க்கையில் காணப்பட்டார். கக்கன் எதைச் செய்தாலும் அது சரியாகத்தான் இருக்கும் என்றும் பலர் பாராட்டியதையும் காணமுடிகின்றது.

இராஜாஜியின் குலக்கல்வித் திட்டம் கேட்பாரற்ற குழந்தையாகவே தமிழக மண்ணில் காணப்பட்டது.

**கக்கனும் இந்தி எதிர்ப்பும்**

இந்தியா சுதந்திரம் பெற்றபின் நாட்டின் வளர்ச்சியில் அதிகமான ஈடுபாடு கொண்டது. இந்திய மக்களுக்குத் தேவையான ''வேற்றுமையில் ஒற்றுமை'' எனும் தேசப்பற்றுக் கொள்கையை முன்வைத்து உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி, இந்திய மக்களின் அடிப்படை ஜீவாதார உரிமைகளில் முக்கியமாகக் கருதப்படும் 'ஆட்சிமொழிச் சட்டம்' பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு, இந்தியர்களை ஒன்று இணைக்கப் பொதுவான மொழியாக இந்தி கொண்டுவரப் பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்தி மொழிக்குப் பல மாநிலங்களில் எதிர்ப்பு வந்தாலும் தமிழகத்தில்தான் உச்சக்கட்ட எதிர்ப்பு தோன்றியது. இத்தீர்மானம் தோல்வியைத் தழுவவேண்டிய சூழ்நிலையில் ஒரே ஒரு வாக்கு வேறுபாட்டில் வெற்றியைக் கண்டது.

இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தின் முதல்வராக இராஜாஜி பொறுப்பேற்றார். எப்படியாவது மைய அரசின் திட்டத்தைத் தமிழகத்தில் நிறைவேற்ற வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்ட இராஜாஜிக்குப் படுதோல்வியே கிடைத்தது. ஆம்! தமிழகம் இந்தி மொழி வருகையால் சூடு பிடித்தது. எதிர்ப்புக் கனலைக் கக்கியது. தமிழகமே காட்டுத்தீயென மாநில முழுவதும் எரியும் ஜூவாலையைக் காண முடிந்தது. தமிழர்களின் ஒட்டுமொத்த சக்தியும் ஓரணியில் திரட்டப்பட்டுத் தாய் மொழி தமிழ் இருக்கையில் அந்நிய மொழி இந்திக்கு இங்கு என்ன வேலை? எனும் கேள்வி சிந்தனை யாளர்களை, கல்விமான்களை, மாணவ மாணவியரைக் கேட்கத் தூண்டியது. எதிர்ப்பு பலமாக இருந்த காரணத்தால் இராஜாஜியின் திட்டம் தோல்வியில் முடிந்து அந்த முயற்சி முற்றிலும் கைவிடப்பட்டது. இருந்தாலும் மறைமுகமாகப் பள்ளியில் இந்தி ஒரு விருப்பப்

பாடமாகவே நடைமுறையில் இருந்து வந்தது. இந்தியில் எடுக்கப்படும் மதிப்பெண் மாணவர்களின் வெற்றி தோல்விக்குக் கணக்கிடப்படாமல் 'விருப்பப்பாடமாகவே' பின்பற்றப்பட்டது.

இராஜாஜிக்கு அடுத்து, கர்மவீரர் காமராசர் அவர்கள் தமிழகத்தின் முதல்வர் பொறுப்பினை ஏற்றபின்பும் இந்தி மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுவரக் கூடிய சூழ்நிலை உருவாகவில்லை. அரசு ஆணையும் கொண்டுவரப்படவில்லை. காமராசர் அவர்கள் மக்களின் விருப்பத்கேற்ப எதிராக எந்தத் திட்டமும் கொண்டுவரக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிமுறை மக்களுடைய ஆட்சிமுறையாக இருக்க வேண்டும் என்றும், அடிமை விலங்கினை முத்தமிட்டு, கண்ணீரோடு வாழ்ந்த மக்களுக்கு காங்கிரஸ் ஆட்சி நல்லதைச் செய்யவேண்டும் எனும் மனிதநேயச் சிந்தனையோடு ஆட்சிக் கண்டார். 1962 வரையில் தமிழகத்தில் 'பொது மொழியாக ஆங்கிலமே பின்பற்றப்பட்டு வந்தது. ஆட்சிமொழி ஆங்கிலம் என்பதனைக் காமராசர் தனது பதவி விலகும் காலம்வரை பின்பற்றிவந்தார். இதுவும் சட்டமன்றத்தில் எவ்விதமான தீர்மானமும் கொண்டுவரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1963ஆம் ஆண்டு பக்தவச்சலம் முதல்வர் பொறுப்பேற்றது இந்திதான் ஆட்சிமொழி எனும் தீர்மானம் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இப்போதுதான் அமைதியாக இருந்த தமிழகமே கொந்தளிக்க ஏற்பட்டது. நடுக்கடல் கொந்தளித்தால் சூறாவளிக் காற்று வீசுவதைப் போல் 'இந்தி எதிர்ப்பு' எனும் காற்று தமிழகம் முழுவதும் வீசியது.

## கக்கனின் எதிர்ப்புக்குரல்

''இந்திதான் ஆட்சிமொழி'' எனும் அரசாணை வெளியிடக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை எதிர்த்து அப்போதைய சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர், கடுமையாகப் பேசினார். அன்றைய தினம் அவர் பேச்சில் ஏற்பட்ட அனல்தான் இன்றைய தினத்திலே குளிர்ச்சி ஆகித் ''தமிழ்ச் செம்மொழி'' எனும் உயர் நிலையை அடைந்துள்ளது என்று பெருமையாகச் சொல்லலாம்.

'இந்தி மொழியை ஆட்சிமொழியாகக் கொண்டுவரச் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன் ஆளுங்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் விவாதத்திற்கு கொண்டு வந்தனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கக்கன், இந்தி மொழிப் பிரச்சினையைத் தமிழகத்தில் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருந்தார். இந்தி மொழிக்குத் தமிழகமெங்கும் எதிர்ப்பு இருக்கையில் மொழிப் பிரச்சினை கையாள்வது சிரமமாகவே இருக்கும். மக்கள் மத்தியில் காங்கிரஸ் கட்சிக்குச் செல்வாக்கு இழக்கப்படும் நிலை ஏற்படும் என்பதில் கக்கன் தன் அமைதியான பேச்சாலே பலரை இழுத்தார்.

இந்தி மொழியால் தமிழகத்தில் ஒருபக்கம் மக்களின் எழுச்சி மறுப்பக்கம் கட்சிக்கு அவப் பெயர். கக்கன் இருதலைக் கொள்ளி எறும்பு போலவே தன் நிலைப்பாட்டினை மேற்கொண்டாலும் பொதுமக்களின் நலமே முக்கியம் என்பதையும் உணர்ந்தார். இந்தி எதிர்ப்புக்குக் கக்கன் பக்கபலமாக அமைச்சர்கள் கூட்டத்திலும், சட்டமன்ற வல்லுநர்கள் கூட்டத்திலும் பேசியது மக்களின் கவனத்திற்கே வரவில்லை. கட்சியின் கட்டுப்பாடும், கோட்பாடும் எண்ணங்களும் கக்கனின் எழுச்சி எண்ணங்களுக்குத் தடைபோட்டன. பொதுக் கூட்டங்களில் எடுத்துச் சொல்லவும் முடியவில்லை.

## இந்தி எதிர்ப்புப் போராட்டம்

ஆட்சி மொழித் தீர்மானமானது சட்ட வடிவம் பெற்றதும் மக்களின் எழுச்சி வங்கக் கடலில் சீறி எழும் கடல் அலைகளைப் போலவே சீற்றத்துடன் காணப்பட்டது. எதிர்க் கட்சியாக மட்டுமல்ல தமிழைக் காத்திடவே உதயமான திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியினர் தமிழக மெங்கும் போராட்டக் களத்தில் குதித்தனர். தமிழகமே கொந்தளித்தது. தமிழ் அறிஞர்கள், கல்விமான்கள், பொதுமக்கள், மாணவர்கள், அரசு ஊழியர்கள் போன்ற பலரும் தன்மானப் பிரச்சினையாக ஏற்று எதிர்த்தனர். போராட்டத்தை அரசால் தடுக்க முடியவில்லை. காரணம் இது கோரிக்கைப் போராட்டமில்லை. மனிதப் பிறப்புரிமைக்கு எதிரான போராட்டமாகவே விளங்கிற்று.

குறிப்பாக மதுரை, திருநெல்வேலி ஆகிய தென்மாவட்டங்களில் போராட்டம் வலுவடைந்தது. தமிழ் வளர்த்த

புண்ணிய பூமியாம் மதுரை மண்ணில் போராட்டம் தினம் வலுப்பெற்றது. அரசாங்கத்தால் எதுமே செய்ய முடியாத நிலை.

மக்களால் போற்றப்பட்டுவரும் மறைமலையடிகள், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன், தமிழ்த் தென்றல் திரு.வி.க., ஈ.வே.ரா. பெரியார், அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், கருமுத்து தியாகராயச் செட்டியார் போன்றவர்கள் இந்தி எதிர்ப்புக்குக் குரல் எழுப்பினார்கள். இந்தியின் நுழைவு எப்பக்கம் வந்தாலும் அதனைத் தடுத்து நிறுத்த இவர்கள் தயார் நிலையில் இருந்தார்கள்.

**கக்கன் மதுரைக்கு வருகை**

தமிழகமே இந்தி எதிர்ப்புப் போராட்டக் களமாகக் காட்சியளித்த வேளையில் கக்கன், மதுரை மாநகரில் நடைபெறும் போராட்டத்தை நேரில் பார்வையிட வருகை தந்தார். காங்கிரஸ் கட்சி மீது போராட்டக்காரர்கள் அவநம்பிக்கை கொண்டார்கள். இந்தி எதிர்ப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து கக்கனைச் சூழ்ந்து கொண்டு குரல் எழுப்பினார்கள். கக்கன் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தார். 1965 சனவரி இருபத்தாறாம் நாள் கக்கன் வாழ்வில் மறக்க முடியாத நாளாகக் கருதப்பட்டு வருகின்றது. பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் எழுச்சிக்குரல் கக்கனை அதிகமாகவே சிந்திக்கவைத்துள்ளது. காரைக்குடி விருந்தினர் மாளிகையில் 1965 பிப்ரவரி மாதம் 6ஆம் தேதி பொது மக்களும், மாணவர்களும் ஒன்றிணைந்து குரல் கொடுத்ததோடு கல்வீசியும் தாக்கினார்கள். வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. நிலமை மோசமடைந்த காரணத்தால் காவல்துறை தடியடி நடத்திப் பொதுமக்களைக் கலைந்து செல்லச் செய்தனர்.

இந்திப் போராட்டம் மிகவும் மோசம் அடைந்த காரணத்தால் துப்பாக்கிச் சூடு நடந்ததாகவும் அறிய முடிகின்றது. மக்கள் மீது அதிகமான பாசம் கொண்ட கக்கன் காலத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தது குறித்து இன்னும் மக்கள் மனதில் கவலையாகவே காணமுடிகின்றது. துப்பாக்கிச் சூடு நடத்த ஏவிய காவல்துறை அதிகாரி யார்? என்பது இன்றும் கேள்வியாகவே இருக்கும் பட்சத்தில் கக்கன் எப்படியும் காரணமாகியிருக்க மாட்டார் என்ற நல்ல எண்ணமும் நல்லவர்கள் மத்தியில் இருக்கத்தான் செய்கிறது.

## சர்வோதயம்

கக்கன் காந்தியடிகளின் தீவிரமான தொண்டர் மட்டுமல்ல, கொள்கைவாதியும் கூட. காந்திஜியின் சமய மார்க்கத்தை மிகவும் கவனமாகப் பின்பற்றினார். ‘சத்தியம்’ என்ற வார்த்தையை இந்நாட்களில் பலர் வேடிக்கையாகவே பயன்படுத்துகின்றனர். தவறு செய்த ஒருவர் ‘சத்தியமாக நான் தவறு செய்யவில்லை எனக் கூறும்போது நம்பிக்கையின் வார்த்தையாகச் ‘சத்தியம்’ பயன்படுத்தப் படுகிறது. ஆனால் மகாத்மா காந்திஜியின் வாழ்வில் ‘சத்தியம்’ என்பது இருளில் வாழ்கின்ற மனிதர்களுக்கு ‘வெளிச்சம்’ போலப் பயன்படுகின்றது. ‘சத்தியமே ஜெயதே’ எனும் வார்த்தைகள் ஒரு மனிதனின் உள் மனதின் ஆழத்தினைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. காந்திஜி ஏழை எளிய மக்களின் மீது கருணைப் பார்வை படுவதற்குக் காரணமாக விளங்கியவர் ஜான் ரஸ்கின் என்பவராவார். ஜான் ரஸ்கின் அவர்கள் ‘‘UN TO THE LAST’’ எனும் நூலை எழுதினார். இந்த நூலைப் படித்தபின் தான் காந்திஜி அவர்களுக்கு ஏழை எளிய மக்களின் முன்னேற்றமான வாழ்விற்குப் பாடுபடவேண்டும் எனும் எண்ணம் உதயமானது. இதற்குச் ‘‘சர்வோதயம்’’ எனப் பெயரிட்டார்.

> எங்கெல்லாம் சத்தியம் உள்ளதோ, அங்கெல்லாம் அதை ஏற்போம். எங்கெல்லாம் சத்தியத்தின் ஒளியைக் காண்கிறோமோ, அதை நாமெல்லாம் போற்றவேண்டும் அவ்வழி நடப்போம்

இதுவே சர்வோதயத்தின் மார்க்கமாகும். ஆச்சார்யா வினோபாபாவே அவர்களின் 1. பூமிதானம் 2. கிராமதானம் மக்களின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தின. ஏழை மக்களின், உழைப்பாளி மக்களின் கண்ணீரைத் துடைக்கும் விதத்தில் சர்வோதய அமைப்பு செயல்பட்டு வந்தது. காந்திஜி வழியில் தன் வாழ்வினை அமைத்துக் கொண்ட கக்கன், தியாகிகளுக்கெனக் கொடுக்கப்பட்ட நிலத்தையே பூமிதான சர்வோதைய சங்கத்திற்குக் கொடுத்து மாபெரும் வரலாற்றினைப் படைத்தார்.

## கக்கனும் பூமிதானமும்

பூமிதான இயக்கத்தினர் இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களுக்கு நேரில் சென்று, காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள், பொது மக்கள் போன்றவர்களிடமிருந்து நிலங்களை நன்கொடையாகப் பெற்றிடும் செயலில் ஈடுபட்டனர்.

## பூமிதானத்திற்கு நிலம் கொடுத்தல்

சங்கராதேவ் தலைமையில் பூமிதான இயக்கத்தினர் தமிழகத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டனர். மதுரை மாவட்டத்தில் இக்குழு பயணத்தை மேற்கொண்டது. இக்குழுவினை அன்புடன், பெருமையுடன் வரவேற்ற கக்கன் அவர்களது நோக்கம் ஏக்கர் கணக்கில் நிலங்களை நன்கொடையாகப் பெறுவது என்ற நோக்கில் பயணம் மேற்கொண்டதை அறிந்து கொண்டார்.

காந்திய வழியில் எதைக் கேட்டாலும் கொடுக்கும் கொள்கை உள்ளத்தை மேற்கொண்ட கக்கன், பூமிதான இயக்கத்திற்கு எப்படியாவது நிலம் கொடுத்து உதவிட வேண்டும் எனவும் எண்ணினார்.




*அமைச்சர் கக்கன் திட்டப்பணிகள் குறித்து ஆலோசனை*

கக்கன் சுதந்திரப் போராட்டக் காலங்களில் சிறை சென்று, நாட்டிற்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கு இலவச நிலங்களைக் கொடுக்க அரசு முன்வந்தது. அதன் அடிப்படையில் தனியா மங்கலத்தில் கக்கனுக்கு 1½ ஏக்கர் நிலம் தியாகிகளுக்கு கொடுத்த நிலத்தையும், தும்பைப் பட்டியில் இவருக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் நிலமும் ஆக 2½ ஏக்கர் நிலத்தையும் பூமிதான இயக்கத்திற்கு

இலவசமாகக் கொடுத்தார். எப்படிப்பட்ட உள்ளம். சிந்திக்க வேண்டும். ஒரு சாண் மண்ணையும் விட்டுக் கொடுக்க முன்வராதவர்கள் வாழ்கின்ற நாட்டில் 2½ ஏக்கர் நிலத்தையும் கக்கன் இலவசமாகக் கொடுத்த அந்தத் தாயுள்ளத்தை, இரக்கமான உள்ளத்தை யாரால்தான் போற்றாமல் இருக்க முடியும்.

1959ஆம் ஆண்டு மேலூர் தாலூகா சர்வோதய மண்டலத் தலைவராகச் செயல்பட்டு வந்த சர்தார் மழுவேந்தி அவர்களிடம் இந்த நிலங்களைப் பூமிதான இயக்கத்திற்காக வழங்கினார். உடல்நலம் சரியில்லாத காலங்களில், சிச்சை பெற்றிடப் பணம் இல்லாமல் அரசாங்க மருத்துவமனையில் இலவசப் பிரிவில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவந்த கக்கன், இந்த நிலங்களைப் பூமிதான இயக்கத்திற்குக் கொடுக்காமல் இருந்திருந்தால், நிலங்களை விற்றாவது, வாழ்வின் கடைசிக் காலங்களில் உடலைப் பாதுகாத்திருக்கலாம். இவருக்கோ தேசியப் பற்றைவிட, தலைவர்கள் மீது வைத்திருந்த பாசத்தைவிட இவரது எதிர்கால வாழ்வு முக்கியமாகத் தோன்றவில்லை. மண் சேர்ப்பதோ, பணம் சேர்ப்பதோ இவருக்குப் பிடிக்காத காரியம். இப்படிப்பட்ட மனிதரை இக்காலத்தில் பார்க்க முடியுமா? என்னே அவரது பரந்த ஈகைத் தொண்டு.

## கொட்டாம்பட்டி சர்வோதய மாநாடு 1959

மதுரை மாவட்டம் சர்வோதய மாநாடு 1959ஆம் ஆண்டு கொட்டாம்பட்டியில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பல்வேறு கோட்பாடுகளைக் கொண்ட தமிழகத்துத் தலைவர்கள் 'சர்வோதயம்' எனும் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைந்தார்கள். சர்வோதயத் தலைவர் ஜெகந்நாதன் மற்றும் கக்கன் ஆகியோர் மாநாட்டில் முக்கியப் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## முத்திருளாண்டிப்பட்டி சத்தியாக்கிரகம் 1961

முத்திருளாண்டிப்பட்டி மதுரை மாவட்டத்தில் மேலூருக்கும் தும்பைப்பட்டிக்கும் இடையிலுள்ள கிராமமாகும். இங்குக் காமாட்சி நாயக்கர் என்பவருக்குச் சொந்தமான நிலம் இருந்தது. இந்த நிலத்தை வெள்ளைப் பெரியான் என்ற விவசாயி குத்தகைக்கு விவசாயம் செய்து வந்தார். 'உழுபவருக்கே நிலம் சொந்தம்' எனும் திட்டப்படி நிலம் சொந்தமாகி விடுமோ என்ற எண்ணம் நில

உரிமையாளருக்கு ஏற்பட்டது. இதன் விளைவாகக் குத்தகைக்குப் பயிர் செய்து வந்த வெள்ளைப் பெரியானை அழைத்து நிலத்தை விட்டுவிட்டு வெளியேறு என்று வலியுறுத்தியுள்ளார். மறுக்கவே இது சம்மந்தமான வழக்கு மேலூர் முன்சீப் நீதிமன்றத்தில் துவங்கப்பட்டது. இறுதியாக நிலஉரிமையாளர் பக்கமே நீதி வழங்கப்பட்டது. இந்த நீதி நில உரிமையாளருக்குச் சாதகமாகவே காணப்பட்டது.

பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிக்குப் பக்கபலமாகப் பூமிதான சர்வோதய இயக்கத்தினர் இருந்தார்கள். போராடியாவது நீதி பெற்றிட வேண்டும் எனும் முனைப்பில் போராட்டக் களத்தில் குதித்தார்கள். 19.8.1961இல் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார்கள். பிரச்சினை அதிகமாகப் போராளிகளைத் தூண்டியது. அரசுக்கும் பிரச்சினையை ஏற்படுத்தியது. அப்பொழுது கர்மவீரர் காமராசர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்தார். விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த முதல்வர் முத்திருளாண்டிப்பட்டியில் துவக்கப்பட்ட சத்தியாக்கிரகத்திற்கு நல்லதொரு முடிவு எடுக்கவேண்டிக் கக்கன் அவர்களை நேரில் அனுப்பிப் பிரச்சினையை முடிக்கும்படி கட்டளையிட்டார்.

கக்கன் நேரடியாக மேலூருக்குச் சென்று அங்குள்ள பயணியர் விடுதியில் தங்கிக் கொண்டு இரு பிரிவினரையும் நேரில் அழைத்து நேருக்கு நேர் பேசினார். மனித நேய மாமனிதர் கக்கன், யாருடைய மனமும் புண்படாத வகையிலே, இருவரும் மனமொத்து ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்ப்பினை வழங்கினார். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்றால் உரிமையாளர் நிலை என்னவாகும்? என்பதை மனித நேய உருவத்தில் சிந்தித்துப் பார்த்த கக்கன் உழுத நிலத்தை இருவருக்கும் பாதிப் பாதியாகப் பகிர்ந்து கொடுத்துப் பிரச்சினைக்கு முடிவு எடுத்து முடித்தார். இவரது முடிவினை ஏற்றுக்கொண்டவர்கள் மனமொத்து சென்றார்கள் என்பதுதான் முக்கியச் செய்தியாகும்.

## சோழவந்தான் மாநாடு

கக்கன் காவல்துறை அமைச்சராக இருந்த காலத்தில் பல்வேறு மாநாடுகளில் கலந்து கொண்டு அரசின் பல்வேறு நல்லபல திட்டங்களை எடுத்துரைத்து வந்தார். அரசாங்கத்தின் திட்டங்கள்

கோப்புகளுக்குள்ளே முடங்கிக் கிடக்காமல் மக்களின் காதுகளுக்கும், கவனத்திற்கும், நடைமுறைக்கும் சென்றாக வேண்டும் என்பதில் அதிக ஈடுபாட்டினைக் காட்டினார். 1964ஆம் ஆண்டு சோழவந்தானில் மாநாடு நடைபெற்றது. முன்கலால் பட்டாபிராமன் அவர்கள் தலைமையில் எம். சின்னசாமி பிள்ளை மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவராகவும், எஸ்.கே. பிச்சை செயலாளராகவும் முன்வந்து மாநாட்டினைச் சிறப்பாக நடத்திட அனைத்து ஏற்பாடுகளையும் செய்தனர்.

இந்த மாநாட்டில் காவல்துறை அமைச்சராகத் தமிழகம் முழுவதும் தீவிரமான பயணங்கள் மேற்கொண்டு பணியாற்றி வந்த கக்கன், இம் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அக்காலங்களில் மாநாடு என்பது கோரிக்கைகளை முன்வைத்து நடப்பதோடு மக்களைத் தட்டி எழுப்பக் கூடியதாகவே காணப்பட்டது. ஒவ்வொரு மக்களின் உள்ளங்களில் தேங்கிக்கிடக்கும் கோரிக்கைகள், அரசிடமிருந்து எதிர்பார்க்கும் பல்வேறு உதவிகளை மையமாகக் கொண்டே மாநாடுகளாக நடத்தப்பட்டன. இப்படிப்பட்ட மாநாடுகளில் கக்கன் முழு ஈடுபாட்டுடன் கலந்து கொண்டு, கிராமமக்களை அடிக்கடி நேரில் சந்தித்துப் பேசவும், அரசின் திட்டங்களை எடுத்துச் சொல்லும் பிரச்சார மேடையாகவே பயன்படுத்திக் கொண்டார்.

## ஒத்தக்கடை மாநாடு

காந்திய விவசாயிகள் உரிமை நலப் பாதுகாப்பு யூனியன் சார்பாக 7.5.1965இல் ஒத்தக்கடையில் மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக ஏ.சி. பிச்சைப் பிள்ளையும், வரவேற்புக் குழுச் செயலாளராக எஸ்.கே. பிச்சையும் செயல்பட்டனர். இம் மாநாட்டிற்கு நா.மா.ரா. சுப்பராமன் தலைவராக முன்வந்து சிறப்பாக இம்மாநாட்டினை நடத்தினார். ஏ.எஸ். ராமு அய்யர் மாநாட்டின் துவக்க உரையை நிகழ்த்தியுள்ளார். இம்மாநாடு சிறப்புப்பெறக் கக்கன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இம் மாநாட்டில் கக்கன் ஆற்றிய உரை மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க முன்வரவேண்டும், அதே நேரத்தில் மக்களிடையே உணர்வும், ஒற்றுமையும் அதிகமாகத் தேவை என்பதனையும் வலியுறுத்தியுள்ளார்.

காந்தியின் பெயரால் செயல்பட்டு வரும் விவசாயிகள் உரிமை நிலப் பாதுகாப்பு யூனியன் செயலாற்றிவரும் விதத்தையும் பாராட்டிப் பேசியுள்ளார். அக்காலத்தில் நில உரிமையாளர் எவ்வித வேறுபாடும் இல்லாமல் அனைவரும் சமமாகவே காணப்பட்டதைச் சுட்டிக்காட்டிப் பேசியுள்ளார். பெருவிவசாயிகள் சிறு விவசாயிகளைப் பாதுகாத்துக் கொள்ள முன்வரவேண்டும் என்பதனையும், விவசாயிகளுக்கிடையே சாதி, மத வேறுபாடுகளை மறந்து அனைவரும் 'விவசாயி' எனும் ஒரு இனமாகக் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டிப் பேசியுள்ளார்.

## விளாம்பட்டி சத்தியாக்கிரகம்

மதுரை மீனாட்சி அம்மன் தேவதானத்திற்குச் சொந்தமான விளாம்பட்டியிலிருக்கும் நிலங்களை சுப்பிரமணியன் என்பவர் மொத்த குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்தார். ஆனால் அனைத்து நிலங்களையும் ஏழை விவசாயிகள் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்தனர். தேவதான நிர்வாகம் செய்பவர்கள் ஏழை விவசாயிகளின் நிலங்களுக்கு எதிராகப் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததை விவசாயிகள் புரிந்து கொண்டு இதனைத் தட்டிக் கேட்க முன்வந்தனர். இப்பிரச்சினைக்கு நல்லதொரு முடிவுகட்ட 27.7.1965 அன்று விளாம்பட்டியில் சர்வோதயத் தலைவர்களும், விவசாயிகளும் இணைந்து உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

இந்து அறநிலையத்துறைக்கு அமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்ட கக்கன் இப்பிரச்சினையால் நேரில் வருகைதந்து விசாரித்து, ஏழை எளிய விவசாயிகள் பாதிப்பு அடையாத நிலையில் இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தார். கக்கன் அமைச்சராகப் பணியாற்றிய காலங்களில் ஏற்பட்ட பல்வேறு சமுதாயப் பிரச்சினைகளுக்கு அவர் பின்பற்றியது ஆட்சி அதிகாரத்தைவிட அன்பு, மனித நேயப்பண்பு, கலந்துரையாடல், நேரில் சென்று விசாரிப்பது போன்ற மனித நேயப் பண்புகளையே ஆயுதமாகவும், அதிகாரமாகவும் பயன்படுத்தினார்.

## 10. பாதை மாறாத மனிதப்புனிதர்

அரசியல் வாழ்க்கை என்றாலே பெயரும், புகழும், பணமும், தகுதியும் பெறுவதுதான் என்பது அனைவரின் எண்ணமுமாகும். ஆம்! இதுதான் உண்மையும்கூட. ஆனால் நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட மாபெரும் தலைவர், பாராளுமன்ற உறுப்பினராகச் செயல்பட்டு நாட்டின் நலனுக்குப் பாடுபட்ட பாராளுமன்றச் சேவகர், இரண்டு முறை தமிழக அமைச்சராகச் சீரிய சேவை மூலம் மக்களுக்குச் சமூகப்பணி ஆற்றியவர், எந்தச் சொத்தும் சேர்க்காமல், பணம் சேமிக்காமல், தூய்மையான வாழ்வு நடத்தியவர் கக்கன் என்பது வரலாறு நமக்களிக்கும் செய்திகளாகும்.

இவரைப் போல் எவராவது உண்டா? என்ற கேள்விக்கு இதுவரையில் தேடிப்பார்த்தோம், கிடைக்கவில்லை என்ற பதில் மட்டுமே கிடைத்துள்ளது. தன் வாழ்நாள் முழுவதும் அரசியலைப் புனிதமாகக் கருதி, காப்பாற்றி, கடைப் பிடித்த மனிதப் புனிதர் கக்கன் ஆவார்.

வானைப் போன்ற பரந்த எண்ணமும், பூமியைப் போலப் பொறுமையும் கொண்ட அரசியல் உலகில் சிறந்த எடுத்துக்காட்டாக வாழ்ந்தார் கக்கன். வெற்றியைக் கண்டு பெருமிதம் கொள்ளாமல், தோல்வியைக் கண்டு துவண்டு போகாமல் சாந்த குணத்தைக் கொண்டவர் கக்கன். வாழ்வில் தோல்வியைக் கண்டு அதனைத் தோல்வி என்று நினைக்காமல் அடுத்த வெற்றிக்கு அதுவே அடித்தளமாக எடுத்துக் கொள்ள வேண்டும் எனும் மனப்பக்குவத்தைக் கக்கன் கடைப்பிடித்தார். தேர்தல் காலங்களில் தோல்வி அடைந்தால், மக்கள் இவர்களை ஆள அனுமதிக்கவில்லை என்றும் வெற்றி பெற்றவர்கள் ஆள வேண்டும் என்று மக்கள் விரும்பி வாக்களித்துள்ளனர் என்றும் தான் நினைக்க வேண்டும் என்று படம் பிடித்துக் காட்டியவர் கக்கன். மக்கள் அளிக்கும் தீர்ப்புதான் நிலையானது. அதனை மதித்து அரசியல் தலைவர்கள் நடக்க வேண்டும் என்பதற்குத் தன்னையே ஓர் எடுத்துக்காட்டாக

அமைத்துக் கொண்டவர் கக்கன். அரசியல் பதவிகள் மக்களால் அளிக்கப்படும் நன்கொடைகள் நேற்று நமக்கு வழங்கினார்கள். இன்று இன்னொருவருக்கு வழங்கியுள்ளார்கள் எனும் மக்களாட்சிக் கோட்பாட்டினை நன்குணர்ந்து ஏற்றுக் கொண்டவர் கக்கன். இவரது வாழ்வில் ஏனைய அரசியல் தலைவர்களுக்கு பாடப்புத்தகம் போதிப்பதால் மட்டுமே உயர்ந்திட முடியாது. போதித்ததைக் கடைப்பிடித்தால் மட்டுமே உயர முடியும். இதுதான் கக்கனின் வாழ்க்கைத் தத்துவம்.

## எளிய வாழ்வு

பாராளுமன்ற உறுப்பினர், சட்ட மன்ற உறுப்பினர், இருமுறை அமைச்சர் இப்பேற்றபட்ட பதவிகளால் அரசு மாளிகை இல்லை, சொகுசுக் கார் இல்லை, வேலை செய்திட வேலைக்காரர்கள் இல்லை, பார்க்க வருபவர்களிடம் பந்தா இல்லை. பதவியில் இருந்த போது சுற்றி வந்த கூட்டங்கள் பிற்காலத்தில் காணவில்லை. ஓட்டைக் குடிசையிலே, ஒண்டி வாழும் வாழ்க்கை இருந்தால் மட்டும் போதும் என நினைத்து, சலனமடையாத உள்ளம், உள்ளத்திற்கேற்ற எளிமை, நேர்மை இவருக்கு ஆண்டவன் கொடுத்த அமைதிப் பூங்காக்கள்.

**நினைத்தது கிடைக்காதபோது
கிடைத்ததைப் பெரிதெனக்கொள்**

எனும் வாழ்க்கைத் தத்துவத்தை வாழ்வில் கடைப்பிடித்தவர். 4 இலட்சம் காரில் பயணம் செய்வதைவிட 40 இலட்சம் அரசுப் பேருந்தில் பயணம் செய்வதைப் பெருமையாகக் கருதியவர். பதவி இருந்தவரை அரசுக் கார் இருந்தது. அரசுப் பதவி போன மறுநாளே அரசுப் பேருந்திற்குப் பஸ் நிறுத்தத்தில் காத்துக்கிடந்த அமைச்சர் இவர்தான். இவரைப் போல் உலகில் எங்காவது, எவராவது கண்டதுண்டா? கேள்விப்பட்டதுண்டா? இவரது எளிமை, தூய்மை, வாய்மை எல்லாம் இவரது வழிகாட்டிகள் காமராசர், காந்தியடிகள் இவர்களிடமிருந்து கற்றுக் கொண்ட வாழ்க்கைப் பாடமாகும்.

பத்து ஆண்டுகள் அமைச்சர் பதவி வகித்த இவர், அமைச்சர் பதவி முடிந்து 3வது நாளில் பேருந்துக்காகக் காத்துக் கிடந்தார். மரணம் தன்னைத் தீண்டும் வரையில் சாதாரணக் கதர்வேட்டி, ஜிப்பா, கையிலே ஒரு பை இவைகளுடன் பேருந்துப் பயணம் இருந்தால் போதும் என நினைத்தவர்.

இவர் அமைச்சராக இருந்த காலக்கட்டத்தில் இவருக்கு அரசு சார்பாக வீடு ஒதுக்கப்பட்டது. அமைச்சர் பதவிக்காலம் முடிவடைந்ததும் வீட்டைக் காலி செய்து கொடுக்க வேண்டும். கக்கன், அரசாங்கத்திடமிருந்து காலிசெய்யச் சொல்லிக் கடிதம் வருவதற்கு முன்னதாகவே வீட்டைக்காலி செய்து விட்டு வாடகை வீட்டிற்குச் சென்றார். அமைச்சர் பதவி போன பிறகும் வீட்டில் முடங்கிக் கிடக்காமல் கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபடத் தினமும் டவுன் பஸ் ஏறிச் சென்று சத்திய மூர்த்தி பவனுக்குச் செல்வதும், மக்களின் பொதுப் பரிச்சினைகளைச் சந்திப்பதும் இவரது அன்றாடப் பணியாக இருந்தது. பதவியில் இருக்கும் போதே தனது பணிகளைத் தானே செய்து கொள்ளும் பழக்கத்தை அவர் பெற்றிருந்த காரணத்தால் பதவி இல்லாத காலங்களில் பணியாட்கள் இல்லையே என்ற கவலை இல்லாமல் கக்கன் சுறுசுறுப்பாகச் செயல்பட்டார்.

பத்து ஆண்டு மந்திரி பதவி, பஸ்சிலே பயணம் என்றெல்லாம் தலையங்கமிட்டுப் பல பத்திரிக்கைகள் கக்கன் பஸ்சிலே பயணம் செய்ததைக் குறித்து எழுதின பலர் நேரிலே சொன்னார்கள். ஆனால் கக்கனுக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதனைச் செய்து முடிப்பார். அரசாங்க பதவி என்பது ஒரு குறிப்பிட்டக் காலம் வரை தான். அதன் பிறகு அந்தப் பதவியைச் சொல்லிக்கொண்டு அரசாங்கச் சலுகைகளை அனுபவிப்பதோ, பழைய பதவியைச் சொல்லிக் கொண்டு நண்பர்களிடம் உதவி கேட்பதோ 'இழிவான செயல்' என நன்குணர்ந்திருந்தார்.

என்னுடைய தகுதிக்கு என்னால் என்ன செய்து கொள்ள முடியுமோ அதை என் எண்ணம் போல் செய்து கொள்கின்றேன். இது மற்றவருக்குப் பிடிக்கவில்லையெனில் அதைப்பற்றித் தனக்குக் கவலை இல்லை என்பதில் ஆழ்ந்த முடிவாக இருந்தார். என் விருப்பம்போல் வாழ்வதில் தான் எனக்கு அதிக விருப்பமே தவிர மற்றவர்கள் எண்ணப்படி என் வாழ்வை அமைத்துக் கொள்ள மாட்டேன் என்பதிலும் உறுதியாக இருந்தார். அரசியல் வாழ்க்கையில் எளிமையைப் பின்பற்றி வாழ்ந்தவர் கக்கன். பொது வாழ்வில் ஈடுபாடுள்ள இந்தியக் குடிமகன் தன் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் கக்கன் எனப் பலர் போற்றப்பட்டாலும், உண்மை வாழ்வில் அவர் அனுபவித்த துன்பங்கள், அவரது கண்ணீரான கவலையான வாழ்விற்கு ஆறுதல் சொல்ல எவரும் முன் வரவில்லை என்பது

வேதனை தரும் செய்தியாகும். கக்கன், பதவியில் இருந்த காலங்களில் அவரைச் சுற்றி வந்த உறவினர்கள், கட்சிக்காரர்கள் அவர் வேதனை வாழ்வினை நடத்திய காலக்கட்டத்தில் எவரும் வரவில்லை என்பதுதான் நமக்குக் கிடைத்த செய்தியாகும். அவரது குழந்தைகள் மற்றும் உடன் பிறந்த சகோதரர்கள் மட்டுமே அவருக்கு ஆறுதலாக இருந்தார்கள்.

பதவியில் இருந்த காலங்களில் அவருக்குக் கிடைத்த சம்பளத்தை வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்த கக்கன், பதவிபோன பின்பு, அரசாங்கச் சம்பளமும் போனது, சம்பளம் போன பின்பு வருமானம் இல்லாமல் அவர் நடத்திய வாழ்க்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால் இப்பேற்பட்ட வாழ்க்கை தினக்கூலி செய்பவருக்கூடக் கிடைத்திருக்காது என்பதுதான் எண்ணத் தோன்றுகிறது. எப்பேற்பட்ட கஷ்டங்கள் வந்த நேரத்திலும், இன்முகத்தோடு தினமும் கட்சி அலுவலகத்திற்குச் சென்று வந்தார். மக்களின் பிரச்சினைகளைத் தினமும் சந்தித்துப் போக்கி வந்தார். தன் வாழ்நாள் முழுவதும் கட்சியின் வளர்ச்சிக்குத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

## காங்கிரஸ் கட்சியில் பிளவு

1885ஆம் ஆண்டு துவக்கப்பட்ட காங்கிரஸ் கட்சி 1969 வரையில் வரலாற்றுப் படிகளை முத்தமிட்டு வெற்றிநடை போட்டது. நாட்டின் பூரண சுதந்திரத்தை முன்வைத்து நடத்திய அனைத்துப் போராட்டங்களும் வெற்றிபெற்றன. இந்தியா முழுவதும் தேசப்பற்று என்ற காற்றினை அனைத்து இந்தியர்களும் வேறுபாடுகளை மறந்து சுவாசித்தனர். துப்பாக்கித் தோட்டாக்களைக் கண்டு அஞ்சி ஓடாமல் சுதந்திரமே எங்கள் மூச்சுக்காற்று எனக் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை களப்போராளியாகக் களத்தில் தைரியமாகப் போராடினர்கள். காங்கிரஸ் கட்சி என்றாலே எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாத மாபெரும் சக்தி வாய்ந்த கட்சியாக விளங்கிற்று. காந்தியார் முதற்கொண்டு கக்கன் வரையில் கட்சியே எங்கள் உயிர்; ஆங்கிலேயர்களை விரட்டுவதே எங்கள் நோக்கம் எனப்போராடும் காங்கிரஸ் கட்சியின் தீவிரச் செயல்வீரர்களாகத் திகழ்ந்தார்கள்.

காங்கிரஸ் கட்சியின் ஒற்றுமையைக் கண்டு ஆங்கிலேயர்களின் பீரங்கிகள் பின்வாங்கின. தலைவர் முதல் தொண்டர்கள் வரை காங்கிரஸ் கட்சியின் பாசச் சங்கிலியால்

கட்டப்பட்டு எவராலும் பிரிக்க முடியாத அளவில் ஒன்றுபட்ட சக்தியாகக் காங்கிரஸ் கட்சி செயல்பட்டது. இப்பேற்பட்ட வரலாறு போற்றும் காங்கிரஸ் கட்சியில் 1969ஆம் ஆண்டு மாபெரும் பிளவு ஏற்பட்டது. காங்கிரஸ் கட்சி வரலாற்றில் 1969ஆம் ஆண்டு கருப்பு ஆண்டாகப் பின்பற்றப்பட்டது. தலைவர்களிடையே பிளவு என்ற மனக்கசப்பு உருவானது. விளைவு காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டது.

இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ் கட்சி நீலம் சஞ்சீவி ரெட்டியை வேட்பாளராக அறிவித்தது. அப்பொழுது இந்தியாவின் தலைமை அமைச்சராகச் செயல்பட்டுவந்த அன்னை இந்திராகாந்தி அவர்கள் கட்சியின் முடிவை எதிர்த்து வி.வி. கிரி அவர்களை வேட்பாளராக அறிவித்தார். கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்த காமராசர் போட்டியைத் தவிர்க்க முயன்றார். காமராசர் முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. அப்பொழுது



அமைச்சர் கக்கன்ஜி தலைவர்களுடன் ஆலோசனை



தமிழக முதல்வர் கர்மவீரர் காமராஜ் அன்னை இந்திராவை வரவேற்கையில் உடன் கக்கன்ஜி



முன்னாள் பாரத பிரதமர் அன்னை இந்திராவின் புன்னகையில் கக்கன்ஜியின் புன்சிரிப்பு

அன்னை இந்திரா அவர்களின் ஆணைப்படி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர். அவரவர் மனசாட்சிப்படி வாக்களிக்கலாம் என்ற அறிக்கை வெளிவந்தபோதிலும், தலைமை அமைச்சர் அன்னை இந்திரா அவர்களின் வேட்பாளராகப் போட்டியிட்ட வி.வி. கிரி அவர்கள் வெற்றிபெற்றார்கள்.

ஒன்றுபட்ட காங்கிரஸ்கட்சி இரண்டாகப் பிளவுண்டு காணப்பட்டாலும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக வி.வி. கிரி வெற்றிபெற்றிருந்தாலும் பழமை வாதிகளால் இந்த வெற்றியை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒன்றுபட்ட காங்கிரஸ் கட்சியின் கொள்கைக்கு எதிராகச் செயல்பட்டதாக இந்திராகாந்தி மீது குற்றம் சாட்டப்பட்டுக் கட்சியின் மேலிடம் நடவடிக்கை எடுத்தது. இதன் அடிப்படையில் காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது.

காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளவுபட்டு இந்திரா காந்தியால் பழமை வாதிகள் என அழைக்கப்பட்ட காங்கிரஸ்காரர்கள் இணைந்து உருவாக்கப்பட்ட கட்சிக்குக் காங்கிரஸ் ''ஓ'' என்றும் இந்திரா காந்தி தலைமை ஏற்றுக் கொண்டு உருவாக்கப்பட்ட கட்சிக்கு ''காங்கிரஸ் ஐ'' என்றும் பெயரிடப்பட்டன.

## காமராசர் தலைமையில் கக்கன்

காந்தி, காமராசர் இவர்களின் இலட்சியப் பயணத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட கக்கன், காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட சோதனையைத் தன்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. காமராசரின் தீவிரத் தொண்டனாக வாழ்க்கையை அமைத்துக் கொண்ட கக்கன், காமராசர் செல்லும் பாதையே தன் பாதை என முடிவெடுத்தார். காமராசரின் தலைமை மட்டுமே காங்கிரஸ் கட்சிக்கும், நாட்டின் நலனுக்கும் நல்லதாக அமையும் என எண்ணினார். வெற்றி, தோல்வி என்பது இலட்சிய வாதிகளுக்கு வித்தியாசம் இல்லை என்பதை உணர்ந்தார். காமராசரின் தலைமையைத் திடமான எண்ணத்தோடு ஏற்றுக் கொண்டார். ''காங்கிரஸ் ஓ'' எனும் தலைமைக்குக் கட்டுப்பட்டுத் தமிழகத்தில் காமராசரின் கரத்தை வலுப்படுத்தி வந்தார். புதிய பகட்டான அரசியல் வாதிகளின் முன் பழைய கொள்கை வாதிகளின் செயல்பாடுகள் வெற்றிக் கனியைத் தரும் எனும் எண்ணம் கக்கனை மேலோங்கச் செய்தது.

## பாராளுமன்றத் தேர்தலில் போட்டி

காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட பிரச்சினையும், பிளவும் இந்திய நாட்டையே குலுக்கின. அரசியல் வாழ்வில் தன் பங்கைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என நினைத்த இந்திராகாந்தி, 1970ஆம் ஆண்டு இறுதியில் நாடாளுமன்றத்தைக் கலைத்தார். அதோடு இந்தியாமுழுவதும் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. அகில இந்திய அளவில் காங்கிரஸ் கட்சி 'ஓ எனும் அணியும், 'காங்கிரஸ் ஐ' எனும் அணியும் கடுமையாக மோதின. அந்த மோதல் தழகத்திலும் இருக்கத்தானே செய்யும். ஆம்! தமிழகத்தில் காமராசர் தலைமையில் வேட்பாளர்கள் களத்தில் இறங்கினர்.

'காங்கிரஸ் ஓ' அணியினர் காமராசர் தலைமையில் தமிழகத்தில் கூட்டணி அமைக்காமல் தனித்துப் போட்டியிட்டனர். ஆனால் 'காங்கிரஸ் ஐ' அணியினர் தமிழகத்தில் தி.மு.க. வோடு கூட்டணி அமைத்துக் களத்தில் இறங்கினர். காமராசர் ஆணையின்படி 1971ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கக்கன் ஸ்ரீபெரும்புத்தூர் நாடாளுமன்றத் தொகுதியில் 'காங்கிரஸ் ஓ' வின் வேட்பாளராகப் போட்டியிட்டார். இந்தத் தேர்தல் தமிழக வரலாற்றில் முக்கியமான தேர்தலாகக் கணக்கிடப்பட்டது. அதிகச் செல்வாக்கு படைத்த அகில இந்தியத் தலைவர் இந்திரா காந்தியை எதிர்த்து வெற்றி பெறுவது என்பது மாபெரும் சவாலாகவே அமைந்தது. அதோடு தமிழகத்தில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் தி.மு.க.வின் மாபெரும் சக்தியை எதிர்த்து வெற்றி பெறுவது என்பது கடினமாகவே இருந்தது. இப்படிப்பட்ட சவால்களுக்கு மத்தியிலே கக்கன் போட்டியிட்டதும் அதன் முடிவும் மாபெரும் வரலாறாக அமைந்தது.

## எம்.ஜி.ஆர். போட்டி

தமிழகச் சினிமா உலகில் முடிசூடா மன்னனாக, ஏழை மக்களின் உள்ளங்களிலே மாபெரும் வாரிவழங்கும் வள்ளலாக, பேரறிஞர் அண்ணாவின் இதயக்கனியான மக்கள் திலகம் எம்.ஜி.ராமச்சந்திரன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பரங்கிமலைச் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டதுதான் 1971ஆம் ஆண்டுத் தேர்தலின் முக்கிய நிகழ்வாகும். பரங்கிமலைச் சட்டமன்றம் ஸ்ரீ பெரும்புதூர் பாராளுமன்றத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதியாகும். இந்தத் தொகுதியில் எம்.ஜி.ஆரை. எதிர்த்துக் கக்கன் தேர்தல் பிரச்சாரம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கக்கன்

அரசியல் வாழ்வில் தி.மு.க. அன்பான அனுசரணையைப் பின்பற்றியது. கக்கனை எதிர்த்துத் தி.மு.க. வேட்பாளர்களை நிறுத்தவில்லை என்று நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம். அதைப் போலவே கக்கன் அமைச்சராகப் பணியாற்றிய காலங்களில் தி.மு.க. சட்டமன்ற வேட்பாளர்களின் கோரிக்கைகளைக் கனிவாக ஏற்றுக் கடமையைச் செய்துள்ளார் எனவும் பார்த்தோம்.

ஆனால் இந்தத் தேர்தலில் 'காங்கிரஸ் ஐ' யோடு தி.மு.க. கூட்டணி அமைத்துள்ளதால் எப்படி தி.மு.க.வை விமர்சிப்பது என்ற சிக்கல் கக்கனுக்கு ஏற்பட்டது. ''அரசியல் நாகரிகம்'' என்பது இந்தியாவில் காணவந்தது அதுவும் அக்காலத்தில் (1971) தமிழகத்திலும் அரசியல் நாகரிகம் பின்பற்றப்பட்டது. தி.மு.க.வின் சார்பாகப் போட்டியிட்ட எம்.ஜி.ஆர். அவர்களை எதிர்த்து வாக்குகளைச் சேகரிக்கும் உத்தியைக் கக்கன் கண்டெடுத்தார். எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றியோ, தி.மு.க.வைப் பற்றியோ கக்கன் தவறான செய்திகளை மக்களிடத்தில் சொல்லி வாக்குகளைச் சேகரிக்கும் விதத்தை அவர் கையாளவில்லை. தேர்தலில் வெற்றி, தோல்வி இருக்கலாம். ஆனால் தனிமனிதரைப்பற்றி அவ தூறாகப் பேசி அரசியலைக் கேவலப்படுத்திக் கொள்ளும் நிலையில் கக்கன் செயல்படவில்லை.

தேர்தலில் வெற்றிபெற்ற எம்.ஜி.ஆர். கக்கனின் தேர்தல் பிரச்சாரம் குறித்துப் பேசியதாவது,

> தனக்கே உரித்தான பண்புநிறைந்த
> வாசகங்களால் விமர்சனம் செய்தார்

என்று சொன்னதிலிருந்து கக்கனின் அரசியல் நாகரிகம் எப்படி இருந்தது என்பதை நம்மால் அறிய முடிகின்றது.

## தேர்தலில் தோல்வி

1971ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் முடிவு அகில இந்திய அளவில் மாபெரும் 'மாற்றத்தை ஏற்படுத்தியதோடு தமிழக அரசியல் வரலாற்றிலும் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. தமிழகத்தில் தி.மு.க.வின் ஆதரவோடு ஸ்ரீ பெரும்புதூர் பாராளுமன்றத் தேர்தலில் 'காங்கிரஸ் ஐ' வேட்பாளார் வெற்றி பெற்றார். கக்கன் தோல்வியைக் கண்டார். நாடு முழுவதும் இந்திரா காங்கிரஸ் வெற்றிபெற்று நாடாளுமன்றத்தில் மிகப்பெரிய அளவில் பெரும்பான்மை பெற்று இந்திராகாந்தி ஆட்சியமைத்தார்.

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரும்பான்மை சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றிகிடைத்தது. இதன் பயனாகக் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் ஆட்சியும் அமைந்தது. தமிழகக் காங்கிரஸ் கட்சி வரலாற்றில் பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும், காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் மக்களுக்குப் பணியாற்றி, நேர்மையான அரசியல், விவேகமான செயல்பாடு, அனைவரையும் மதிக்கும் மனிதநேயப் பண்பு, பதவியால் பெருமை அடையாமல் பதவிக்குப் பெருமை சேர்த்து, சிக்கன வாழ்வு, சீரான எண்ணம், கட்சி மாறாத தொண்டனாக வாழ்க்கை நடத்திய கக்கன், தோல்வியைக் கண்டு துவண்டு போகாமல், மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என உணர்ந்து மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டார் என்பதுதான் தேர்தல் தோல்வியால் கக்கன் கண்ட வாழ்க்கை நெறியாகும்.

### கக்கன் மூட்டுவலி பிரச்சினை

கக்கன் ஓங்கி உயர்ந்த உடல் அமைப்பைக் கொண்டவர். உயரத்திற்கேற்ப உடல் பருமனாகவே இருந்தது. இளைஞராக இருந்த காலத்திலேயே நடந்தே சென்று சமூகப்பணி செய்த கால்கள் வயது ஆக ஆகப் பாதிப்புக்குள்ளாயின. அவருக்கு மூட்டுவலி பல்லாண்டு காலமாகவே இருந்து வந்தது. சிகிச்சை எடுத்தும் பயனளிக்கவில்லை என்பதுதான் வேதனை தரும் செய்தியாகும். மூட்டுவலி சற்று அதிகமாகி முடிவில் முடநோய் என்ற நோய்க்கு ஆளானர் கக்கன். பருமனான, உயரமான உடல் அமைப்பால் ஏற்பட்ட அதிகமான எடையைத் தாங்காத அளவிற்கு அவரது நோயின் தன்மை இருந்தது. அதனால் அவரால் நடக்க முடியவில்லை. இவரது உடல் எடையைக் குறைக்கச் சிறந்த மருத்துவ வழிகளை மேற்கொண்டு சிக்சை அளிக்கப்பட்டும் அவரது உடல் எடை குறையவே இல்லை. இதன் விளைவால் அவரால் தானாக எழுந்து நடக்க முடியாத அவலநிலை ஏற்பட்டது. பலரின் துணையோடு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அவரை தூக்கிச்செல்லும் நிலையில் நோய்த் தாக்கம் காணப்பட்டது. பல மைல்கள் நடந்தே சென்று சமூகச் சேவை செய்த கால்கள் ஓய்வு எடுக்கவேண்டிய சூழ்நிலையில் கக்கன் தள்ளப்பட்டார்.

## காமராசர் மறைவும் கக்கன் கண்ணீரும்

தமிழக வரலாற்றில் தனக்கென்று தனிப்பாதை வகுத்துக் கொண்டு, அனைத்து இன மக்களாலும் அதிகப் பாசத்தோடு பெருந் தலைவர் என உரிமையோடு ஏற்றுக் கொள்ளப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர் முதல் தொண்டர்கள் வரை மனித நேயத்தின்பால் நட்புக் கொண்டு, ''கல்விக்கண் திறந்த கர்மவீரர்'' எனும் ஏழை மக்களின் இலக்கணமாக வாழ்ந்து, அகில இந்திய அளவில் தமிழகம் தன்னால் பெருமை அடையும் விதத்தில் பிறந்த மண்ணிற்குப் பெருமை சேர்த்து, காந்தியும், காங்கிரசும் எனது இரண்டு கண்கள் எனச் சூளுரைத்து, வாழ்ந்துகாட்டி, அகில இந்தியத் தலைவராக, தமிழகத் தலைவராக, தமிழக முதல்வராக, படிக்காத மேதையாக, பாமர மக்களின் பண்பான தலைவராக, தன் வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்யாமல் தன் இன்ப சுகங்களை மக்களுக்காகத் தியாகம் செய்து, தமிழகத்தை இந்திய வரைபடத்தில் முக்கிய மாநிலமாக இடம்பெறவைத்து, அந்நியர் கலாச்சாரம் தமிழக மக்களிடையே வேகமாகப் பரவிய காலத்திலும் கதர் சட்டையும் அதுவும் முக்கால்கை வரையில் சட்டை அணிந்து, கதர் வேட்டி அணிந்து காந்தியாரின் வாழ்வில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, கக்கனை உயர் பதவியில் உட்கார வைத்து அழகு பார்த்த தாயுள்ளம் கொண்ட காமராசர் 1974ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி, தன் குருநாதர் காந்தியாரின் பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் தேதி மறைந்தார். மாரடைப்பு அவரை மரணம் வரை அழைத்துச் சென்றது.

வங்கக்கடலோரம் வற்றாத ஜீவ அலைகளைப் போலத் தமிழகமெங்கும் மக்கள் சாரைசாரையாகக் கண்ணீர் வடித்தனர். சிரித்த முகம் கொண்ட காமராசர் சிரித்தபடியே மறைந்த செய்தி கேட்ட தமிழகமே அழுகை சப்தத்தோடு காணப்பட்டது. அகில இந்தியத் தலைவர்கள் தமிழகத்தை நோக்கிக் களங்கமில்லா மனம் படைத்த காமராசருக்கு அஞ்சலி செலுத்த ஓடி வந்தனர். தமிழக மக்கள் காமராசர் வீட்டை நோக்கிக் குவிந்த வண்ணமாக இருந்தனர். காமராசரை நேரில் பார்க்காத கிராம மக்கள் ஒன்று கூடி அழுத காட்சி நமது உறவினரை இழந்துவிட்ட உறவுப்பாசத்தோடு அழுதனர். இவர்களே இப்படி என்றால், கருத்துத் தெரிந்த கால முதல் வயதான காலம் வரையில் தன் வாழ்வில் ஒரே தலைவர் காமராசர் தான் எனத் தன் வாழ்நாள் முழுவதும் இலட்சியக் கொள்கையோடு வாழ்ந்து வந்த கக்கன், காமராசர் மறைவைக் கேட்டுக் கண்ணீர் வடித்தார்.

என் தலைவர் மறைந்து விட்டாரே என அழுது புலம்பினார். பதவி நாற்காலியில் அமர வைத்து அழகு பார்த்த அந்த அழகான தலைவர் மறைந்து விட்டதை நினைத்துக் கலங்கினார். அவரது முகத்தைப் பார்க்கக் துடிதுடித்தார். நடக்க முடியாத நிலை. காமராசர் பூத உடலுக்கு மலர் வைத்து நன்றிக்கடன் ஆற்ற வேண்டுமெனத் தன் எண்ணத்தை உறவினர்களிடம் சொன்னார். எப்படியாவது அவரது முகத்தைப் பார்க்க வேண்டுமென இருதலைக் கொள்ளி எறும்புபோலத் தத்தளித்தார்.

கக்கன் வாழ்நாளில் சிரிப்பை மட்டுமே இயற்கையின் நன் கொடையாகப் பெற்றவர். கண்களில் எந்தச் சூழ்நிலையிலும் கண்ணீர் வடிக்காத கக்கன், காமராசர் மறைவு கேட்டுத் தொடர்ந்து அழுத வண்ணமாய் இருந்தார். அவரது கண்களில் கண்ணீரைக் காணாத அவரது உறவினர்கள் கக்கனின் அழுகையைக் கண்டு வேதனை அடைந்தனர்.

கக்கன் சென்னை வந்ததும் அவருக்கு கார் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அவரை குளிப்பாட்ட கக்கனின் மனைவி வழி உறவினரும் பேரனுமாகிய முனைவர் கரு. அழ. குணசேகரன் குளிப்பாட்டும் போது, மதுகு முழுவதும் புண்களாகக் காணப்பட்டது. தாத்தா இது எப்படி என்று கேட்க, குதிரை வண்டியில் என்னை அழைச்சிட்டுப் போகும்போது ஏற்பட்ட புண்கள் என்பதனை குணசேகரன் கண்ணீரோடு சொல்லக் கேட்டோம்.

ஒரு பக்கம் நடக்க முடியாத சூழ்நிலை. மறுபக்கம் உடனே செல்லக் கார் வசதி இல்லை. பதவியில் இருந்த காலங்களில் தன் தேவைக்கென்று எதையும் சேர்த்து வைக்காத சூழ்நிலையில் எப்படி செல்வது என்பது பெரிய கேள்வியாக இருந்தது. அண்ணனின் இதயத் துடிப்பை, கண்ணீரைக் கண்ட அவரது தம்பி விஸ்வநாதன் உடனே கக்கன் வீட்டிற்கு ஓடி வந்தார். விஸ்வநாதன் ஏற்பாட்டின்படி கக்கன் நேராகக் காமராசர் வீட்டை நோக்கி விரைந்தார். ஏமாற்ற மடைந்தார். ஆம்! காமராசரின் உடல் இராஜாஜி மணடபத்திற்குப் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் செய்தியைக் கேட்டு இராஜாஜி மண்டபத்திற்கு விரைந்தனர்.

மக்கள் கூட்டம் அலைமோதியது. இக்கூட்ட நெரிசலையும் பொருட்படுத்தாமல் எப்படியாவது தலைவரின் முகத்தைக் கண்டுவிட வேண்டுமெனக் கக்கன் துடித்தார். நடக்க முடியாத சூழ்நிலையில் கக்கன் வருவதைக் கண்டவர்கள் வழிவிட்டு விலகினார்கள். கர்மவீரர் காமராசர் உடல் அருகில் ஒரு நாற்காலியில்

அமரவைத்தனர். தலைவரின் முகத்தைப் பார்த்த கக்கன் துடித்துப் போனார். சோர்வான முகத்தோடு கண்கள் கண்ணீர் சொரிய, வாய்விட்டு அழுததைக் கண்டு பலரும் கண்ணீர் வடித்தனர். தலைவர் மீது பாசம் கொண்ட தொண்டர் இவரல்லவா? என அனைவரும் பாராட்டியதோடு கக்கனைச் சமாதானப்படுத்தினர். அஞ்சலி செலுத்த வந்த தலைவர்களெல்லாம் கக்கனின் சோகத்தைக் கண்டு ஆறுதல் சொன்னபடி இருந்தனர். அரசியல் எனும் அழகு நாற்காலியில் அதிகாரம் கொடுத்து, உட்கார வைத்து அழகு பார்த்த தலைவரை இனிமேல் எப்பொழுது காண முடியும் எனும் எண்ணக் குமுறலோடு கண்ணீர் வடித்தார்.

காமராசர் உள்ளவரை கக்கனை மதித்தவர்கள் இனிமேலும் அதே மரியாதை காங்கிரஸ் கட்சியில் கிடைக்குமா? என எண்ணி எண்ணிக் குமுறினர். அகில இந்தியத் தலைவர்களெல்லாம் வருகை தந்தனர். அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவரும், பாரதப் பிரதமருமான அன்னை இந்திரா காந்தி அவர்களின் வருகைக்காகக் காவல்துறையினர் முன்னேற்பாடுகளைச் செய்யும் முயற்சியில் ஈடுபட்ட சமயத்திலும் கக்கனுக்கு எவரும் தொல்லை கொடுக்காமல் மரியாதையோடு நடத்தினார்கள். அங்கு வந்தவர்களில் அவருக்குப் பாதுகாப்பும் முதல்மரியாதையும் அளித்தனர். மாலை 3.00 மணி அளவில் சவ ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தனர். காந்தி மண்டபத்தின் அருகில் அடக்கம் செய்யத் துரிதமான ஏற்பாடுகள் செய்துவந்தனர்.

## அன்னை இந்திரா வருகை

இந்திராகாந்தி அம்மையார் வந்ததும் காமராசர் உடலுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திய உடனே ஊர்வலம் நடைபெற முன்னேற்பாடுகள் நடந்துகொண்டு இருந்தன. கக்கனுக்கோ எப்படியாவது சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டு அடக்கம் செய்யும் வரை இருக்க வேண்டும் எனும் ஆசை உண்டு. எப்படி ஊர்வலத்தில் கலந்து கொள்வது? நடந்து செல்லும் அளவில உடல் நலம் இல்லை. ஏதாவது வாகனத்தில் செல்லலாம் என்றால் வசதி இல்லை. ஒன்றும் புரியாத நிலையில் கக்கன் வேதனையோடு இருந்தார். அப்பொழுது அவருடன் இருக்கும் தனது கடைசித் தம்பி விஸ்வநாதனை அழைத்துத் தனது எண்ணத்தை அவருடன் பகிர்ந்து கொண்டார். விஸ்வநாதனுக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. திகைத்துப் போனார் எவரிடம் உதவி கேட்பது. கார் எப்படி ஏற்பாடு செய்வது. அண்ணனின் ஏக்கத்தை, கோரிக்கையை எப்படி நிறைவேற்றுவதென்று தெரியாமல் திகைத்து நின்றார்.

## இந்திராவின் கனிவான பார்வை

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்திராகாந்தி அம்மையார் பலத்த பாதுகாப்புடன் வருகைதந்து காங்கிரஸ் கட்சியின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்த காமராசர் அவர்களுக்கு மலர்வளையம் வைத்துவிட்டு மரியாதை செலுத்திவிட்டுப் புறப்பட்டார். அவர்புறப்பட்டுச் செல்லும் போது அருகில் அமர்ந்திருந்த கக்கனை அடையாளம் கண்டு இவர் யார்? (Who is this Gentleman) என ஆங்கிலத்தில் கேட்டார். கக்கனுடன் நீண்டநாள் அரசியல் ரீதியில் நன்கு அறிந்திருந்த இந்திராகாந்தி அம்மையார், அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியாத அளவில் அவரது உடல் பாதிக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும். பக்கத்தில் இருந்தவர்கள் கக்கனைப் பற்றி எடுத்துச் சொன்னபின் ''ஓ அவரா'' என்ற சொல்லோடு அவரைப் பார்த்துவிட்டுச் சென்று விட்டார்.

துக்கமான நிகழ்வாக இருந்தாலும் கூடக் காங்கிரஸ் பாசமானது தலைவியையும் தொண்டனையும் இணைத்ததே, இதுதான் முக்கியச் செய்தி. கக்கனின் பல்லாண்டுக்கால காங்கிரஸ் விசுவாசத்திற்கு இந்த நிகழ்வு பெருமையைத் தேடித்தந்தது. இந்த நிகழ்வினைக் கண்ட அனைவரும் திகைத்துப் போனார்கள். அந்த அளவிற்குக் காங்கிரஸ் என்றால் காமராசர், காமராசருக்கு அடுத்துக் 'கக்கன்' என்று சொல்லும் அளவிற்குக் 'கக்கனின் சேவை அகில இந்திய அளவில் பரவி இருந்தது.

## கலைஞரின் கருணை உள்ளம்

காங்கிரசோடு தி.மு.க. கூட்டணி அமைத்து இருந்ததோடு கலைஞர் முதல்வராக இருந்த காரணத்தால் பாரதப் பிரதமர் அன்னை இந்திராகாந்தியோடு இருந்தார். இந்திராகாந்தி அடக்கம் செய்யும் இடத்திற்குச் செல்லக் காரில் ஏறும்போது தமிழக முதல்வர் கலைஞர் அவர்களையும் காரில் உட்காரச் சொன்னார். கலைஞர் உடனே தனது உதவியாளரை அழைத்து நான் அம்மையார் காரில் செல்கின்றேன். நீ அங்கு அமர்ந்திருக்கும் கக்கன்ஜி அவர்களை நமது காரில் அழைத்துக் கொண்டுவந்துவிடு என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

விஸ்வநாதனுக்கு மாபெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அண்ணன் கக்கனின் ஆசை எங்கு ஈடேறாமல் போய்விடுமோ என்ற கவலை

அவருக்கு இருந்தது. தமிழக முதல்வர் கலைஞரின் உதவியாளர் விஸ்வநாதனிடம் அண்ணனை அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று சொல்லக் கக்கன் காரில் ஏறி இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டார். 'தன் வாழ்நாளில் இப்பேற்பட்ட தலைவரைக் காண முடியாது' என்று கண்ணீர் வடித்த கக்கன் தன் தலைவருக்கு அஞ்சலி செலுத்திய விதம் இன்னும் இவரது தம்பிகளால் மறக்க முடியாத நிகழ்வாக இருக்கிறது.

இந்த நிகழ்வு வாயிலாகக் கலைஞர் அவர்களின் மனித நேய எண்ணத்தை அறிய முடிகிறது. தேர்தலில் தி.மு.க.வை எதிர்த்து நின்றவர் கக்கன் என்றுகூடப் பார்க்காமல் கக்கனின் பெருந்தன்மை, அரசியல் பண்பு, பழகிய விதம், வறுமையோடு வாழ்கின்ற வாழ்வு, மாற்றாரை மதிக்கும் மனக்கசப்பற்ற மனம், கட்சி மாறாத தொண்டன் என்ற பெருமைக்குரியவர் கக்கன் என்ற காரணத்திற்காகவே முதலமைச்சர் செல்லும் காரையே கொடுத்து உதவினார் என்று சொன்னால் அவரது மனித நேயம் மாண்புமிகு பெருமைதானே! கலைஞர் உதவிய இந்த நிகழ்ச்சியைக் கக்கன் தன் வாழ்நாளில் மறக்கவில்லை என்பது அவர் பலரிடம் சொல்லிப் பெருமை பாராட்டியுள்ளார். தமிழக அரசியல் வரலாற்றில் அரசியல் எதிர்ப்பு என்பது பாசத்தின் முன்னால் தோற்றுப் போய்விட்டது என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

## காங்கிரஸ் கட்சிகள் இணைப்பு

காமராசர் இறப்பிற்குப் பின், பிளவு பட்டுள்ள காங்கிரஸ் கட்சியை இணைக்கும் முயற்சியில் கக்கன் தனது கடைசி வாழ்க்கையைச் செலவிட்டார். காமராசர் தலைமை ஏற்றுக் காங்கிரஸை நடத்தி வந்தக் காலங்களில் ''ஒரே தலைவர் காமராசர்'' என்ற ஒற்றுமை தமிழகக் காங்கிரஸ் கட்சியில் காணப்பட்டது. தனது இறப்பிற்குப் பின்னும் ஒரே தலைமையின் கீழ்க் காங்கிரஸ் கட்சி செயல்பட வேண்டும் எனும் தாக்கம் காமராசர் அவர்களுக்கு இருந்ததாகவும், கக்கன் போன்றவர்களிடம் இது சம்மந்தமாக அடிக்கடி தனது எண்ணத்தின் ஏக்கத்தைப் பகிர்ந்து கொண்டதாகவும் அறியமுடிகின்றது. எனவே கக்கன், தன் தலைவர் காமராசரின் கனவை நினைவாக்க வேண்டும், பிளவுபட்ட காங்கிரசை ஒரே தலைமையின் கீழ்க் கொண்டுவரவேண்டும் எனும் முயற்சியில் ஈடுபட்டார்.

உடலில் நோய்களின் தொல்லைகள் அதிகமாகக் காணப்பட்டாலும், ஓய்வின்றி இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இதற்காகக் காங்கிரஸ் தலைவர்களைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார். ஒவ்வொரு தலைவர்களின் உள்ளக்கிடக்கையை நன்றாகவே அறிந்து கொண்டார். பிளவுபட்ட காங்கிரசை ஒன்றிணைக்கும் முயற்சியில் முழுமையாக ஈடுபட்டுச் செயல்பட்டு வந்த டி.டி. கிருஷ்ணமாச்சாரிக்குக் கக்கன் உடன் இருந்து இணைப்பிற்கு ஒத்துழைப்புத் தந்தார்.

காமராசர் தலைமையில் செயல்பட்டு வந்த 'காங்கிரஸ் ஒ' அணியினர் இந்த ஒற்றுமை எனும் பாலம் அமைத்துவரும் கக்கனுக்குப் பல எதிர்ப்புகள் தெரிவித்தனர். இந்த இணைப்பை ஏற்க முடியாது எனவும் தனித்துச் செயல்படவும் பலர் முன்வந்தனர்.

தான் பிறந்தது முதல் இந்நாள் வரையில் காங்கிரஸ் கட்சியின் தீவிரப் பக்தனாக, தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, பாராளுமன்ற உறுப்பினராக, பின் தமிழக அமைச்சராகப் பணியாற்றிய காலங்களில் கக்கன் காங்கிரஸ் கட்சி வளர்ச்சிக்குப் பாடுபட்டு வந்த பாதையை நன்கு அறிந்திருந்த காங்கிரஸ்காரர்கள் பலர் கக்கனின் இணைப்பு முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்கவும் முன்வந்தனர். அப்படி முன்வந்த தலைவர்களில் வரலாற்றில் இடம்பெறும் தலைவர்தான் ''மக்கள் தலைவர்'' எனப் போற்றப்படும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருமிகு. கருப்பையா மூப்பனார் அவர்கள்.

கக்கனைப் பற்றி மூப்பனார் நன்றாகவே அறிந்தவர். உணர்ந்தவர். காங்கிரஸ் கொள்கை வீரர் என ஏற்றுக் கொண்டவர். அவரது இணைப்பு முயற்சிக்குப் பலன் உண்டு என்று மக்கள் உணரும் வகையில் மனித நேயமிக்க மூப்பனார் அவர்கள் காங்கிரஸ் 'ஒ' அணியும் காங்கிரஸ் 'ஐ' அணியும் ஒன்றுபட வேண்டும என்பதற்காக மூப்பனார் இந்திராகாந்தி அம்மையாரை நேரில் சந்தித்து இணைப்புப் பற்றிப் பேசுவதென முடிவு எடுத்தார். அதன் அடிப்படையில் 12.12.1969 இந்திராகாந்தி அம்மையாரை நேரில் சந்தித்து இணைப்பின் முக்கியத்துவம் குறித்த பேச்சுவார்த்தை நடத்திடத் தமிழகக் காங்கிரஸ் தொண்டர்களுக்கு நல்ல செய்தியைத் தந்தார். கக்கனின் விடாமுயற்சியால், காமராசர் அவர்களின் கனவு நனவாகும் வண்ணமாக 1976 சனவரி 9ஆம் நாள் காங்கிரஸ்

கட்சியின் இரு பிரிவினரும் ஒன்றாக இணைந்து ஒரே காங்கிரஸ் கட்சியாக செயல்பட்டனர். இந்த இணைப்பை ஒரு சிலர் ஏற்க மறுத்துத் தனித்து நின்றதாகவும் அறிய முடிகின்றது.

தலைவரின் எண்ணங்களை நிறைவேற்றுவதுதான் தொண்டர்களின் கடமை. ஆம்! தன் தலைவர் காமராசரின் எண்ணத்தை நிறைவேற்றக் கக்கன் எடுத்துக்கொண்ட 'இணைப்பு' எனும் முயற்சிக்குப் பலன் கிடைத்தது. காங்கிரஸ் இணைந்தது. இதனால் தனது மனம் மகிழ்ச்சி கண்டது எனும் கக்கனின் வார்த்தைகள் இன்றைய காங்கிரஸ் தொண்டர்களுக்கு 'விடியலை' உருவாக்கின என்றே சொல்லலாம்.

# 11. பொதுவாழ்வில் ஓய்வு

காமராசரின் மறைவிற்குப்பின் மன அளவில் பாதிக்கப் பட்டிருந்த கக்கன் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டார். நடந்தே அரசியலில் தன் காலத்தைக் கழித்த கக்கனுக்குக் கால் நடக்க முடியாதபடி ''முடநோய்'' அவரை அதிகம் தாக்கியது. 1976ஆம் ஆண்டில் ஏற்பட்ட காங்கிரஸ் கட்சிகளின் இணைப்பு மனதுக்கு மகிழ்ச்சியை ஒரு பக்கம் கொடுத்தாலும், மேலும் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்கு அவரால் பாடுபட முடியாத நிலை ஏற்பட்டது. முடநோய் மூலமாக அதிகம் பாதிக்கப்பட்ட கக்கனுக்குச் சிசிச்சைக்குப் பலர் ஏற்பாடு செய்தார்கள். பலர் பல ஆலோசனைகளை வழங்கினார்கள். பணப் பிரச்சினை ஒரு பக்கம். உதவி செய்ய எவரும் முன்வராத நிலை மறுபக்கம். என்ன செய்வதென்று புரியாமல் வேதனை வாழ்க்கையை ஏற்றுக் கொண்டார்.

முடநோய் நாளுக்கு நாள் முன்னேற்றம் கண்டு மோசமான நிலைக்குக் கக்கனுக்குத் தொல்லை கொடுத்தது. இறுதியாகக் கேரள மாநிலத்தில் மிகவும் புகழ் பெற்ற கோட்டக்கல் சித்த மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றிட முடிவு எடுத்தனர். 1977ஆம் ஆண்டு இம்முடிவு எடுக்கப்பட்டாலும் பண வசதியின்மை காரணமாகத் தள்ளிப்போடும் நிலை ஏற்பட்டது. முறைப்படி இந்த மருத்துவ மனையில் சேர வேண்டுமானால் விண்ணப்பித்த பின் குறைந்தது 6 மாதங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும் சூழ்நிலை உள்ளது. அமைச்சராக இருந்தும் மருத்துவமனைக்குச் செல்லப் பணவசதி இல்லாமல் வேதனைப்பட்டவர் கக்கன் ஒருவராகத்தான் இருக்க முடியும் எனவும் எண்ணத் தோன்றுகிறது.

**கேரள முதல்வர் அச்சுதமேனின் மனித நேய உதவி**

கக்கனின் உடல் நலம் குறித்து விசாரிக்கப் பலர் நேரில் வருகை தந்தனர். பல தரப்பட்ட உறவினர்கள், உயர் அதிகாரிகள், நண்பர்கள், உடன் பிறந்தவர்கள் எனப் பலர் வருகை தந்தனர்.

இவர்களில் திரு. சம்பந்தன் என்பவர் கக்கனின் உறவினர். இவர் பனைவெல்லத் துறையின் இயக்குநராகப் பணியாற்றி வந்தவர். இவர்தான் கக்கனின் உடல்நிலை அறிந்து துணிந்து அப்போதைய கேரள மாநிலத்தின் முதல்வர் அச்சுதமேனன் அவர்களுக்கு உடனே மருத்துவமனையில் சேர்க்க உதவி செய்யும்படி மடலை எழுதினார். கக்கனின் தேசிய சேவையை அறிந்து, சுதந்திரப் போராட்ட வீரர்களை, தலைவர்களை அதிகம் மதிக்கும் முதல்வர் அச்சுதமேனன் அவர்கள் இக்கோரிக்கையை ஏற்று உடனடியாகக் கக்கனை மருத்துவமனையில் சேர்த்திட மருத்துவ மனையின் இயக்குநர் அவர்களுக்குக் கடிதம் எழுதி அதன் நகலைக் கக்கனுக்கு அனுப்பி உடனே மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டியும் கேட்டுக் கொண்டார்.

கேரள மாநிலத்தின் முதல்வர் மாண்புமிகு அச்சுத மேனன் அவர்களின் மனித நேய உதவியை எப்படி பாராட்டினாலும் தகும். தனிமனிதன் எழுதிய கடிதம் அதுவும் யார் என்று தெரியாமல் கக்கன் பற்றிய செய்தியை அறிந்ததும் உதவிய மேன்மையான குணத்தைத்தான் பாராட்டவேண்டும். கக்கன் வாழ்க்கை வரலாற்றில் பலா பலன்பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் நீண்டு கொண்டே போகும். ஆனால் எந்தப் பலனும் பெறாத கேரள மாநிலத்தின் முதல்வர் இப்பேற்பட்ட மனித நேயத்தோடு செய்த மாபெரும் உதவியை இன்றளவும் கக்கனின் உறவினர்கள் மற்றும் உடன்பிறப்புகள் புகழ்வதை நம்மால் கேட்க முடிகிறது.

இப்படிப்பட்ட நல்ல வாய்ப்பினை விட்டுவிட்டால் வேறு எவரும் உதவிட முன்வரமாட்டார்கள் என்ற முடிவுக்கு வந்த குடும்பத்தினர் எப்படியாவது கேரளாவிற்குச் சென்று கோட்டக்கல் மருத்துவமனைக்குச் செல்வதென முடிவெடுத்தார்கள். குடும்ப அங்கத்தினர்களும் விடாப்பிடியாக இருந்தார்கள். கக்கனும் தனது இசைவினைத் தந்தார். கடைசியாகக் கக்கன் கோட்டக்கல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கேரள மாநில முதல்வரின் பரிந்துரையின் பேரில் முன்னாள் தமிழக அமைச்சரான கக்கன் சேர்க்கப்பட்டதால் மருத்துவர்கள் தனிக்கவனம் செலுத்தியதோடு சிறப்பான சிகிச்சை அளித்தனர். முதல்வர் அச்சுதமேனன் அவர்களின் சிறப்பான ஆலோசனைப்படி கேரள மாநில அமைச்சர்களும் அதிகாரிகளும் அடிக்கடி பார்வையிட்டுச் சிறப்பான மருத்துவ சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தார்கள். கேரள

மாநிலத்தின் மாண்புமிகு அமைச்சர் திருமிகு ஈச்சரன் கக்கனை நேரில் சந்தித்து, சிகிச்சை சம்பந்தமாக விளக்கங்கள் கேட்டு நல்ல சிகிச்சை அளித்திட அடிக்கடி ஏற்பாடு செய்து வந்தார். கக்கன் வியாதியிலிருந்து விடுதலைப் பெறப் பாடுபட்டதோடு கக்கன் மகிழ்ச்சியாக இருக்கத் தேவையான பல்வேறு வகைப்பட்ட கேரள மாநிலக் கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. அதில் முக்கியமான வரலாற்றுப் புகழ்பெற்ற ''கதகளி'' ஆட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். இந்த நிகழ்ச்சியினைக் கண்டுகளித்த கக்கன் மகிழ்ச்சி அடைந்தார். மருத்துவ மனையில் பணியாற்றும் அனைத்துத் தொழிலாளர்களும் கக்கன் இருக்கும் வரை மகிழ்ச்சியாக இருந்ததாகவும் அறிய முடிகிறது. இப்படிப்பட்ட பல நிகழ்ச்சிகள் நோயிலிருந்து விடுதலை பெற்றிட நல்ல வாய்ப்பினை அளித்ததாகவும் உறவினர்கள் மூலமாக அறிய முடிகிறது.

இரண்டு மாதக் காலங்கள் தங்கித் தொடர்ந்து சிகிச்சை எடுத்தார். இந்த இரண்டு மாதச் சிகிச்சைக்கே பணம் கட்ட முடியாத அவல நிலமை ஏற்பட்டு விட்டது. குறைந்தது ஆறு மாதக் காலம் தங்கிச் சிகிச்சை பெற்றால் பூரண குணம் அடைய முடியும் என்ற நிலையில் இரண்டு மாதத்துடன் சிகிச்சையை முடித்துக் கொண்டு வீடு திரும்பத் திட்டமிட்டனர். எப்படியாவது பணம் ஏற்பாடு செய்து விடலாம் என்ற எண்ணத்தோடு அவரது மகன் டாக்டர் சத்தியநாதன் உடலில் சோர்வு, மனதில் சஞ்சலம், நடக்க முடியாமல் வேதனை இப்படி கடைசிக்கால வாழ்வில் என்ன செய்வது? என்று தெரியாமல் காணப்பட்டார் கக்கன்.

## பொதுவாழ்வில் ஓய்வு

தொடர்ந்து அரசியலில் ஈடுபட உடல் நோய் இடம் கொடுக்குமா? பந்தாவால் அரசியல் நடத்தும் காலக்கட்டத்தில் உடலைச் சரிப்பார்க்கவே பணம் இல்லை. அரசியல் நடத்தப் பணத்திற்கு எங்கே செல்வது என்ற ஏக்கம். இதற்கெல்லாம் ஒரே வழிதான் என முடிவு எடுத்தார். அந்த முடிவுதான் அரசியலிலிருந்து ஓய்வு எடுப்பது. பொது வாழ்விலிருந்து ஓய்வு எடுப்பது. ஆம்! தனது கடைசிக்கால நேரத்தில் கக்கன் ஓய்வு எடுத்தார். பொது வாழ்வில் ஓய்வு பெற்றாரே தவிர மக்களிடமிருந்து அவர் ஓய்வு பெறவில்லை. உடலால் ஓய்வு கண்டார். . . உள்ளத்தால் ஓய்வில்லை, சேவைக்கு ஓய்வில்லை. . . மக்களைச் சந்திப்பதில் ஓய்வு இல்லை. காரணம்

பொது வாழ்விலிருந்து ஒய்வு வந்தாலும் தன்னை நாடி வரும் மக்களை அன்புடன் வரவேற்றார். ஆறுதல் வழங்கினார், பிரச்சினைகளுக்கு வழியைக் காட்டினார். மரணம் தன்னை நெருங்கும் வரையில் மக்கள் தலைவர் கக்கன் மக்களோடே வாழ்ந்து வந்தார். உடல் நலம் குன்றி வேலூர் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்றக் காலத்திலும் மக்களோடு மக்களாகப் பாய்விரித்துத் தரையில் படுத்து அரசாங்க மாத்திரைகளைப் பொதுமக்களைப் போலும் உண்டு சிகிச்சை பெற்றார். எனவேதான் ''மக்கள் தலைவர் கக்கன்'' என்றும் அழைக்கலாயினர். தமிழகத்தில் கக்கன் அவர்களால் தன் வாழ்க்கையை மேம்படுத்திக் கொண்டவர்கள் ஏராளம் உண்டு. ஆனால் ஆபத்துக்காலங்களில் எவரும் முன்வரவில்லை என்பதுதான் வேதனை தரும் செய்தியாகும்.

பொருளாதாரம் ஏற்பாடு செய்ய முடியாத நிலையில் சிகிச்சையைப் பாதியிலே முடித்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும் மருத்துவமனைக்குச் செலுத்த வேண்டிய முழுப் பணத்தையும் செலுத்திய பின்தான் மருத்துவமனையை விட்டு வெளியேற வேண்டிய நிலையும் ஏற்பட்டுவிட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார்கள். கக்கன் குழம்பிய நிலையில் உள்ளார். கடைசியாக நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கக்கன் அவர்களுக்கு ரூ.50,000/– வைப்பு நிதியாகக் கொடுத்திருந்தார்; அதில் ரூ.10,000/– எடுத்து மருத்துவ மனைக்குச் செலுத்த வேண்டிய முழுப்பணத்தையும் செலுத்தினார்கள். பிறகு சென்னை வந்தனர்.

கக்கனைப் போன்ற வாழ்க்கை எவருக்கும் வந்துவிடக் கூடாது என்றே நினைக்கத் தோன்றுகிறது. தலைவர்கள் மீது விசுவாசம் இருந்தும், அரசியல் உயிர் மூச்சாக இருந்தும் எந்தத் தலைவரும், கட்சியும் உதவிட முன்வரவில்லையே என எண்ணும்போது, எழுதுகின்ற என் கண்களிலே கண்ணீர் வருகிறது என்றால் இதனைப் படிக்கின்ற அனைவரின் கண்களிலும் கண்ணீர் வரும். அரசியலில் தூய்மையானவருக்குக் கிடைத்த வெகுமதி 'வறுமைதானே'.

## முதல்வர் எம்.ஜி.ஆரின் மனித நேயம்

தமிழக முதல்வர்கள் வரிசையில் தமிழகத்தைப் பல்லாண்டுகள் ஆண்ட பெருமைக்குரியவர். சிறு குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை மனிதர்களை நேசிக்கும் குணம் படைத்தவர்

எம்.ஜி.ஆர். அவர்கள். அவர்கள் தமிழக முதல்வராகச் செயல்பட்ட காலங்களில் மக்கள் இன்புற்றனர், சமதர்மம் நிலைத்தது, சாதி எனும் நச்சுப் பாம்புகள் தலையாட்டாதபடி கூடைக்குள்ளே அடங்கிக்கிடந்தன. நல்லாட்சி மலர்ந்தது. நலமான வளம் மக்கள் பெற்றனர்.

இவரது நல்லாட்சியில் ''மனிதப் புனிதர் கக்கன்'' மதிக்கப் பட்டார். மருத்துவ மனையில் நற்சிகிச்சை பெற்றார். இதைப்பற்றிய உண்மைச் சம்பவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வது நல்ல சாட்சியாக விளங்கும்.

1979ஆம் ஆண்டின் துவக்கத்தில் கக்கன் ஓய்வு எடுக்கும் விதமாகத் தனது சொந்த மாவட்டமான மதுரைக்குச் சென்றார். அப்பொழுது அவருக்கு உடல் நலம் சரியில்லாமல் சிகிச்சைக்காக அரசு மருத்துவ மனனயில் சேர்க்கப்பட்டார். அந்த நேரத்தில் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் மதுரை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். மேற்கொண்டு என்ன நடந்தது என்பதனைத் தினமலர் நாளிதழ் வெளியிடும் வாரமலர் 26.3.2000 இதழில் மதுரை எஸ்.எஸ். இராமகிருஷ்ணன் ''ஒரு புகைப்பட நிரூபரின் அனுபவங்கள்'' எனும் தலைப்பில் வெளிவந்த கட்டுரையை வாசகர்களுக்கு வழங்குவதில் பெருமை அடைகின்றேன்.

''மதுரையில் 1980 மேதின விழாவில் கலந்து கொள்ள தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். வந்திருந்தார். முன்னாள் மதுரை மேயர் திரு.முத்து, அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார். மதுரை வந்த எம்.ஜி.ஆர், அரசு மருத்துவமனைக்குச் சென்று, உடல் நலம் விசாரித்தார். பின்னர்க் காருக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது, அவருடன் வந்து கொண்டிருந்த காளிமுத்து, பாலகுருவா ரெட்டியார் ஆகியோர் எம்.ஜி.ஆரிடம் 'அண்ணே முன்னாள் மந்திரி கக்கன் கடந்த ஒரு மாதமாக இந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சைப் பெற்று வருகிறார்' என்று கூறவே, எம்.ஜி.ஆர். திடீரென்று ''இதை ஏன் முதலில் கூறவில்லை? அவர் எந்த வார்டில் இருக்கிறார்?'' எனக் கேட்டார். உடனே கக்கனைப் பார்க்கச் சென்றார்.

ஆஸ்பத்திரியில் சாதாரண வகுப்பில் அனுமதிக்கப்பட்டிருந்த கக்கனின் அறையில் அவசரமாக எங்கிருந்தோ சேர்கள் கொண்டுவந்து போடப்பட்டன. சில வினாடிகளுக்குள் அங்கே வந்த எம்.ஜி.ஆர். உள்ளே நுழைந்தவுடன் எழுந்து நிற்க முயன்றார் கக்கன்.

அவரைத் தடுத்து எம்.ஜி.ஆர். அவரை அமரவைத்தார். உடம்பில் ஒரு துண்டு மட்டும் போர்த்திக் கொண்டு, முக்கால் நிர்வாணக் கோலத்தில் இருந்த கக்கனைப் பார்த்த எம்.ஜி.ஆர். சில நிமிடங்கள் ஒன்றுமே பேசவில்லை. ஒருவரைப் பார்த்து ஒருவர் கண் கலங்கினர். இந்தக் காட்சியைக் கண்ட உடன் சென்றிருந்தவர்கள் அனைவரும் உணாச்சிப் பிழம்பாயினர். காமராசர் காலத்தில் போலீஸ் மந்திரியாக இருந்தவர் கக்கன். அவரது உத்தரவுக்காக எத்தனை அதிகாரிகள் காத்திருப்பர். அப்படிப்பட்டவரை, இன்று இந்தக் கோலத்தில் பார்த்து, கக்கனின் கைகளைப் பிடித்துக் கொண்டு கலங்கிய எம்.ஜி.ஆர். 'உங்களுக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும்' எனக் கேட்டார். 'உங்கள் அன்பு இருந்தால் போதும்'... நீங்கள் பார்க்க வந்ததே சந்தோஷம் என்றார் கக்கன்.

''விசேஷ வார்டுக்கு மாற்றச் சொல்லவா?'' எனக் கேட்டார் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். ''வேண்டாம்'' என மறுத்தார் கக்கன். புறப்படும்போது, மீண்டும் கக்கனின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு ''என்னிடம் என்ன உதவி தேவையானாலும் உடனே தெரியப்படுத்துங்கள்... செய்கிறேன் எனக் கூறி விடைபெற்றுச் சென்றார்.



மதுரை மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவரும் எளிமையின் சின்னம் கக்கன்ஜியுடன் மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர்.

இந்நிகழ்ச்சியைப் பார்த்த அனைவருடைய கண்களும் கலங்கியதையும் நான் கவனிக்கத் தவறவில்லை.

மேற்கண்ட செய்தியை நாம் படிக்கும் போதே நம் கண்களில் கண்ணீர் வரும்போது மனித நேய மிக்க தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவாகளின் மனநிலை எப்படி இருந்திருக்கும் என நாம் எண்ணிப் பார்ப்போம்.

நிகழ்ச்சி ஏற்பட்ட பின் எம்.ஜி.ஆர். அவர்கள் அப்படியே விட்டுவிட்டுப் போய்விடாமல், உடனே ஆஸ்பத்திரியின் பொறுப்பாளர்களை அழைத்து ''இவர் யார் தெரியுமா? இவரது மாபெரும் உழைப்பால் கிடைத்த சுதந்திரக் காற்றைத் தான் நாம் அனுபவிக்கின்றோம். இவரைப் பொது மக்களோடு மக்களாக நடத்திட எப்படி மனம் வந்தது'' என்று கேட்டார். அதோடு நின்றுவிடாமல், தனியறை வசதியும், தகுந்த சிறப்பு மருத்துவ சிகிச்சையும் கிடைத்திட ஆணையிட்டார். ''ஏதேனும் மருந்து கிடைக்க வில்லையெனில் எனக்குச் செய்தி கொடுங்கள். அம்மருந்து உடனே கிடைத்திட ஆவன செய்கிறேன்'' என்றும் கூறிவிட்டுச் சென்றார். கக்கனின் நிறைவான அன்பினைப் பெற்றுக் கொண்டு விடைபெற்றார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரின் மனித நேயக் குணம் எந்த அளவிற்கு மேன்மையானது என்பதனை நம்மால் உணர முடிகிறது. சென்னைக்கு வந்ததும் கக்கன் நலன்பெற வேண்டி முன்னாள் அமைச்சர் போன்றவர்களுக்குக் கொடுக்கப்படும் இலவச மருத்துவ சிகிச்சைக்கும், இலவச பஸ் பயணத்திற்கும் அரசாணை வெளியிட்டுள்ளார் எனும் செய்தி நமக்குக் கிடைத்துள்ளது.

கக்கன் அவரது ஒரே மகள் திருமதி. கஸ்தூரி சிவசாமி அவர்களின் வேண்டுகோளை ஏற்று இலவச வீட்டிற்கும், ஒய்வூதியத்திற்கும் ஆவன செய்ததாகவும் அதனால் கக்கன் குடும்பத்தினர் எம்.ஜி.ஆர். 'காலத்தை அறிந்து செய்த உதவிக்கு'' இன்றுவரையும் நன்றி பாராட்டி வருகின்றார்கள்.

அக்கால அரசியலில் மனித நேயம் இருந்தது. அரசியல் எனும் குடும்பத்தில் சாதி, மதம், இனம் பாராமல் அனைவரும் சகோதரர்களாக வாழ வேண்டும் என்பதற்கு இந்நிகழ்வு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

# 12. மனிதப் புனிதரின் இறப்பு

மனித வாழ்வில் 'பிறப்பு' என்பது உண்டானால் 'இறப்பு' என்பது உறுதிதானே. மண்ணில் பிறந்தவர்கள் ஒருநாள் மண்ணிற்குச் சொந்தமாக வேண்டியது இறைவனின் தீர்ப்பு. இறப்பு மட்டும்தான் சாதி, மதம், பார்ப்பதில்லை. பணக்காரன், ஏழை என்றும் பார்ப்பதில்லை. பிறக்கும் குழந்தையின் தேதியைக் கூட நிர்ணயித்து விடலாம். ஆனால் மனிதனின் இறப்பை நிர்ணயிக்க முடியாது. மண்ணினால் உருவாக்கப்பட்ட மனிதனின் உடல் இறுதியில் மண்ணிற்கே செல்கிறது. வாழ்ந்த காலங்களில் அவன் செய்த நன்மைகளை மையமாகக் கொண்டு அவன் புகழ் நிலைக்கும். ஒரு மனிதனின் இறப்பிற்குப் பின் அவனது சேவை பின் தொடர்ந்து செல்லும். ஆம்! வாழ்கின்ற காலங்களில் மனிதன் செய்யும் சேவைதான் அவனது இறப்பிற்குப்பின் அவனது சவ ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் மக்களின் எண்ணிக்கையை மையமாகக் கொண்டு அமையும். தேசியத் தலைவர்களின் இறப்பின் வரலாறுகளை இதற்கு ஒப்பிட்டுச் சொல்லலாம். இப்படிப்பட்ட இயற்கையின் முடிவுக்குக் கக்கனும் ஆளாக்கப்பட்டார். கக்கனின் இறப்பு என்பது தனித்துவம் பெற்றதாக அமைந்தது.

கக்கனின் இறுதிக்கால வாழ்க்கை என்பது வறுமையிலே வாடியது. பணம் கக்கனின் வாழ்வில் கேள்விக்குறியானது. நோய் காணப்பட்ட காலங்களில் தனியார் மருத்துவ மனையில் சிறப்பான சிகிச்சை பெறுவதற்கான சூழ்நிலை இல்லை. பதவிகள் இருந்தும் தனக்கெனப் பணம் சம்பாதித்துக் கொள்ளும் மனம் இல்லாத காரணத்தால், இறப்பு அவரை நோக்கி வேகமாக நெருங்கியது. பொதுத்தொண்டில் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட கக்கனுக்கு அவரால் பயன்பெற்றவர்கள் கூட அவருக்கு உதவி செய்ய முன்வரவில்லை என்பது வேதனைக்குரிய செய்தியாகும்.

'மனிதநேயமே' என் கொள்கை என ஏற்றுக் கொண்டு வாழ்ந்த மாமனிதருக்கு மனித நேயத்தோடு உதவிட யாரும் முன் வரவில்லை என்பதும் வேதனைதான். அரசு மருத்துவமனையில்,

இலவச மருத்துவமே போதும் என்ற நிலையை அவர் கடைப்பிடித்த காரணத்தால் வியாதியின் தீவிரமான வளர்ச்சி அவரது இறப்பின் நாள்களை நெருங்கிக் கொண்டிருந்தது. உடல் நலக்குறைவு அதிகம் காணப்பட்டதால் 1981 அக்டோபர் மாதம் சென்னை அரசின் பொதுமருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அவருக்குத் தீவிரமான சிகிச்சை அளிக்கப்பட்டும் ஒரு சில நாள்களில் சுயநினைவினை இழந்தார். நாள் முழுவதும் சமுதாயச் சிந்தனையாகவே வாழ்ந்த கக்கன் சுயநினைவில்லாமல் காணப்பட்டார்.

## எம்.ஜி.ஆரின் உதவி


கக்கன் அரசுப் பொது மருத்துவமனையில் சுயநினைவு இல்லாமல் இருப்பதைக் கேள்விப்பட்ட முதல்வர் எம்.ஜி.ஆர். இவருக்கென்று நவீன வசதி கொண்ட படுக்கை ஒன்று புதியதாக வாங்க ஏற்பாடு செய்தார். பல இலட்சம் ரூபாயில் நவீனப் படுக்கை வாங்கப்பட்டுக் கக்கனுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. மருத்துவ அதிகாரிகளுக்குக் கக்கனின் உடல் நலம் காத்திட அடிக்கடி முதல்வர் கட்டளை பிறப்பித்த வண்ணமாய் இருந்தார். உயர்தரச் சிகிச்சைகள் கொடுத்தும் சுயநினைவு திரும்பவே இல்லை. இரண்டு மாதங்கள் அவருக்குத் தொடர்ந்து சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. சுயநினைவு திரும்பாத நிலையில் 1981 டிசம்பர் 23ஆம் நாள் கக்கன் மறைந்தார்.

நேர்மை, நாணயம், கடின உழைப்பு, நம்பிக்கை எனும் கொள்கைக்காக வாழ்ந்த மனிதனின் விளக்கு அணைந்தது. 'தீமை' என்பதைத் தன் வாழ்நாளில் கடைப்பிடிக்காத மாமனிதர் மறைந்தார்.

நாடு, கட்சி, கொள்கை எனும் கொள்கை விளக்கு அணைந்தது.

பொதுவாழ்வில் தன்னைப்போல் எவரும் வறுமையில் வாடக்கூடாது என நேர்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்த மனிதரின் விளக்கு அணைந்தது.

அரசியலில் தூய்மையாளர் எனும் தகுதிக்கு வாழ்ந்து காட்டிய மாமனிதரின் விளக்கு அணைந்தது. பாராளுமன்றம், சட்டமன்ற விவாதங்களில் கலந்து கொண்டு மக்களின் நலனுக்காகப் பேசிய வாய், பேசாமல் ஓய்வு எடுத்துக் கொண்டது. ஆதிதிராவிட இன மக்களின் பிரச்சினைக்களுக்காக இதயம் துடிக்க, துடிப்பால் உரிமை



மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனிதநேய உதவி

கேட்க, கேட்ட உரிமைகளைச் சட்டவடிவில் பெற்றுத் தந்த கக்கனின் இதயம் துடிக்காமல் ஓய்வு எடுத்துக் கொண்டது.

காந்தி, காங்கிரஸ், காமராசர் எனும் வார்த்தைகளுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் 'கக்கன்' பெயர் தாங்கிய மாமனிதரின் கண்கள் மூடப்பட்டன. அரசியல் வரலாற்றில் எவராலும் பதிக்க முடியாத தூய்மையான அரசியல் வாழ்க்கைக்கு இலக்கணமான கக்கன் மறைந்தார். ஓங்கி உயர்ந்த உருவம், ஓய்வறியா உழைப்பு, படுக்கையிலே ஓய்வு எடுத்துக் கொண்டது.

தமிழகம் முழுவதும் நடந்தே சென்று பயணம் ஏற்றுப் பல கிராமங்களைச் சுற்றிப்பார்த்த கால்கள் ஓய்வு எடுத்துக் கொண்டன.

இறப்பின் செய்தி தமிழகம் முழுவதும் மட்டுமல்ல அகில இந்தியா முழுவதும் பரவியது. கண்ணீர் மல்கக் கூடிய மக்கள் ஏராளம். எங்குப் பார்த்தாலும் அழுகுரல்தான். ஒப்பாரிவிட்டு அழுத பெண்கள் ஏராளம். கக்கனின் இறப்புச் செய்தி கேட்டுத் துடித்த இதயங்கள் ஏராளம். அரசியல் கட்சித் தலைவராக வாழ்ந்த மாமனிதருக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் புகழாரம் சூட்டினர்.

தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்., அன்றைய அகில இந்தியக் காங்கிரஸ் பொதுச்செயலர் மக்கள் தலைவர் கருப்பையா மூப்பனார், அன்றைய காங்கிரஸ் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் எம்.பி. சுப்பிரமணியம், அன்று காங்கிரஸ் கட்சியின் மேலவைத் தலைவர் திண்டிவனம் இராமமூர்த்தி, காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் இளையபெருமாள் ஆகியோர் கக்கனின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தியும் இரங்கல் செய்தியும் வெளியிட்டனர்.

> தேசப்பற்று, கட்சிப்பற்று, தலைவர்கள் மீது பற்று இப்படி வாழ்ந்த நேர்மையான தூய அரசியல் தலைவரைத் தமிழகம் இழந்து விட்டது

எனும் கண்ணீர்ச் செய்திகள் வெளிவந்தன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தியில்,

> தமிழக மக்களுடைய பேரன்பைப் பெற்றிருந்தவரும், தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தவருமான கக்கன் மறைவுக்குக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்று குறிப்பிட்டிருந்தார்.

தமிழகம் முழுவதும் மக்கள் சென்னையை நோக்கி வந்த வண்ணமாய் இருந்தனர். எங்குப் பார்த்தாலும் அழுகை தான். சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்த மக்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுத்த மாமனிதருக்குத் தங்களின் கண்ணீரை மட்டுமே இம்மக்கள் காணிக்கையாகச் செலுத்த முடிந்தது.

மாநிலக் கவர்னர் மேதகு எஸ்.எல். குரானா, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், நடிகர் நம்பியார், சுலோசனா சம்பத், பாடகர் டி.எம். சவுந்திரராஜன், நடிகர் வி.கே.

இராமசாமி மேலும் அரசியல் தலைவர்கள், சமுதாயச் சான்றோர் பெருமக்கள், அரசு உயர் அதிகாரிகள், கிராம மக்கள் எனச் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு மக்களும் நேரில் வருகை தந்து கக்கனுக்கு மலர் மாலை அணிவித்தும் மலர் வளையங்கள் வைத்தும் அஞ்சலி செலுத்தினார்கள்.

காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவராகச் சிறப்பாகப் பணியாற்றிய மாபெரும் காங்கிரஸ் கட்சியின் தீவிரமான உறுப்பினரும், தன் வாழ்நாள் முழுவதும் கட்சிமாறாத உண்மைத் தொண்டராக விளங்கிய கக்கனுக்கு, காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை அஞ்சலி செலுத்தக் கூட்டம் கூட்டமாக வந்தனர்.

இசைத் துறையைச் சார்ந்த பித்துக்குளி முருகதாஸ் தனது மனைவியுடன் வருகை தந்து மலர் மாலை அணிவித்துக் கண்ணீர் மல்கிட அஞ்சலி செலுத்தியதோடு, உடல் அடக்கம் செய்யும் போது இரங்கல் பாடல்களைப்பாடித் தனது அஞ்சலியைச் செலுத்தினார்.

## அடக்கம் செய்தல்

சமுதாயத்தின் அடித்தளத்தில் பிறந்து, வரலாறு படைத்து வாழ்ந்த மாமனிதரின் உடலை எங்கே அடக்கம் செய்யப் போகின்றார்கள் என்பது அனைவரின் கேள்வியாக இருந்தது. இந்திய அளவில் புகழ்பெற்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் தமிழ்மாநிலக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக வாழ்ந்த மனிதப் புனிதர் கக்கன் அவர்களுக்கு மேதகு ஆளுநர் மாளிகைக்குப்பின் வரிசையாக அமைக்கப்பட்டுள்ள தலைவர்களின் சமாதிகளின் வரிசையில் நினைவிடம் வைக்கப்படுமா? அல்லது மக்களோடு மக்களாக வாழ்ந்த தலைவர் கக்கனுக்குப் பொதுச் சுடுகாட்டில் இடம் ஒதுக்கப்படுமா? என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது.

தமிழக முதல்வராகவும், கக்கன்பால் அன்பும், பாசமும் கொண்டவரும், கக்கன் காவல்துறை அமைச்சராகப் பணியாற்றிய அந்தத் துறையின் அமைச்சருமான எம்.ஜி.ஆர். அவர்கள்தான் எந்த இடத்தில் அடக்கம் செய்வது என்பது குறித்து முடிவு எடுக்க வேண்டும் என்பதும் பொதுச் சிந்தனையாகவே காணப்பட்டது. இருந்தாலும் தமிழக முதல்வருக்கு யாராவது கோரிக்கை மனு அனுப்ப வேண்டுமே, அதை யார் செய்வது? அவருடன் பிறந்த சகோதரர்கள்

மற்றும் அவருக்குப் பிறந்த குழந்தைகள் கோரிக்கை மனு அனுப்புவதா? கக்கன் தலைமை ஏற்று வழிநடத்திய காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர்கள் ஒன்றுகூடிக் கோரிக்கை மனு அனுப்புவதா? இப்படி பல கேள்விகள் எழுந்தன.

அரசியல் கட்சிகள் பெரும்பாலும் அவர்கள் சார்ந்துள்ள இனத்தை மையமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. எனவே சாதிச் சங்கங்கள், அல்லது சாதி உறுப்பினர்கள் இணைந்து காரியங்களைச் செய்து வருகின்றனர். ஆனால் கக்கனுடைய வாழ்க்கையில் அவர் சார்ந்த சாதிச் சங்கங்களுடனோ அல்லது சாதித் தலைவர்களுடனோ அவ்வளவாக நெருங்கிப் பழகாத நிலையில் சாதிச் சங்கங்கள் கோருவதில் அவ்வளவாக முயற்சி செய்யவில்லை என்பதும் தெரியவருகின்றது. ஏனோ தெரியவில்லை காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கக்கனைத் தனி இடத்தில் அடக்கம் செய்ய வேண்டும் என்றோ, காமராசரின் உண்மைத் தொண்டனாக வாழ்ந்த கக்கனுக்குக் காமராசர் சமாதிக்கு அருகில் அடக்கம் செய்தல் வேண்டும் என்றோ அவர்கள் நினைக்கவும் இல்லை, கோரிக்கை விடவும் தயாராக இல்லை எனவும் பலர் பேசிக்கொண்டதாகவும் அறிய முடிகிறது.

பூனைக்கு மணி கட்டுவது யார்? என்று எலிக் கூட்டங்கள் சிந்தித்ததைப் போல எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்துத் தனி இடத்தில் அடக்கம் செய்வது குறித்து யார்கோரிக்கை வைப்பது? என்பது முடிவுக்கு வராத நிலையில் இருந்தது. இறுதியில் உறவினர்கள் ஒன்றுகூடி ஒரு முடிவுக்கு வந்தனர். உறவினர்களே முதல்வரை அணுகித் தனி இடம் கேட்பது, அதுவும் காமராசர் நினைவு இடத்திற்கு அருகில் கேட்பது என்ற முடிவுக்கு வந்தனர். அதன்படி முதல்வர் இறுதி அஞ்சலி செலுத்த வந்தபோது சோகத்தின் உச்சகட்டத்தில் இருந்த உறவினர்கள், முதல்வர் எம்.ஜி.ஆரைச் சந்தித்துக் 'காமராசர் சமாதிக்கு அருகில் கக்கனை அடக்கம் செய்ய அனுமதி வழங்க வேண்டும்' என்ற கோரிக்கையை முன் வைத்ததாகவும், அதற்கு முதல்வர் எம்.ஜி.ஆர். ''அது எனக்குத் தெரியும், நான் பார்த்துக் கொள்கின்றேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றதாகவும் அறிய முடிகிறது. முதல்வரின் முடிவு நல்லதாகவே அமையும்; காமராசர் சாமாதிக்கு அருகில் அவரது உண்மைத் தொண்டன் கக்கனுக்குச் சமாதி அமைக்கப்படும் என்ற கனவினை நோக்கித் தமிழகமே காத்துக்கிடந்தது.

மணல் கோட்டை கடல் அலைகளுக்கு இரையாவது போல அனைவரின் மனக்கோட்டையும் மண் கோட்டையாகவே அமைந்துவிட்டது. ஆம்!

காங்கிரஸ் கட்சியின் ஆணி வேராகத் தன் வாழ்நாள் முழுவதும் தியாகம் செய்த தியாகச் சுடருக்கு தலைவர்களின் சமாதிகள் அமைந்துள்ள இடவரிசையில் கக்கனுக்கு அடக்கம் செய்யத் தமிழக அரசும், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரும் முன்வராத காரணத்தால் காவல்துறையின் அமைச்சருக்குக் காவல்துறையின் அரசு மரியாதை அணிவகுப்போடு 24.12.1981 அன்று சென்னைத் தியாகராயர் நகர் அருகிலிருக்கும் கண்ணம்மாப்பேட்டை பொதுச் சுடுகாட்டில் உடல் எரியூட்டப்பட்டது. பாமரனுக்குக் கிடைத்த மரியாதை கக்கனுக்குக் கிடைத்தது. எந்த மக்களின் வளர்ச்சிக்காக ஓங்கிக்குரல் கொடுத்தாரோ அதே மக்களோடு மக்களாக, சாதாரண மனிதனுக்குக் கிடைத்த மரியாதை மாபெரும் தலைவருக்கு வழங்கப்பட்டது.

# 13. கக்கனின் உயர் குணங்கள்

'மனித நேயம்' பிறக்க வேண்டுமானால் ஒவ்வொருவர் மனதிலும் 'சுயநலம்' என்பது நீங்க வேண்டும். நீதி நூல்கள் மனித இனத்திற்குச் சொல்லும் நீதியாவது ''நான் அல்லேன் நீயே'' என்பதாகும். சுயநலம் இல்லாத மனிதர்களுக்கு இரக்கம் அதிகமாக இருக்கும். இரக்கம் உள்ள மனிதர்களுக்குப் பிறருக்கு உதவிக்கரம் நீட்டும் நேசக்கரம் உருவாவது இயற்கை. தனனலம் கருதாமல் பிறர்நலம் கருதுபவர்களே வரலாற்றில் இடம்பெறுவதுண்டு. ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்'' எனும் முதுமொழி என்பது ஏழைக்கு உதவிடும் நல்மனம் படைத்தவர்கள் மூலமாக இறைவனைக் காணலாம் என்பதுதான் உண்மையாகிறது.

**உன் கண்களை**
**இரக்கக் கண்ணீரால் அலங்கரி**
**உன் கைகளை**
**ஈகையால் அலங்கரி**

எனும் வரிகள் மனிதநேயப் பண்பினைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. கண்ணபிரான்கூட ஏழை குசேலருக்கு இறங்கி வந்து இரக்கம் காட்டி உதவியதாகப் பக்தி நெறிச் சுவடுகள் சுட்டிக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட இரக்கக் குணம்தான் கக்கன் வாழ்க்கையில் இயற்கைச் சொத்தாகக் கிடைத்தது. மனித நேயமிக்க குணம் படைத்த கக்கன் 'ஒழுக்க நெறி'யில் தன்னை ஒரு வட்டத்துக்குள் நிரந்தரமாக்கிக் கொண்டார்.

அமைச்சராகப் பல்லாண்டுக் காலம் பணியாற்றிய கக்கனுக்கு

**உங்கள் அதிகாரம்**
**மண்ணைத்தானே ஆள்கிறது**
**அதனால் மனங்களை**
**ஆள முடியவில்லையே**

எனும் ஒரு கவிஞனின் வரிகளுக்குக் கக்கன் பெருமை சேர்த்தார். ஆம்! கக்கன் ஏழை மக்களின் மனங்களை ஆண்டவர். ஆங்கிலேயர்கள் இந்திய மண்ணைத் தான் ஆண்டார்கள். ஆனால் கக்கன் சுதந்திரம் பெற்றபின் தமிழ் மண்ணையும் ஆண்டார். தமிழக

மக்களின் மனதையும் ஆட்சி செய்தார். தன்னலம் கருதாத தகமையாளராக வாழ்ந்தார்.

மனிதன் சகமனிதன் மேல் நேசம் காட்டினால் மட்டுமே சமுதாயம் ஆரோக்கியமானதாகத் திகழும்

**ஈட்டி முனையில் சாதிக்கக் கூடாததைக்கூட**
**இதயச் கனிவால் சாதிக்க முடியும்**

ஆம்! இவ்வரிகள் கக்கன் வாழ்க்கையில் அதிகமாகவே பிரதிபலித்தன. சாதிச் சச்சரவுகள் ஏற்பட்ட இடங்களில் முதல்வர் காமராசர், கக்கனைப் பிரச்சினை உள்ள இடங்களுக்கு அனுப்புவார். காரணம் கனிவாகப் பேசியே ஏற்பட இருக்கும் சாதிக் கலவரங்களைச் சமாதானமாக்கிவிடுவார்.

**தூரத்தில்**
**இரும்பு வளைகளில்**
**பிய்த்தெறியும் புயலின்**
**காலடிச் சத்தம்**
**கேட்ட பிறகும்**
**அமைதியாய்**
**எச்சில் இலைகளால்**
**தொங்கு பாலமாய்**
**மும்முரமாய் வலை**
**பின்னும் சிலந்தி**

இச்சிலந்தியின் விடா முயற்சி, நம்பிக்கைச் செயல்கள்தான் ஒவ்வொரு மனிதனின் வளர்ச்சிக்கு ஏணிப்படிகளாக அமைந்ததாகும். ஆம்! கக்கன் வாழ்க்கையிலும் இதுதான் ஏற்பட்டது. விடா முயற்சி, தன்னம்பிக்கை, நேர்மை, மனத்தூய்மை, கெடுதி நினைக்கா நல்மனம் இவைகள்தாம் ஒரு மனிதன் தான் கடந்து வந்த பாதையில் சேர்க்கும் சொத்துக்கள். மனிதனின் வாழ்வும், தாழ்வும் அம் மனிதனின் பழக்க வழக்கங்களை மையமாகக் கொண்டு அமையும். தாழ்வுதான் ஒரு மனிதனின் வாழ்விற்கு அச்சாரம். வாழ்ந்த காலங்களில் வளம் சேர்ப்பதும், மனித நேயத்தை வளர்ப்பதும் அம்மனிதனின் மனப் பக்குவத்தையே குறிக்கும். கக்கன் வாழ்ந்த காலமும், கடந்து வந்த பாதையும், வாழ்வில் தளர்ச்சியும், தளர்ச்சி அடையும் போது மனத் தளர்ச்சி அடையா உறுதியான மனப்பாங்கும் அவரைச் சிகரத்தில் உட்காரவைத்தன. தங்கத் தொட்டிலில் உட்காரவைத்து அழகு பார்த்தன.

நல்ல குடும்பத்தில் பிறந்த மகனாக, கல்வி கற்றிட ஏங்கிய மாணவனாக, விடுதிக் காப்பாளராக, அரசியல் கட்சி உறுப்பினராக, கட்சியின் பொறுப்பாளராக, கட்சியின் தலைவராக, விடுதலைப் போராட்ட வீரானாக, நாடாளுமன்ற உறுப்பினராக, சட்டமன்ற உறுப்பினராக, மாநில அமைச்சராக இப்படி பல்வேறு பரிணாம வளர்ச்சியினைக் கண்ட கக்கன், தான் வகித்த பதவிகளுக்கு மதிப்பு, மரியாதை கொடுத்து அவர் வாழ்ந்து வந்த வாழ்க்கை, அவர் கடைப்பிடித்த நல்ல பழக்க வழக்கங்கள் தான் அவரை 'மனிதப் புனிதர் கக்கன்' எனும் தலைப்பிற்குத் தகுதியுடையவராக உயர்த்தியன. அவரது குணநலன்கள் இயற்கை அன்னை தாராளமாகக் கொடுத்ததாகும். அவர் வாழ்வில் ஏற்பட்ட உண்மைச் சம்பவங்களும், அதன் மூலம் அவர் எப்படி மனிதருக்கெல்லாம் உயர்ந்து நிற்கின்றார் என்பவற்றை ஒருசில ஆதாரங்களோடு நாம் பார்க்க இருக்கின்றோம்.

இப்படியும் ஒரு மனிதர் இருப்பாரா? இருந்தாரா? இருப்பார்களா? எனும் கேள்விகள்தாம் இப்பகுதியிலிருந்து அறிந்து கொள்ள இருக்கின்றோம். கக்கனைப் போன்றவர்கள் இருந்தால் இந்தியா உலக வல்லரசு நாட்டில் முதல் இடம்பெறுவது உறுதி என்றுதான் நினைக்கத் தோன்றும் வாருங்கள் அவரது குணங்களை ஆராய்வோம்?

**தேர்தல் நிதி – காசோலை தந்த பாடம்**

மனிதன் செய்யும் செயல்பாடுகள் இரண்டு வகைப்படும். ஒன்று தான் அறிந்து செய்வது. மற்றொன்று தான் அறியாமல் செய்வது. மனம் அறிந்து செய்வது தூய்மையான பணியாகும். மனம் தவறு என்று சொல்லியும் செய்வது குற்றமாகும். இப்படிப்பட்ட குற்றமான செயல்களில் கக்கன் எப்போதும் ஈடுபட்டதில்லை.

எடுத்துக்காட்டாக, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பாரமலை அவர்கள் கக்கனைப்பற்றி நெஞ்சாரப் புகழ்ந்து பல செய்தியைப் பேசிவந்தாலும் கீழ்க்கண்ட செய்தியை அவர் பல இடங்களில் பேசியதுண்டு.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் பொறுப்பாளர்களில் ஒருவராகக் கக்கன் செயல்பட்டார். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

ஒவ்வொருவரும் கட்சிக்கு முன்கூட்டியே ரூ.25000/- காசோலையாகக் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை விதித்தார்கள். இந்த நிபந்தனைப்படி கக்கனுக்கு நெருங்கியவரான மதுரை பாரமலையை, காசோலையாகப் பணத்தைக் கட்டுமாறு கூறினார். பாரமலை விவரமானவர். கக்கனைப் பார்த்து,

> நான் காசோலையைத் தருகிறேன். ஆனால் வங்கியில் பணம் இல்லாமல் திரும்பிவந்தால் நான் பொறுப்பல்ல

என வேடிக்கையாகச் சொன்னார் பாரமலை. கக்கனுக்குக் காசோலையின் மகிமை தெரியவில்லை. அவர் நினைத்ததெல்லாம் காசோலை வாங்கினாலே பணம் வந்தது போல் நினைத்துக் கொண்டு, பாரமலையைப் பார்த்து,

> ஆண்டிப்பட்டி நல்லகரம் காசோலைக் கொடுத்துக் கட்டிவிட்டார். அதைப்போல நீயும் காசோலையைக் கொடுத்துக் கட்டிவிடு.

என்றார். பாரமலை சிறிது சுதாரித்துக் கொண்டு

> காசோலை யார் வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால் அவரது கணக்கில் பணம் இருந்து, காசோலையை வங்கி அதிகாரிகள் ஏற்றுக் கொண்டு பணம் கொடுக்கணுமே

என்று பாரமலை சொன்னதும், கக்கன் வியந்து பார்த்தபடி,

> என்னப்பா இது? காசோலை கொடுத்தால் பணம் கொடுத்துத் தானே ஆகணும், நீ சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லையே

என்று பேசினார் கக்கன்.

பாரமலை, ஒன்றும் பேசாதபடி எதுக்கும் பொறுத்திருந்து பார்ப்போம். எல்லாம் பிறகு தெரிந்துவிடும் என்றார்.

சில நாள்கள் கழித்து, கக்கன், பாரமலையைப் பார்த்ததும், ''நீ சொன்னது சரிதான்'' என்று சொல்லியுள்ளார். எதைப்பற்றி என்று பாரமலை கக்கனைக் கேட்டதும், ஆண்டிப்பட்டி நல்லகரம் கொடுத்த காசோலை வங்கியில் பணம் இல்லாத காரணத்தால் திரும்பிவந்துவிட்டதாகக் கக்கன் கூறியுள்ளார். மேற்கண்ட நிகழ்வுகளிலிருந்து,

வங்கியில் பணம் இல்லாமல் கூட
காசோலை கொடுக்கலாம்

என்ற செய்தி கக்கனுக்குத் தெரிய வில்லை என்பதுதான் முக்கியச் செய்தியாகும். அதுமட்டுமின்றிக் காசோலை பெறுவது என்பது பணம் பெறுவதைப் போல்தான் என்றும் கக்கன் நம்பியிருந்தார். வங்கிக் கணக்கில் பணம் இல்லையென்றாலும் காசோலை கொடுத்து ஏமாற்றலாம் என்பதும் கக்கனுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

இங்கே நல்லகரம் என்பவர் வங்கியில் பணம் இல்லை என்பதைத் தெரிந்திருந்தும் காசோலை கொடுப்பது மனம் சொல்லும் பொய் என்பதை அறிந்திருந்தும் காசோலை கொடுத்து ஏமாற்றம் செய்துள்ளார். கக்கன் இதனை மன வேதனையோடு அணுகியுள்ளார். இப்படிப்பட்ட நிகழ்ச்சியிலிருந்து தனது நெஞ்சம் அறிந்து ஒரு பொய்யான செயலை, மற்றவரை ஏமாற்றும் எண்ணத்தில் செய்யக்கூடாது என்ற உண்மை வாழ்வினைத் தன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்த காரணத்தால் தான் மற்றவரை ஏமாற்றியோ, மனம் புண்படும்படியாகவோ அவர் வாழ்ந்தாரில்லை.

கக்கனைப் போன்ற அரசியல் தலைவர்கள் இருந்தால் இலஞ்ச, இலாவண்யம், ஏமாற்றம் போன்ற கொடுமைகள் ஏற்படாது என்பது உண்மையே?

**வாரி வழங்கிய**
**வள்ளல்கள்**
**வாழ்ந்த பூமி இது!**
**தர்மத்தில் உரத்தால்**
**கன்னலும் செந்நெல்லும்**
**செழித்த பூமி இது?**
**இப்போது**
**பணப்பயிர் சாகுபடி**
**படுத்துவிட்டது**
**ஓ!**
**பணத்தையே**
**பயிர் செய்கின்றனரே**
**எங்கள் அரசியல்வாதிகள் . . . .**

இக்கவிதை கக்கன் வாழ்ந்த காலத்திற்குப்பின் இயற்றப்பட்ட கவிதை! இக்கவிஞனின் எண்ணம் தானே இன்றைய அரசியல்வாதிகள். கக்கனை நினைத்து மகிழ்வோம்! அவர் பிறந்த மண்ணில் நாமும்

பிறந்துள்ளோம் என்று. எனவேதான் 'மனிதப்புனிதர் கக்கன்' எனப் போற்றுகிறோம்.

## இரத்தம் சிந்தினபோதும் காட்டிக்கொடுக்காதவர்

சுதந்திரப் போராட்டத்தில் தன்னை வழிநடத்திய தலைவர்களின் பாதையைப் பின்பற்றிப் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு, சிறையில் அடைக்கப்பட்டுச் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டு மிகவும் பாதிக்கப்பட்ட கக்கன் மேலூர் காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுப் பல துன்பங்களை அனுபவித்தார் என நாம் ஏற்கெனவே பார்த்தோம். இந்த விசாரணையின் போதுதான் சுதந்திரப் போரட்டத்தில் கலந்து கொண்ட கூட்டாளிகளைக் காவல்துறை ஜல்லடைபோட்டுத் தேடிவந்தனர்.

கக்கனைத் துன்பத்திற்குள்ளாக்கப்பட்டு கசையடிகள் மூலம் உண்மையைக் கண்டறிய திட்டமிட்டார்கள், கக்கனோடு போராட்டக் களத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்களைச் சொல்லுமாறு பல தடவை கேட்டும் கக்கன் சொல்ல மறுத்துவிட்டார். காரணம் போராட்டக்களத்தில் நின்றவர்கள் அனைவரும் தலைவர்கள், தலைவர்களைக் காட்டிக் கொடுப்பதைவிட உயிரே போனாலும் பரவாயில்லை என நினைத்துக் கடைசிவரை சொல்ல மறுத்துவிட்டார். காங்கிரஸ் தொண்டர்களின் உடலில் கடும் இரத்தத்தில் கலந்துவிட்ட உணர்வுதான் விடுதலை என்பதாகும். இந்நாட்டில் பல கட்சிகள் இருந்தாலும் சுதந்திரப் போராட்டத்தில் தன் உயிர் போனாலும் போராட்டத் தலைவர்களைக் காட்டிக் கொடுக்காத தொண்டர்கள் காங்கிரஸ் இயக்கத்தில் இருந்தனர் என்பதற்குக் கக்கனின் துணிவு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது எனலாம்.

காங்கிரஸ் இயக்கத்தில் தன்னையே தியாகம் செய்து கொண்ட தியாகிகள் ஏராளம். தியாக மனம் படைத்தவர்களுக்கு மட்டுமே அக்காலத்தில் காங்கிரஸ் இயக்கத்தில் பதவிகள் கொடுக்கப்பட்டன. கக்கன் பல்வேறு பதவிகளைக் காங்கிரஸ் கட்சியில் பெற்றார் என்றால் தியாகத்தால் பெற்றவை. பணத்தைக் காட்டியோ, பகட்டான வாழ்க்கையைக் காட்டியோ அவர் பதவிகள் பெறவில்லை.

காங்கிரஸ் கட்சியில், காட்டிக் கொடுக்காத இலட்சிய வீரர்கள் இருந்தார்கள், வாழ்ந்தார்கள், சாதனைபடைத்தார்கள் என்பதற்குக் கக்கனின் துணிவு, காட்டிக் கொடுக்காத துணிவு

அதுவும் புகழ்பெற்ற தலைவர்களைக் காட்டிக் கொடுக்காத துணிவு வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. 5 நாட்கள் தொடர்ந்து கசையடி பெற்றார். காலில் ஆணி அடித்துச் சித்திரவதை செய்தார்கள். காரணம் காட்டிக்கொடுக்காத காரணத்தால்.

இந்திய வரலாற்றில் காட்டிக் கொடுக்காத இனம் இருந்தது என்பதற்குக் கக்கனின் வரலாறு வீர வரலாறாக மின்னுகின்றது. அவரது வழியை இன்றைய காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும் பின்பற்றினால் எதிர்காலத்தில் காங்கிரஸ் கட்சி நிலையான ஆட்சியைப் பெறும் என்பது உறுதி. 'மனிதப் புனிதர் கக்கன்' என பெருமையாக போற்றுகிறோம்.

## பதவிக்காக வாழ்வது வாழ்க்கையில்லை

கக்கன் அமைச்சராக இருந்த காலத்தில் எப்பொழுதும் பல மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்வது வழக்கம். அரசாங்கக் காரில் சென்று அரசுப் பயணியர் மாளிகையில் தங்குவது வழக்கம். ஒருமுறை பொதுப் பணித்துறை அமைச்சராக இருக்கும்போது மதுரைக்கு முன் அறிவிப்பின்றி வருகை தந்துவிட்டார். அப்போது இரவு பத்துமணி. எப்பொழுதும் போல் அரசுப் பயணியர் மாளிகையில் தங்கிவிடலாம் என நினைத்துப் பயணியர் மாளிகைக்குப் போகச் சொன்னார். கார் நேராகப் பயணியர் மாளிகைக்குச் சென்றது. இரவுக் காவலர் நடுங்கிப்போனார். ஏனென்றால் எப்பொழுதும் ஒரு அறை அமைச்சர் தங்குவதற்காகவே ஒதுக்கப்படும் ; ஆனால் அன்றைய தினம் வேறு ஒரு விருந்தினருக்கு ஒதுக்கப்பட்டு அவர் தங்கியிருப்பதாக நடுங்கிக் கொண்டு சொன்னார். அதிகாரிகள் நடுங்கிப் போயினர். இதை எப்படி அமைச்சரிடம் சொல்வது. உடனே அதிகாரிகள் அமைச்சரிடம் வந்து,

வேறு ஒரு விருந்தினருக்கு ஒதுக்கப்பட்டு அவர் தங்கியிருக்கிறார். அதனால் தனியார் விடுதியில் இன்று ஏற்பாடு செய்வோம். இல்லையென்றால் விருந்தினரைக் காலி செய்து விட்டு இங்கேயே தங்கலாம் என்று கூறினார்கள். அதிகாரிகளின் படபடப்பை நன்கு புரிந்து கொண்ட அமைச்சர் கக்கன், நடுங்கிக் கொண்டிருக்கும் காவலரை அழைத்து, அவரை இந்த இரவு நேரத்தில் காலி செய்து தொந்தரவு செய்ய வேண்டாம். அரசு வழங்கும் அதிகார முறைப்படி (Protocal) அமைச்சருக்கு முதலிடம் என்பது உண்மையாக இருந்தாலும், அவரும் நம்மைப்போன்ற மனிதர்தானே5! அவர் அங்கே தங்கட்டும் என்று சொல்லிவிட்டுக்

காரில் ஏறி உட்கார்ந்தார். அப்பொழுது அதிகாரிகள், தனியார் விடுதிக்குப் போகலாமா? என்று கேட்டதும், ஓட்டுநரைப் பார்த்து நேராக ''என் தம்பி முன்னோடி வீடு தொடரிக் குடியிருப்பில் (இரயில்வே காலனி) இருக்கிறது. அங்கே போய்விடலாம்'' எனக் கூறி ஒரே அறையுள்ள வீட்டிற்குச் சென்று அங்கே மகிழ்வுடன் தங்கினார்.

மேற்கண்ட நிகழ்ச்சியிலிருந்து அமைச்சர் கக்கன் வாழ்விலிருந்து நாம் அறியும் உண்மையாவது :

1. அமைச்சர் எனும் பதவியில் இருக்கும் கக்கன் அரசு விருந்தினர் மாளிகையில் தங்கியிருக்கும் விருந்தினர் யாராக இருந்தாலும் அவர் ஒரு மனிதர், தானும் மனிதன். அரசாங்க விதிப்படி அமைச்சருக்குத்தான் முதலிடம், முக்கியத்துவம் என இருந்த போதிலும் மனித நேயம் அவரைத் தூண்டியது. அமைச்சராக இருக்கும் நாம் எங்காவது தங்கிக் கொள்ளலாம். பாவம் விருந்தினர் இரவு நேரத்தில் எங்குத் தங்குவார் எனச் சிந்தித்த மனித நேயம் மேலோங்கிக் காணப்பட்டது. காமராசர் முதலமைச்சராக இருக்கும் ஆட்சிக் காலத்தில் சாதாரண மக்களும் துன்பம் அடையக் கூடாது என்ற உயர் சிந்தனை கக்கனிடம் இருந்த காரணத்தால் விருந்தினரை மதித்தார். அமைச்சரும் சாதாரண மனிதரும் சமம் எனும் மனிதநேய மாண்பினை அறிய முடிகிறது. பதவிகள் மூலம் பணிவு கற்றுக் கொள்ள வேண்டும் என்ற தாக்கத்தை இந்த நிகழ்வு படம் பிடித்துக் காட்டுகிறது.

2. இரண்டாவதாக அமைச்சர், நினைத்திருந்தால் தனியார் விடுதியில் தங்கியிருக்கலாம். அமைச்சருக்கும் செலவினை அத்துறை ஏற்றிருக்கும். ஆனால் அமைச்சர் கக்கன் தம்பியின் வீட்டில் ஏன் தங்க முடிவு எடுத்தார்? என்பதை நாம் நன்கு சிந்திக்க வேண்டும். தனியார் விடுதியில் தங்கும் போது செலவிடப்படும் தொகை அரசாங்கப் பணமாகும். தங்குவதற்குத் தம்பியின் வீட்டில் இடம் வசதியாக இருக்கும்போது ஏன் தனியார் விடுதியில் தங்கி வீணான செலவினை அரசுக்கு ஏற்படுத்த வேண்டும் என்றும் நினைத்திருப்பார். ஒரே அறையில் வசதியில்லாத வீட்டில் தங்கிய கக்கன், ஆடம்பர ஓட்டலில் தங்கிப் பணம் விரையமாக்குவதை விரும்பவில்லை. இதற்கெல்லாம் அவரிடம் அடிப்படைக் கொள்கை இருந்தது. அதாவது,

பதவியில் இருக்கும்போது ஆடம்பர வாழ்க்கையைப் பெறுவதும், பதவி இழந்ததும் சாதாரண நடைமுறை வாழ்க்கைக்கு வந்துவிடுவதும்

அவருக்குப் பிடிக்காத ஒன்றே. மனித வாழ்க்கை எப்பொழுதும் ஒரே சீராக இருக்க வேண்டும். பதவிக்காக வாழ்க்கை இருக்கக் கூடாது. வாழ்க்கைக்காகப் பாதையைச் சரிசெய்து வாழ வேண்டும் என்பதில் திடமான எண்ணம் கொண்டிருந்தார். பதவி மயக்கம் இருக்கக்கூடாது. அதே நேரத்தில் பதவிக்குப் பெருமை சேர்த்து எவ்விதமான பலனும் எதிர்பார்க்காமல் உழைக்க வேண்டும். இதுவே கக்கனின் **'மனிதப் புனிதர்'** எனும் பெருமைக்குக் காரணம்.

## அமைச்சர் வீட்டில் அரசு ஊழியர் வேலை செய்வதா?

ஒவ்வொரு துறையிலும் அமைச்சருக்குப் பணியாட்களை நியமனம் செய்வது வழக்கம். பியூன் என்று அழைக்கப்படும் இவர்கள் அரசு ஊழியர்கள். அரசுத்துறை சம்மந்தமான வேலைகளை மட்டும் செய்வார்கள். இக்காலத்தில் இப்படிப்பட்ட பணியாளர்கள் அதிகாரிகளின் துணிகளைத் துவைப்பது முதல், வீட்டின் அனைத்து வேலைகளைச் செய்யும் அடிமைகளாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். அமைச்சர் கக்கன் வீட்டில் ஒரு சம்பவம் நடந்தது.

ஒரு நாள் கக்கன் நிகழ்ச்சிக்குச் சென்றுவிட்டு வீட்டிற்குக் காரில் வந்து கொண்டிருந்தார். வீட்டின் மதில் சுவர் கதவுகளைத் தாண்டும் போது, தன் பணியாளர் ஒருவர் மண்ணெண்ணெய் வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வருவதைப் பார்த்துவிட்டார். உடனே ஓட்டுநரிடம் காரை நிறுத்தச் சொல்லி, பணியாளரை அழைத்து 'இது யாருக்கு' என்று கேட்டார். அவர் 'நம்ம வீட்டிற்குத் தான்' என்றார். கக்கன் 'யார் வாங்கிவரச் சொன்னது' என்றார். அதற்குப் பணியாளர் 'அம்மாதான் வாங்கிவரச் சொன்னாங்க' என்று சொன்னதும் அமைச்சரின் முகம் முழுவதும் கோபத்தால் மாறியது. உடனே ஓட்டுநரை விட்டு மனைவியை அழைத்துவரச் சொன்னார்.

பணியாளரை அழைத்து மண்ணெண்ணெய்ப் பாத்திரத்தை வெளியே வைக்கச் சொன்னார். பணியாளர் பாத்திரத்தை வெளியே சாலையில் வைத்துவிட்டார். பணியாளர் மனம் நோகும் வண்ணம் அமைச்சரிடம் திட்டுகளை வாங்கிக் கொண்டு நடுங்கிக் கொண்டிருந்தார். இந்தக் காட்சிகளை அமைச்சரைப் பார்க்க வந்திருக்கும் பார்வையாளர்கள், காவலர்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மனைவி வெளியே வந்ததும், கக்கன் பணியாளரைக் காட்டி, 'இவர் யார் தெரியுமா? அரசாங்க ஊழியர். உனக்கு வேலை செய்ய வேறு ஆள் இல்லையா? இவருக்கு இனிமேல் வீட்டு வேலை ஏதாவது கொடுத்தால் அவ்வளவுதான்' எனத் திட்ட வேண்டியதை எல்லோர் முன்னிலையிலும் திட்டிவிட்டு, மனைவியைப் பார்த்து 'அதோ எண்ணெய்ப் பாத்திரம் இருக்கு. இதை நீயே எடுத்துக்கிட்டுப் போ' எனச் சொல்ல மனைவி கண்ணீர் கலங்கிடப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு போனார்கள். இந்த நிகழ்ச்சியைப் பலர் பார்த்தார்கள்.

இப்படி ஒரு மனிதரா? எல்லோரும் வியந்தார்கள் என்று தனது அண்ணனின் பெருமைகளையும், அண்ணியாரின் அடக்கத்தையும் கண்ணீர் மல்கச் சொன்னவர்தான் மறைந்தும் மறையாமல் நம் உள்ளத்தில் வாழ்ந்திருக்கும் அமரர் விஸ்வநாதன் கக்கன். மேற்கண்ட நிகழ்ச்சியிலிருந்து அமைச்சர் கக்கனின் உயர் பண்பாக நாம் அறிவது, அரசுப் பணியாளர்கள் என்பவர்கள் அரசு வேலைகளைச் செய்யத்தானே தவிர அதிகாரிகளின் வீட்டு வேலைகளைச் செய்வதற்கல்ல என்பதைப் பலருக்கு முன் உதாரணமாக வாழ்ந்து காட்டியவர் கக்கன்.

கக்கன் வழியை அனைத்து அமைச்சர்கள், மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கடைப்பிடித்தால் நமது நாடு எப்பொழுதோ முன்னேற்றம் அடைந்திருக்கும்.

## மாநகரப் பள்ளியில் படித்த அமைச்சரின் மகள்

ஏழை எளிய மக்களின் குழந்தைகள் படிப்பதற்காகவே சென்னை போன்ற மாநகரங்களில் அரசால் நடத்தப்படும் பள்ளிகளே மாநகராட்சி பள்ளிகளாகும். தனியார் பள்ளிகள் என்பது பணக்காரர் மற்றும் வசதி படைத்தவரின் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளாகும். இக்காலத்தில் அமைச்சரின் குழந்தைகள் வெளிநாடுகளுக்குச் சென்று படிக்கிறார்கள். மாநகராட்சி பள்ளி என்பது துன்பப்படும் அடித்தளத்துக் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளாகவே காட்சியளிக்கின்றன.

தற்சமயம் சென்னை மாநகராட்சி பள்ளிகளின் கல்வித் தரத்தில் முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது. இருந்தாலும் மாநகராட்சி மேயர் குழந்தைகள், கவுன்சிலர் குழந்தைகள், அமைச்சர்

குழந்தைகள், அரசு அதிகாரிகள் குழந்தைகள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் குழந்தைகள் இப்படிப்பட்ட அரசு நடத்தும் மாநகராட்சி பள்ளிகளிலோ அல்லது அரசினர் மேனிலைப் பள்ளிகளிலோ படிக்கின்றார்களா? என்றால் இல்லை என்றுதான் சொல்ல முடியும். இவர்களின் குழந்தைகள் அரசுப் பள்ளிகளில் படிக்கும் பட்சத்தில் ஆசிரியர்கள் மேலும் அக்கறை எடுத்துக் கொண்டு பாடம் நடத்த முன்வரும் பட்சத்தில் பொதுமக்களின் குழந்தைகளும் பயன் பெற்றிட, கல்வித்தகுதி உயர்த்திட வாய்ப்பாக இருக்கும். இவற்றிற்கு விதிவிலக்காகத் தமிழக வரலாற்றில் தனிப் பெருமை பெற்றவர்தான் அமைச்சர் கக்கன். இவரது ஒரே மகள், அன்பு மகள், பாச மகளைச் சென்னை மாநகராட்சி பள்ளியில் சேர்த்துப் படிக்கச் செய்தார்.

ஐந்தாண்டுக் காலம் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்துவிட்டுப் பின் மாநில அமைச்சராகப் பொறுப்பேற்பதற்கு முன் கக்கன் மதுரையிலிருக்கும் தனது குடும்பத்தைச் சென்னைக்கு மாற்றம் செய்தார். அப்பொழுது பள்ளியில் படிக்கும் குழந்தையாக இவரது ஒரே மகள், அன்பிற்குப் பாத்திரமான மகள் கஸ்தூரி பாயை எப்பள்ளியில் சேர்ப்பது என்ற நிலை ஏற்படும்போது, கக்கனின் பரந்த எண்ணம், சிக்கனமான வாழ்க்கைமுறை தனியார் பள்ளியில் அதிகக் கட்டணம் செலுத்திப் படிக்க வைப்பதை விட அமைச்சரின் மகள் மாநகராட்சி பள்ளியில் படித்தால் படிப்பு வராதா? என்ன என்ற மேலோங்கிய சிந்தனைபால் மாநகராட்சி பள்ளியில் சேர்த்தார். சேர்த்தது மட்டுமல்ல தன் குழந்தை அரசுப் பள்ளியில், மாநகராட்சி பள்ளியில் சேர்ந்து படிப்பதைப் பெருமையாகவும் நினைத்தார்.

அரசுப் பள்ளியில் கல்வித்தரம் சிறப்பாக இருந்தாலும் எத்தனை அமைச்சர் பெருமக்கள் பெருமையாக நினைத்துக் குழந்தைகளைப் படிக்கவைக்க முன்வருகின்றார்கள். இன்றைய அரசும்கூட அரசாங்க அதிகாரிகள், அமைச்சர்கள், சட்டமன்ற, பாராளுமன்ற, மாநகராட்சி மேயர்கள், கவுன்சிலர்கள் உள்ளாட்சி அமைப்பைச் சார்ந்த அனைவரின் குழந்தைகளையும் அரசுப் பள்ளிகளில் மட்டுமே சேர்க்க வேண்டும் எனும் சட்டம் கொண்டுவந்தால் நலமாக அமையும்.

கக்கன் நினைத்த கனவு பலிக்கவும் செய்யும். இது நடக்குமா? காலம் தரும் பதிலை நோக்கியே இருப்போம். 'மனிதப் புனிதர் கக்கன்' என பெருமைப்பட அழைக்கிறோம்.

## துணி துவைத்த அமைச்சர் கக்கன்

கக்கனின் எளிமையான வாழ்விற்குப் பல சாட்சியங்கள் உள்ளன.

**சிக்கனத்தைக் கடைப்பிடி! சினம் கொண்டு வாழாதே!**
**சிறுமை வந்தால் பெருமிதம் கொள்!**
**அச்சம் கொள் அறத்தைக் கடைப்பிடி!**

எனும் வரிகளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் கக்கன். சிக்கனம் அவரது வாழ்வின் முதல் இலட்சியமாகும். வீணாகச் செலவு செய்வது கக்கனுக்கு எப்போதுமே பிடிக்காத காரியமாகும்.

**நாம் நினைத்தது கிடைக்காத போது**
**கிடைத்ததைப் பெரிதெனக் கொள்**

என்பது கக்கன் கடைசிநாள் வரையில் கடைப்பிடித்த வாழ்க்கை நெறியாகும்.

**பகட்டான வாழ்க்கை என்றும்**
**நிரந்தரமல்ல**
**எளிமையான வாழ்வே**
**நிலையானது**

எனும் எளிமையின் சின்னமாக வாழ்ந்தவர்தான் மனிதப் புனிதர் கக்கன். அமைச்சர் எதை நினைத்தாலும் சாதிக்க முடியும் என்பது அன்றும், இன்றும் தமிழக அரசியல் நமக்கு அளிக்கும் உண்மைக் கூற்றாகும். எதையும் சாதிக்கக் கூடிய நாற்காலியில், அதிகாரத்தில் அமர்ந்து கொண்டு கக்கன் எளிமையாக எப்படித்தான் வாழ்ந்தார் என்பதற்கு அவர் வாழ்வில் நடைபெற்ற உண்மை நிகழ்ச்சி மூலமாக நாம் அறிந்து கொள்வோம். இப்படியும் ஒரு அமைச்சர் தமிழகத்தில் இருந்தாரா? என இக்கால இளைஞர்கள் வியப்புடன் கேட்கக் கூடிய கேள்வியாகக் கூட இருக்கலாம்.

அமைச்சர் கக்கன் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம், நாட்களைக் கணக்கிட்டுக் கொண்டு துணிகளை எடுத்துச் செல்வது வழக்கம். புதுக்கோட்டை பகுதியில் கக்கன் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். சுற்றுப்பயணம் முடித்துக் கொண்டு திரும்பும்போது அன்றைய நாளில் கட்டிக் கொள்ள எடுத்த வேட்டி கட்ட முடியாத அளவிற்குக் கிழிந்து இருப்பதைக் கண்டு கவலைப்பட்டார். என்ன செய்வது என்று தெரியவில்லை. ஓட்டுநரும்,

காவல்துறை அதிகாரிகளும் அமைச்சர் உடை அணிந்து கொண்டு வந்து விடுவார் என நினைத்துக் காரைத் தயார் நிலையில் வைத்துக் கொண்டு காத்திருந்தனர். வெகு நேரமாகியும் அமைச்சர் வராததைக் கண்டு காவல்துறை அதிகாரி உள்ளே சென்று பார்த்தபோது குளியலறைக் கதவுகள் மூடப்பட்டிருந்தன.

கிழிந்த துணிகளைக் கண்டு கவலைப்பட்ட கக்கன், அழுக்குத் துணிகளை எடுத்துச் சென்று கதவை மூடிக் கொண்டு துணிகளைத் துவைத்துக் கொண்டு இருந்தார். சப்தத்தைக் கேட்ட காவல்துறை அதிகாரிகள் கதவைத் திறந்து பார்த்தபோதுதான் துணிகளைத் துவைத்துக் காயப்போட்டுக் கொண்டிருந்தார். வியந்துபோன அதிகாரிகள், ‘‘ஐயா சொல்லியிருந்தால் நாங்களே துவைத்திருப்போம். இல்லையெனில் புதிய துணிகளை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்திருப்போம்’’ என்று சொன்னார்கள். அப்பொழுது அவர்களைப் பார்த்துக் கக்கன் சொன்னதுதான் வியப்பாக இருக்கிறது.

> என்னை அமைச்சர் கக்கனாகப் பார்க்காமல் சாதாரண மனிதர் கக்கன் என்று பார்த்தால் நான் செய்வது சரிதானே

என்று சொன்னார். வியந்து போன அதிகாரிகள் எதுவும் பேசாமல் இருந்தனர். துணிகள் உலர்ந்த பின் கட்டிக் கொண்டு வந்து காரில் ஏறிக் கொண்டு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

இச்செய்தியை அன்றைய செய்தித் தாள்களில் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுள்ளார்கள்.

மேற்கண்ட செயல்பாடுகளிலிருந்து அமைச்சர் கக்கன், புகழின் உச்சிக்கே சென்றிருந்தாலும் அன்றாட வாழ்வில் அவர் சாதாரண மனிதராகவே வாழ்ந்துள்ளார். அவர் நினைத்திருந்தால் புதிய பட்டுவேட்டியும், சட்டையும் வாங்கிப் போட்டிருக்கலாம். ஆனால் அவரது சிக்கனமான வாழ்க்கை கடைசி வரையில் நிலைத்து இருந்தது என்பதுதான் உண்மை. நாம் ஏற்கெனவே அவரது கடைசிக்கால வாழ்க்கையைப் பார்த்தோம். எளிமை, தூய்மை, வாய்மை, சிக்கனம், மனித நேயம் போன்ற உயர்பண்பான குணங்களால் கக்கன் வரலாற்றில் **‘‘மனிதப் புனிதர் கக்கனாக’’** உயர்கின்றார்.

## தம்பிக்குக் கிடைத்த வீட்டுமனை ஒதுக்கீடு நீக்கம்

அரிசன நலத்துறை அமைச்சராகக் கக்கன் பணியாற்றிய போது, அவரது கடைசித் தம்பி பூ. விஸ்வநாதன் பட்டப்படிப்புப் படித்துவிட்டு வேலை கிடைக்காத காரணத்தால் அண்ணன் அமைச்சர் வீட்டில் தங்கி இருந்தார். அரிசன நலத்துறை இயக்குநர் திரு. முத்துருளாண்டி அமைச்சர் வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்லும் போது விஸ்வநாதனை நேரில் சந்தித்துப் பேசுவதுண்டு. இந்தப் பழக்கத்தின் அடிப்படையில் அமைச்சரின் தம்பிக்கு ஏதாவது ஒரு உதவி செய்ய வேண்டும் எனும் பரந்த எண்ணத்தால், ஒருநாள், விஸ்வநாதனை அலுவலகத்திற்கு வரச்சொல்லியுள்ளார்.

விஸ்வநான் நேரில் சென்று பார்க்கும்போது, ''உனக்கு என்னால் வேலை கொடுக்க முடியாது''. இருந்தாலும் என் அதிகாரத்திற்குட்பட்டு இலயோலா கல்லூரிக்கு அருகில் முழு அளவு வீட்டுமனைப் பட்டா ஒதுக்கீடு செய்கிறேன் என்றார். அரசு ஆணையும் கொடுத்து உதவிட முன்வந்தார். இயக்குநரின் பரந்த மனதையும், செய்த உதவியையும் நினைத்து மகிழ்ந்தார் விஸ்வநாதன். ஒருமுறை இயக்குநர் அமைச்சர் கக்கனை நேரில் சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கும்போது, தம்பி விஸ்வநாதனுக்கு வீட்டுமனை ஒதுக்கீடு செய்த விவரத்தைப் பெருமையாகச் சொல்லிக் கொண்டார். கக்கனும் அனைத்துச் செய்திகளையும் சிரித்துக் கொண்டே கேட்டுக் கொண்டார்.

இச்செய்தி கேட்டதும் தம்பி விஸ்வநாதனை நேரில் ஆள்விட்டு அழைத்துவரச் சொன்னார். விஸ்வநாதன் எப்பொழுதும் அண்ணனுக்குப் பயந்து மரியாதை அளிப்பவர். ஏதோ அவசரச் செய்திக்காகக் கூப்பிடுகிறாரோ என நினைத்துக் கொண்டு மிகவும் வேகமாக வந்தார். இயக்குநர் சொன்னதைத் தம்பியிடம் உண்மையா? என்று கேட்டறிந்தார். விஸ்வநாதனும் உண்மையை ஒத்துக்கொண்டார். உடனே அந்த ஒதுக்கீட்டு ஆணையைக் கொண்டுவரச் சொன்னார். விஸ்வநாதன் மகிழ்ச்சி பொங்க அண்ணனிடம் ஒதுக்கீட்டைக்காட்டி வாழ்த்துப் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ஆணையைக் கொண்டுவந்து கொடுத்தார். கக்கன் ஆணையைக் கையில் வாங்கித் துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டு விட்டார். அதுமட்டுமின்றி இயக்குநரை அழைத்து இந்த ஒதுக்கீட்டை இரத்து செய்யும்படி ஆணையிட்டார்.

''அண்ணன் மந்திரி'' என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒதுக்கீடு பெற்றது தவறு. ''ஒதுக்கீடு செய்து கொடுத்தது இயக்குநர் செய்த தவறு'' என்றும் சுட்டிக் காட்டினார். ஏழை மக்கள் வீடு ஒதுக்கீடு கிடைக்காமல் சாலை ஓரத்தில் முக்காடு போட்டுக் கொண்டு முடங்கிக் கிடக்கிறார்கள். இனிமேல் இப்படிப்பட்ட தவறுகள் செய்யக்கூடாது என்று தம்பி விஸ்வநாதனுக்கு அறிவுரையும் கூறினார். இயக்குநரிடம் இனிமேல் என் உறவினர்களுக்கு, என் உத்தரவு இல்லாமல் எதுவும் செய்யக்கூடாது என எச்சரித்தார்.

தம்பி விஸ்வநாதனுக்கு ஒன்றுமே புரியவில்லை. காரணம் அவரும் ஏழைதான். வீடு இல்லாத ஏழை. அமைச்சருக்குத் தம்பியாகப் பிறந்தது பாவமா? அல்லது ஏழ்மையாகப் பிறந்தது பாவமா? விஸ்வநாதன் அசைக்க முடியாத நம்பிக்கையாய் இருந்தார். அதே நேரத்தில் அண்ணன் அமைச்சராக இருந்தபோதும் தன் அதிகாரத்தை உறவினர்கள் யாரும் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதில் மிகவும் கவனமாகவே இருந்தார். தற்சமயம் அந்த நிலத்தின் மதிப்பு 50 இலட்சமெனக் கணக்கிடப்படுகிறது. தம்பி விஸ்வநாதன், எனக்கு இலட்சம் பெரியதல்ல. இலட்சியம்தான் பெரியது என்று பெருமையாக ஒவ்வொரு மேடையிலும் அண்ணன் கக்கனின் இலட்சிய வாழ்க்கையைப் பற்றி வீர முழக்கமிடுவார். மேற்கண்ட குணநலன் 'மனிதப் புனிதர் கக்கன்' எனும் புகழுக்கு அழைத்துச் செல்கிறது.

## அமைச்சர் வீட்டில் அரசு ஊழியரா? குமுதம் செய்தி

''காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கல்வி அமைச்சராக, உணவு அமைச்சராக, காவல்துறை அமைச்சராக இப்படி பல இலாக்கக்களின் அமைச்சராகப் பணிபுரிந்தவர்தான் கக்கன். அவரை யாரும் முன்னாள் அமைச்சர் என்று கூப்பிடாமல் 'தியாகி கக்கன்ஜி' என்றே அழைத்து வந்தனர். அமைச்சர் என்று சொல்லிக் கொண்டு பந்தா வாழ்க்கை வாழாமல், எளிமையின் தோற்றமாகவே வாழ்ந்தவர்.

எனக்கு (கக்கனின் கடைசித் தம்பி விஸ்வநாதன் கக்கன்) வேலை கிடைக்கும் வரையில் என் அண்ணன் அமைச்சர் கக்கன் வீட்டில் தங்கியிருந்தேன். இது அரசாங்க வீடு.

சில நாள்கள் கழித்து எனக்கு நெடுஞ்சாலைத் துறையில் வேலை கிடைத்து, இரண்டு வாரங்கள் மட்டுமே வேலை செய்து

வந்தேன். இந்தச் செய்தி அண்ணன் அமைச்சர் கக்கனுக்குத் தெரியாது. இருந்தாலும், அவரது அரசாங்க வீட்டிலே தங்கியிருந்தேன்.

வேலையில் சேர்ந்த இரண்டு வாரங்கள் கழித்து ஒருநாள் இரவு சுமார் **11.00** மணியளவில் வீட்டிற்குள் நுழைந்து, அண்ணன் கக்கன், என்னை அழைத்து 'இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கின்றாய்? என்று கேட்டார். அதற்கு நான் ''நெடுஞ்சாலைத் துறையில் வேலையில் சேர்ந்து இரண்டு வாரம் ஆகியது" என்று சொன்னேன். மிகவும் கோபத்தோடு அரசாங்க ஊழியனாக இருந்து கொண்டு, சம்பளமும் வாங்கிக் கொண்டு அரசாங்க வீட்டில் என்னோடு தங்குவது தவறு''. . . இனிமேல் அரசாங்க வீட்டில் இருக்கவே கூடாது. 'உடனே, புறப்படு' என்று சொல்ல, நான் சிறிது தயங்கி 'நடு இரவு' நான் எங்கே போவேன், காலையில் போய் விடுகிறேன் என்று கெஞ்சிக் கேட்ட பின்பும் அவரது மனம் நீதியை நிலை நாட்டியது. அந்த நடு இரவில் கண்ணீரோடு வீட்டைவிட்டு வெளியேறினேன்.[1]

மேற்கண்ட செய்தி, உறவினராக இருந்தாலும் அரசாங்கச் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டும். அரசாங்க வீடு என்பது அரசாங்க ஊழியர்களுக்கான குடும்பத்தைச் சார்ந்த மனைவி, குழந்தைகளுக்குத்தானே தவிர ஏனைய உடன்பிறப்புகளுக்கு இல்லை என்பதுதான் உண்மையாகிறது.

கக்கனின் பரந்த எண்ணம், பண்பட்ட அறிவும் நீதிக்குத் தலை வணங்கச் செய்தது. எனவேதான் **'மனிதப் புனிதர் கக்கன்'** எனும் புகழ்ச் சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்கின்றார்.

## வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்தல்

**பணம் பத்தும் செய்யும் அதே**
**நேரத்தில் பாதாளத்தில் தள்ளிவிடும்**

என்பார்கள். பசுமையான பதவிகள், பாலைவனம் போல வாழ்க்கை. இதுதான் கக்கன் வாழ்வில் காணப்பட்ட அதிசயம். பத்தாண்டுக்கால அமைச்சர். ஐந்தாண்டுக் காலப் பாராளுமன்ற உறுப்பினர், பெரும் புகழ்பெற்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர். இப்படி புகழின் உச்சிக்கே சென்ற கக்கனின் இறுதிக்கால வாழ்வு கேள்விக்குறியாகவே காணப்பட்டது. வாழ்க்கை எனும் மைதானத்தில் வறுமை எனும் பந்தினைத் தினமும் கோல் அடித்தவர். ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் பணம் பற்றாக்குறையால் கடன் வாங்குவது தேர்தலில்

சகஜமாகிவிட்டது. 1967ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பணம் பற்றாக்குறையால் கவலைப்பட்டார். நல்ல மனிதர்களுக்கு நாலுபேர் உதவிட முன் வருவார்கள். பல நண்பர்கள் முன்வந்து பண உதவி செய்தார்கள். அவர்களில் முக்கியமானவர் நாவினிப்பட்டி மைனர் என்பவர் குறிப்பிடத்தக்கவர். இவர் மிகப்பெரிய செல்வந்தர். பண உதவி செய்யும் நல்ல மனம் படைத்தவர். ரூ.11,000/– தொகையைக் கக்கன் ஆள் அனுப்பி வாங்கிவரச் செய்தார். மைனரோ பணம் போதவில்லையெனில் மீண்டும் கேளுங்கள் தருகின்றேன் என்று சொன்னார்.

நடைபெற்ற தேர்தலில் கக்கன் தோல்வி அடைந்தார். துவண்டு போனார் வாங்கிய கடனுக்கு என்ன வார்த்தை சொல்லுவது எனத் திகைத்துப்போனார். வருமானம் என்பது இல்லை. சேமிப்புத் தொகையும் இல்லை. கண்ணீர்க் கடலில் மிதந்தார் கக்கன். கைதூக்கி விடவோ எவருமில்லை. சென்னையில் வருமானம் இல்லாமல் வாழ்வது கடினமாக இருந்தது. இருந்தாலும் இவரைப் பற்றி நன்கறிந்த ஒரு சில நல்ல நண்பர்கள் இவருக்கு உதவி செய்திடப் பல வழிகளைத் தேடினார்கள். இறுதியில் 'மணிவிழா' என்ற பெயரில் விழா எடுத்துப் பொருளுதவி செய்யத் திட்டமிட்டனர்.

மதுரை நெடுமாறன் தலைமையில் மிகச் சிறப்பாகச் செயல்படும் விழாக்குழு உருவாக்கப்பட்டது. சிறப்பாகப் பணியாற்றி மதுரை தமுக்கம் மைதானத்தில் காங்கிரஸில் புகழ்பெற்ற திரு. சி. சுப்பரமணியம் அவர்களை அழைத்து வந்து விழா எடுக்கப்பட்டு, அவரது கையால் கக்கனுக்குத் தங்கச் சங்கிலி பரிசளிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி அனைத்துச் செலவுகள் போக மீதமுள்ள ரூ.21,000/– பண முடிப்பாகச் கக்கனுக்கு வழங்கினார்கள்.

வரலாறு போற்றும் விதத்தில் விழாவினைக் கண்டு வீடு திரும்பிய கக்கன் ஒரு நபரை அனுப்பி நாவினிப்பட்டி மைனரை அழைத்துவர ஏற்பாடு செய்தார். ஏதோ அவசரச் செய்திக்காகத்தான் கக்கன் அழைத்து இருப்பார் என நினைத்து மைனர் மிகவும் வேகமாகக் கக்கனைப் பார்க்க வந்தார். கக்கன் மைனரிடம் அன்பாகப் பேசினார். குடும்ப நலன்களை விசாரித்துவிட்டு ரூ.11,000/– கையில் கொடுத்துவிட்டு, இத்தனை நாள்கள் கொடுக்க முடியாமைக்கு வருத்தம் தெரிவித்து, நன்றியையும் பகிர்ந்து கொண்டார். மைனரால் நம்பவே முடியவில்லை. அதுமட்டுமின்றிக் கடன்கொடுத்த நினைவுகூட மைனருக்கு இல்லை. பணத்தை வாங்க மறுத்த

மைனர், நண்பருக்காகச் செய்த உதவிதானே தவிரக் கடனாகக் கொடுத்த பணமில்லை எனச் சொல்லியும் மறுத்தார். கக்கன் விட்டபாடில்லை. எனக்குத் தேவை எனச் சொல்லித்தான் நபர் அனுப்பிக் கடனாக வாங்கி வந்த பணம் தான் இது. கடனைத் திருப்பிக் கொடுப்பதுதான் மனிதப் பண்பு. அப்படியும் வாங்கவில்லையெனில் நம்மிடையே நட்பு தொடர வாய்ப்பில்லை எனவும் கடினமாகப் பேசினார் கக்கன்.

எதுவும் சொல்ல முடியாமல் மைனர் பணத்தைப் பெற்றுக் கொண்டார். காரணம் கக்கனை விட்டுவிட மனமில்லை. சொன்ன சொல்லைக் காப்பாற்றும் நெறிமுறையில் கக்கன் வாழ்ந்தார் என்பதற்கு இந்நிகழ்வு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

''கடன் அன்பை முறிக்கும்'' என்பார்கள். கக்கன் அன்பை வளர்த்திட மனித நேயக் கருத்துக்களை வாழ்வில் கடைபிடித்த காரணத்தால் **'மனிதப் புனிதர் கக்கன்'** எனும் புகழுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்.

### தேடிச் சென்று பணம் கொடுத்தல்

நாம் ஏற்கெனவே மணிவிழாவில் பணமுடிப்பாக ரூ.21,000 கொடுத்ததாகப் பார்த்தோம். இதில் ரூ.11,000 தொகையை மைனருக்குக் கொடுத்துவிட மீதமுள்ள ரூ.10,000 தொகையை வங்கிக் கணக்கில் வைப்பு நிதியாகச் செலுத்திக் குடும்பத்தினர் திட்டமிட்டனர். தொகை ரூ.10,000இல் ரூ.1800 எடுத்து ஒரு நபரிடம் கொடுத்து டி.வி.எஸ். பயணியர் விடுதியில் கொடுத்துவிட்டுப் பற்றுச்சீட்டு வாங்கி வருமாறு சொன்னார். வீட்டில் உள்ளவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏன் கொடுக்க வேண்டும்? என்று வீட்டிலுள்ளவர்கள் கேட்டார்கள். அதற்குக் கக்கன் ''நான் அமைச்சராக இருந்தபோது அங்குத் தங்கியிருந்தேன். அப்பொழுது கொடுக்க முடியவில்லை. அவர்களும் கேட்கவில்லை. இருந்தாலும் கொடுத்துவிடுவதுதான் நியாயம்'' எனச் சொன்னார். ஆனால் விடுதியின் உரிமையாளர்கள் கேட்கவுமில்லை; கேட்கவும் மாட்டார்கள் என்ற நிலையிருந்தும், என்றாவது ஒருநாள் கொடுத்துவிடுவார் என்ற நம்பிக்கையில் விடுதி உரிமையாளர் கேட்காமலிருந்தார் என்று கக்கன் சொல்லி, பல ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பிக் கொடுத்தார் என்பது அவரது குற்றமற்ற மனித நேயத்தை வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றது.

கடன் கொடுத்தவர்கள் மனம் வேதனைப் படக்கூடாது என்பதில் கக்கன் மிகவும் கவனமாகவே இருந்தார். மனிதப்பண்பு என்பது மற்றவரை ஏமாற்றாமல் இருப்பது. மனிதநேயம் என்பது நேசத்தின் பிறப்பிடம். கஷ்டப்படும்போது கடனுதவி செய்து கண்ணீரைத் துடைப்பவர்கள் பணத்தைத் திரும்பக் கொடுப்பதுதான் மனிதப் பண்பு. கக்கன் வாழ்வில் இதனைக் கடைப்பிடித்தார். இவரது மனிதப் பண்புதான் இவரை **மனிதப் புனிதர் கக்கன்** எனும் புகழின் உச்சிக்கே அழைத்துச் சென்றது.

## கொள்கைக் கோமகன்

கக்கன் இன்று வரலாற்றில் தனிஇடம் பெற்றுத் திகழ்வதற்கு முதற்காரணம் அவரது கொள்கைதான். 1962–67இல் அமைச்சராக இருந்த காலத்தில் மதுவிலக்குத் துறை இவருக்கு ஒதுக்கப்பட்ட துறையாகும். மதுவிலக்கு ஆணை அமலில் இருந்ததால் ஒரு சில பணக்காரர்கள் அரசின் அனுமதிபெற்றபின்தான் குடிக்கவேண்டும். பல மனுக்கள் தினமும் கக்கனுக்கு வருவதுண்டு. குடிப்பதையே அன்றாடப் பழக்கமாகக் கொண்டவர்கள், குடிப்பதற்கு அனுமதி பெற வேண்டும். பல விண்ணப்பங்களில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவர் குடிக்க அனுமதி கேட்டு விண்ணப்பித்திருந்தார். இந்த விண்ணப்பம் கக்கன் பார்வைக்கு வந்தது. கக்கன்தான் அனுமதி வழங்க வேண்டும்.

பல நாட்கள் ஆகியும் இந்த விண்ணப்பம் மீது எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பல உயர் அதிகாரிகள் சிபாரிசு செய்தார்கள். விண்ணப்பித்தவர் பல அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களை அதிகம் அறிந்தவர். வசதிபடைத்தவர். இருந்தாலும் யார் சொல்லியும் கக்கன் மது அருந்த அனுமதி கொடுக்கவில்லை. இறுதியாகப் பலர் கக்கனுடன் தொலைபேசி மூலமாகப்பேசி அனுமதி கேட்டனர். அதற்குக் கக்கன், விண்ணப்பித்தவர் நல்லவர், எனக்கு அதிகம் வேண்டப்பட்டவர். அவரது உடல் நலம் கருதித்தான் நான் அவருக்கு மது அருந்த அனுமதி வழங்கவில்லை. என்னைச் சார்ந்தவர்கள் குடிக்காமல் இருப்பதை நான் அதிகம் விரும்புகின்றவன் என்பது அவருக்கும் தெரியும் எனச் சொல்லி அமைதிப்படுத்தினார்.

கொள்கை என்பது ஒவ்வொரு மனிதருக்கும் மானத்தைக் காப்பாற்றும் துணியைப் போன்றது. ஒரு மனிதனின் நல்ல பழக்க

வழக்கங்கள் அவர்களை மேம்பாடு அடையச் செய்யும். தானும் குடிக்காமல் பிறரையும் குடிக்காமல் பாதுகாத்துக் கொள்வதுதான் மனிதக் கொள்கை. அந்தக் கொள்கையில் சாகும்வரை தடம் புரளாமல் வாழ்ந்துகாட்டியதால் தான் கக்கன் **'மனிதப் புனிதர் கக்கன்'** என அழைக்கப்படுகிறார்.

## மனதைக் கவரும் கக்கன்

கக்கன் அமைச்சராகப் பணியாற்றிய காலங்களில் இவரது ஊர்தி ஓட்டுநர் (கார் டிரைவர்) அரசுப் பணியாளர் கிடையாது. ஒவ்வொரு அமைச்சர்களும் அவரவர் துறையைச் சார்ந்து ஒரு ஓட்டுநரை நியமனம் செய்து கொண்டு, தற்காலிக ஊழியர்களாக, துறையே சம்பளம் வழங்கி வந்தது. இதில் கக்கன் சிறிது மாறுபட்டவராகவே காணப்பட்டார். இவரது ஊர்தியை ஓட்டுவதற்கு ஒரு ஓட்டுநரை நியமனம் செய்து கொண்டு, இவரது சம்பளத்திலிருந்து ஓட்டுநருக்குச் சம்பளம் கொடுத்து வந்தார். இந்தச் சம்பளம் ஓட்டுநருக்குப் போதவில்லை என்பதோடு பிற அமைச்சர்கள் கொடுக்கும் சம்பளத்தைவிட மிகவும் குறைவாகவே இருந்தது.

இவரது ஓட்டுநர் கக்கனைச் சந்தித்துப் பிற அமைச்சர்கள் கொடுக்கும் சம்பளமுறையைப் பற்றி எடுத்துச் சொல்லவும், "மற்றவர்கள் எப்படி கொடுக்கிறார்கள் என்பது எனக்குத் தேவை இல்லை". நான் என் சம்பளத்திலிருந்து கொடுக்கின்றேன். ''விருப்பம் இருந்தால் கார் ஓட்டு; இல்லையெனில் அதிகம் சம்பளம் கொடுப்பவர்களுக்குக் கார் ஓட்டு'' என்று சொல்லிவிட்டார். ஓட்டுநருக்கு ஒன்றும் புரியவில்லை. இறுதியில் கக்கன் கொடுத்த சம்பளத்தை வாங்கிக் கொண்டு கார் ஓட்டினார். இதற்குக் காரணம் என்ன?

கக்கன் அனைவரிடமும் பாசமாய் இருப்பார். யாரையும் தொழிலாளி என நினைப்பதில்லை. கக்கன் காட்டும் பாசம், ஓட்டுநரை வழிநடத்தும் விதம், அவர்களது குடும்பத்தார்களுக்கு உதவிடும் மனம் இவைகள் ஓட்டுநரை அதிகமாகக் கவர்ந்தன. பேசும் விதமே பல கேள்விகளுக்குப் பதில் கிடைத்துவிடும். சொன்ன சொல்லில் உறுதி, வாக்கு மாறாத வாழ்க்கை இவை கக்கனின் குணங்கள். இப்படிப்பட்ட குணத்திற்கு அடிமைப்பட்ட ஓட்டுநர் கிடைத்த சம்பளத்தை வாங்கிக் கொண்டு வேலை செய்தார் என்பதுதான் பெருமை.

மனிதனை மனிதனாக மதிக்கும் பண்பு கக்கன் வாழ்வில் பல காலக்கட்டங்களில் பார்க்க முடிந்தது. தன் துறையில் வேலை செய்யும் அனைவரையும் சமமாய் மதிப்பவர். கடைநிலை ஊழியராக இருந்தபோதும், சமையல்காரர்களாக இருந்தாலும், ஓட்டுநராக இருந்தாலும் அனைவரையும் அரசாங்க அதிகாரிகளைப் போலவே மதிக்கும் மனிதப் பண்பு கக்கனிடம் அதிகமாகவே காணப்பட்டது. ஓட்டுநரின் பிரச்சினைக்கு அன்பான வார்த்தைகள் மூலமாகவே தீர்வுகண்ட கக்கன் **"மனிதப் புனிதர் கக்கன்"** எனும் புகழ்மிக்க சொல்லுக்கு உதாரணமாகத் திகழ்ந்தார் என்பது உண்மைதானே.

## பரிசுப்பொருட்களை விரும்பாத பண்பாளர்

"அமைச்சர்" என்பது அரசுப் பதவி. அரசுப் பதவியில் இருந்து கொண்டு எப்படிப்பட்ட பரிசுப் பொருட்கள் பெற்றாலும் அது பதவி தன்மையைத் தவறாக பயன்படுத்துவது ஆகும். சாதாரண மனிதனாக இருக்கும்போது பிறந்தநாள் விழாக் கொண்டாடுகிறார்களா? இதனை நன்கு உணர்ந்தவர்தான் கக்கன். எப்படிப்பட்ட பரிசுப்பொருட்கள் வந்தாலும் அதனை அரசாங்கப் பதிவேட்டில் பதிவு செய்துவிட்டுப் பதவியைவிட்டுச் செல்லும் போது அரசிடம் ஒப்படைப்பது கக்கனின் தனி வரலாறு.

மலேசியா நாட்டைச் சார்ந்த வேளாண்மைத்துறை அமைச்சர் கக்கனை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்தார். அப்பொழுது கக்கன் வைத்திருந்த பழையகாலப் பேனாவைப் பார்த்துவிட்டு, தனது சட்டைப் பையில் இருந்த பேனாவைக் கக்கனிடம் கொடுத்தார். அப்பேனாவை வாங்கிக்கொண்டு உற்று நோக்கிப் பார்த்த கக்கன், "இந்தப் பேனா தங்கப்பேனாவா? எனக் கேட்டார். அதற்கு மலேசியா அமைச்சர், "ஆமாம் இது தங்கப் பேனாதான். இந்தப் பேனாவை என் நினைவாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று மலேசியா அமைச்சர் சொன்னார்.

'தங்கப் பேனா என் தகுதிக்கு உகந்ததல்ல' எனச் சொல்லிக் கக்கன் வாங்க மறுத்துவிட்டார். என்னுடைய தனிப்பட்ட அன்பின் பரிசளிப்புதான் இந்தப் பேனா. இதைத் தங்கப் பேனா என்று பார்க்காமல் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார். கக்கன் தனது உதவியாளரை அழைத்து, பேனாவைக் கொடுத்து 'அலுவலகப் பதிவுப் புத்தகத்தில் பதிவு' செய்து கொண்டுவரச் சொன்னார்.

மலேசியா அமைச்சர், "இது உங்கள் சொந்த உபயோகத்திற்குத் தானே தவிர அரசுக்கு அல்ல" என்றார். கக்கன்

பெருந்தன்மையோடு, ''இப்படிப்பட்ட விலையுயர்ந்த பொருள்கள் எல்லாம் அமைச்சராக இருக்கும் என்னைப் போன்றவர்கள் அரசாங்கப் பதிவு ஏட்டில் பதிவு செய்துவிட்டு உபயோகப்படுத்தவேண்டும். பிறகு பதவியை விட்டுச் செல்லும்போது அரசாங்கத்திடம் ஒப்படைப்பதுதான் நியாயம். ஏனெனில் எனக்கு நீங்கள் கொடுப்பது ''அமைச்சர்'' என்ற அதிகாரத்தில் நான் இருப்பதால் மட்டுமே, கக்கன் என்ற தனிமனிதனுக்குக் கொடுத்தது அல்ல'' என விளக்கமளித்தார். மலேசியா அமைச்சர் கக்கனின் பண்பான எண்ணத்தை அறிந்து நெகிழ்ந்து போனார். அரசுப் பதிவேட்டில் பதிவதாக இருந்தால் நான் கொடுக்கவில்லை என்று சொல்லிப் பேனாவைப் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியை நேரில் பார்த்துக் கொண்டிருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அமரர் டி.பி. ஏழுமலை அவர்கள் கக்கனின் பெருந்தன்மையை, தன்னலமற்ற குணத்தைப் பல மேடைகளில் பேசிப் பெருமை சேர்த்ததுண்டு.

இந்திய அரசியல் உலகில் மக்களின் உள்ளத்தில் தனிஇடம் பெற்று வாழ்ந்த காரணத்தால்தான் அவர் **'மனிதப் புனிதர் கக்கன்'** எனப் பெருமையோடு அழைக்கப்படுகின்றார்.

**பசுமாடு – டி.பி. ஏழுமலை கூற்று**

கக்கனின் குணநலன்களை ஆய்வு செய்து பார்த்தால் பல செய்திகள் நமது மனதைத் தொடும் நிகழ்வுகளாகவே இருக்கும். கக்கன் அமைச்சராக இருக்கும்போது இவரது நெருங்கிய நண்பரும், சட்டமன்ற உறுப்பினருமான டி.பி. ஏழுமலை அடிக்கடி கக்கனைப் பார்க்கச் செல்வதுண்டு. ஒருமுறை வீட்டிற்குச் சென்றபோது தேநீர் கொடுக்கும்படி மனைவியிடம் சொன்னார். அவரது மனைவி தயங்கினார். காரணம் வீட்டில் பால் இல்லை என்பதனைச் சொல்ல, ஏழுமலை திகைத்துப் போனார். அமைச்சர் வீட்டில் பால் இல்லையா? உடனே கக்கனிடம் சென்று வீட்டில் ஒரு பசுமாடு வாங்க வேண்டியதுதானே எனக் கேட்டார். கக்கன் எப்பொழுதும்போல் புன்சிரிப்பாக பதிலளித்தார்.

கக்கன் மனைவியிடம் ஆலோசனை பெற்று ஏழுமலை பசுமாடு வாங்கிவந்து கக்கன் வீட்டில் கட்டியதோடு பசுமாட்டினைப் பாதுகாக்க, பராமரிக்க ஒரு நபரையும் ஏற்பாடு செய்தார். ஏழுமலை அந்த மாட்டை ரூ.150/–க்குத் திருவொற்றியூர் சந்தையிலிருந்து வாங்கி வந்ததாகத் தெரிகிறது. கக்கன், ஏழுமலையை அழைத்து,

''மாடு வாங்கி வந்ததற்கு மிகவும் மகிழ்ச்சி. அதுசரி மாடு வாங்கியதற்கு இரசீது எங்கே'' என்று கேட்டார். ஏழுமலைக்கு ஒன்றுமே புரியவில்லை. காரணம் மாடு வாங்கியது சந்தையில். இரசீது சந்தையில் யாரிடம் கேட்பது எனத் திகைத்த ஏழுமலை, கக்கனைப் பார்த்து இதற்கு இரசீது கொடுக்க மாட்டார்கள்' என்று பதிலளித்தார். கக்கன் ஒன்றும் தெரியாதவராய், அமைச்சராக இருக்கும் நாங்கள் எந்தப் பொருளை வாங்கினாலும் அதற்கு இரசீது சமர்ப்பிக்க வேண்டும் என்பது சட்டமன்ற உறுப்பினராக உள்ள உமக்கே தெரிய வேண்டாமா?'' எனக்கூறி இரசீது வாங்கிவரச் சொன்னார்.

ஏழுமலை, சட்டமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு சந்தையில் மாடு வாங்கினால் யாரும் இரசீது தரமாட்டார்களே என உணர்ந்து, அமைச்சர் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டி மீண்டும் சந்தைக்குச் சென்று மாடு விற்றவனையும், மாடு வாங்கிக் கொடுத்த தரகரையும் தேடிக் கண்டுபிடித்து மாடு வாங்கியதற்கு இரசீது வேண்டும் என அமைச்சர் கேட்கிறார் என்று சொன்னதும், தரகர் சிரித்துவிட்டார். சந்தையில் மாடு வாங்கினால் யார் இரசீது தருவார்கள் என்றும், அப்படி இரசீது கேட்ட முதல் ஆள் நீங்கள்தான் என ஏழுமலையைக் கடிந்து கொண்டார். இரசீது இல்லையென்றால் மாட்டை ஓட்டிச் செல்லுங்கள் என்று அமைச்சர் சொல்கிறார் என ஏழுமலை சொன்னதும், தரகர் மாடு விற்றவரிடம் அழைத்துச் சென்று இரசீது வாங்கிக் கொடுத்தார். ஏழுமலை மிகவும் மகிழ்ச்சியுடன் அமைச்சர் கேட்ட இரசீது கிடைத்தவுடன் கக்கனைப் பார்த்துக் கொடுத்தார்.

இரசீது பெற்றுக் கொண்ட கக்கன், இது என்ன இரசீது? இதில் வருவாய் முத்திரைத் தலை ஒட்டி (Revenue Stamp) கையெழுத்திட வில்லையே எனக் கேட்டதும் ஏழுமலைக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. மீண்டும் மாடு விற்றவனிடம் எப்படி வருவாய் முத்திரைத் தலை ஒட்டிக் கையெழுத்து வாங்குவது? அப்படியே கேட்டால் நம்மைப் பார்த்து என்ன நினைப்பான்? குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது.

அமைச்சருக்கு அமைச்சர், நண்பருக்கு நண்பர், ஒன்றும் புரியாத நிலையில் ஏழுமலை மீண்டும் தரகரிடம் சென்று நடந்ததை எடுத்துச் சொல்லிக் கெஞ்சிக் கூத்தாடி மாடு விற்றவரிடம் சென்று சூழ்நிலையை விளக்கமாக எடுத்துச் சொல்லிக் கடைசியில் வருவாய்

முத்திரைத் தலையுடன் இரசீது பெற்றுக் கொண்டு கக்கனிடம் கொடுத்தபின் தான் மாட்டை ஏற்றுக் கொண்டார்.

மேற்கண்ட செய்தியை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அமரர் டி.பி. ஏழுமலை கக்கன் நினைவு அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் பதிவு செய்தார். கக்கன் தன் வாழ்நாளில் அமைச்சராகப் பணியாற்றிய காலங்களில் அரசின் சட்ட திட்டங்களுக்குப் பெருமை சேர்த்து வாழ்ந்த காரணத்தால்தான் அவரை **'மனிதப் புனிதர் கக்கன்'** என அழைக்கின்றோம்.

## இன்னா செய்தாருக்கும் நன்னயம் செய்தல்

அரசியல் வாழ்வில் பல எதிர்ப்புக்களைச் சந்திக்க நேரிடும். பலர் நேரிலே துன்பத்தைக் கொடுப்பார்கள். அதுவும் அக்காலத்தில் காங்கிரஸ் என்றால் காவல்துறையினர் அதிகமாகவே தண்டிப்பார்கள். கக்கன் வாழ்வில் எப்படியும் விரோதிகள் இருக்கத்தான் செய்தார்கள். துன்பம் கொடுத்தவர்களும் இருந்தார்கள். அப்படியானால் விரோதிகளைக் கக்கன் பழிவாங்கினாரா? அல்லது அவர்களுக்கு உதவிக்கரமாக இருந்தாரா? என்பதற்கு நல்ல நிகழ்ச்சி நமக்குச் சாட்சியாகக் கிடைத்துள்ளது.

1942ஆம் ஆண்டு வெள்ளையர்களால் சிறையில் கக்கன் அடைக்கப்பட்டு, மேலூர் காவல்துறையில் கசையடி வாங்கியதாக நாம் ஏற்கெனவே பார்த்தோம். அப்படி கக்கனுக்கு நேருக்கு நேராகக் கசையடி கொடுத்தவர் நித்தியானந்தம் எனும் காவலராவார். 1957இல் கக்கன் அமைச்சர் பொறுப்பேற்குமுன் காவலர் நித்தியானந்தம் பதவி உயர்வுபெற்று உதவி ஆய்வாளராகப் பதவியில் இருந்தார்.

கக்கன் காவல்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றதும் அவருக்கு நேரில் வந்து வாழ்த்துச் சொன்னவர்களில் நித்தியானந்தமும் ஒருவர். எல்லோரும் கக்கனுக்கு வாழ்த்துச் சொல்லிவிட்டுச் சென்றபின்பும் நித்தியானந்தம் மட்டும் தனிமையில் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது கக்கன் அவரை அழைத்து விசாரித்த போது, 'என்னை மன்னித்து விடுங்கள்' என்று கண்ணீர் கலங்கக் காலில் விழுந்து மன்னிப்பு வேண்டும் போது, அவரைத் தடுத்து நிறுத்தி, ''ஏன் இப்படி காலில் விழுகின்றீர்கள், என்ன ஆச்சு உங்களுக்கு'' என்று கக்கன் கேட்டார். அதற்கு நித்தியானந்தம்,

> உங்களுக்குக் கசையடி கொடுத்த காவலருள் நானும் ஒருவன், என்னைத் தண்டித்து விடாதீர்கள்

என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். அமைச்சர் கக்கன் பெருந்தன்மையோடு

> நீங்கள் உங்கள் கடமையைத்தான் செய்தீர்கள். தவறு ஒன்றுமில்லை. உங்களைப் போல் கடமை உணர்வு மிக்கவர்கள்தான் இந்த நாட்டிற்குத் தேவை

என ஊக்கமாகப் பேசி, அரவது கண்ணீருக்கு ஆறுதல் சொன்னார். சமாதானம் செய்துவைத்தார். அதுமட்டுமின்றி எதிர்காலத்தில் அவரது மகனுக்குக் கக்கனே காவல்துறையில் வேலை கிடைக்க ஏற்பாடு செய்துள்ளார்.

பழி வாங்கும் எண்ணமோ அல்லது பிறருக்குத் துன்பம் கொடுக்கும் மனமோ கக்கனுக்கு இருந்ததே இல்லை. பகைவனை அணைத்துக் கொள்பவனே மனிதப்பற்றாளன். ஆம்! கக்கன் துன்பம் கொடுப்பவர்களுக்கும் நன்மை செய்யும் குணம் படைத்த காரணத்தால் **'மனிதப் புனிதர் கக்கன்'** எனப் புகழப்படுகின்றார்.

**உறவுப் பெயரில் பதவியா?**

காவல்துறை அமைச்சராகக் கக்கன் பொறுப்பேற்றுப் பல முன்னேற்றமான திட்டங்களை வெற்றிகரமாக நடத்திப் பெருமை கண்டார். இவரது காலத்தில் காவல்துறையின் தலைவராக (இன்ஸ்பெக்டர் ஜெனரல்) திரு. எப்.வி. அருள் பணியாற்றினார். அப்பொழுது அனைத்துக் கல்லூரி மாணவர்கள் விளையாட்டுப் போட்டி ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளில் 800 மீட்டர், 1500 மீட்டர் ஓட்டப்பந்தயங்களில் முதல் பரிசினைக் கக்கனின் கடைசித் தம்பி விஸ்வநாதன் வென்றார். பரிசு கொடுத்துப் பாராட்டிய ஐ.ஜி.அருள், இப்படிப்பட்ட திறமையான நீ ஏன் காவல்துறையில் சேரக்கூடாது? என ஆலோசனை வழங்கி விண்ணப்பிக்கவும் தூண்டுதல் செய்தார்.

விஸ்வநாதன் ஐ.ஜி. அருள் அவர்களின் எண்ணப்படி விண்ணப்பித்தார். விளையாட்டுச் சான்றிதழ்கள் அனைத்தையும் இணைத்தார். கடைசியில் விளையாட்டு வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் காவல்துறை துணை ஆய்வாளர் பணியிடத்திற்கு நியமனம் செய்து உதவி செய்தார் அருள்.

காவல்துறையில் வேலை கிடைத்ததைப் பெருமையாக நினைத்த விஸ்வநாதன், தன் உறவினர்கள், நண்பர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். இந்தச் செய்தி இறுதியாகக் கக்கன் கவனத்திற்குச் சென்றது. தம்பிக்கு வேலை கிடைத்ததை எண்ணிப் பாராட்டாமல், நேராக ஐ.ஜி. அவர்களுக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விவரத்தைக் கேட்டறிந்தார். அப்பொழுது அருள், விளையாட்டில் சிறந்தவன் என்ற அடிப்படையில் சான்றிதழ்களை ஆய்வுசெய்து அவருக்கு உதவியதாகத் தெரிவித்தார். தகுதி தெரியாமல் நியமனம் செய்திருப்பது முறையா? எனக் கேட்டறிந்தார். ஐ.ஜி. அருள் அவர்களுக்கு விளங்கவில்லை.

> விஸ்வநாதனின் இடக்கை விரல்கள் சரியாகச் செயல்படாது எனவும், சுண்டு விரலும் அதற்கு அடுத்த மோதிர விரலும் சற்று வளைந்து இருப்பதால், அவனால் துப்பாக்கி சுட முடியாது

எனச் சொல்லியதும் ஐ.ஜி. அருள் திகைத்துப் போய்விட்டார். விஸ்வநாதனின் தேர்வினை இரத்து செய்து ஆணையை நீக்கவும் செய்தார். மேற்கண்ட நிகழ்வு உண்மைதான் என விஸ்வநாதன் ஒப்புக் கொண்டார். அமைச்சரின் தம்பியாக இருந்த போதிலும் அரசின் கொள்கைகளைத் தவறாகப் பின்பற்றக் கூடாது என்பதில் கக்கன் மிகவும் கவனமாக இருந்தார். தகுதி இல்லாமல் அரசு வேலையில் சேர்வது தவறு என்பதனை இந்நாட்டிற்கு எடுத்துச் சொன்ன உத்தமர்தான் கக்கன். எனவேதான் **'மனிதப் புனிதர் கக்கன்'** எனும் சிறப்புமிகு புகழோடு வாழ்ந்தார் என்பது சரித்திரம் சொல்லும் பாடமாகும்.

## குழந்தைகளை நல்வழிபடுத்தியவர்

கக்கன் குணாதிசயங்களில் மிகவும் உயர்ந்த நிலையில் பராட்டத்தக்கது தான் மட்டும் நீதிமானாக இருந்ததோடு தன்குடும்ப அங்கத்தினர், சகோதரர்கள் அனைவரையும் நல்வழிப்படுத்தி வாழ்ந்தார் என்பதுதான் முக்கியம். ஊட்டியின் இயற்கை அழகினை இரசிப்பதற்காகக் குடும்பத்தோடு கக்கன் சென்று தங்கினார் அப்பொழுது அமைச்சர் என்ற முறையில் பலர் அவரைச் சந்தித்துப் பேசினார்கள். அப்பொழுது கக்கனின் மகன்கள், ஊட்டியின் அழகைக் கண்டு இரசிக்க பைனாகுலர் இருந்தால் நல்லது என்று பேசிக் கொண்டிருந்தார்களாம். இதனை உற்றுக் கேட்ட இந்துஸ்தான்

புகைப்பட நிறுவன அதிகாரி இக்குழந்தைகளுக்கு பைனாகுலர் வாங்கிக் கொடுத்தார். இக்குழந்தைகள் இதனைச் சென்னைக்கு வரும்போது எடுத்துக் கொண்டு வந்துவிட்டார்கள்.

ஒருநாள் கக்கனின் மகன்கள் இந்தப் பைனாகுலரை வைத்து விளையாடிக் கொண்டிருக்கும்போது, கக்கன் இதனைப் பார்த்துவிட்டு இதனை யார் வாங்கிக் கொடுத்தது என்று கேட்க, உண்மையை இக்குழந்தைகள் சொல்லிவிட்டார்கள். அதைக் கொண்டுவரச் சொல்லி அப்படியே வாங்கி வைத்துக் கொண்டார். ஊட்டிக்குச் செல்லும்போது மறக்காமல் பைனாகுலரை எடுத்துக் கொண்டுபோய் அதைக் கொடுத்த அதிகாரியை அவசரமாக அழைத்துவரச் சொல்லி, அந்த அதிகாரியிடம் கொடுத்துவிட்டார். இதற்காக என்னைச் சீக்கிரமாக அழைத்துவரச் சொன்னீர்கள். இதனைக் குழந்தைகளுக்குப் பாசமாய் என் அன்பளிப்பாகத்தான் கொடுத்தேன் என்று அந்த அதிகாரி சொன்னார்.

உடனே கக்கன் அதிகாரியைப் பார்த்து, ‘உங்களிடம் வாங்கிய இவர்களுக்கு எதிர்காலத்தில் அமைச்சர் குழந்தைகள் என நினைத்து யார் வாங்கிக் கொடுத்தாலும் அதையும் வாங்கிக் கொள்ளும் மனநிலை அவர்களுக்கு வந்துவிடும். எனவே இதனை உங்களுக்கு மிகவும் கவனமாகக் கொண்டு வந்துள்ளேன். எடுத்துக் கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டார். இந்தப் பைனாகுலரை வாங்கியவர்தான் இன்றைய தினம் அரசு ஊழியராகப் பணியாற்றிவரும் டாக்டர் சத்தியநாதன். இன்றும் இந்த நிகழ்வை மிகவும் பெருமையுடன் பேசி வருகின்றார் கக்கனின் மகன் டாக்டர் சத்தியநாதன்.

குழந்தைகளை வளர்க்கும் விதம் என்பது பொதுவாழ்வில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அதுவும் அமைச்சர்களின் குழந்தைகள் எனும்போது மிகவும் அக்கறை, கண்டிப்பு தேவை. பேராசை இவர்களுக்கு இருக்கக்கூடாது. பைனாகுலர் சாதாரண விளையாட்டுப் பொருள்தான். கக்கன் குழந்தைகளுக்கு ஆசையை வளர்த்துவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார். அந்தக் கண்டிப்புதான் தன் வாழ்நாள் முழுவதும் குழந்தைகளால் அவப்பெயர் எடுக்காமல் பெருமையே கண்டார். எனவே தான் **‘மனிதப் புனிதர் கக்கன்’** என அழைக்கின்றோம்.

## சாலை போட்டதில் தில்லுமுல்லுவைக் கண்டுபிடித்தல்

கக்கன் பல துறைகளுக்கு அமைச்சர் பொறுப்பேற்றிருந்தாலும் ஒவ்வொரு துறையிலும் அதிகமான நாட்டம் கொண்டவர்; ஆர்வம் கொண்டவர் தவறுகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதில் நீதிமானாகவே வாழ்ந்தார். சட்டமன்ற உறுப்பினர் டி.பி. ஏழுமலையும் அமைச்சர் கக்கனும் பொதுநிகழ்ச்சிக்குக் காரில் பயணம் மேற்கொண்டனர். அப்பொழுது சாலை பழுதுபாக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினரும் வருவதைக் கண்ட ஒப்பந்தக்காரர் வந்து இருவரையும் வணங்கினார். இவர்களும் வணக்கம் தெரிவித்தனர். அப்பொழுது கக்கனுக்கு ஏழுமலை ஒப்பந்தக்காரரை அறிமுகம் செய்து வைத்து, ''இந்தச் சாலையை இவர்தான் பழுது பார்க்கின்றார். நமது கட்சியைச் சார்ந்தவர் என்று அறிமுகம் செய்து வைத்தார்.

கக்கன் சிரித்த முகத்தோடு 'சரி', என்றார். அன்று மாலை திரும்பிவரும்போது சாலை பழுதுபார்க்கும் இடத்திற்கு வந்ததும் காரை நிறுத்தச் சொல்லி, ஓட்டுநரை அழைத்துச் சாலை போடும் விதத்தை ஆராயத் தோண்டும்படிச் சொன்னார். உடனிருந்த சட்டமன்ற உறுப்பினர் ஏழுமலை, தெரிந்திருந்தால் ஒப்பந்தக்காரரை இங்கே இருக்கும்படி செய்திருப்பேனே என்று சொன்னார். சாலையைத் தோண்டிக்கருங்கல், ஜல்லி, மண் இவைகளின் அளவைத் தோரயமாகக் குறித்துக் கொண்டு சென்றார்.

மறுநாள் சாலையைக் கண்காணிக்கும் பொறுப்பான செயற்பொறியாளரை அழைத்து ஒப்பந்தப்படி குறிப்பிடப்பட்டிருக்கும் கருங்கல், ஜல்லி, மணல் ஆகிய அளவுகளுடன் தான் குறிப்பிட்டு வந்த அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தார். அப்பொழுதுதான் தில்லுமுல்லு தெரியவந்தது. உடனே செயற்பொறியாளரை அழைத்து, இனிமேல் அந்த நபர் வேலையைத் தொடரக் கூடாது என்றும், இதுவரை செய்த வேலைக்குக் காசோலை வழங்கக்கூடாது என்றும் கட்டளையிட்டார். உண்மை என்ன வென்றால் ஒப்பந்தக்காரர் சட்டமன்ற உறுப்பினர் ஏழுமலைக்கு நெருங்கிய நண்பர். பஞ்சாயத்துத் தலைவர் என்ற உண்மை தெரிந்தது. ஒப்பந்தக்காரர் ஏழுமலையிடம் முறையிட, ஏழுமலை அமைச்சரை நேரில் சந்தித்து எல்லாவற்றையும் சரிசெய்துவிடச் சொல்கிறேன் என்று சொன்னார். அதனைக் கேட்ட அமைச்சர் கக்கன்,

நமக்கு மக்கள் கொடுக்கும் பதவி என்பது நல்லதைச் செய்யவேண்டும் என்கிற நோக்கத்தோடுதான். அதைவிட்டு விட்டு அவர்களுக்குக் கெட்டதையோ அல்லது விரோதமான செயலையோ செய்துவிடக் கூடாது.

ஏழுமலையின் உள்ளம் ஒரு பக்கம் கவலைப் பட்டாலும் மறுபக்கம் அமைச்சரின் பேச்சு அவருக்குப் பெருமையாக இருந்தது. தவறைச் சுட்டிக்காட்டும் துணிவு கக்கனுக்கு இருந்தது. எனவேதான் அவரை **'மனிதப் புனிதர் கக்கன்'** என்று அழைக்கின்றோம்.

## காந்தி வழியில் கதராடை

கக்கன் தனது இளமைக்கால முதல் மகாத்மா காந்தியின் உண்மைத் தொண்டனாகவே வாழ்ந்தார். வாழ்வில் எளிமை. உடலில் தூய்மை. ஆடையில் கதராடை எனக் காந்திக் கொள்கையில் கவனம் செலுத்தினார். காங்கிரசும் கதராடையும் தனதுஉயிரும், உடலுமாய் வாழ்ந்தவர் கக்கன். 'எளிமை எனது வாழ்வு', எனும் காந்தியின் இலட்சியப் பயணத்தில் தனது பயணத்தை மேற்கொண்டவர் கக்கன். காங்கிரஸ்காரர்களுக்கு வாழ்நாள் முழுவதும் காந்தி காட்டிய உத்தம மார்க்கமே கதராடை. இதைத் தமிழகக் காங்கிரஸ் அரசியல் வரலாற்றில் தூய்மையாகக் கடைப்பிடித்தவர் கக்கன் என்பதனைக் கீழ்க்கண்ட நிகழ்வு நமக்கு விளங்க வைக்கிறது.

மேதகு ஆளுநர் மாளிகையில் நடந்த விருந்தில் கலந்து கொள்ள அமைச்சர் கக்கனும், சட்டமன்ற உறுப்பினர் டி.பி. ஏழுமலையும் செல்வதற்குத் தயாராகி வீட்டிலிருந்து வெளியே வருகின்றபோது, காசிவிஸ்வநாதன் மற்றும் இரு சத்தியநாதன் குழந்தைகளின் ஆர்வத்தை அறிந்து கொண்ட கக்கன், தம்பி விஸ்வநாதனை அழைத்து மூவரும் காரில் ஏறும்படி சொல்லிவிட்டார். அண்ணனின் அழைப்பு தம்பி விஸ்வநாதனுக்கும், அப்பா அழைப்பைப் பெருமையாக நினைத்து இரண்டு குழந்தைகளும் மிகவும் மகிழ்ச்சியோடு காரில் செல்கின்றார்கள். மேதகு ஆளுநர் மாளிகை நெருங்கியதும் கக்கன் என்ன நினைத்தாரோ தெரியவில்லை, உடனே காரை நிறுத்தச் சொன்னார்.

இரண்டு குழந்தைகளும், தம்பி விஸ்வநாதனும் கதர் ஆடைகள் அணியாமல் வண்ண ஆடைகள் அணிந்திருப்பதை அறிந்து, மேதகு ஆளுநர் மாளிகைக்குள் கதர் ஆடை இல்லாமல்

செல்லக்கூடாது என்று சொல்லி இரண்டு குழந்தைகளையும் தம்பியையும் காரிலிருந்து இறங்கச் சொல்லி வீட்டிற்குச் செல்லும்படி சொல்லிவிட்டுக் கக்கன் காரில் சென்றுவிட்டார். இரண்டு குழந்தைகளும், தம்பியும் எப்படியெல்லாம் மகிழ்ச்சியோடு மேதகு ஆளுநர் மாளிகையைப் பார்க்கலாமென்று ஏங்கினார்களோ, அவர்களது மனக்கோட்டை மண்கோட்டையாகச் சரிந்தது. கண்ணீரோடு மூவரும் வீடு திரும்பினார்கள்.

கக்கன் வாழ்நாள் முழுவதும் அணிந்தது கதராடை. மனைவியை அணியச் செய்தது கதராடையைத்தான். குழந்தைகளுக்கும் கதராடை இப்படி காங்கிரஸ் கொள்கை வீரனாகத் திகழ்ந்த கக்கன் காந்திய வழியில், காந்தியின் உண்மைத் தொண்டனாக, காமராசரின் கடமை வீரராகக் கதராடை அணிந்து, கொள்கை மாறாமல் வாழ்ந்து காட்டிய கக்கனை **'மனிதப் புனிதர் கக்கன்'** எனப் பெருமையோடு அழைக்கின்றோம்.

## எளிமையான கக்கன் வாழ்வு

கக்கனின் வரலாற்றை ஆய்வுக்குட்படுத்தி ஆராயும் பொழுது ''எளிமையான சிக்கனவாழ்வு'' உயர் கொள்கையாகப் பளிச்சிடுகின்றது. அமைச்சராகப் பவனிவந்த காலங்களில் அவரது வாழ்வில் ஏற்பட்ட அனைத்து நிகழ்வுகளும் சிக்கன வாழ்வினைத்தான் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அவரது சிக்கன வாழ்விற்குக் கீழ்க்கண்ட செய்தி நமக்குச் சான்று.

'யோசிக்கும் வேளையில்' என்ற நூலை எழுத்தாளர் ஜெயகாந்தன் எழுதி வெளியிட்டுள்ளார். இந்த நூலிலிருந்து ஒரு செய்தியை எடுத்துக் குமுதம் வார இதழில் ஒரு துணுக்குச் செய்தி வெளியிடப்பட்டது.

''நானும் அவரும் (அமைச்சர் கக்கன்) இரயிலில் பயணம் செய்துவிட்டு இருவரும் மதுரை விருந்தினர் மாளிகையில் ஒன்றாகத் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

நான் ஆடம்பர வாழ்வில் என்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவன். முகச் சவரம் கூட நான் ஆடம்பரமாகத்தான் செய்வேன். எலெக்ட்ரிக் ஷேவால்தான் சவரம் செய்வேன். சவரம் செய்துவிட்டு 'ஒடிகோலன்' கலந்த ஸ்நோ, பவுடர் இவை எல்லாம் தடபுடலாகச் செய்து கொண்டிருந்தேன். என்னை மிகவும்

கவனமாகக் கண்காணித்த அமைச்சர் கக்கன், என்னைப் பார்த்துச் சிரித்தார். என்னை அழைத்து, என்னங்க இதுக்கு இவ்வளவு நேரம். இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து சவரம் செய்றீங்க. என்னைப் பாருங்க என்று சொல்லி,

> ஒரு பிளேடை எடுத்தார். அதைக் குறுக்கில் இரண்டாக உடைத்தார். ஒரு பாதி பிளேடால் மளமளவென்று முகச் சவரம் செய்து கொண்டார். கீரலோ, வெட்டோ, இரத்தக் கசிவோ எதுவுமில்லாமல் இலாவகமாகச் செய்து கொண்டார்.
>
> அவர் என்னிடம் சிரித்துக் கொண்டே சொன்னார்.
>
> இதெல்லாம் ஜெயிலில் இருக்கும்போது கற்றுக் கொண்ட வாழ்க்கைப்பாடம். சிறைச்சாலைக் கைதியாக இருக்கும் போது கற்றுக்கொண்ட வாழ்கைப் பாடம் மந்திரியான போதும் மறக்க முடியவில்லை.

என்று மிகவும் பெருமையாகப் புகழ்பெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தன் கக்கனின் எளிமை வாழ்வினை நமக்குப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

இப்படி வாழ்க்கையின் அனைத்துக் கட்டங்களிலும் கக்கனின் எளிமையான, சிரிப்பான முகம் கொண்ட முகத்தைக் காணமுடியும். எவரது உள்ளமும் புண்படா வண்ணம், எப்படி மழைத்துளி இலைகளுக்குக் பாரத்தைக் கொடுக்காமல் சூரிய ஒளியைத் தாங்கிக் கொண்டு பளிச்சிடுகின்றதோ அதைப் போலவே பல துன்பங்களைத் தாங்கிக் கொண்டு, யாருக்கும் பாரமாய் இல்லாமல், தானே சுமை தாங்கியாக வாழ்ந்து காட்டிய உத்தமத் தலைவர் கக்கனை **'மனிதப் புனிதர் கக்கன்'** என அழைக்கின்றோம்.

# 14. காமராசரும் கக்கனும்

தும்பைப்பட்டி என்னும் கிராமத்தில் தோட்டி பூசாரிக் கக்கனின் மகனாகப் பிறந்த என்னை, ஊருக்கு, நாட்டிற்குத் தெரியவைத்து, ஸ்தாபன தலைவராக்கினீங்க. பத்தாண்டுகள் மந்திரியாகவும் இருக்கச் செய்தீர்கள். முக்கியமான இலக்காக்களின் பொறுப்புகளையும் என்னிடம் நம்பிக் கொடுத்தீர்கள். இதுவே எனக்குப் போதும்

என்று நா தழுதழுக்கச் சொன்னார்! காமராசரும் நெகிழ்ந்து போனார்.

எனும் செய்தி முழுத் தொண்டன் தன்னை வழிநடத்திய தலைவனுக்கு அளிக்கும் நன்றி மடலாகும். இதுதான் தலைவருக்கும் தொண்டருக்கும் இருக்கும் உறவு. தமிழக அரசியல் வரலாற்றில்



சிரித்த முகத்துடன் தலைவர் காமராஜரும் தொண்டர் கக்கன்ஜியும்

'கக்கன்' தன் வாழ்நாள் முழுவதும், கட்சி மாறாத உண்மைத் தொண்டராக வாழ்ந்து காட்டினார். தலைமை மீது விசுவாசம் இருந்தால் பிளவுகள் இருக்க முடியாது. காமராசர் தலைமைமீது அதிகமான விசுவாசம் கொண்ட கக்கனைப்போல் இன்றைய சூழ்நிலையில் அரசியல் கட்சிகள் நடத்தும் தலைவர்கள் மீது அவரது தொண்டர்கள் இருந்தாலே அரசியல் கட்சிகளில் பிளவுகள் ஏற்பட வாய்ப்பில்லை.

**கக்கன் மீது காமராசர் காட்டிய பாசம்**

காமராசருக்கு மனிதர்கள் மீது நம்பிக்கை இருந்ததே தவிர அவர்களது சாதி மீது நம்பிக்கை கிடையாது. காமராசரும் கக்கனும் தலைவர், தொண்டனாக வாழ்ந்ததை விட அண்ணன் தம்பியாகவே வாழ்ந்தார்கள். தம்பியின் நலனில் அண்ணன் பங்கேற்பதைப் போலவே கக்கனின் நலனில் காமராசர் பங்கேற்றார். பல்வேறு சூழ்நிலையில் கக்கன் துவண்டு போன காலக்கட்டங்களில் காமராசரே நேசக்கரம் நீட்டி அணைத்துக் கொண்டார்.

1967இல் பொதுத் தேர்தல் முடிந்து காங்கிரஸ் கட்சி கண்ட பல்வேறு சோதனைகளை நினைத்துக் கட்சியைப் பலப்படுத்திடப் புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கக் காமராசர் முடிவு செய்தார். பெருந்தலைவர் காமராசர் கட்சியின் நலனைக் கருதி சி. சுப்பிரமணியம் அவர்களைத் தலைவராகவும், கக்கனைத் துணைத் தலைவராகவும் நியமிக்கப் போவது குறித்து வெளியான செய்திகளைக் குறித்துப் பலர் கொதித்தனர். காரணம் 1955 வரை கட்சியின் தலைவராகவும், அமைச்சராகவும் இருந்த கக்கனை துணைத் தலைவராக நியமனம் செய்வதைப் பலர் விரும்பவில்லை. அதோடு எதிரான குரல் கொடுக்கவும் முன்வந்தனர்.

கக்கன் நலனில் அதிக அக்கறை கொண்ட பாரமலை போன்றவர்கள், கக்கனை நேரில் சந்தித்து, ''துணைத் தலைவர் பதவியை நீங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது, மூத்த தலைவரான உங்களை இழிவு படுத்தும் செயல்'' எனக் குமுறினர்.

கக்கன், பாரமலை மற்றும் அவரது ஆதாரவாளர்களை அழைத்து,

> பெருந்தலைவர் காமராசர் நமது தலைவர். தலைவர் சொல்வதை நிறைவேற்றுபவரே உண்மைத் தொண்டன்.

> நான் அவரது உண்மைத் தொண்டன். அவர் என்ன கட்டளையிடுகிறாரோ அதன்படிதான் நான் நடப்பேன். நீங்களும் நடக்க வேண்டும்.

என அன்பாகச் சிந்திக்கும்படி எடுத்துச் சொன்னார். பாரமலை போன்றவர்களுக்கு மன அமைதி ஏற்படவில்லை. பெருந்தலைவர் காமராசரை நேரில் சந்தித்துத் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள். காமராசர் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, தம்பியின் நலனில் அண்ணன் காட்டிய அக்கறையைப்போல, கக்கன் நலனில் காமராசர் அதிக அக்கறை காட்டினார். பாரமலையிடம் காமராசர் சொன்னதாவது :

> நீ சொல்வதெல்லாம் சரிதான். எனக்கும் நன்கு புரிகின்றது. கக்கனின் பதவியைவிட அவரது வாழ்க்கை எனக்கு முக்கியம். ஏற்கெனவே தேர்தலில் தோல்வியுற்றுச் சென்னையில் வாழ்வதற்கு வழியில்லாமல் தவிக்கின்றார். மேலும் அரசியல் நடத்தவும், சென்னையில் தங்கிக் குடும்பத்தைப் பார்க்கவும் இந்தப் பதவியைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை. அப்படி ஏதாவது வழி இருந்தால் நீங்கள் சொல்லுங்கள் என்று பாரமலையைக் கேட்டார்.

பாரமலைக்கு ஒன்றும் புரியவில்லை. வேறு வழியும் தெரியவில்லை. மேற்கண்ட நிகழ்வு மூலமாகக் காமராசர் கக்கனின் குடும்பத்தை அதிகமாக நேசித்தார். அப்பொழுது காமராசர் அகில இந்தியத் தலைவர். பலரை வழி நடத்த வேண்டிய தலைவர். கக்கன் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தியதுதான் மிகவும் முக்கியம். அதுமட்டுமின்றிக் காமராசர் கிழித்த கோட்டை எந்தச் சூழ்நிலையிலும் தாண்டாத அரசியல் வாழ்வு நடத்தியவர் கக்கன். தமிழகக் காங்கிரஸ் கடசியின் தலைவராக இருந்தவர். துணைத் தலைவராக எவராலும் ஒப்புக் கொள்ள முடியாததுதான். இருந்தாலும் தலைவர் காமராசர் மீது வைத்துள்ள விசுவாசம் தொண்டனாகச் செயல்பட்ட கக்கன் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு துணைத் தலைவராக மிகவும் சிறப்பாகப் பணியாற்றியது வரலாற்றுச் சான்றாகும்.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் காமராசர் கக்கன் இருவரும் இணைந்தே செயல்பட்டனர். கக்கன் மீது காமராசர் கொண்ட நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்ந்ததே தவிரக் குறைந்ததில்லை.

துன்பப்பட்ட காலங்களிலும் துவண்டு போன சூழ்நிலையிலும் கக்கன், காமராசர் மீது கொண்ட பாசம் அவரைத் தேற்றியதே தவிரத் தோல்வியடையச் செய்யவில்லை. பணம் இருந்தால் மட்டுமே அரசியல் நடத்தும் இக்காலச் சூழலில் பணம் இல்லாமல், பந்தா இல்லாமல், பகட்டான வாழ்வு இல்லாமல், பட்டாடை அணியாமல், பாமரர்கள் உள்ளத்திலே நீங்கா இடம்பெற்ற மனிதப்பண்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு அரசியல் வாழ்வில் சரித்திரம் படைத்தவர் கக்கன். அவரை வளர்த்து அழகு பார்த்தவர் பெருந்தலைவர் காமராசர்.

## தேர்தல்

தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளில் வேட்பாளராகத் தேர்தெடுப்பதில் பல பிரச்சினைகள் உண்டு. கக்கன் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் காங்கிரஸ் பேரியக்கம் கொடுத்த ஆதரவினால் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் வெற்றிபெற முடிந்தது. நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கக்கன் பணத்தால் நலிவுற்றிருந்தாலும் உடல் ரீதியால் அதிகம் பாதிக்கப்பட்டவராகவே காணப்பட்டார். பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை நியமனம் செய்யும் குழுவினர் கக்கனுக்கு வாய்ப்பளிக்காமல் வேறு எவருக்காவது கொடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்ததாகவும், இதனைப் பெருந்தலைவரிடம் எப்படி எடுத்துச் சொல்வது என்றும் பலர் தயங்கினார்கள். இருந்தாலும் தலைவர் முடிவே முடிவானது என்ற நிலைப்பாட்டிலும் இருந்தார்கள். காமராசரைப் பார்த்து பக்குவமாகவும் எடுத்துச் சொல்ல முடிவு எடுத்தனர். ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் கக்கன் நிலைப்பாட்டினைப் பலர் பேசினார்கள். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட பெருந்தலைவர் காமராசர்,

> **கக்கனின் பெயர் இல்லாமல் வேட்பாளர் பட்டியல் வெளிவராது**

என்று சொல்லிவிட்டு வெளியில் வந்ததாக அறிய முடிகின்றது. கடைசியாகக் காமராசர் மீது வைத்துள்ள பாசம் பாராளுமன்ற உறுப்பினராக அறிவிக்கப்பட்டார்.

பணப் பிரச்சினை ஒரு பக்கம், உடல்நிலை சரியில்லாத நிலை மறுபக்கம், இருந்தாலும் தலைவர் ஆணையிட்டார்

என்பதற்காகவே தேர்தலில் போட்டியிட்டார். அதைப் போலவே தலைவர் காமராசர் முடிந்தவரையில் பொருளாதார உதவியும், தேர்தல் பிரச்சாரமும் தொய்வின்றி நடத்திட உதவி செய்தார்.

காமராசரே முன்வந்து உதவிக்கரம் கக்கனுக்கு நீட்டுகிறார் என்றால் அதற்கு ஒரே காரணம் கட்சியின் மீது கக்கன் கொண்ட விசுவாசம், அயராத உழைப்பு, நேர்மையான வாழ்வு, கட்சிக் கொள்கை மீது கொண்ட பற்று, மக்களின் குறைகளைப் போக்கும் விதம், பிற அரசியல் கட்சித் தொண்டர்களையும் நேசிக்கும் பெருந்தன்மை என்பவைகளேயாகும். ஏராளமான தொண்டர்களுக்கிடையே காமராசர் கக்கனை அதிகம் நேசித்து அவரை உயர்த்திய காரணத்தால் 'பெருந்தலைவர்' எனும் சிறப்புப் பெயரை ஏற்றாரோ என்றெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது. இன்றளவும் கக்கனும் காமராசரும் இணைந்தே இருக்கிறார்கள். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு கக்கனின் நூற்றாண்டு விழா ஆண்டில் கர்மவீரர் காமராசர் அவர்களின் நினைவிடத்தில் மனித நேயம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 'அணையா விளக்கு' உருவாக்கி வரலாறு படைத்திருப்பது காங்கிரஸ் தொண்டர்களுக்குக் கிடைத்த மாபெரும் பெருமையாகும். தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வரலாற்றுச் சுவடுகளில் மேலும் மகுடம் பெற்றுவிட்டார் என்றே சொல்லலாம்.

## 15. மனிதப் புனிதருக்குக் கிடைத்த புகழாரங்கள்

மனிதன் பிறந்தான், வாழ்ந்தான், மறைந்தான் என்பதைவிட மனிதன் பிறந்தான், வாழ்ந்தான், சரித்திரம் படைத்தான் என்பதுதான் வரலாறு. வரலாற்றை உருவாக்கியவர்கள் பலர். வரலாறாக வாழ்ந்தவர்கள் பலர். இந்திய வரலாற்றில் பலர் முக்கிய இடத்தில் இடம்பெற்றிருந்தாலும் கக்கன் வரலாறு சிறப்புடையது. அயோத்திதாசப் பண்டிதர், தாத்தா இரட்டைமலை சீனிவாசன், மாமேதை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் இவர்களின் வரிசையில் வரலாற்றில் இடம்பெற்றவர் கக்கன். மேற்கண்ட தலைவர்கள் சமூக மேம்பாட்டில் தனிச்சிறப்புப் பெற்றிருந்தாலும், அரசியல் என்று பார்க்கும்போது யாரெல்லாம் அரசியலில் தீண்டப்படாதவர்களாக இருந்தார்களோ, தொடக் கூடாதவர்களாக நினைத்தார்களோ அவர்களை எல்லாம் தொடுவதற்கு ஏங்கக் கூடியவர்களாக மாற்றி அமைத்தவர் கக்கன். சமூகக் களத்தில் நமது சமுதாயத் தலைவர்கள் தீண்டாமையைத் ஒழிக்கப் பாடுபட்டாலும் கக்கன் ஒரு படி மேலே சென்று அரசியலில் காணப்பட்ட தீண்டாமையை தீயிட்டுக் கொளுத்திய பெருமை உண்டு. இவரால் ஒரு சமுதாயத்துக்குப் பெருமை கிடைத்துள்ளது. ''மனிதப் புனிதர்'' எனும் பெருமை எவருக்கும் கிடைக்கவில்லை. ஆனால் கக்கனுக்குக் கிடைத்தது எனில் சமூகப்பார்வை மேலோங்கிக் காணப்படுகிறது. தமிழகத்தில் கக்கனுக்குக் கிடைத்த பெருமைகளை, புகழாரங்களை இங்கே காண்போம்.

### மேலூரில் கக்கன்சிலை

இந்திய வரலாற்றில் புகழ்பெற்ற தலைவர்களுக்குச் சிலைகள் வைத்துச் சரித்திரம் படைப்பது பழக்கமாகிவிட்ட ஒன்று. அரசியல் தலைவாகள், கவிஞர்கள், அரசர்கள், மதகுருமார்கள், சினிமாத்துறை, கலைத்துறை இப்படி பல துறைகளில் புகழ்பெற்றவர்களுக்குச் சிலைகள் சான்றுகளாக நிற்கின்றன. இந்த வகையில் அரசியல் துறையில் புகழ்பெற்று விளங்கிய கக்கனுக்குச் சிலை வைக்க வேண்டும் என்று அவரது நெருங்கிய நண்பர்கள் நினைத்தது தவறில்லை. தமிழகத்தில் மாமேதை அம்பேத்கர், இரட்டைமலை சீனிவாசன், தந்தை என். சிவராஜ் ஆகியோருக்கு மட்டுமே சிலைகள்

உண்டு. இவர்களது வரிசையில் சிலை வைத்து நினைவுக்கூரும் வகையில் கக்கனுக்குச் சிலை வைக்கத் திட்டமிடப்பட்டது.

கக்கனின் நெருங்கிய நண்பரால், அரசியல் வாழ்வில் கக்கனோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றவரும், எதையும் திட்டமிட்டுச் செயப்படும் ஆற்றல் படைத்தவருமான மேலூர் மழுவேந்தி குறிப்பிடத்தக்கவராவர். மழுவேந்தியின் சிந்தனையில் கக்கனுக்குச் சிலை வைக்கத் தோன்றியது. இந்தச் சிந்தனையின் காரணமாகப் பலரை இணைந்திடச் செய்தது. இறுதியில் ''சிலை அமைப்புக்குழு'' உருவாக்கப்பட்டது. இச்சிலை அமைப்புக் குழுவிற்கு மேலூர் மழுவேந்தி தலைவராகவும், வேலு அம்பலம் துணைத் தலைவராகவும், பி. விவேகானந்தம் பொருளாளராகவும், கே.எஸ்.பி. காஞ்சிவனம், பி. வடிவேலு (கக்கனின் தம்பி), பி.கே. மாணிக்கம், சு.பா. சொக்கலிங்கம் ஆகியோர் செயலாளராகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டது.



*மேலூரில் கக்கன் சிலை அமைப்புக்குழு உறுப்பினர்கள்*

மதுரை மேலூர் நகரத்தில், பொதுமக்களின் பார்வையில் படும்படியாகப் புகழ்மிக்க சிலை அமைக்கப்பட்டது. வரலாறு போற்றும் இந்தச் சிலை 21.6.1988 அன்று அன்றைய மாண்புமிகு பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களால் திறக்கப்பட்டது. சமுதாயத்தின் கடைக் கோடியில் பிறந்த கோமனுக்கு மேலூர் நகரத்தில் எல்லோரும் பார்க்கும் வகையில் சிலை அமைத்துத் திறக்கப்பட்டிருப்பது பெருமைதானே!

## மதுரையில் கக்கன் சிலை

மதுரை மேலூரில் சிலை திறந்த பின்பு மதுரையில் கக்கன் சிலை அரசுச் செலவில் திறக்கப்படும் என்று 18.10.1995 அன்று அன்றைய முதல்வர் ஜெ.ஜெயலலிதா ஓர் அரசாணையை வெளியிட்டார். ஆணையின்படி, சிலை வைக்கப்பட்டது. கடைசியில் எவரும் திறக்காத நிலையில் சிலை மூடியே கிடந்தது. பலரின் பார்வைக்குத் தவறாகவே தென்பட்டது. தமிழக முதல்வர் ஜெ. ஜெயலலிதா நினைத்திருந்தால் சிலை திறந்திருக்கலாம். ஆனால் எப்படியோ ஒருசில தடைகள் ஏற்பட்டன.

கடைசியில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் சிலையைத் திறந்து நாட்டிற்கு அர்ப்பணம் செய்தார். இப்படி இவர் பிறந்த புண்ணிய பூமியில் அவரது சிலை வைத்து நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.



*கக்கன் சிலை திறப்பில் முதல்வர் கலைஞர், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. மூப்பனார், பேராசிரியர் அன்பழகன், ஆற்காடு வீராசாமி மற்றும் கக்கன் மகள் கஸ்தூரி*

## கக்கன் வாழ்ந்த வீடு நினைவாலயம்

தமிழகத்தில் நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட தியாகிகளுக்கு, மொழிப்போர் தியாகிகளுக்கு, நெஞ்சில் நிறைந்த தலைவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னங்கள் உருவாக்கி நினைவில் வைத்திருக்கின்றோம். நினைவாலயங்கள் ஆங்காங்கே நம் நினைவினை உறுதிப்படுத்தி வருகின்றன. இராஜாஜி

நினைவாலயம், காந்தி நினைவாலயம், காமராசர் நினைவாலயம், பக்தவச்சலம் நினைவாலயம், தாத்தா இரட்டைமலை சீனிவாசன் நினைவாலயம், மாமேதை அம்பேத்கர் நினைவாலயம், பேரறிஞர் அண்ணா நினைவாலயம், எம்.ஜி.ஆர். நினைவாலயம், வள்ளுவர் கோட்டம், பாரதி இல்லம் நினைவாலயம், காமராசர் இல்லம் நினைவாலயம் இப்படி தமிழகம் முழுவதும் நம் பெருமையைச் சொல்லிக் கொள்ளலாம். இவர்களது வரிசையில் கக்கனுக்கும் நினைவாலயம் தேவை என்ற சிந்தனை ஏற்படுவதும் இயற்கைதானே.

தமிழகத்தின் முதல்வராக மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதியின் ஆட்சியின் பொழுது 18.4.2000 அன்று தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர் திரு இராஜமாணிக்கம் சட்டமன்றத்தில் ஒரு கேள்வியை எழுப்பினார்.

கக்கன் பிறந்த ஊரிலுள்ள அவரது வீட்டை நினைவு இல்லமாகத் தமிழக அரசு மாற்றுமா? அப்பொழுது சுற்றுலாத்துறை மாண்புமிகு அமைச்சர் முல்லைவேந்தன் 'அப்படிப்பட்ட திட்டம் இல்லை' என்று பதில் சொன்னார். இந்தப் பதிலை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில், தமிழ்மாநிலக் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான திரு. கோ. பாலகிருட்டிணன் எழுந்து 'கக்கன் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக்க வேண்டும்' எனும் உறுதியான வேண்டுகோளை முன்வைத்தார். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும் வகையிலே, தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி எழுந்து, 'இந்த அரசு விடுதலை வீரர்களை மதிக்கும் அரசு. கக்கன் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக்க எந்த தயக்கமும் காட்டாது. விரைவில் நினைவுச் சின்னமாக்கப்படும்'. என்ற உறுதியை அளித்தார். 18.4.2000இல் தமிழக முதல்வர் சட்டமன்றத்தில் கொடுத்த உறுதி மறுநாளே ஆணையாக வெளியாகியது. தும்பைப்பட்டி கிராமத்தில் அவருக்கு நினைவாலயம் அமைக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கக்கன் வாழ்ந்த வீடு நினைவு இல்லமாகிப் பெருமை செய்யப்படுகிறது.

## சினிமாவில் கக்கனின் பெருமை

இந்தியாவில் சினிமாத்துறை மக்களின் மனதைக் கவரும் துறையாகும். சினிமாத்துறை மூலமாக எதைச் சொன்னாலும், எதைக்காட்டினாலும் மக்கள் நம்புவார்கள். விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளைச் சினிமா மூலமாகத்தான் மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடிகின்றது. தமிழக வரலாற்றில் விடுதலைப் போராட்ட

வீரர்களின் வரலாறுகள் சினிமா மூலம் திரையிடப்பட்ட பிறகுதான் மக்கள் தெரிந்து கொண்டனர். மகாகவி பாரதியார், கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார், வீரபாண்டிய கட்டபொம்மன், கொடிகாத்த திருப்பூர் குமரன், மருதுபாண்டியர் போன்றவர்களின் வரலாறுகள் தமிழகச் சினிமாத்துறை வாயிலாக மக்களுக்குப் படம் பிடித்துக் காட்டப்பட்டன.

இவர்களது வரிசையில் கக்கனுக்கும் பெருமை சேர்க்கப்பட்டிருப்பது பாராட்டத் தகுந்ததாகும். தமிழகச் சினிமாத்துறையில் மக்களால் அதிகமாக மதிக்கப்படுபவரும், வாழ்வியல் தத்துவங்களை எதார்த்தமாக மக்களின் மனதில் பதியவைத்துவரும் இயக்குநர்களில் கக்கனைப் பெருமைப்படுத்திய இயக்குநர் திரு. பி. வாசு அவர்களும் பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்துவரும் புதிய சிந்தனையாளர், புரட்சிக் கருத்துக்களைத் துணிந்து கையாண்டுவரும் இயக்குநர் திரு. சேரன் அவர்களும் புகழ்ந்து பேச வேண்டியவர்கள். இவர்கள் இருவரும் துணிந்து கக்கனின் பெருமைகளைத் தமிழக மண்ணில் விதையூன்றியுள்ளார்கள். கக்கனின் பெருமைகள் எல்லாம் வெள்ளைத் தாள்களில் வரிகளாகவே புதைந்து கிடக்கின்றன. ஆனால் இவர்கள்தாம் துணிந்து கக்கனின் பெருமைகளை நடிப்பாக உருவாக்கி வண்ணத்திரையில் மக்களுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டிய துணிவு படைத்தவர்கள். கக்கன் பிறந்த சமுதாயத்தினர் இன்றும் இவர்களைப் பெருமைப்படுத்திப் புகழாரம் சூட்டிவருகின்றனர்.

'வால்டர் வெற்றிவேல்' எனும் படத்தை இயக்கிய இயக்குநர் திரு. பி. வாசு அவர்களின் படத்தில் கக்கனின் சிக்கனமான வாழ்க்கையை மக்களுக்குப் படம் பிடித்துக் காட்டிட ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கி, அவரின் உருவம், உடை ஆகிய அனைத்தும் கக்கனைப் பிரதிபலித்து மக்களின் நினைவில் நிழலாட வைத்திருப்பது இன்றளவும் பெருமையாகப் பேசப்பட்டு வருகின்றது. அப்படியும் ஒருவர் இருந்தாரா? என்பதை இன்றைய தலைமுறைக்கு எடுத்துச் சொன்னவிதம் இருக்கிறதே அதில்தான் இயக்குநர் திரு. பி. வாசுவின் திறமை, பொது எண்ணம், துணிவு தெரிகின்றது. கக்கன் எந்த இனத்தைச் சார்ந்தவர் என்று பார்க்காமல் அவரது அரிய பண்புகளை மையமாக்கி நன்றியோடு கக்கனுக்குப் பெருமை சேர்த்த இயக்குநர் பி. வாசு அவர்களுக்குக் கக்கனின் நூற்றாண்டு நாளில் நன்றியைச் சாற்றுவோம்.

தமிழகச் சினிமா வரலாற்றில் சிந்தனையாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள், வாழ்க்கையின் உண்மை நிகழ்வுகளை அதிகமாக நேசிக்கும் நேயர்களுக்குச் சிறப்பான படங்களை வழங்கிவரும் இயக்குநர் திரு. சேரன் அவர்கள் தன் மண்ணில் பிறந்த ஏழ்மையின் சின்னமாக வாழ்ந்த கக்கனை மறந்துவிடாமல் சினிமாச் சிந்தனை மூலமாக மக்களைச் சிந்திக்க வைத்தவர். அவரது 'தேசியகீதம்' எனும் சினிமா படத்தில் மக்கள் மனதில் நிற்கும் விதத்தில் கக்கனுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் வசனத்தின் மூலமாக மக்களுக்கு உணர்த்தியுள்ளார். ஒருமுறை தொலைக்காட்சியில் பேட்டி கொடுக்கும் போது மதுரை மேலூரில் பிறந்த சேரன், இப்படத்தில் அமைச்சர் பாத்திரத்தைக் கக்கன் அவர்களை எண்ணியே படைத்தேன் என்ற சொல்லியிருப்பது பெருமைக்குரியதுதான். பொதுவாழ்வு என்பது கக்கனிடம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதனை மக்கள் உணர்ந்திடச் சினிமாத்துறை பயன்பட்டிருப்பது பெருமைதான். இப்படி கக்கனுக்குப் புகழாரங்கள் பலர் சூட்டினார்கள்.

அண்மையில் கர்மவீரர் காமராசர் அவர்களைப் பற்றி மிகவும் சிறப்பான மக்களால் அதிகமாக நேசிக்கப்பட்ட சினிமா படம் வெளியிடப்பட்டது. இந்த சினிமா படத்தில் கக்கன். காமராசர் இவர்களின் நட்பினை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் விதத்தில் கக்கனைப் பற்றி மிகவும் சிறப்பான கதாபாத்திரம் உருவாக்கப்பட்டு நடித்திருப்பது மிகவும் பாராட்டத் தகுந்தது.

கக்கனைப் பற்றிய உண்மை வாழ்க்கை வரலாற்றை சித்திரிக்கும் வண்ணம் அன்புச் சகோதரர் திரு. பத்மபிரியன் அவர்கள் முயற்சி எடுத்து வந்ததாக செய்திகள் உள்ளன. எப்படியோ தமிழக அரசு 'கக்கன்' பற்றிய சினிமாப்படம் எடுக்க முன்வந்தால் அரசுக்குப் பெருமை, அரசை நடத்தும் கட்சிக்குப் பெருமை, தமிழக மக்கள் மனம் நிறைவடையும் என்பதும் உறுதி. இதற்கும் மேலோக காங்கிரஸ் ஆட்சிக்காலம் நடந்துவரும் இத்தருணத்தில் மைய அரசு சார்பாக NFDC எனும் நிறுவனம் இவரது வாழக்கையைப் பற்றி மக்கள் அறிந்து கொள்ளப் படம் எடுத்தால் காங்கிரஸ் கட்சியின் மனித நேயம் பளிச்சிடும் என்பது உறுதி.

## செய்தித்தாளில் புகழாரம்

சூடான செய்திகளை அடிக்கடி மக்களின் மனதில் நிலைத்திடச் செய்வது பத்திரிக்கைகளும், வாராந்திர இதழ்களுமாகும். அரசியல் வாழ்வில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொண்டவர்களை மக்களுக்கு எடுத்துரைத்த பத்திரிக்கைகள்

ஏராளம். குறிப்பாக, பொதுவாழ்வில் எளிமை, தூய்மை, வாய்மை, பதவிகளை தவறாகப் பயன்படுத்தாமை போன்றவற்றில் கக்கனையே மையப்படுத்திப் பல செய்திகள் வந்துள்ளன.

அந்தவகையில் பத்திரிக்கை துறையில் கக்கனுக்குப் பெருமை சேர்த்த பெருமை 'துக்ளக்' இதழாசிரியர் திருவாளர் சோ அவர்களையே சாரும். 'துக்ளக்' இதழாசிரியர் திரு. சோ. இராமசாமி அவர்கள்தான் 1981 டிசம்பர் மாத இறுதியில் வெளியான 'துக்ளக்' இதழில் கக்கனின் பெருமைகளை, அவரது எண்ணப்படி, அவருக்கே உரித்தான வார்த்தை சாலங்களால் பெருமைப்பட எழுதிப் பெருமை சேர்த்துள்ளார். அதுமட்டுமின்றி அட்டைப் படத்தில் அவரது புகைப்படம் அச்சிட்டு முதலில் புகழாரம் செலுத்தியுள்ளார். கக்கனின் நூற்றாண்டில் இதழாசிரியர் திரு. சோ அவர்களுக்கு நன்றியைச் சாற்றுவோமாக.

'தினமணி' நாளிதழ் கக்கனுக்குப் புகழாரம் சூட்டிய நாளிதழாகும். கக்கனின் பொதுவாழ்வுப் பண்புகளை, நெறிமுறைகளை இன்றைய தலைமுறைக்கு எடுத்துச் சொன்ன பெருமை தினமணிக்கு உண்டு. 20.4.2000 அன்று வெளியான தினமணி நாளிதழில் 'தும்பைப்பூ பொது வாழ்வு' என்ற தலையங்கத் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை காலத்தால் அழிக்க முடியாதது. அந்தச் செய்தியை இப்புத்தக வாசர்களுக்குத் தெரிவிப்பதன் மூலமாகக் கக்கனைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள ஏதுவாக இருக்கும்.

> ஆதாயம் தரக்கூடிய அருமையான தொழில் நவீன அரசியல். ஒவ்வொரு தேர்தலும் சூதாட்டம் போல, கூட்டணி என்பது கூட்டு வியாபாரம் போல ஆகியுள்ள காலமிது. ஆனால் சென்ற தலைமுறை இந்த இலட்சணங்களை அறியாது. அரசியலைத் தொழிலாக நினைக்கத் தெரியாத அரசியல்வாதிகள் வாழ்ந்த காலமிது. அதற்கு நேரான எடுத்துக்காட்டு காமராசரும் கக்கனும்.
>
> காமராசர் ஒன்பது ஆண்டுக்காலம் தமிழக முதல்வராக இருந்தவர். பல ஆண்டுகள் அகில இந்தியக் காங்கிரசை முன்னின்று நடத்தியவர். ஆனால் கடைசிவரை வாடகை வீட்டிலே வசித்தவர். அந்த வீடு அவருக்கு இப்பொழுது அருமையான நினைவுச் சின்னமாக மாறியிருக்கிறது.
>
> பொது வாழ்வுத் தூய்மையில், நேர்மையில் அவருடன் போட்டியிடக் கூடிய தகுதிபடைத்தவர் காமராசரின் முழு நம்பிக்கைக்குரியவராக விளங்கிய கக்கனே. பலமான, வளமான இலாக்காக்களின் பொறுப்பு

வகித்தவர். எனினும் இப் பதவிகளால் அவருடைய வாழ்க்கை நிலை உயர்ந்ததில்லை. இறுதிவரையில் ஏழையாகவே வாழ்ந்து காட்டியவர். தமிழகத்தில் காங்கிரஸ் அதிகாரத்தை இழந்தபிறகு, அவருடைய மனைவியின் ஆசிரியப்பணி ஊதியத்தில் குடும்பம் நடந்தது.

சென்னையில் வாடகை வீட்டில் வசித்தவர். நகரப் பேருந்துகளில் பயணிகளுடன் பத்தோடு பதினொன்றாகப் பயணம் செய்தவர். பதவியைப் பணமாக்கும் வித்தை தெரியாதவர் மட்டுமல்ல, அந்த நினைப்பே வரமுடியாத அரசியல் பண்பாட்டில் ஊறி வளர்ந்தவர். வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் நோய்வாய்ப்பட்ட போது தகுந்த சிகிச்சை பெறுவதற்குக்கூட வசதியில்லாது வாடியவர். கடைசியில் எம்.ஜி.ஆரின் தயவால் மாதம் ரூ.500/– ஒய்வூதியம் பெற்றுக் காலம் கழித்தவர். அரசியலில் பத்திய வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர். அதை 'பைத்தியக்கார வாழ்க்கை' என்று கூட நவீன அரசியல் வாதிகள் உள்ளூர எண்ணி நகையாடக் கூடும். ஏனெனில் கடந்த 30 ஆண்டுகளில் திடீர்க் குபேரர்களாக, கோடீஸ்வரர்களாக ஆகியிருப்பவர்களின் பட்டியலைத் தயாரித்தால் அதில் நவீன அரசியல் வாதிகள் நீண்ட இடத்தைப் பிடித்துக் கொள்ளக் கூடியவர்கள்.

அப்படியிருக்க, கக்கனைப் போன்ற அரசியல்வாதிகள் விதிவிலக்குகளாகத் தனிமரியாதை பெறுவதில் ஆச்சரியமில்லை. மதுரை மாவட்டம் மேலூருக்கு அருகே உள்ள தும்பைப்பட்டி, கக்கனின் சொந்த ஊர், ஏழைத் தலையாரியின் மகனாகப் பிறந்தவர். தும்பைப்பூ பொது வாழ்வை இறுதிவரை கட்டிக்காத்தவர். அவருக்குத் தும்பைப்பட்டியில் நினைவிடம் அமைப்பதற்கான பணிகளில் தமிழக அரசு ஈடுபட்டிருப்பது பாராட்டிற்குரியது. ஆயினும் அவருடைய சுத்தமான பொதுவாழ்வைவிடப் பெரிய சின்னம் வேறு அவருக்கு இருப்பதற்கில்லை.

அவருக்கு ஆடம்பரமான மணிமண்டபம் பொருத்தமான நினைவுச் சின்னமாக இருக்க முடியாது. அதற்குப்பதில் அவர் வசித்த ஓலைக் குடிசையையே நினைவுச்

சின்னமாக மாற்றிப் பாதுகாக்கலாம். அதுதான் கக்கனுக்கு எதார்த்தமான சின்னமாக விளங்க முடியும். மணிமண்டபம் அமைத்தால், அது தமிழக அரசின் சின்னமாகவே இருக்கும்.

மேற்கண்ட தினமணி தலையங்கமே கக்கனுக்குச் சூட்டிய மிகச் சிறப்பான புகழாரமாகும். பல கிராமங்களுக்குக் 'கக்கன்' பெயரைவைத்துப் பெருமை சாற்றிவருகின்றார்கள்.

## மணிவிழா

வறுமையுடன் வாழ்ந்த கக்கன் அவர்களுக்கு மணிவிழா எடுப்பதில் உறவினர்கள் கலந்து ஆலோசனை செய்தனர். இருந்தாலும் மனிதநேயத்தின் அடிப்படையில் முன்னாள் முதல்வர் எம். பக்தவத்சலம அவர்கள் கக்கனுக்குப் பெருமைச் சேர்க்கும் வகையில் அவரே தலைமையேற்று மணிவிழா நடத்தியது அரசியல் வரலாற்றில் அனைவராலும் வரவேற்கத்தக்கதாக அமைந்தது.



மணிவிழா காணும் மணமகன் கக்கன் அவர்கள் மணமகள் சொர்ணம் பார்வதி இவர்களுடன் முன்னாள் முதல்வர் பக்தவத்சலம்

2009–2010 என்பது கக்கனின் நூற்றாண்டு. இந்த விழாவினைப் பலர் பலவிதமாக ஆண்டு முழுவதும் எடுத்துவருவது பெருமைக்குரியதுதான். காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கக்கனின் புகழ் சேர்க்க நூற்றாண்டு நிறைவு விழாவினைக் குழு அமைத்து எடுத்திருப்பது மிகவும் பெருமைக்குரியதுவாகும்.

'மனிதப் புனிதர் கக்கன்' புகழ் பல்லாண்டு வாழ்ந்திட வாழ்த்துவோமாக. அவர் வழியில் தூய்மையான வாழ்வினைப் போற்றிடுவோமாக.

**நினைவு அஞ்சல் தலை வெளியீடு**

கக்கன் அவர்களின் நினைவு அஞ்சல் தலையை 9.12.1999 அன்று மக்கள் தலைவர் திரு.ஜி.கே. மூப்பனார் வெளியிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெயந்தி நடராசன், பீட்டர் அல்போன்ஸ், முன்னாள் அமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பின்ா கே. பாரமலை, டி.பி. ஏழுமலை ஆகியோர் கலந்து கொண்டனர். கக்கனின் மகன் திரு. வடிவேலுவின் கோரிக்கையை ஏற்று, இந்தியக்குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்களது முயற்சியால் வெளியிடப்பட்டது.



மககள தலைவர் ஜி.கே. மூப்பனார்
கக்கனின் நினைவு அஞ்சல் தலை வெளியிடுதல்

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 95.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 550.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| நவீன நாடகங்களும் ஊடகங்களும் | 50.00 |
| மொழிபெயர்ப்பு ஒரு கவின் கலை | 75.00 |

---

**667 மனிதப் புனிதர் கக்கன் 110.00**